https://t.me/daily_paper

# தமிழ்-பிராமி கல்வெட்டுகள்



TNSDA
11802





பதிப்பாசிரியர்
**தி.ஸ்ரீ. ஸ்ரீதர்** இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்

**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை**
**2006.**

https://t.me/daily_paper

36.2

# தமிழ்-பிராமி கல்வெட்டுகள்

https://t.me/daily_paper

# தமிழ்-பிராமி கல்வெட்டுகள்

பதிப்பாசிரியர்

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்** இ.ஆ.ப.

சிறப்பு ஆணையர்

உதவிப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு. இராசகோபால்

திரு. பொ. இராசேந்திரன்

முனைவர் வெ. வேதாசலம்

முனைவர் சொ. சாந்தலிங்கம்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

சென்னை – 600 008

2006

https://t.me/daily_paper

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Tamil-Brahmi Kalvettukal** |
| Editor | : | Spl. Commissinor |
| Copy Right | : | T.N. State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 177 |
| Year | : | 2006 |
| Type Point | : | 11 |
| No.of. Pages | : | 206 |
| Paper Used | : | 100 Gsm Maplitho |
| Type Setter | : | **Tamil Nilam**<br>P.O.Box No. 3370<br>115, Canal Bank Road, C.I.T. Nagar,<br>Nandhanam, Chennai - 600 035 |
| Printer | : | **TAMCOS,**<br>Royapettah, Chennai- 600 014. |
| Publisher | : | **State Dept. of Archaeology,**<br>Tamil Valarchi Valagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | **Rs. 64/-** |


11802
417.7

https://t.me/daily_paper

# பதிப்புரை

தமிழ் மற்றும் தமிழகத்தின் தொன்மையை அறிந்திடக் கிடைத்திடும் சான்றாதாரங்கள் எண்ணற்றவை. அவற்றை ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், பொது மக்களுக்கும் அறியக்கிடைத்திடச் செய்யும் தலையாய பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு அயராது பணியாற்றி வருகிறது தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை. சான்றாதாரங்களில் முதன்மையானவை எழுத்துச் சான்றுகளாகும். தமிழக எழுத்துச் சான்றுகளில் முதன்மையானவை தமிழ்-பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், காசுகள், அணிகலன்கள் மற்றும் குகைத்தளக் கல்வெட்டுகள் ஆகும்.

தமிழகக் கல்வெட்டியலைக் கற்க முயலும் எவரையும் எளிதில் கவர்ந்து தன் வசம் என்றும் ஆர்வத்துடன் வைத்துக் கொள்ளும் எளிய எழுத்துக்கள் தமிழ்-பிராமி எழுத்துக்களாகும். ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே அறியப்பட்ட இவ்வெழுத்துக்கள் அறுபதுகளில் ஐராவதம் மகாதேவன் அவர்களால் படித்தறியும் படியான நிலைக்கு வந்தன.

அறுபதுகளில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடங்கப்பட்டது முதல் அதன் அலுவலர்கள் தமிழ்-பிராமி கல்வெட்டுகளை கண்டறிவது, படிப்பது, வெளியிடுவது ஆகிய பணிகளோடு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவற்றைப் படித்தறியும் முறையைக் கற்றுக் கொடுக்கவும் செய்தனர். அதனால் மேலும் சில தமிழ்-பிராமி கல்வெட்டுகள் கூடுதலாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்று 30 இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் 8 இடங்கள் இத்துறையால் மரபுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கூடுதலாக அரிட்டாபட்டி தமிழ்-பிராமி கல்வெட்டும் மரபுச் சின்னமாக சேர்க்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகையில் தமிழகத் தொல்லியல் துறையின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு தமிழ்-பிராமி கல்வெட்டுகள் பற்றிய நூல் தமிழில் எளிதாகவும் விலை குறைவாகவும் வெளிவர வேண்டும் என்ற கருத்துருவின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஆணைக்கிணங்க தற்பொழுது இந்நூல் வெளியிடப்படுகிறது.

தமிழ் செவ்விய மொழியாக அறிவிக்கப்படுவதில் தமிழ்மொழிக்கான எழுத்தறிவின் தொன்மையைக் காட்டத் தமிழ்-பிராமி கல்வெட்டுகளும் அவற்றின் இடப்பரவலுமே முன் நிற்கின்றன. குகைத்தளங்களில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் மட்டும் இந்நூலில் இடம் பெறுகின்றன. பானை ஓடுகள், காசுகள், அணிகலன்களில் உள்ளவை பற்றிச் சுருக்கமான குறிப்பு தரப்பட்டுள்ளது. இவற்றின் படங்கள் அட்டையிலும் உள்ளேயும் தரப்பட்டுள்ளன.

https://t.me/daily_paper

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள இடங்களுக்கு எளிதில் சென்றிட இயலாது. கடினமான பாதை வழியாக மலையேறிச் சென்று தான் காண வேண்டும். இந்நூலில் உள்ள படங்களைப் பார்க்கும் போது அது நன்கு விளங்கும். நான் இத்துறையின் சிறப்பு ஆணையராகப் பணியேற்ற பிறகு பல்வேறு தமிழ்-பிராமி கல்வெட்டுக் குகைத்தளங்களுக்கும் நேரில் சென்று வரும் வாய்ப்பும், ஆண்டிப்பட்டி அகழாய்வில் நேரிடையாக ஒரு தமிழ்-பிராமி கீறல் உள்ள பானை ஓட்டினைச் சேகரிக்கும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. இதனை இந்நூல் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் குறித்த ஆய்வை கடந்த 40 ஆண்டுகளாகச் செய்து வருபவர் திரு. ஐராவதம் மகாதவன், இ.ஆ.ப., (ஓய்வு) ஆவர்கள். அவர்கள் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் குறித்து பெரிய அளவில் ஆங்கிலத்தில் ஒரு நூலினை வெளியிட்டுள்ளார்கள். நான் தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையராக பணிப் பொறுப்பேற்றபோது துறையின் 2004 ஆகஸ்ட் திங்கள் சொற்பொழிவாகத் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் குறித்து அவர் உரையாற்றினார். சென்ற நூற்றாண்டில் ஏற்கனவே பார்த்து வெளியிடப்பட்ட திருச்சிராப்பள்ளி கல்வெட்டு இன்று காணக்கிடைக்காமை, எடக்கல் கல்வெட்டுகளின் மீது தற்கால எழுத்துப் பொறிப்புகளின் காரணமாக தொல் எழுத்துக்கள் புலப்படாமல் உருக்குலைந்தமை ஆகியவற்றைக் குறிப்பிட்டுத் தனது நூல் தமிழ்-பிராமி கல்வெட்டுகளை ஆவணப்படுத்தும் நோக்கில் அமைந்ததைக் குறிப்பி ட்டார்.

அவர் வெளியிட்ட நூலிற்கு மதிப்புரைகளும் விமர்சனங்களும் இந்திய அளவிலும், உலக அளவிலும் 15க்கு மேல் வெளிவந்துள்ளன. அவர் இவ்வெழுத்திற்குத் தமிழ்-பிராமி என்று பெயரிடுவதை ஏற்காதவர்கள் உள்ளனர். ஐராவதம் மகாதேவன் குறிப்பிடும் தமிழ்-பிராமி கல்வெட்டிற்கான காலக்கணிப்பை ஏற்காதவர்களும் உள்ளனர். அவரது கல்வெட்டு வாசகங்களை மாற்றிப் படித்துப் புதிய விளக்கங்களும் வெளிவந்துள்ளன. எனினும் அவரது நூலே தமிழ்-பிராமி குறித்த எல்லாவித ஆய்வுகளுக்கும் அடிப்படையாக அமைகிறது. எனவே அவரது காலக் கணிப்பும் தமிழ்-பிராமி என்ற பெயரும் இந்நூலில் பின்பற்றப்படுகின்றன. அவரது கருத்துக்களும் இந்நூலில் விரவி வருகின்றன.

இந்நூல் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள், கண்டுபிடிப்புகள், எழுத்தமைதி, கல்வெட்டுகள், சமயம், அரசியல், பொருளாதாரம், மொழிநிலை, ஆட்பெயர், இடப்பெயர் என்று பத்துக்கும் மேற்பட்ட தலைப்புகளில் அமைந்துள்ளது. குகைத்தளங்களின் வரைபடங்கள், தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள இடங்களைக் குறிக்கும் நிலப்படம், குகைத்தளங்களின் படங்கள், பாறைகளில் உள்ள கல்வெட்டுகளின் படங்கள், சில மைப்படிப் படங்கள், நேரில் விளம்பி எடுத்த படங்கள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

ஒவ்வொரு கல்வெட்டு வாசகத்திற்கும் அருகில் கல்வெட்டுகளில் பார்வைப்படி தரப்பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டு காலமாக ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறு விதமாக ஆய்வாளர்கள் கல்வெட்டுகளைப் படித்துள்ளனர். எனவே பாடபேதங்களும் தரப்பட்டுள்ளன.

https://t.me/daily_paper

இந்நூலில் நான்காவது பகுதியில் 30 ஊர்க் கல்வெட்டுகளை இத்துறை அலுவலர்கள் முனைவர் நா.மார்க்சிய காந்தி, முனைவர் ஆ. பத்மாவதி, திருமதி. அர. வசந்தகல்யாணி, திரு ச. கிருஷ்ணமூர்த்தி, திரு; சீ. இராமச்சந்திரன், முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன், திரு சொ. சந்திரவாணன், அமரர் இரா.ப. காருணாநந்தன் ஆகியோர் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு எழுதித் தந்துள்ளனர். பிறவற்றை திரு பொ. இராசேந்திரன், முனைவர் வெ.வேதாசலம், முனைவர் சொ. சாந்தலிங்கம் ஆகியோர் எழுதித் தந்துள்ளனர். முனைவர் சு. இராசகோபால் இவற்றை ஒருங்கிணைத்து நூல் வடிவமைத்து அச்சுப்பணி மேற்கொண்டுள்ளார்.

இந்நூலில் உள்ள படங்கள் முனைவர் வெ.வேதாசலம், திரு சொ. சந்திரவாணன், திரு மு.த. ஸ்ரீதரன், திரு பாலகிருஷ்ணன் ஆகியோரால் எடுக்கப்பட்டன. நூலின் மூல வரைவுகளை திரு இரா. கோபு தட்டச்சு செய்து தந்தார். குகைத்தளங்களின் தரைப்படங்களை இளநிலைப் பொறியாளர் திரு. ஒலிமாலிக் வரைந்துள்ளார். இத்துறையில் கல்வெட்டுப் பயிற்சி பெற்ற மாணவிகள் செல்வி மு.ஆ.ப. சரஸ்வதி மற்றும் மு.ஆ.ப. குணசுந்தரி ஆகியோர் மூலப்படிகளை கையெழுத்துப் பிரதியாக எழுதியும் கல்வெட்டுகளின் பார்வைப் படிகளை ஐராவதம் மகாதேவன் நூலிலிருந்து வரைந்தும் தந்தனர். இவர்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள இடங்களைக் குறிக்கும் நிலப்படம், எடக்கல், திருச்சிராப்பள்ளி கல்வெட்டுகளின் படங்கள் மற்றும் கல்வெட்டுகளின் மீது தாள் வைத்து விளம்பிய படங்கள், தொல்லெழுத்து பட்டியல் ஆகியவை ஐராவதம் மகாதேவன் நூலில் வெளியானவை. இவற்றை இந்நூலில் பயன்படுத்திக் கொள்ள அனுமதி தந்ததோடு நிலப்படங்கள் முதலியவற்றை துறைக்கு அன்பளிப்பாகவும் அவர் தந்துள்ளார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பயனுள்ள நூலை மாணவர்களும், ஆசிரியர்களும், ஆய்வாளர்களும் படித்தறிந்து பயன் பெறுவதோடு தமிழகத் தொன்மை மரபுச் சின்னங்களையும் பாதுகாத்திட முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழகத் தொல்லியல் துறையின் ஆக்கப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஊக்கப்படுத்தி வரும் தமிழ்நாடு அரசிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை

*28.2.2006*

சிறப்பு ஆணையர்

https://t.me/daily_paper

# பொருளடக்கம்


1. தமிழ் - பிராமி கல்வெட்டுகளின் அமைவிடம் 1
2. தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புகள் 5
3. தமிழ் -பிராமி எழுத்துக்கள் 10
4. தமிழ்-பிராமி கல்வெட்டுகள்
   1. மாங்குளம் 16
   2. அரிட்டாபட்டி 22
   3. திருவாதவூர் 24
   4. கிழவளவு 26
   5. கொங்கர் புளியங்குளம் 28
   6. மறுகால்தலை 31
   7. வரிச்சியூர் 32
   8. விக்கிரமங்கலம் 34
   9. மேட்டுப்பட்டி 38
   10. கருங்காலக்குடி 44
   11. முதலை குளம் 45
   12. அழகர் மலை 46
   13. சித்தன்னவாசல் 54
   14. ஐயர் மலை 56
   15. திருமலை 58
   16. திருப்பரங்குன்றம் 59
   17. முத்துப்பட்டி 62
   18. ஜம்பை 64
   19. ஆனைமலை 66
   20. புகளூர் 68
   21. மாமண்டூர் 77
   22. குன்னக்குடி 78
   23. தொண்டூர் 80

https://t.me/daily_paper


24. குடுமியான்மலை 81

25. திருச்சிராப்பள்ளி 81

26. எடக்கல் 82

27. நெகனூர்பட்டி 84

28. அம்மன் கோயில்பட்டி 86

29. அரச்சலூர் 87

30. மன்னார் கோயில் 89

5. தமிழ் - பிராமிக் கல்வெட்டுகள் உணர்த்தும் சமயம் 92

6. தமிழ்-பிராமி கல்வெட்டுகள் காட்டும் தமிழகச் சமூகப் பொருளாதார நிலை 102

7. தமிழ்-பிராமி கல்வெட்டுகள் காட்டும் அரசியல் 108

8. தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் மொழி நிலை 113

9. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்கள் 122

10. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் ஆட்பெயர்கள் 134

11. தமிழ்-பிராமி பானை ஓட்டுக் கீறல்கள் 146

துணை நூல்பட்டியல் 148


**முன் அட்டை:** மறுகால் தலை குகைத்தளம்; ஐயர்மலை தமிழ்-பிராமி கல்வெட்டு; 'பேரஅவதன்' - மோதிரம், கரூர்; வசிட்டிமகன் திரு 'ஸதகணி' காசு.

**பின் அட்டை:** தமிழ்-பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகள்: 'குவிர அன்அ' - அழகன்குளம், 'நெடுங்கிள்ளி' - தேரிருவேலி, 'கொற்றன்' - தேரிருவேலி, 'குறும் மங்கள ஆதன் யியானைபெ' - மாங்குடி, 'அகே$_3$க$_3$' - கோவலன் பொட்டல் 'பதுமாற்கோதை' - அழகன்குளம்.

https://t.me/daily_paper

https://t.me/daily_paper

# 1

# தமிழ் - பிராமி கல்வெட்டுகளின் அமைவிடம்

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் பெரும்பாலானவை சமணம் தொடர்பானவை. சமண முனிவர்கள் மக்களையும் ஊர்களையும் விட்டு ஒதுக்கி மிக எளிமையாக வாழும் தன்மையினர். இல்லற வாழ்வினைத் துறந்த அம்முனிவர்கள் வாழத் தேர்வு செய்த பகுதிகள் மலைகளில் இயற்கையாய் அமைந்த குகைத்தளங்களாகும். அவர்களது அறநெறி வழிகாட்டலில் ஈர்க்கப்பட்ட மக்கள் அவர்களிடம் பெருமதிப்பு கொண்டமை காரணமாக அவர்கள் வாழ்ந்த குகைத்தளங்களில் எளிமையான கற்படுக்கைகள் அமைப்பதும், மழைநீர் குகைத்தளத்தினுள் செல்லாது வடிந்திட குகைத்தள முகப்புப் பகுதிகளில் நீர்வடி விளிம்புகள் வெட்டிக் கொடுப்பதும், குடிநீருக்காக நீர்ச்சுனைகள் அமைத்துக் கொடுப்பதுமான செயல்களைத் தர்மமாகக் கருதினர். அத்தர்மச் செயல்களைக் கல்வெட்டுகளாகவும் பதிந்தனர். மாங்குளம் கல்வெட்டுகள் இச்செயல்களைத் 'தம்மம்', 'தமம்' என்ற சொற்களால் குறிப்பிடுகின்றன. நெகனூர்பட்டிக் கல்வெட்டு 'அறம்' என்றே குறிப்பிடுகிறது. அதனால் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் ஊரை விட்டு ஒதுங்கிய பகுதிகளில் சிறிய பெரிய குன்றுகளில் அமைந்த இயற்கைக் குகைத்தளங்களிலேயே இன்று கிடைக்கின்றன.

இக்குகைத் தளங்கள் எளிமையானவை, ஒதுக்குப் புறமானவை. எனினும் அக்குகைத் தளங்களிலிருந்து பார்க்கும் போது அவற்றின் எதிரே மிகப் பரந்த சமவெளியினைக் காணமுடியும். நெடுந்தூரத்து நிகழ்வுகளை நோக்கும் வண்ணம் அவற்றின் குறுக்கே எவ்விதத் தடைகளுமில்லாத குகைத்தளங்களாக அவை அமைந்திருப்பதைக் காணலாம். தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள இடங்கள் பெருவழிகளை அடுத்தும் பண்டையத் தலைநகரங்கள், பெருநகரங்கள் மற்றும் வணிகச் சிறப்புடைய ஊர்களை அடுத்தும் இருப்பதைக் காணலாம்.

அழகர் மலைக் கல்வெட்டு சோழநாட்டிலிருந்து பாண்டி நாட்டிற்கு வரும் அன்றைய பெருவழியில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி ஆகியோருடன் திருவரங்கத்திலிருந்து மதுரை வரும் கௌந்தி அடிகள் அழகர் மலை வழியாக மதுரை வருவதாகவே குறிப்புள்ளது.[1] புகளூர் கல்வெட்டு காவிரிக் கரையில், காவிரியைக் கடக்கும் வசதியான இடத்தில் உள்ளது. அன்று பல்லவருக்கும் பாண்டியருக்கும் இதே இடத்தில் கரையின் இருமருங்கிலும் போர் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன[2]. சென்ற நூற்றாண்டைய ஐம்பதுகளில் இங்குக் காவிரியின் ஊடே பாலம் அமைக்கும் வரை பரிசல் (படகு) போக்குவரத்து இருந்தது. இன்று கன்னியாகுமரியிலிருந்து மதுரை, திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், பெங்களூர் வழியாகக் கர்நாடகம் செல்லும் பெருவழியும் இவ்விடத்திலேயே ஆற்றைக் கடப்பதும் நோக்கத்தக்கது. கீழவளவு கல்வெட்டு மதுரை-

https://t.me/daily_paper

தொண்டிச் (பண்டைய துறைமுகம்) சாலையில் அமைந்துள்ளது. மன்னார்கோயில் கல்வெட்டு திருநெல்வேலிப் பகுதியில் கேரளம் செல்லும் மலைவழிச்சாலைப் பகுதிக்குச் சற்றுத் தொலைவில் உள்ளது.

பாண்டியர் தலைநகரமான மதுரையைச் சுற்றியுள்ள குன்றுகள் பெரும்பாலானவற்றில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் உள்ளன[3]. சேரர் தமிழ் பிராமி கல்வெட்டுள்ள புகளூர், சேரர் தலைநகரான கரூர் அருகில் உள்ளது. அதியமான் கல்வெட்டுள்ள ஜம்பை மலையைமான்களின் தலைமையிடமான திருக்கோயிலூர் அருகில் உள்ளது. தூசி மாமண்டூர் தொண்டைமான்களின் தலைநகரான காஞ்சிபுரம் அருகில் உள்ளதாகும். திருச்சிராப்பள்ளியில் உள்ள கல்வெட்டு சோழர் தலைநகரான உறையூரை அடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள குன்றுகள் பெரும் ஏரிகள், ஆறுகளை அடுத்து சற்று தொலைவில் உள்ளன. மதுரைப் பகுதியில் உள்ள குன்றுகள் வைகையின் இருமருங்கிலும் அமைந்தவை. காவிரியை அடுத்து புகளூர், ஐயர்மலை திருச்சிராப்பள்ளி ஆகிய தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள குன்றுகள் உள்ளன. பெண்ணையாற்றுக்கு சற்றுத் தொலைவில் ஜம்பை தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள குன்றுள்ளது. தாமிரபரணி ஆற்றுக்கு சற்றுத் தொலைவில் மன்னார்கோயில், மறுகால் தலை கல்வெட்டுகள் உள்ளன. அழகர்மலை முதலிய குன்றுகளில் நீர் சுனைகள் இருப்பதும் மாமண்டூர், விக்கிரமங்கலம் முதலிய இடங்களில் பெரும் ஏரிகள் அமைந்துள்ளமையும் இங்கு நோக்கத்தக்கன.

கல்வெட்டுள்ள குகைத் தளங்கள் சிலவிடங்களில் மிகப் பரந்த உட்பகுதியைக் கொண்டவை. அதனால் ஏராளமான கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. கொங்கற்புளியங் குளம் குகைத்தளத்தில் 50க்கு மேற்பட்ட கற்படுக்கைகளைக் காணலாம். தற்பொழுது மாங்குளம் குகைத்தளத்தில் மேடிட்டிருந்த மண்ணை அகற்றியபோது 34 கற்படுக்கைகள் அறியப்பட்டுள்ளன. மாமண்டூர் போன்ற இடங்களில் குகைத்தள உட்பரப்பு மிகக் குறைவானது. அதனால் இரண்டு மூன்று கற்படுக்கைகளே உள்ளன.

குகைத்தளங்களின் உள் உயரம் முகப்புப் பகுதியில் அழகர்மலை, வரிச்சியூர் போன்ற இடங்களில் மிக உயரமானது. இங்குத் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் முகப்புப் பகுதியில் மிக உயரத்தில் உள்ளன. அவற்றைச் சாரங்கள் கட்டியும் ஏணிகள் வைத்துமே விரல் தடவிப் படிக்க இயலும். இவ்விதம் உயரமான முகப்புடைய குகைத்தளங்களில் நீர்வடி விளிம்புகளும் காற்று, வெய்யில், மழைச் சாரல் ஆகியவற்றிலிருந்து தடுப்பு ஏற்படுத்தப்பட்டதுடன், அவற்றின் முன்னதாக கால்கள் நடப்பட்டு பந்தல்கள் அமைக்கப்பட்டன. இதனைப் பலகுகைத் தளங்களின் முகப்பு விளிம்புப் பகுதிகளில் அமைந்த கற்துளைகளும் தரைப்பகுதியில் அமைந்த குழிகளும் காட்டுகின்றன. திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் தரைப்பகுதியில் பாறையில் சிறிய நீரோடு கால்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை தரைவழியாக நீர் குகைத்தளத்திற்குள் செல்லாது அமைக்கப்பட்ட ஏற்பாடுகளாகும்.

இவ்விதம் தமிழ்நாட்டில் சமண முனிவர்கள் வாழும் உறைவிடங்கள் பெருவழிகளிலும் முக்கிய நகரங்களைச் சுற்றியமைந்த குன்றுகளிலும் நல்லவிளைச்சல் பகுதிகளிலும் மேற்சொன்ன எளிமையான வசதிகளுடன் காணப்படுகின்றன. இவ்வகை இடத்தேர்வுகள் இம்முனிவர்கள் சமயத்தைப் பரப்புவதற்கும் அவர்களுக்கு நகரப்பகுதியின் பாதிப்பில்லாமல் இருப்பதற்கும் உதவின. இதுபோன்ற இடங்களிலேயே முனிவர்கள் சிந்தனை செய்து மனிதகுல வரலாற்றிற்கு உதவும் நூற்களை இயற்றியிருக்க வேண்டும். தொடக்க காலத்தில்

இக்குகைத்தளங்கள் முனிவர்கள் வாழ்விடங்களாகவே இருந்தன. பின்னர் பொதுமக்களின் வழிபாட்டுத் தலமாக மாறின. இதுபோன்ற இடங்களுக்கு மக்களும் அச்சமயத்தைப் பின்பற்றுவோரும் வந்து முனிவர்களிடம் அறிவுரை கேட்டுத் திரும்பும் சூழ்நிலைகள் உருவாகின.

https://t.me/daily_paper

முனிவர்களது உறைவிடங்கள் கீழ்க்கண்ட பெயர்களில் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.

1. பாளிஇய், பாளிய், பாளி
2. அதிட்அனம், அதட்அனம், அதிட்டானம், அதிடானம்.
3. கரண்டை
4. முழாகை, நல்முழஉகை
5. கல்காஞ்சனம்
6. அறுத்த கல், அறுபிதகல்
7. உறை, உறையுள்
8. பள்ளி

பாளி என்பதும் பள்ளி என்பதும் தங்குமிடம், துயிலுமிடம் என்பதைக் குறிக்கும் சொற்களாகும். பாளி என்பது கி.பி. முதல் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கல்வெட்டுகளில் பள்ளி என்றே குறிப்பிடப்படுகிறது. பள்ளி கொள்தல் உறங்குதல் என்பதைக் குறிக்கும் கற்படுக்கையே பள்ளி எனப்படுகிறது எனலாம். அதிட்டானம் என்பது அடித்தளம், இருக்கை, வாழ்விடம், புனிதமான இடம் என்பதைக் குறிக்கும் சொல்லாகும்.

இயற்கையான குகைத்தளத்தினை உளியால் செதுக்கி உறைவிடமாக உருவாக்கினர். இது கல்லினை அறுத்துச் செய்த செயல் என்று புகளூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. 'அறுபிதகல்' 'அறுத்தகல்' என்று அங்குள்ள முனிவர்களது இருப்பிடம் அழைக்கப்பட்டுள்ளது. 'கரண்டை' என்பது முனிவர்கள் உறையும் இடம் என்று தமிழ் நிகண்டுகள் தெரிவிக்கின்றன. இச்சொல் திருமலைக் கல்வெட்டில் உறைவிடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வரிச்சியூர், அரிட்டாபட்டியிலுள்ள கல்வெட்டுகள் குகைத்தளம் என்ற பொருளைக் குறிக்கும். 'முழாகை, முழஉகை' என்ற சொற்களால் குன்றுகளிலுள்ள குகைளில் வாழ்ந்த முனிவர்களது இருப்பிடங்களைக் குறிக்கின்றன. மறுகால்தலையிலுள்ள கல்வெட்டு இதனைக் கல்லால் செய்த காஞ்சனம் என்று குறிப்பிடுகிறது. மேட்டுப்பட்டியிலுள்ள கல்வெட்டு முனிவர் இருப்பிடத்தை 'உறை' என்றும் ஆனைமலையிலுள்ள கல்வெட்டு 'உறையுள்' என்றும் அழைக்கின்றன. அய்யனார்குளம் (மன்னார்கோயில்) தமிழ்-பிராமி கல்வெட்டில் முனிவர்கள் இருப்பிடத்தைக் குறிக்கும் 'பள்ளி' என்ற சொல் காணப்படுகிறது.

குகைத்தளங்களைப் பொதுவாகக் குறிக்கும் சொல்லோடு குகைத் தளத்தின் பகுதிகளைக் குறிக்கும் சொற்களும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவற்றை உருவாக்கிக் கொடுத்தோர் பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. குகைத்தளத்தின் முகப்பிலுள்ள புருவத்தை வெட்டிக் கொடுத்ததைக் கொங்கர்புளியங்குளம் கல்வெட்டுகள் 'குற கொடுபிதவன்'

https://t.me/daily_paper

என்றும் 'குறகொடல்கு இருக்கை' என்றும் குறிப்பிடுகின்றன. அழகர்மலை குகைத்தளத்தின் முகப்பில் வெட்டப்பட்ட நீர்வடி விளிம்பை அல்லது அங்குள்ள சுனையை 'தார்அணி' என்று குறிப்பிடுகின்றது. மாமண்டூரில் தச்சன் ஒருவன் குகைத்தளத்தின் 'ஆசிர் செய்தது பற்றிக் கல்வெட்டு கூறுகிறது. ஆசி என்பது குகைத்தளத்தில் கூரையைத் தாங்கும் பந்தல்கால் குழிகள் (ஆசி- Support Prop) என்று ஐராவதம் மகாதேவன் ஆய்வுக் குறிப்பு தந்துள்ளார். புகளூர் கல்வெட்டில் வரும் 'முன்று' என்ற சொல் குகைத்தளத்தின் முன்பமைந்த முற்றம், முன்றில் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.[4]

## அடிக்குறிப்புகள்

1. சிலம்பு

2. வேள்விக்குடிச் செப்பேடு

3. ஐராவதம் மகாதேவன் பண்டைய மண்டலப் பிரிவுகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பட்டியல் தருகிறார்

| பகுதி | இடங்கள் | தமிழ்–பிராமி கல்வெட்டுகள் |
|---|---|---|
| தமிழக வடபகுதி (தொண்டைநாடு பின்னர் பல்லவர் ஆட்சிப் பகுதி) | 4 | 4 |
| தென்பகுதி (பாண்டிநாடு) | 20 | 63+1 |
| மேற்குப் பகுதி (சேரநாடு, கேரளம், கொங்கு நாடு) | 5 | 21 |
| கிழக்குப் பகுதி (சோழநாடு) | 1 | 1 |
| மொத்தம் | 30 | 89+1 |

அவரது நூல்வெளியீட்டிற்குப் பிறகு அரிட்டாபட்டியில் கண்டறியப்பட்ட கல்வெட்டு + 1 என்று தரப்பட்டுள்ளது.

4. மேலது. பக்கங்கள் 601, 602.

## SITES OF EARLY TAMIL INSCRIPTIONS IN TAMIL NADU
(Second Century B.C. - Sixth Century A.D.)

https://t.me/daily_paper




தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள ஊர்கள்
படம் 1

https://t.me/daily_paper




தமிழ்-பிராமி உயிர் எழுத்துகளின் பட்டியல்

படம் 2

https://t.me/daily_paper




தமிழ்-பிராமி மெய் எழுத்துகளின் பட்டியல்

படம் 3

https://t.me/daily_paper



அழகர்மலை



நெகனூர்பட்டி







திருமலை

தமிழ்-பிராமி குகைத்தளங்களில் தொல்மாந்தர் பாறை ஓவியங்கள்

படம் 4

https://t.me/daily_paper



அசோகன் கல்வெட்டு



பட்டிபுரோலு கல்வெட்டு

படம் 5

https://t.me/daily_paper




SKETCH SHOWING THE NEWLY DISCOVERED
JAIN BEDS CAVE IN MEENAKSHIPURAM HILLS MADURAI Dt.

ALL NOTED MEASUREMENTS ARE IN METRE UNITS.
DRAWN TO 1:50 SCALE

2/3/06.
Jr. Engr./Madurai
DRAWN BY

மாங்குளம் குகைத்தள கற்படுக்கைகளின் வரைப்படம்
அண்மையில் அறியப்பட்டது

படம் 6




கொங்கர் புளியன்குளம் குகைத்தள கற்படுக்கைகள்

படம் 7

https://t.me/daily_paper




யானை மலை குகைத்தள கற்படுக்கைகள்

படம் 8

https://t.me/daily_paper

https://t.me/daily_paper

## 1.மாங்குளம்







1,2 குகைத்தளங்களின் பொதுதோற்றம்,
3.நீர்வடி விளிம்பும் பாறைச் சுவரில் தமிழ்–பிராமி கல்வெட்டும்

*படம் 9*

https://t.me/daily_paper



நெடுஞ்சழியன், இளஞ்சடிகன் தமிழ்–பிராமி கல்வெட்டுப் பகுதிகள்

படம் 10

https://t.me/daily_paper

## 2. அரிட்டாபட்டி



1. குகைத்தளம், 2,3. நெல்வெளிஇ– சிழிவன் கல்வெட்டு, 4, அச்சநந்தி செ–வித்த திருமேனியும் கல்வெட்டும்

*படம் 11*

# 7. திருவாதவூர்

https://t.me/daily_paper







1. குகைத்தளப் பொதுதோற்றம் 2. குகைத்தளத்திலிருந்து வெளித்தோற்றம்
3. நீர்வடிவிளிம்பின் மேலும் கீழும் தமிழ்–பிராமி கல்வெட்டு

*படம் 12*

# 4. கீழவளவு

https://t.me/daily_paper



1. குகைத்தளப் பொதுதோற்றம் 2. தமிழ்–பிராமி கல்வெட்டும் கழிகள் இணைப்பதற்கான துளைகளும் 3. கற்படுக்கைகள் 4. தீர்த்தங்கரர் திருமேனிகள்

*படம் 13*

https://t.me/daily_paper

# 5. கொங்கர் புளியங்குளம்











1. மதுரை–தேனி சாலையிலிருந்து குகைத்தளப் பொதுதோற்றம் 2. குகைத்தளம் 3. கற்படுக்கைகள் 4. சமணத் தீர்த்தங்கரர் திருமேனி 5. தமிழ்–பிராமி கல்வெட்டு

படம் 14

https://t.me/daily_paper

# 6. மறுகால்தலை









1. குகைத்தளப் பொதுதோற்றம் 2. குகைத்தளம்
3. கற்படுக்கைகள் 4. தமிழ்–பிராமி கல்வெட்டு

*படம் 15*

https://t.me/daily_paper

## 7. வரிச்சியூர்







1. குகைத்தளப் பொதுதோற்றம் 2. தமிழ்–பிராமி கல்வெட்டுள்ள முகப்புப் பகுதி 3. கற்படுக்கைகள்

படம் 16

https://t.me/daily_paper

# 8. விக்கிரமங்கலம்









1. உண்டாங்கல் மலை 2. குகைத்தளம்
3. கற்படுக்கைகள் 4. 'செங்குவிரன்' பெயருள்ள தமிழ்–பிராமி கல்வெட்டு

*படம் 17*

https://t.me/daily_paper

# 9. மேட்டுப்பட்டி











1. சித்தர்மலை பொதுத்தோற்றம் 2–4 கற்படுக்கைகளும் கல்வெட்டுகளும்
5. குகைத்தளத்தில் தற்கால வேல் வழிபாடு

*படம் 18*

https://t.me/daily_paper

# 10. கருங்காலக்குடி









1. மலை பொதுதோற்றம் 2. குகைத்தளம் 3. கல்வெட்டுப் பகுதி 4. அச்சநந்தி செ–வித்த திருமேனி

படம் 19

# 11. முதலைக்குளம்

https://t.me/daily_paper







1,2 குகைத்தள முகப்பு தோற்றம்
3. தமிழ்–பிராமி கல்வெட்டுப் பகுதி

*படம் 20*

https://t.me/daily_paper

## 12. அழகர்மலை











1. அழகர் மலை 2. குகைத்தளம் 3. நீர்ச்சுனை 4. தீர்த்தங்கரர் திருமேனி 5. நீர்வடி விளிம்பின் மேலும் கீழும் கல்வெட்டு (இரு நீர்வடி விளிம்புகள்)

*படம் 21*

https://t.me/daily_paper

## 12. அழகர் மலை



1. நீண்ட வரிசையில் தமிழ்–பிராமி கல்வெட்டு 2–5 '.. ஞ்சி கழுமாறன்', 'தியன் சந்தன்', 'கொழுவனிகன் எள சந்தன்', 'பணிதவனிகன் நெடுமலன்' என்று பொறிப்புள்ள தமிழ் பிராமி கல்வெட்டுகள்

படம் 22

https://t.me/daily_paper

# 19. சித்தன்னவாசல்













1. சித்தன்னவாசல் மலை 2. ஏழடி பாட்டம் குகைத்தளம் 3. கல்வெட்டுடன் கற்படுக்கை
4. 'எருமிநாடு குமிழூர் பி' 5. 'றந்த காவுடி ஈதென்கு'
6. தொழுகுன்றத்து கடவுளன் திருநீலன் – பிற்கால தமிழ் கல்வெட்டு

படம் 23

https://t.me/daily_paper

# 14. ஐயர் மலை











1,2. அ–யர்மலை பொது தோற்றம் 3. குகைத்தளம் கற்படுக்கை
5. 'பனைதுறை வேஸன் அதிட்டனம்' கல்வெட்டு 6. கல்வெட்டின் மைப்படி

படம் 24

https://t.me/daily_paper

# 15. திருமலை







1. "எருகாடூர் ..." கல்வெட்டுள்ள குகைத்தளம் 2. "வகரண்டை" கல்வெட்டுள்ள குகைத்தளம்
3. "வகரண்டை" கல்வெட்டின் மைப்படி

படம் 25

https://t.me/daily_paper

# 16. திருப்பரங்குன்றம்



1. மலையின் பொதுதோற்றம் 2. குகைத்தளம் 3. கல்வெட்டுடன் கூடிய கற்படுக்கைகளும் சா–சுவரும் 4. தலைகீழாக உள்ள 'அந்துவன் கொடுபிதவன்' கல்வெட்டு

*படம் 26*

https://t.me/daily_paper

# 17. முத்துப்பட்டி









1. கரடிபட்டி மலை குகைத்தளம் 2. 'முசிறி கோடன்' கல்வெட்டுள்ள பாறைப் படுக்கை
3,4 'சைய அளன் விந்தை ஊர்', 'கவி–' என்றுள்ள தமிழ்–பிராமி கல்வெட்டுகள்

படம் 27

# 18. ஜம்பை

https://t.me/daily_paper







1. சாமியார்மடம் குகைத்தளப் பொதுதோற்றம் 2. குகைத்தள பாறைச்சுவரில் அதியன் கல்வெட்டு
3. அதியன் கல்வெட்டின் மைப்படி

*படம் 28*

https://t.me/daily_paper

## 19. ஆனைமலை











1. ஆனைமலை பொதுதோற்றம் 2. குகைத்தளம் 3. கற்படுக்கைகள்
4,5 நீர்வடி விளிம்பின் கீழ் தமிழ்–பிராமி கல்வெட்டு

*படம் 29*

https://t.me/daily_paper











ஆறு நாட்டார் மலை குகைத்தளங்கள் கற்படுக்கைகள் பொது தோற்றம்

படம் 30

https://t.me/daily_paper

# 20. புகளூர்



ஆறு நாட்டார் மலை குகைத்தள பாறையில் தமிழ்–பிராமி கல்வெட்டுகள்

படம் 31

https://t.me/daily_paper

# 21. மாமண்டூர்



1–4 மாமண்டூர் குன்றும் குகைத்தள கல்வெட்டும் 5. பல்லவர் கால குடைவரை

படம் 32

https://t.me/daily_paper

## 22. குன்னக்குடி





குன்னக்குடி ஞானியார் மடம் கற்படுக்கைகளும் கல்வெட்டும்

## 24. குடுமியான்மலை





குடுமியான் மலை குகைத்தளமும் கல்வெட்டு மைப்படியும்

படம் 33

https://t.me/daily_paper













1,2 தொண்டூர் மலை பொதுதோற்றம் 3. பஞ்சநார்படி குகைத்தளம்
4. கல்வெட்டு மைப்படி 5. பிற்கால தீர்த்தங்கரர் திருமேனி

*படம் 34*

# 25. திருச்சிராப்பள்ளி

https://t.me/daily_paper





1. திருச்சிராப்பள்ளி குகைத்தளமும் உச்சிப்பிள்ளையார் கோவிலும்
2. இன்று காணாமல் போன கல்வெட்டின் பழைய மைப்படி

# 26. எடக்கல்



இன்று காணாமல் போன பழைய கல்வெட்டின் மைப்படி

படம் 35

https://t.me/daily_paper

# 27. ரெங்கனூர்ப்பட்டி



அடுக்கன்கல் பாறை குகைத்தளப் பகுதியும் கல்வெட்டும்

படம் 36

# 29. அம்மன் கோயில்பட்டி

https://t.me/daily_paper



பெருமாள் கோயில் பாறை சுனைக் கல்வெட்டு

# 30. மன்னார் கோயில்





இராஜாபாறை குகைதளமும் கல்வெட்டும்

படம் 37

https://t.me/daily_paper

## 30. மன்னார் கோயில்









ராஜா பாறை, நிலாபாறை குகை தளங்களும் கல்வெட்டுகளும்

*படம் 38*

https://t.me/daily_paper













1–3. அரிட்டாபட்டி முதல் கல்வெட்டு 4. அம்மன்கோயில் பட்டி 5. அறச்சலூர்

*படம் 39*

# கல்வெட்டுபடிகள்

https://t.me/daily_paper



மேட்டுப்பட்டி, விக்கிரமங்கலம் கல்வெட்டுபடிகள்

படம் 40

https://t.me/daily_paper

# 2

# தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புகள்

தமிழகத்தில் இதுகாறும் பல ஊர்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தமிழ்பிராமி கல்வெட்டுகள் பல அரியதகவல்களைத் தருகின்றன. இவற்றைக் கண்டுபிடிப்பதிலும், அவற்றைச் சிறப்பான முறையில் படித்துப் பொருள் அறிவதிலும் பல அறிஞர்கள் பெரிதும் உழைத்திருக்கிறார்கள். அதனை இங்கு சுருக்கமாகக் காண்போம்.

## மாங்குளம் கல்வெட்டுகள்

முதன் முதலாக ராபர்ட் சீவல் என்பவர் 1882 ல் மதுரைக்கு அருகில் மாங்குளம் என்னும் சிற்றூரில் கழுகுமலை என அழைக்கப்படும் மலையின் குகைகளில் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளன என்று கண்டறிந்தார். இங்குள்ள சமணப்படுக்கைகளைப் பஞ்ச பாண்டவர் படுக்கை என்றும் மக்கள் கூறுவர். கழுகுமலை என்பதற்கு ஓவாமலை என்றும் ஒரு பெயருண்டு. இம்மலைக்கு அருகிலேயே மீனாட்சிபுரம் என்ற ஊரும் இருப்பதால் சிலர் இக்கல்வெட்டுகளை மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் என்றும் கூறுவர்.

மாங்குளம் என்ற சிற்றூர் மதுரைக்கு வடகிழக்கில் சுமார் இருபது கி.மீ. தொலைவிலும், மேலூருக்கு மேற்கில் 10. கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. முதலில் கண்டறிந்த சீவல், மற்றும் பிரான்சிஸ் ஆகியோர் இங்குள்ள கல்வெட்டுகளை மாங்குளம் கல்வெட்டுகள் என்றே அடையாளம் கண்டனர். ஆனால் 1906-07 இல் வெளிவந்த மைய அரசின் தொல்லியல் பரப்பாய்வுத் துறை வெளியிட்ட ஆண்டறிக்கையில் (இ.க. 1906-07) இவற்றை அரிட்டாபட்டிக் கல்வெட்டுகள் எனக் குறித்துள்ளனர். 1919இல் திரு. கிருஷ்ண சாஸ்திரி என்பார் இக்கல்வெட்டுகள் அரிட்டாபட்டி என்ற ஊரில் இல்லை. மாறாக அரிட்டாபட்டிக்கு 6 கி.மீ. தொலைவில் உள்ள மாங்குளம் கல்வெட்டுகளே இவை எனச் சுட்டினார். இதனையடுத்து ஆண்டறிக்கையைப் பின்பற்றி கே.வி. சுப்பிரமணிய அய்யரும், டி.வி. மகாலிங்கமும் அரிட்டாபட்டிக் கல்வெட்டுகள் என்றே மீண்டும் தவறாகக் குறித்தனர். 1966 இல் ஐராவதம் மகாதேவன் இவை மாங்குளம் கல்வெட்டுகளே என்று நிலை நாட்டினார். ஆயினும் இரா. நாகசாமி இவற்றை மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் என்றே தனது நூலில் (1972) குறிப்பிட்டுள்ளார்.

கிருஷ்ண சாஸ்திரியார் இருவேறு கல்வெட்டுகளின் படிகளைத் தவறுதலாக ஒன்றாகக் கொண்டபடியால், பின்னர் படித்த கே.வி சுப்பிரமணிய அய்யர், டி.வி. மகாலிங்கம் ஆகியோரும் இக்கல்வெட்டுகளைச் சரியாகப் படிக்கவில்லை. இவை நேரடியாக கல்வெட்டுகளைச் சென்று பார்க்காது மைப்படிகளைக் கொண்டே ஆய்வு செய்வதில் உள்ள

பெரிய குறைபாடாகும். ஐராவதம் மகாதேவன் 1916இல் மேற்கொண்ட நேரடிக்கள ஆய்வின் காரணமாக இக்குறைபாடு களையப்பட்டுச் சரியான வாசிப்பு பெறப்பட்டது.

https://t.me/daily_paper

## எடக்கல் கல்வெட்டுகள்

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் சுல்தான் பத்தேரி என்னுமிடத்திற்குத் தென்மேற்கில் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது எடக்கல் குன்று. கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரமுள்ள இக்குன்றில் 1894இல் மலபார் மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளராகப் பணியாற்றிய பாவீட் என்பவர் ஒரு குகையைக் கண்டறிந்து அதில் இருந்த கல்வெட்டுகளையும் பாறைக் கீரல்களையும் புகைப்படமெடுத்தும், வரைந்தும் அரசு கல்வெட்டாய்வாளர் உல்ட்சு அவர்களுக்கு அனுப்பிவைத்தார். உல்ட்ஸ் உடனடியாக அவற்றைப் படிஎடுக்க ஏற்பாடு செய்து அவைபற்றிய ஒரு சிறு குறிப்பை 1896-97 ஆம் ஆண்டறிக்கையில் (இ.க. 1896-97) வெளியிட்டார். இதன் அடிப்படையில் 1901 ஆம் ஆண்டு பாவீட் அவர்களும் ஒரு கட்டுரையை வெளியிட்டார். உல்ட்ஸ் இங்கு நான்கு குகைக்கல்வெட்டுகள் உள்ளன என்றும் அவற்றில் இரண்டு படிக்க இயலாதவாறும் ஒன்று தமிழிலும், மற்றொன்று சமஸ்கிருதத்திலும் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

சுமார் ஒரு நூறு ஆண்டுகாலம் மறந்து போய்விட்ட இக்கல்வெட்டுகளை 1995-96இல் ஐராவதம் மகாதேவன் தலைமையிலான குழுவினர்கள் மீளாய்வு செய்து மேலும் இரண்டு புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர். எனினும் பழைய இருகல்வெட்டுகள் உருகுலைந்து படிக்க இயலாது போய்விட்டன.

## கீழவளவு கல்வெட்டு

மதுரைக்கு வடகிழக்கே 38 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் கீழவளவு. 1903இல் வெங்கோபராவ் என்பவர் இங்கிருக்கும் மலையில் உள்ள குகையின் மேல் முகட்டில் ஒரு தமிழ்-பிராமி ல்வெட்டிருப்பதைக் கண்டறிந்தார். முக்கியத்துவம் வாய்ந்த இக்கல்வெட்டு பற்றி 1909 வரை வெளியிடப்பட்ட ஆண்டறிக்கைகளில் வெங்கையா, மற்றும் கிருஷ்ண சாஸ்திரி ஆகியோர் எதுவும் குறிப்பிடவில்லை. 1910ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் கிருஷ்ணசாஸ்திரி இக்கண்டுபிடிப்பைப்பற்றிக் குறித்துள்ளார். முதன்முதலாக இதன் மைப்படி 1967இல் டி.வி. மகாலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது. இக்கல்வெட்டு வலமிருந்து இடமாகவும் எழுத்துக்கள் தலைகீழாகவும் வெட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சரியான வாசிப்பு ஐராவதம் மகாதேவன் நூலில் (2003) வெளியிடப்பட்டுள்ளது.

## அடுத்தடுத்த கண்டுபிடிப்புகள்

மேட்டுப்பட்டி என்னும் சிற்றூர் மதுரைக்கு வடமேற்கே 40 கி.மீ. தொலைவில் உள்ளது. 1906 இல் பிரான்சிஸ் என்பவரால் இங்குள்ள தமிழ்-பிராமி கல்வெட்டுகள் சில கண்டறியப்பட்டன. இதே ஆண்டில் திருநெல்வேலி உதவி மாவட்ட ஆட்சியர் கெமைடு என்பவரால் மறுகால்தலை என்னுமிடத்தில் ஒரு கல்வெட்டு கண்டறியப்பட்டது. கே.வி.

https://t.me/daily_paper

சுப்பிரமணிய அய்யர் மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலையில் இதே ஆண்டில் ஒரு கல்வெட்டைக் கண்டறிந்தார். இவர் 1906இல் மாங்குளத்தைப் பார்வையிட்டு மீண்டும் சில கல்வெட்டுகளை அறிந்தார். 1908இல் வெங்கய்யா மேட்டுப்பட்டியில் மேலும் சில கல்வெட்டுகளைக் கண்டறிந்தார். வரிச்சியூர், திருப்பரங்குன்றம், அழகர்மலை ஆகிய இடங்களில் 1908இல் சில கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. குன்றக்குடிக் கல்வெட்டு 1909இலும், கொங்கற்புளியங்குளம், முத்துப்பட்டி ஆகிய ஊர்களில் 1910 - ஆம் ஆண்டும் கருங்காலக்குடியில் 1911 இலும், சித்தன்னவாசலில் 1914 இலும் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. வரிச்சியூர்க் கல்வெட்டுகள் மதுரை மாவட்ட கூடுதல் நீதிபதி திரு. விபெர்ட் அவர்களாலும், கருங்காலக்குடிக் கல்வெட்டு மதுரை மாவட்ட ஆட்சியராலும் கண்டறியப்பட்டன. புதுக்கோட்டையில் கல்வித்துறை அலுவராகப் பணியாற்றிய திரு. ராதாகிருஷ்ண அய்யர் சித்தன்னவாசல் கல்வெட்டைக் கண்டறிந்தார். மற்றவை மைய அரசின் கல்வெட்டாய்வாளர்களால் கண்டறியப்பட்டன. கே.வி. சுப்பிரமணிய அய்யர் நடுமுதலைக்குளம், விக்கிரமங்கலம் (உண்டாங்கல்) கல்வெட்டுகளையும், கிருஷ்ணசாஸ்திரி கொங்கற்புளியங்குளம் கல்வெட்டுகளையும் கண்டுபிடித்தனர். இக்கண்டுபிடிப்புகளுக்குப் பிறகு இவற்றைப்பற்றிய ஆய்வுகளிலும் வெளியீடுகளிலும் கவனம் செலுத்தப்பட்டது. அதன் பயனாக கிருஷ்ணசாஸ்திரியும் (1919) கே.வி. சுப்பிரமணிய அய்யரும் (1924) தங்களது ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டு அடுத்தக்கட்ட ஆய்வுகளுக்கு அடித்தளம் அமைத்தனர்.

அடுத்த நாற்பது ஆண்டுகால இடைவெளியில் ஐந்து ஊர்களில் 17 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. இவை விக்கிரமங்கலம், திருப்பரங்குன்றம், புகளூர், திருச்சி, மாமண்டூர், ஆகிய இடங்களில் நடுவண் அரசின் கல்வெட்டாய்வாளர்களால் கண்டறியப் பட்டவையாகும். விக்கிரமங்கலம் கல்வெட்டுகள் 1927இலும் புகளூரில் 1928 இலும், திருச்சியில் 1938 இலும் மாமண்டூரில் 1943 இலும், திருப்பரங்குன்றத்தில் 1952இலும் இக்கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. புகளூரில் 1963-64இல் முன்னர் கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்ட அதே குகையில் மேலும் இரண்டு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை ஐராவதம் மகாதேவன் 1965இல் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து சரியான வாசிப்புகளை ஆய்வு உலகிற்கு வழங்கினார்.

இத்தருணத்தில் இக்கண்டுபிடிப்புகளை மீளாய்வு செய்யும் முயற்சியில் கல்வெட்டாய்வாளர்கள் ஈடுபட்டனர். அதன் விளைவாக மேலும் சில புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர். மாங்குளம், முத்துப்பட்டி, அழகர்மலை, விக்கிரமங்கலம், புகளூர் ஆகிய இடங்களில் முன்னர் கண்டது தவிர மேலும் சில கல்வெட்டுகள் கிடைத்தன. இக்காலத்தில் வரலாற்று ஆய்வில் ஆர்வம் கொண்ட பல பேராசிரியர்களும் புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர். அறச்சலூரில் 1961-62இல் திரு. எம்.எஸ். வெங்கடசாமி மற்றும் ஈரோடு புலவர் செ. இராசு ஆகியோர் ஒரு கல்வெட்டைக் கண்டறிந்தனர். திருவாதவூரிலும் குன்றக்குடியிலும் 1965–66இல் ஐராவதம் மகாதேவன் கல்வெட்டுகளைக் கண்டறிந்தார். தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் அலுவலர் மா. சந்திரமூர்த்தி அய்யர்மலையில் ஒரு கல்வெட்டை 1973-74 இல் கண்டுபிடித்தார். சென்னை மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கேவி. ராமன் மற்றும் எ. சுப்பராயலு ஆகியோரால் அரிட்டாபட்டியில் 1971இல் ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. விக்கிரமங்கலம், முதலைக்குளம் கிராமங்களில் கிப்ட்

சிரோமணி மற்றும் ஜெபராஜன் ஆகியோர் 1978-79இல் சில கல்வெட்டுகளைக் கண்டனர். தருமபுரி மாவட்டம் கடத்தூரைச் சேர்ந்த தமிழாசிரியர் பகு. பொ. வெங்கட்ராமன் சேலத்தை அடுத்த அம்மன் கோயில்பட்டியில் சுனை ஒன்றுக்கு அருகில் 1979-80இல் ஒரு கல்வெட்டைக் கண்டுபிடித்தார்.

https://t.me/daily_paper

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் சில புதிய இடங்களில் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையின் அலுவலர்களும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களும் இக்கண்டுபிடிப்புகளில் முக்கியப் பங்கு வகித்துள்ளனர். கே. செல்வராஜ் என்னும் மாணவர் 1981இல் திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள ஜம்பை என்னுமிடத்தில் அதியமான் நெடுமான் அஞ்சியின் பெயருடன் கூடிய கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்தார். இக்கல்வெட்டு 'சத்யபுத்ர' என்னும் பிரிவினர் யார் என்பதற்கு விடையளிக்கும் வகையில் அமைந்த மிகமுக்கியமான கண்டுபிடிப்பாகும். சிவகங்கை மாவட்டம் திருமலையில் 1989இல் தமிழகத் தொல்லியதுறையின் அலுவலர்கள் சு. இராசகோபால், வெ. வேதாசலம், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் புதிய கல்வெட்டுகள் இரண்டைக் கண்டனர். 1991இல் மா. சந்திரமூர்த்தி தொண்டூர் என்னுமிடத்தில் ஒரு புதிய கல்வெட்டைக் கண்டறிந்தார். நெகனூர்ப்பட்டி என்னும் ஊரில் 1992இல் சு. இராசவேலு, மற்றும் சி. வீரராகவன் ஆகியோர் ஒரு கல்வெட்டைக் கண்டனர். புதுக்கோட்டையை அடுத்துள்ள குடுமியான்மலையில் 1981இல் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அலுவலர்கள் பொ. இராசேந்திரன், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் ஒரு கல்வெட்டைக் கண்டனர். ஆனால் அதில் ஒரு சில எழுத்துக்களை மட்டுமே அப்போது அவர்களால் படிக்கமுடிந்தது. அவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் ஐராவதம் மகாதேவனின் குழு 1999இல் அக்கல்வெட்டை முழுமையாகப் படித்து அறிந்தது.

திருநெல்வேலி மாவட்டம் மன்னார்கோயிலுக்கு அருகிலுள்ள அய்யனார்குளம் என்னுமிடத்தில் குற்றாலம் கல்லூரி ஆய்வு மாணவி மனோகரி கொடுத்த தகவலின் பேரில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அலுவலர்கள். மா. செந்தில் செல்வக் குமரனும், சொ. சந்திரவாணனும் இரு கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினர். இவைதவிர 2004இல் மதுரை மாவட்டம் அரிட்டாபட்டியில் முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கு மிக அருகிலேயே தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் மதுரைப்பிரிவு அலுவலர்கள் பொ. இராசேந்திரன், வெ. வேதாசலம், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் புதிய கல்வெட்டு ஒன்றைக் கண்டனர்.

ஐராவதம் மகாதேவன் 2003இல் வெளியிட்ட 'Early Tamil Epigraphy' என்ற ஆங்கில நூலில் அரிட்டாபட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் வெளியிடப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. நூல்வெளிவந்த பிறகு கண்டறியப்பட்ட கல்வெட்டு அரிட்டாபட்டி இரண்டாம் கல்வெட்டாகும்

இன்னும் ஆய்வாளர்களின் பார்வைக்குச் சிக்காத கல்வெட்டுகள் எங்கேனும் இருக்கக் கூடும். எதிர்கால ஆய்வாளர்களின் முயற்சிகளால் அவை வெளிப்படவும் வாய்ப்புள்ளது.

https://t.me/daily_paper

# தமிழ்-பிராமி கல்வெட்டு கண்டுபிடிப்புகள் (ஆண்டு வரிசையில்)

| | |
|---|---|
| 1882 | மாங்குளம் |
| 1894 | எடக்கல் |
| 1903 | கீழவளவு |
| 1906 | மேட்டுப்பட்டி |
| 1906 | மறுகால்தலை |
| 1906 | யானைமலை |
| 1906 | மாங்குளம் (கூடுதல் கல்வெட்டு) |
| 1908 | வரிச்சியூர் |
| 1908 | மேட்டுப்பட்டி |
| 1908 | திருப்பரங்குன்றம் |
| 1908 | அழகர்மலை |
| 1909 | குன்றக்குடி |
| 1910 | முத்துப்பட்டி |
| 1910 | கொங்கர்புளியன்குளம் (கூடுதல்கல்வெட்டு) |
| 1911 | கருங்காலக்குடி |
| 1914 | சித்தன்னவாசல் |
| 1926 | விக்கிரமங்கலம் |
| 1928 | புகளூர் |
| 1938 | திருச்சிராப்பள்ளி (கூடுதல் கல்வெட்டு) |
| 1940 | மாமண்டூர் |
| 1952 | திருப்பரங்குன்றம் (கூடுதல் கல்வெட்டு) |
| 1962 | அரச்சலூர் |
| 1964 | புகளூர் (கூடுதல் கல்வெட்டு) |
| 1964 | மாங்குளம் (கூடுதல் கல்வெட்டு) |
| 1964 | விக்கிரமங்கலம் |
| 1965 | திருவாதலூர் |
| 1971 | அரிட்டாபட்டி |
| 1974 | ஐயர்மலை |
| 1978 | விக்கிரமங்கலம் (கூடுதல் கல்வெட்டு) |
| 1978 | முதலைகுளம் |
| 1979 | அம்மன்கோயில்பட்டி |
| 1981 | ஜம்பை |
| 1986 | மேட்டுப்பட்டி |
| 1989 | திருமலை |
| 1991 | தொண்டூர் |
| 1991 | குடுமியான்மலை |
| 1992 | நெகனூர்பட்டி |
| 1996 | எடக்கல் |
| 2000 | மன்னார்கோயில் |
| 2003 | அரிட்டாபட்டி (கூடுதல் கல்வெட்டு) |

# 3

https://t.me/daily_paper

# தமிழ் -பிராமி எழுத்துக்கள்

தொல் மாந்தர் நிகழ்ந்த நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொள்ளவும், தங்கள் எதிரில் இல்லாதவர்க்கு காலம் - இடம் கடந்து செய்தி தரவும், தங்கள் மனதில் பதிந்த மாந்திரீக நம்பிக்கைகளை வெளிப்படுத்தவும், படங்களையும், குறியீடுகளையும் எதேச்சையாக வரையத் தொடங்கினர். இதுவே எழுத்துக்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டது. காலம் கடக்கக் கடக்க எழுத்து மனிதனது பட்டறிவை அடுத்த தலைமுறைக்கு மேலெடுத்துச் செல்லும் ஊடகமாகப் பயன்படத் தொடங்கியது. படங்களும் குறியீடுகளும் சித்திரம், சித்திர எழுத்து கருத்தெழுத்து, ஒலி எழுத்து என ஒன்றடுத்து ஒன்றாகப் பரிணமித்து இன்று நடைமுறையில் உள்ள அகர வரிசை எழுத்துக்களாயின.

இந்திய அளவில் பாறை ஓவியங்கள் தொன்மையானவை. தமிழகத்தில் தருமபுரி, கோயம்புத்தூர், விழுப்புரம், மதுரை, விருதுநகர் எனப் பலமாவட்டங்களில் பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன[1]. இந்திய அளவில் தொன்மையான எழுத்துக்கள் எனப்படுபவை இதுவரை படித்தறிய முடியாதிருக்கும் சிந்துவெளி எழுத்துக்களாகும். தமிழகத்தில் பானை ஓடுகளில் காணப்படும் கீறல் குறியீடுகள் தொன்மையானவை. சில கீறல்களுக்கும் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது[2]. தமிழ்பிராமி எழுத்துக் கீறப்பட்ட பானை ஓடுகளும், இவ்வகைக் குறியீட்டு கீறல் உடைய பானை ஓடுகளும் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. இவ்வகழாய்வுகளில் குறியீடுகள் கீழடுக்கிலும், தமிழ்-பிராமி எழுத்துக்கள் மேல் மண் அடுக்கிலும் கிடைப்பதால் ஒன்றடுத்து ஒன்றாகக் காலக்கணிப்பும், குறியீட்டிலிருந்து எழுத்து வந்தது என்றும் குறியீடுகள் பயன்பாடு குறைந்து எழுத்துக்கள் பயன் பாட்டிற்கு வந்தன என்றும் கருத இடமேற்படுகிறது.

இந்திய அளவில் இன்றுள்ள பல்வேறு எழுத்துக்களுக்கு முன்னோடியாக விளங்குபவை கரோஷ்டி, பிராமி என்ற இரு தொன்மை எழுத்துக்களேயாகும். பெருமளவு இன்று வழக்கிலுள்ள இடமிருந்து வலமாக எழுதும் எழுத்துக்களுக்கு முன்னோடி பிராமி எழுத்தாகும். வலமிருந்து இடமாக எழுதும் அரபி, பாரசீகம் முதலிய எழுத்துக்களுக்கு முன்னோடி கரோஷ்டியாகும்.

பிராமி எழுத்து இந்திய அளவில் பரவலாகப் பெருமளவில் பயன்பாட்டில் இருந்ததால் வட்டார மொழி உச்சரிப்புகளுக்கு ஏற்ப சொற்ப வரிவடிவ வேறுபாடுகளுடன் பயன்படுத்தப்பட்டது. எனினும் அடிப்படையில் வரிவடிவ வேறுபாடுகள், உச்சரிப்பு வேறுபாடுகள் உள்ளன. எனவே ஐராவதம் மகாதேவன் பின்வருமாறு பெயர் கொடுத்து வகைப்படுத்துகின்றார்[3].

**பிராமி:** சிந்துவெளி எழுத்துக்கள் நீங்கலாக இந்திய எழுத்துக்களில் முதற் கட்ட எழுத்தைக் குறிக்கும் பெயர். இந்தியாவில் அசோகன் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துக்கள் அசோகன் - பிராமி என்றும் பிற மௌரியர் கல்வெட்டுகளில் உள்ளவை மௌரிய - பிராமி என்றும் பெயர் பெறும்.

https://t.me/daily_paper

**வடபிராமி:** மௌரியர் காலத்திற்குப் பிறகு வடமேற்கு, வடகிழக்கு, நடுப் பகுதிகள் உள்ளடங்கிய வட இந்தியப் பகுதியில் விளங்கிய எழுத்து வட-பிராமி எனப்படும்.

**தென்பிராமி:** மௌரியருக்குப் பிறகு மேற்குத் தக்கணம் உள்ளடங்கிய தக்கணப் பகுதியில் விளங்கிய எழுத்து தென்-பிராமி எனப்படும். எனினும் தக்காணத்தில் அடங்கிய பட்டிபுரோலுவில் தனித்துக் காணப்படும் பிராமி எழுத்து இதனில் சேராது.

**பட்டிபுரோலு பிராமி:** ஆந்திரப் பிரதேசத்தில் பட்டிபுரோலு என்ற இடத்தில் பௌத்த ஸ்தூபியில் அறியப்பட்ட கற்பேழைகளில் எழுதப்பட்டுள்ள தனிப்பட்ட வகை பிராமி எழுத்து பட்டிபுரோலு - பிராமி என்று பெயர்பெறும்.

**சிங்கள—பிராமி:** இலங்கையில் குகைத்தளங்களில் சிங்கள - பிராகிருத மொழிக்கேற்ப எழுதப்பட்ட பிராமி வகை எழுத்துக்கள் சிங்கள-பிராமி எனப் பெயர் பெறும்.

**தமிழ்—பிராமி:** தமிழகத்தில் தமிழ் மொழியினை எழுதப்பயன்படுத்தப்பட்ட தொன்மையான எழுத்து தமிழ்-பிராமி எனப்படும். இவ்வெழுத்து மற்ற பகுதிகளில் வழங்கிய பிராமி எழுத்துப் போலல்லாது இந்திய - ஆரியமல்லாத திராவிட மொழிகளை எழுதமட்டுமே பயன்பட்ட எழுத்தாகும். இதனைக் கருத்தில் கொண்டே பண்டைய சமண பௌத்த சமயம் சார்ந்த நூல்களான 'பண்ணவாணாசுத்த', 'சமவயங்க சுத்த', 'லலிதவிஸ்தர' ஆகியவை இவ்வகைத் தனி எழுத்தை 'தாமிழி' 'திராவிடீ' என்று பெயர் குறிப்பிட்டுச் சுட்டுகின்றன.

பிற ஆய்வாளர்கள் தொன்மையான தமிழ் எழுத்தைத் 'தமிழி' என்றும், 'பண்டைத் தமிழ் எழுத்துக்கள்' என்றும் அழைத்திட வேண்டும் என்று வலியுறுத்துவர்[4]. எனினும் இந்நூலில் அண்மையில் வெளிவந்த ஐராவதம் மகாதேவன் நூலின் அடிப்படையில் தமிழ் - பிராமி என்ற பெயர் பயன் படுத்தப்படுகிறது.

தமிழ்-பிராமி எழுத்துக்கள் தமிழகத்தில் 30 ஊர்களில் மலை சார்ந்த குகைத்தளங்களில் அறியப்பட்டுள்ளன. 30 இடங்களில் 90 கல்வெட்டுகள் அறியப்பட்டுள்ளன. குறைந்தது ஒரு கல்வெட்டு. அதிகபட்சம் 12 கல்வெட்டுகள் என இவை இந்த 30 இடங்களில் கிடைக்கின்றன.

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் காணப்படுமிடங்கள் சிறுகுன்றுகள் மற்றும் உயர்ந்த மலைகளில் இயற்கையாக அமைந்த குகைத்தளங்களாகும். குகைத்தளங்களில் கற்படுக்கைகள் அமைத்தும் குகைகளின் உள்ளே மழை நீர் சென்றுவிடாது நெற்றிப்பகுதிகளில் புருவம் வெட்டியும் தமிழ்-பிராமி கல்வெட்டுகளைப் புருவத்தின் கீழும், மேலும், படுக்கையிலும் பொறித்துள்ளனர்.

பாறைக் கல்வெட்டுகள் தவிர ஏராளமான பானை ஓடுகளில் தமிழ் - பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. தொன்மைச் சிறப்புடைய இடங்களில் மேற்பரப்பாய்விலும், அகழாய்விலும் கிடைத்துள்ள இவை மண் பானை ஓடுகளில் உள்ளவை. ஆதலால் பெரும்பகுதி

உடைந்துள்ளன. முழுமையான வாசகங்களுடன் காணப்படவில்லை. மேலும் ஆற்றுப்படுகைக ளிலும், தற்செயலாக வெளிப்படும் புதையல்களிலும் கிடைத்திடும் காசுகள், மோதிரங்கள், முத்திரைகள் ஆகியவற்றிலும் தமிழ்-பிராமி எழுத்துச் சொற்கள் காணப்படுகின்றன. கடல் கடந்து எகிப்து, தாய்லாந்து, இலங்கை ஆகிய இடங்களிலும் பானை ஓடுகள், பொற்கொல்லரின் உறைகல், காசுகள் ஆகியவற்றிலும் தமிழ்-பிராமி எழுத்துக்கள் கிடைக்கின்றன.

https://t.me/daily_paper

## காலம்

இவ்வெழுத்துக்களின் காலம் அசோகனது எழுத்துக்களுக்கு முற்பட்டது எனப் பல்வேறு விவாதங்கள் நிகழ்ந்துள்ளன[6]. அண்மையில் ஐராவதம் மகாதேவன் தனது நூலில் தமிழ்-பிராமி எழுத்துக்களின் வளர்ச்சியினை இரண்டு நிலைகளாகப் பகுத்துள்ளார். முதல் நிலை முற்காலத் தமிழ்-பிராமி, கிறித்து பிறப்பதற்கு முந்திய இரு நூற்றாண்டுகள் மற்றும் கிறித்து பிறந்து முதல் நூற்றாண்டு எனவும் இரண்டாம் நிலை (பிற்காலத் தமிழ்-பிராமி) கி.பி. 2-4 ஆகிய நூற்றாண்டுகள் என்றும் ஆய்வு முடிவு தந்துள்ளார். இக்காலப்பகுப்பிலும் காலத் தொன்மையிலும் பல விவாதங்கள் எழுந்துள்ளன. இருந்தபோதிலும் அவ்விவாதங்கள் அவரது கருத்தின் அடிப்படையில் ஏற்படுவதால் அவரது காலப்பகுப்பே இந்நூலில் காட்டப்படுகிறது. அவர் தனது அண்மை நூலில் சொல்லியுள்ள காலப்பகுப்பு அவர் முன்பு குறிப்பிட்ட கி.மு. 3 ஆம் நூற்றாண்டு என்ற கருத்திலிருந்து முன்னெடுத்து அவரால் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு எனத் திருத்தப்பட்டுள்ளது என்பதும் இங்குக் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

## எழுத்துக்கள்

தொல்காப்பியரின் எழுத்ததிகார முதல் நூற்பா

> எழுத் தெனப்படுப
> அகரமுதல னகர இறுவாய்
> முப்பஃ தென்ப

என்று உயிர் - 12, மெய் -18 ஆக 30 எழுத்துக்கள் என்று வரையறுத்துள்ளது. ஆனால் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் உயிர் எழுத்துக்களில் 12 வடிவங்களும் இல்லை. மெய் எழுத்துக்களின் 18 வடிவங்களும் உள்ளன.

## உயிரெழுத்துக்கள்

உயிரெழுத்துக்கள் பின்வருமாறு எட்டு வடிவங்களில் மட்டுமே உள்ளன.



அ ஆ இ ஈ உ ஊ எ ஒ

இவற்றில் ஈ எழுத்தின் வடிவம் 'இகரத்தைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது. 'ஐ'க்கான வடிவம் கிடைக்கவில்லை. எனினும் 'ஐ' இணைந்த உயிர்மெய் எழுத்துக்கள் உள்ளன. 'ஃ' எழுத்து வடிவம் கிடைக்கவில்லை. அது போல 'ஔ' விற்கான வடிவமும் கிடைக்கவில்லை, எ,ஏ இரண்டிற்கும் ஒரு வரி வடிவமே உள்ளது. அதுபோலவே ஒ, ஓ இரண்டிற்கும் ஒரு வரி வடிவமே உள்ளது.

https://t.me/daily_paper

## மெய் எழுத்துக்கள்

மெய் எழுத்துக்களின் வரி வடிவங்கள் பின்வருமாறு தமிழ் பிராமி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.



**கஙசஞடணதநபமயரலவழளறன**

## உயிர்மெய் எழுத்துக்கள்

பொதுவாகத் தமிழ்-பிராமி உயிர்மெய் வடிவங்களைப் பின்வருமாறு காணலாம். மெய் 'க்' உயிர் எழுத்துக்கள் இணைந்து இவ்வாறு இருக்கும்.



**ககாகிகீகுகூகெகைகொ**

இது போலவே பிற மெய்யெழுத்துக்களுடன் உயிர் எழுத்துக்கள் சேர்ந்து எளிமையான இடது-வலது, மேல் -கீழ் பக்கக் கோடுகளால் உணர்த்தப்படும். இங்குச் சில தற்கால சொற்கள் எடுத்துக் காட்டாகத் தரப்பட்டுகின்றன.



அம்மா
அப்பா
அணில்
ஆடு
இலை
ஈசல்
உரல்
ஊதல்
எலி
ஏணி
ஓடம்
ஒட்டகம்



கற்க
மங்கலம்
சட்டம்
மஞ்சள்
படம்
காணி
தந்தை
நகரம்
பட்டம்



மடை
வயல்
ரம்பம்
லட்டு
வளம்
பழம்
பள்ளி
சுற்றம்
அண்ணன்

https://t.me/daily_paper

புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவு உருவு ஆகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும்
ஆ ஈர் இயல உயிர்த்தல் ஆறே

என்று கூறி, புள்ளியில்லாத மெய்யெழுத்துக்கள் அகரமோடு ஒலிக்கும் போது அதே வடிவாக அமையும் பாங்கினையும், ஏனைய உயிர்களோடு ஒலிக்கும் போது வடிவம் திரிந்து அமைவதையும், தெளிவாக்குகிறார் தொல்காப்பியர். இதன்படி, தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில், அகரக் குறிலுக்கு எவ்விதக் குறியும் இடாமலும், ஆகார நெடிலுக்கு ஒரு கோடு மட்டும் இட்டும், மற்றவற்றில் குறிலுக்கு ஒரு கோடும், நெடிலுக்கு இருகோடுகளிட்டும் எழுதியுள்ளதைப் பல கல்வெட்டுக்களில் காணலாம். அகர நெடிலுக்கும், இகரக் குறிலுக்கும், ஈகார நெடிலுக்கும் எழுத்தின் மேற்பகுதியில் வலப்புறம் கோடிட்டும், உகரக் குறிலுக்கும், நெடிலுக்கும் எழுத்தின் கீழ் வலப்புறம் கோடிட்டும் எகரத்திற்கு மேல் இடப்புறம் கோடிட்டும், ஒகரத்திற்கு மேல் இடப்புறமொன்றும், மேல் வலப்புறம் ஒன்றுமாகக் கோடுகளிட்டும் எழுதியிருப்பதைப் பல கல்வெட்டுகளில் பார்க்கலாம். இவ்வாறு இடப்பட்ட எளிமையான கோடுகளே காலப்போக்கில் காலாகவும், வளை கோடுகளாகவும் கொம்புகளாகவும் உருமாறின.

சில தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்களில் அகரத்தோடு கூடிய உயிர்மெய்யைக் குறிக்கவும், ஆகாரத்தோடு கூடிய ஊர் மெய்யைக் குறிக்கவும் வேறுபாடின்றி எழுத்தின் மேற்பகுதியில் வலப்புறம் ஒரு கோடு மட்டும் இட்டெழுதப்பட்டுள்ளமையையும் காணமுடிகிறது. இவ்வகைக் கல்வெட்டுக்களில் அடிப்படை வரிவடிவம் மெய்யைக் குறிக்கும். இவற்றை, இவ்வெழுத்தமைதியினைக் கொண்டு காலத்தால் முற்பட்ட கல்வெட்டுக்களெனக் கணிப்பர். இம்முறையைப் பின் பற்றி

நந்த 

நெடுஞ் சழியன் 

சந்தரிதன் 

ஆகிய சொற்கள் மாங்குளம் கல்வெட்டில் வெட்டப்பட்டிருப்பதையும்

இராவதன் 

என்று மேட்டுப்பட்டிக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருப்பதையும்

அந்துவன் 

என திருப்பரங்குன்றம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இவ்வகைத் தமிழ் பிராமி கல்வெட்டுக்களைக் காலத்தால் முந்திய தமிழ் பிராமி கல்வெட்டுக்களாகக் கருதுவர்.

https://t.me/daily_paper

இவ்வகை எழுத்துக்கள் முதன் முதலில் பட்டிபுரோலு என்ற இடத்தில் புத்தபிரானின் புனித எலும்பு வைக்கப்பட்டிருந்த கற்பேழையில் டாக்டர் பியூலரால் கண்டறியப்பட்டதால், இம்முறையில் எழுதப்பட்டவற்றைப் 'பட்டிப்புரோலு எழுத்துவகை' எனவும் வகைப்படுத்துவர். இவ்வகை எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்டவையாகக் கருதப்படுகின்றன.

## புள்ளி

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (15)
மெய்ஈறு எல்லாம் புள்ளியொடு நிலையல் (104)

என்பது தொல்காப்பிய விதி. இதன்படி மெய்யெழுத்து ஒரு சொல்லின் இடையில் வந்தாலும், ஈற்றில் வந்தாலும் புள்ளி பெற்று அமைய வேண்டும். ஆனைமலைக் கல்வெட்டில் 'அரட்ட' என்ற சொல்லில் 'ட்' என்ற மெய்யெழுத்தைச் சுட்ட புள்ளி வைக்கப்பட்டுள்ளமை இதற்கோர் எடுத்துக்காட்டு. இருப்பினும், தமிழ்-பிராமி கல்வெட்டுக்களில் பெரும்பாலான இடங்களில் மெய்யெழுத்துக்கள் புள்ளியின்றியே எழுதப்பட்டுள்ளன. இது கல் மற்றும் ஓலைச் சுவடிகளில் புள்ளி வைப்பதன் நடைமுறை இடர்பாடாகலாம்.

இதே போன்று 'ஏ', 'ஓ' ஆகிய நெடிலெழுத்துக்களைப் புள்ளியிட்டுக் குறிலாக்கும் மரபுமிருந்திருக்கிறது. இதனைத் தொல்காப்பிய நுற்பா, "எகர ஒகரத்து இயற்கையும் அற்றே" *(16)* என்று உறுதிப்படுத்துகிறது

எழுத்துப் புணருத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்

என்றுள்ள அரச்சலூர்க் கல்வெட்டில் ⊙ எனக் காணப்படும் முதலெழுத்தாகிய 'எ' குறிலில் வைக்கப்பட்டுள்ள புள்ளி. இம்மரபிற்கோர் எடுத்துக்காட்டாகும்.

## அடிக்குறிப்புகள்

1. *Rock Art of Tamil Nadu* T.S. Sridhar (Ed), TamilNadu State Dept. of Archaeology, 2005.
2. *Early Tamil Epigraphy,* Iravatham Mahadevan, Chennai - 2003.
3. மேலது
4. *கல்வெட்டியல்;* நால்வர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை 1972.
5. *தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் தொகுதி III பகுதி II,* தி.நா.சுப்பிரமணியன் 1957.

https://t.me/daily_paper

# 4

# தமிழ்-பிராமி கல்வெட்டுகள்

## 1. மாங்குளம்

மதுரைக்கு வடக்கே மேலூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கத்தப்பட்டி என்ற கிராமத்தில் பிரிந்து வடமேற்கு நோக்கிச் சென்றால் மாங்குளம் என்ற ஊரினை அடையலாம். இதற்கு அருகில் மீனாட்சிபுரம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரை அடுத்து தெற்கு வடக்காக அமைந்துள்ள குன்று 'ஒவாமலை', 'கழுகுமலை' என்று மக்களால் அழைக்கப்படுகிறது. இதன் உச்சியில் கிழக்குப் பகுதியில் கிழக்கு நோக்கி இயற்கையாய் அமைந்த ஐந்து குகைத் தளங்கள் உள்ளன. இக்குகைத் தளங்கள் சுமார் 2200 ஆண்டுகளுக்கு முன்பு கணி நந்தன் என்ற சமண முனிவரின் தலைமையில் அமைந்த கூட்டத்தினர் தங்கிடும் வகையில் உருவாக்கிக் கொடுக்கப் பட்டவையாகும். இக்கூட்டம் பெரியதாக இருந்தமையாலேயே இந்த ஐந்து இயற்கையான குகைத்தளங்களிலும் பல கற்படுக்கைகளும் குகைப் பாறையின் முகப்புப் புருவங்களில் நீர்வடி விளிம்புகளும் வெட்டப்பட்டு அவை உறைவிடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்றில் மட்டும் கல்வெட்டு இல்லை. ஏனைய நான்கிலும் கல்வெட்டுகள் உள்ளன. இவை ஆறு தமிழ் - பிராமி கல்வெட்டுகளாகும். இவை 'பட்டிபுரோலு' என்ற இடத்தில் பொறிக்கப்பட்ட எழுத்து முறையை ஒத்துப்படிக்கக் கூடிய வகையில் உள்ளன. 1906 இல் கண்டறியப்பட்ட இவை 1963 இலிருந்து ஆய்வு செய்யப்பட்டு படிக்கப்பட்டன.

### கல்வெட்டு: 1:1

மாங்குளம் மலையின் மீது ஏறிச் சென்றவுடன் காணப்படும் முதல் குகைத் தளத்தில் இரண்டு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பாறை முகப்பில் செதுக்கி அமைக்கப்பட்ட நீர்வடி விளிம்பின் கீழ் உள்ளன. முதற்கல்வெட்டு ஒரே வரியில் பொறிக்கப்பட்டுக் காணப்படுகிறது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டு ஆகும். கல்வெட்டின் பார்வைப்படியும் வாசகமும் பின் வருமாறு:

https://t.me/daily_paper



**கணிய் நந்த அஸிரிய்இ குவ் அன்கே தம்மம்**
**இத்தாஅ நெடுஞ்சழியன் பணஅன் கடல்அன்**
**வழுத்திய் கொட்டுபித்தஅ பளிஇய்**

கணிநந்த ஸிரிய்குவ்அன் என்பவனுக்குத் தர்மமாக நெடுஞ்சழியனின் அலுவலனாக விளங்கிய கடலன் வழுதி என்பவன் இப்பள்ளியை உருவாக்கிக் கொடுத்தான் என்பது இதன் பொருள். கடலன் வழுதி என்பதன் முன்னதாக வரும் 'பணஅன்' என்ற சொல்லுக்கு அரசனின் அலுவலன் என்று பொருள்.

### பாடபேதம்

தமிழ் - பிராமி கல்வெட்டுகள் கடந்த ஒரு நூற்றாண்டாகப் பல்வேறு ஆய்வாளர்களால் பல்வேறு வகையில் படிக்கப்பட்டுள்ளன. அவை இந்நூலில் ஒவ்வொரு கல்வெட்டின் கீழும் தொகுத்துத் தரப்படுகின்றன. அவ்வகையில் மேற்கண்ட கல்வெட்டின் பாடபேதம் பின்வருமாறு:

> கணிய நந்த அஸிரிய் இகுவ் அன்கே தம்மம் இத்தஅ நெடுஞ்சழியன் பணஅன் கடல் அன் வழுத்தி கொட்டுபித்தஅ பளிஇய்
>
> – இரா. நாகசாமி
>
> கணிய் நந்த அஸிரிய் இகுவ்அன்கே தம்மம் இத்தாஅ நெடுஞ்சழியன் பணஅன் கடல் அன் வழுத்திய் கொட்டுபித்த பளிஇய் – ஐ. மகாதேவன்
>
> கணிதி நந்த அஸிரிய் இகுவ்அன்கே தம்மம் ஈத்தா நெடுஞ்செழியன் பணஅன் கடல அன் வழுத்திய் கொட்டுபித்தஅ பளிஇய் – மயிலை. சீனி

## கல்வெட்டு: 1: 2

முதற்கல்வெட்டு உள்ள இடத்திலேயே இக்கல்வெட்டும் உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**கணிய் நத்திய் கொடிய்அவன்**

கல்வெட்டில் வரும் 'கொடிய் அவன்' என்ற சொல்லில் உள்ள கொடி என்பதனுள் 'ட்' மெய் சேர்ந்து 'கொட்டியவன்' என்று கொள்ள வேண்டும். அவ்வாறு கொண்டால் முதலில் பார்த்த நீண்ட கல்வெட்டை இந்தக் கணிய்நந்தி என்பவன் கல்லில் பொறித்தான் (கொட்டினான்) என்று இக்கல்வெட்டு பொருள் தருகின்றது. ஐ. மகாதேவன் தவிர பிற ஆய்வாளர்கள் இக்கல்வெட்டைப் படிக்கவில்லை. எனவே பாடபேதம் இல்லை.

## கல்வெட்டு: 1:3

https://t.me/daily_paper

முதல் இரண்டு கல்வெட்டுகள் உள்ள குகைத் தளத்திற்கு வடக்கே கீழ்ப்புறத்தில் உள்ள குகைத் தளத்தின் வெளிப்புற பாறைச் சுவரில் நீண்ட ஒரே வரியில் இக்கல்வெட்டு உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும். இதனைப் பின்வருமாறு படிக்கலாம்:



**கணிய் நந்தஸிரிய் குஅன் தமம் ஈதா நெடுஞ்சழியன்**
**ஸாலகன் இளஞ்சடிகன் தந்தைய் சடிகன் சேஇய் பளிய்**

'கணி நந்தஸிரிய்குவனுக்குத் தர்மமாகப் பள்ளி (கற்படுக்கை - உறைவிடம்) அமைத்துக் கொடுத்தவன் நெடுஞ்சழியனின் சகலையாகிய இளஞ்சடிகனின் தந்தை சடிகன்' என்று இக்கல்வெட்டிற்குப் பொருள் கூறலாம். 'ஸாலகன்' என்ற சொல் மனைவியின் உடன் பிறந்தாள் கணவனைக் குறிக்கிறது. ஸாலகன் என்ற சொல்லே தற்போது சகலை என்று வழக்கில் வழங்குகிறது.

### பாடபேதம்

கணிய நந்த சிரியகு அன் தமம் இத நடிஞ்சத்தியன் சாலகன் இதஞ்சடிகன் தந்தைய்
சடிகன் சேஇய பளிய் — எச். கிருஷ்ண சாஸ்திரி

கணிய நதசிரியகு அன்தமம் இதா நடிஞ்சரியன் சாலகன் இதஞ்சரிகன் தந்தைய்
சரிகன் சொஈய பளிய் — கே.வி. சுப்பிரமணிய அய்யர்

கணிய நந்த சிரியகு அனதமம் இதநடிஞ் சத்தியன் சஇகன் இளஞ்சடிகன் தந்தை
சடிகன் சேஇ பாளிய — நாராயணராவ்

கணிய நந்த சிரியகு அன்தமம் இதா நெடிஞ்சழியன் சாலகன் இதஞ்சடிகன் தந்தை
சடிகன் செஇய ளிய் — டி.வி. மகாலிங்கம்

கணிய் நந்த ஸிரிய்கு அன் தமம் இத நெடிஞ்சழியன் ஸாலகன் இளஞ்சடிகன் தந்தைய்
சடிகன் செஇய பளிய் — இரா. நாகசாமி

கணிய் நந்தஸிரிய்கு அன் தமம் ஈதா நெடிஞ்சழியன் ஸாலகன் இளஞ்சடிகன் தந்தைய்
சடிகன் சேஇய பளிய் — ஐ. மகாதேவன்

கணிய் நந்தா ஸிரியகு அன தமம் ஈதா நெடிஞ்சழியான் ஸலகன் இளஞ்சாடிகன்
தந்தைய் சடிகான் செயிய பாளிய் — மயிலை. சீனி

## கல்வெட்டு: 1:4

https://t.me/daily_paper

மேற்கண்ட கல்வெட்டுள்ள குகைத் தளத்திற்கு மேல் உள்ள மற்றொரு குகைத் தளத்தில் நீண்ட ஒரே வரியில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும். இதனைப் பின்வருமாறு படிக்கலாம்.



**கணிஇ நதஸிரிய் குவ[ன்] . . . வெள்அறைய் நிகமது காவிதிஇய் காழிதிக அந்தை அஸுதன் பிணஉ கொடுபிதோன்**

கணி நந்தஸிரிய்குவனுக்கு வெள்ளறை நிகமத்துக் காவிதியான கழிதிக அந்தையின் மகன் அஸுதன் என்பவன் உறைவிடம் அமைத்துக் கொடுத்தான் என்று இக்கல்வெட்டிற்குப் பொருள் கொள்ளலாம்.

### பாடபேதம்

இக்கல்வெட்டின் நடுவில் சிறிது சிதைந்துள்ளது. எனவே இரண்டு பகுதிகளாகக் கீழே பாடபேதங்கள் தரப்படுகின்றன. கிருஷ்ண சாஸ்திரி, கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் வேறு குகைத்தளத்தில் உள்ள சிறு கல்வெட்டுகளையும் (5,6) இதனுடன் இணைத்துப் படித்துள்ளனர்.

| | |
|---|---|
| க[ர]ணிரன் [ஒ] தாசிரியக[ரு] | – எச். கிருஷ்ணன் சாஸ்திரி) |
| கரணிர நோத சிரியகரு | – கே.வி. சுப்பிரமணிய அய்யர் |
| கரணிர நோத சிரியக[ர] | – நாராயணராவ் |
| கரணிர நாத சிரியக[ரு] | – டி.வி. மகாலிங்கம் |
| கணிஇ நத ஸிரிய்குவ | – இரா. நாகசாமி |
| கணிஇ நத ஸிரியகுவ [ன்] | – ஐ. மகாதேவன் |

வெ [அஅ] டைய நிகமத கெ[போ] திர [ய] கசிதிக அரி[தே] அ சதன பினாக கொடுபிதோன் – எச். கிருஷ்ண சாஸ்திரி

வெள் அடைய நிகமதா கெ.பொதிரய் காசிதிக அரிதவசாலன் பினான கொடுபிதோன் – கே.வி. சுப்பிரமணிய அய்யர்

வெள் அடைய நிகமத கொ பொதிர்யக சிதிகரிதே சதான் பிணக கொடுபிதோன் – டி.வி. மகாலிங்கம்

https://t.me/daily_paper

வெள் அறைய் நிகமது காவிதிஇய் ஏழிதிக அந்தை அஸுதன் பிணஉ கொடு பிதோன்

– ஐ. மகாதேவன்

வெள் அறைய் நிகமது காவிதிஇய் காழி திக அந்தை அஸுதன் பிணா ஊ கொடுபிதோன்

– மயிலை. சீனி

## கல்வெட்டு :1:5

நான்காவது கல்வெட்டுள்ள குகைத் தளத்திற்குத் தெற்கே இரு சிறிய கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் முதல் கல்வெட்டைப் பின்வருமாறு படிக்கலாம். இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**சந்தரிதன் கொடுபிதோன்**

சந்தரிதன் உறைவிடம் அமைத்துக் கொடுத்தான் என்பது இதன் பொருள். கொடுபிதோன் என்பதில் 'ட்' மெய் சேர்த்து கொட்டுபிதோன் என்று கொண்டு செதுக்கி அமைத்தான் என்று பொருள் கொள்ள வேண்டும். இக்கல்வெட்டை எல்லோரும், சந்தரிதன் கொடுபிதோன் என்று படித்துள்ளனர் எனவே பாடபேதம் இல்லை.

## கல்வெட்டு : 1:6

இக்கல்வெட்டு மேற்சொன்ன குகைத்தளத்திலேயே உள்ளது. இதனைப் பின்வருமாறு படிக்கலாம். இதன்காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**வெள்அறை நிகமதோர் கொடிஓர்**

கொடி ஓர் என்பதில் 'ட்' மெய் சேர்த்து கொட்டியோர் என்று கொண்டு வெள்ளறை என்ற ஊரைச் சேர்ந்த வணிகக் குழுவினர் (நிகமம்) இந்தக் குகைத்தளத்தைச் செதுக்கி அமைத்தனர் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

### பாடபேதம்

எச். கிருஷ்ணசாஸ்திரி, கே.வி. சுப்ரமணிய ஐயர், டி.வி. மகாலிங்கம் ஆகியோர்,

வெள் அடை நிகமதோர் கொடிஓர்
https://t.me/daily_paper

என்று படித்துள்ளனர். ஐ. மகாதேவன், இரா. நாகசாமி ஆகியோர்

வெள் அறை நிகமதோர் கொடிஓர்

என்று படித்துள்ளனர்.

## கல்வெட்டுச் செய்திகள்

நந்தஸிரியக்குவன் என்ற முனிவனுக்கு பாண்டியன் நெடுஞ்செழியன் தர்மமாகப் பள்ளி அமைத்துக் கொடுத்தான். இவனுக்குரிய பட்டப்பெயர்களாகவே 'பணஅன்', 'கடல்அன்', 'வழுத்திய்' என்ற பெயர்கள் இக்கல்வெட்டில் வருகின்றன. பணவன், கடலன், வழுதி என்ற பாண்டிய மன்னன் மதுரைக்காஞ்சி குறிப்பிடும் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனுக்கும் சிலப்பதிகாரம் குறிப்பிடும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவன் என இரா. நாகசாமி குறிப்பிட்டுள்ளார்.

பாண்டிய மன்னர்கள் அசோகன் கல்வெட்டில் குறிப்பிடுவது போன்று கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவிலேயே மிகச் சிறப்புடன் இருந்திருக்கின்றனர் என்பதை இக்கல்வெட்டு காட்டுகிறது. வழுதி என்பது பாண்டியரது குடிப்பெயராகும். கடலன் என்பதற்கு நெய்தல் நிலத்தினையும் பணவன் என்பதற்கு மருத நிலத்தினையும் உடையவன் என்று பொருள் கூறலாம். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் கணி என்ற சொல்லைக் கணம் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த சொல்லாகக் கருதி முனிவர்களின் கூட்டத்தைச் (சமணச் சங்கம்) சேர்ந்தவன் என்று இரா. நாகசாமி கருதுகின்றார். 'இய்குஅன்', 'இகுவ்அன்' என்ற சொற்கள் 'இயக்கன்' என்று பொருள்படும் என்றும் கருதுகிறார். ஐ. மகாதேவன், நந்த என்ற சொல் சமண முனிவர் கூட்டத்தில் நந்தகணம் என்ற பிரிவைக் குறிக்கிறது என்றும் ஸிரிய்குவன் என்பது இவனது இயற்பெயராக இருக்க வேண்டும் என்றும் கருதுகின்றார். இது குவாவன் என்ற தமிழ்ச் சொல்லின் சுருக்கமாக அமைந்த குடிப்பெயராக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டு செந்தலைக் கல்வெட்டுகளில் இப்பெயர் வருவது குறிப்பிடத்தக்கது. 'பணஅன்' என்பதற்குக் கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளை எழுதும் பணயக்காரன் என்று மயிலை சீனி. வேங்கடசாமி பொருள் கண்டுள்ளார். மேலும், கோள்களைக் கணித்துச் சொல்லக்கூடிய வானநூல் வல்லவர் என்ற பொருளிலேயே 'கணி' என்ற சொல் மாங்குளம் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது என்று கருதுகின்றார். கணியன் பூங்குன்றனார் என்ற புலவர் ஒருவர் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

கணி நந்த ஸிரிய் குவனுக்கு வெள்ளறை நிகமத்தினைச் சார்ந்த கழிதிக அந்தை என்பவனின் மகன் பிணவு என்பவன் உறைவிடம் அமைத்துக் கொடுத்தான் என்று மாங்குளம் நான்காவது கல்வெட்டிற்கு இரா. நாகசாமி பொருள் கூறியுள்ளார். ஸுதன் என்ற சொல்லிற்கு மகன் என்பது பொருள் என்று குறிப்பிட்டுள்ளார். ஐ. மகாதேவன் கணி நந்தஸிரிய் குவனுக்கு வெள்ளறை நிகமத்துக் காவிதியான முத்துக்களை ஆய்வு செய்யும் கண்காணிப்பாளன் (Superintentdent of Pearls) அந்தை ஸுதன் என்பவன் உறைவிடம் அமைத்துக் கொடுத்தான் என்று இக்கல்வெட்டிற்குப் பொருள் கூறியுள்ளார். இவர் கழிதிக என்ற சொல்லை காழிதிக

https://t.me/daily_paper

என்று படித்து காழ் என்றால் முத்து என்றும் அதிகன் என்றால் கண்காணிப்பாளன் என்றும் பொருள் கண்டுள்ளார். இதனால் முத்துக்கண்காணிப்பாளனான அந்தை அஸுதன் என்பவன் பிணவு (குகை) அமைத்தான் அல்லது கொடுத்தான் என்று கூறுகின்றார். இக்கல்வெட்டில் வணிகர்களுக்குரிய பட்டங்களில் ஒன்றாகிய 'காவிதி' என்ற சொல் வருவது குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் 'நிகமம்' வணிக நகரத்தினைக் குறிக்கும் பழஞ் சொல்லாகும்.

மாங்குளம் கல்வெட்டில் குறிப்பிடப்படும் 'வெள்ளறை', மாங்குளத்திற்குக் கிழக்கே தேசிய நெடுஞ்சாலையில் 'வெள்ளரிப்பட்டி' என்ற பெயரில் தற்போது உள்ளது. வெள்ளறை என்றால் வெண்மையான பாறை நிறைந்த பகுதி என்று பொருள். திருச்சிக்கு வடக்கே துறையூருக்குச் செல்லும் வழியில் திருவெள்ளறை என்ற பெயரில் ஊர் ஒன்றும் உள்ளது. மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டுகளும் குகைத்தளங்களும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

## 2. அரிட்டாபட்டி

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் சாலையில் சுமார் 20 கி.மீ. தொலைவில், சாலையை விட்டுச் சற்று விலகி அரிட்டாபட்டி அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள மலைத்தொடர் கழிஞ்சமலை என்று மக்களால் அழைக்கப்படுகின்றது. இம்மலையின் அடிவாரத்தில் இயற்கையான குகை ஒன்றில் சமணத் துறவியர் தங்குவதற்கு ஏற்பச் செதுக்கிய கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. மழைநீர் உட்புகா வண்ணம் நெற்றிப் பகுதியில் நீர்வடிவிளிம்பு வெட்டப்பட்டுள்ளது. அதன்கீழாக ஒரு கல்வெட்டும் மேலாக ஒரு கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன.

### கல்வெட்டு 2:1

நீர்வடி விளிம்பிற்குக் கீழாக உள்ள முதல் கல்வெட்டைச் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை பேராசிரியர் கே.வி. இராமனும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் அப்போது பணியாற்றிய பேராசிரியர் எ. சுப்பராயலுவும் 1971 இல் கண்டறிந்தனர். முதன் முதலாக இந்திய வரலாற்றுக் கழகத்தின் 49ஆம் பருவ இதழில் (1971 இல்) இவர்கள் வெளியிட்டனர். இக்கல்வெட்டு பற்றிய குறிப்பு பின்னர் இந்திய அரசின் 1978-79 ஆம் ஆண்டு கல்வெட்டு ஆண்டறிக்கையில் 264ஆம் எண்ணில் வெளியிடப்பட்டுள்ளது. அடுத்தடுத்த கள ஆய்வுகளில் திருத்தமான பாடம் வாசிக்கப்பட்டு ஐ. மகாதேவன் நூலில் வெளியிடப் பட்டுள்ளது. இக்கல்வெட்டு ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். நீண்ட ஒருவரியில் உள்ள முதல் கல்வெட்டின் பார்வைப்படியும் வாசகமும் பின்வருமாறு:



**'நெல்வெளிஇய் சிழிவன் அதினன் வெளியன் முழாகை கொடுபிதோன்'**

நெல்வேலியைச் சேர்ந்த சிழிவன் அதினன் வெளியன் என்பவன் இக்குகைத் தளத்தை

https://t.me/daily_paper

அமைத்துக் கொடுத்தான் என்பது இக்கல்வெட்டின் பொருள். கொடுபிதோன் என்பதில் 'ப்' ஒற்று சேர்ந்து கொடுப்பிதோன் என்று கொண்டாலும் குகைத்தளத்தை அமைத்தான் என்று பொருள்படும்

**பாடபேதம்**

கல்வெட்டில் உள்ள முழாகை என்ற சொல் முஸகை என்று படிக்கப்பட்டிருந்தது. பின் ஆய்வில் 'ஸ' எழுத்தின் மீது படிந்திருந்த சுண்ணாம்பு - சுதைப்பூச்சை அகற்றியபோது முழாகை' என்று திருத்தம் பெற்றது.

## கல்வெட்டு: 2:2

நீர்வடி விளிம்புக்கு மேலாக இக்கல்வெட்டு ஒரே வரியில் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு எழுத்துக்கள் மிகவும் மங்கலாகவும் தேய்வுக்குட்பட்டும் உள்ளன. இதனைக் கடந்த 2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அலுவலர்கள் கள ஆய்வின் போது கண்டறிந்தனர். இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**இலஞ்சிய் எளம் பேரா அதன் மகன் எமயவன்**
**இவ்முழ உகைய் கொடுபிதவன்**

இலஞ்சி என்னும் ஊரைச் சேர்ந்த எளம்பேராதன் மகன் எமயவன் இந்தக் குகைத் தளத்தை உருவாக்கிக் கொடுத்தான் என்பது இதன் பொருள். கொடுபிதவன் என்பதில் 'ப்' ஒற்று சேர்த்து கொடுபிதவன் என்றும் கொள்ளலாம். முதற் கல்வெட்டைக் காட்டிலும் இக்கல்வெட்டு முற்பட்டதாகக் கருதலாம்.

## கல்வெட்டுச் செய்திகள்

முதற் கல்வெட்டில் இடம் பெறும் நெல்வேலி என்பது இன்றைய திருநெல்வேலியின் தொன்மைப் பெயராக இருக்கலாம். சிழிவன் என்பது செழியன் என்னும் பாண்டியர் குடிப்பெயராகும். அதினன் வெளியன் என்பது கொடையாளியின் இயற்பெயர். அதினன் என்னும் பெயர் ஆண்டிப்பட்டி புதையலில் கிடைத்த ஈயக் காசுகளிலும் இடம் பெற்றுள்ளது நோக்கத்தக்கது. வெளியன் என்னும் பெயரும் சங்ககாலத்தில் வழங்கப்பட்டதை இலக்கியங்கள் காட்டுகின்றன (எ.டு. தித்தன் வெளியன்). முழாகை என்னும் சொல் இங்குள்ள அடுத்த கல்வெட்டிலும் வரிச்சியூர் கல்வெட்டிலும் பயின்றுவரக் காணலாம். இதற்கு கற்குகை என்பது பொருள். இரண்டாவது கல்வெட்டில் இளம் பேராதன் - எளம் பேராதன், இமயவன் - எமயவன்

https://t.me/daily_paper

என்று பேச்சு வழக்கில் ஏற்படும் 'இ' கரம் 'எ' கரம் ஆகும் நிலையைக் காணமுடிகின்றது. இலஞ்சி என்னும் ஊரை இன்றைய குற்றாலத்திற்கு அருகில் உள்ள சிற்றூராக அடையாளம் காணலாம். மொழியியல் அடிப்படையிலும் இக்கல்வெட்டு முக்கியத்துவம் பெறுகிறது. இலஞ்சிய், முழஉகைய் என்னும் சொற்களின் இறுதியில் 'ய' என்னும் எழுத்து வருவது 'இகர யகரம் இறுதி விரவும்' என்னும் தொல்காப்பியர் கூற்றுக்கு வலிமை சேர்ப்பதாக உள்ளது. முதற்கல்வெட்டில் முழாகை எனக் குறிப்பிடப்பட்ட கற்குகை, இவ்விரண்டாம் கல்வெட்டில் முழஉகை என எழுதப்பட்டுள்ளது. இதனால் இக்கல்வெட்டை முதற் கல்வெட்டைக் காட்டிலும் காலத்தில் முற்பட்டதாகவும் கருதலாம்.

இரண்டு கல்வெட்டுகளும் இக்குகையைச் செய்து கொடுத்த ஒரே செய்தியைத் தருகின்றன. இரண்டிலும் இடம்பெறும் நெல்வெளி, இலஞ்சி என்னும் ஊர்கள் தென்பாண்டி மண்டலத்து ஊர்களே. எனவே சங்ககாலப் பாண்டியர் குடியைச் சேர்ந்த தென்பாண்டி நாட்டுத் தலைவர்கள் இக்குகைத் தளத்தையும் கற்படுக்கைகளையும் அமைத்துக் கொடுத்தனர் எனக் கொள்ளலாம்.

இக் குகைத் தளத்தின் அருகில் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணத் தீர்த்தங்கரர் உருவச் சிற்பம் செதுக்கப்பட்டு அதன் கீழாக வட்டெழுத்தில் கல்வெட்டுள்ளது. அதனில் இம்மலை பொற்கோட்டுப் பிணையன் மலை என்று சொல்லப்பட்டுள்ளது.

இக்குகைத்தளமும், கல்வெட்டும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட மரபுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுப் பாதுகாத்திட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

## 3. திருவாதவூர்

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் மதுரையிலிருந்து 20.கி.மீ தொலைவில் உள்ளது இவ்வூர். மாணிக்கவாசகர் பிறந்த ஊராகப் போற்றப்படும் பெருமை உடையது. இவ்வூரின் புறத்தே உவாமலை என்றழைக்கப்படும் குன்றுள்ளது. இக்குன்றில் உள்ள குகைத்தளத்தின் புருவப் பகுதியில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளை ஐ. மகாதேவன் 1996 இல் கண்டறிந்தார். இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1965 -66 இல் இக்கல்வெட்டு படத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

### கல்வெட்டு:3:1

கீழ்ப் பகுதியில் உள்ள குகையின் புருவத்தில் வெட்டப்பட்டுள்ள நீர்வடி விளிம்பின் மேல் பகுதியில் ஒரே வரியில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு.இரண்டாம் நூற்றாண்டாகும்.



பாங்காட அர்இதன் கொட்டுபிதோன்

பாங்காடு என்ற ஊரைச் சேர்ந்த அரிதன் என்பவரால் இக்குகைத்தளம் குடைவிக்கப்பட்டுள்ளது என்பது இதன் பொருளாகும்.

https://t.me/daily_paper

### பாடபேதம்

முதற்கல்வெட்டில் உள்ள இரண்டாம் எழுத்து 'ங்' இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை 1965-66இல் 'ணா' என்றும் எட்டாவதாக உள்ள 'த்' எழுத்து 'ஞ்' என்றும் படிக்கப்பட்டுள்ளது.

பாணாகாட அர்இஞன் கொட்டுபிதோன் – இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை

பாங்காட அர்இதன் கொட்டுபிதோன் – ஐ. மகாதேவன்

## கல்வெட்டு: 2:2

கீழ்ப்பகுதியில் உள்ள குகைத்தளத்தில் நீர்வடி விளிம்பின் கீழ்ப் பகுதியில் ஒரே வரியில் வெட்டப்பட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**உபசன் பர்அசு உறை கொட்டுபிதோன்**

பரசு என்ற உபசரால் இந்த உறைவிடம் (குகைத்தளம்) அமைக்கப்பட்டது என்பது இதன் பொருளாகும். உபசன் என்ற சொல் உபாத்யாயன், சமய ஆசிரியர் என்ற பொருள் உடையது.

## கல்வெட்டுச் செய்தி

முதல்கல்வெட்டில் ஊர்ப் பெயரான 'பாங்காட' என்பதைப் 'பங்காட' எனவும் வாசிக்கலாம். 'ப'வுக்கும் 'ங்'க்கும் நடுவில் இடைவெளி உள்ளதால் இங்கு ஓர் எழுத்து விடுபட்டிருக்கவும் வாய்ப்புள்ளது. இந்த இடத்தை 'ன' என்ற எழுத்திட்டு நிரப்பினால் இவ்வூர்ப் பெயர் 'பனங்காடு' என்றமையும். திருவாதவூருக்கருகில் இன்றும் 'பனங்காடி' என்ற கிராமமுள்ளதால் இப்பெயர் அவ்வூரைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

இரண்டாம் கல்வெட்டில் உள்ள 'உபசன்' என்ற சொல் கொங்கற் புளியங்குளம் தமிழ் - பிராமி கல்வெட்டிலும் காணப்படுகிறது. இச்சொல் உவச்சரையும் குறிக்கின்றது. இவர்கள் பல்லவர்காலக் கல்வெட்டுக்களில் கோயிலில் வாத்தியம் வாசிப்பவர்களாக இருந்துள்ளனர். திருவாய் மொழியில் பரசுதல் என்ற சொல், பாடுதல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே 'கொடிஓர்', 'கொடிய்அவன்' என உள்ள மாங்குளம் கல்வெட்டுச் சொற்களில் 'ட்' மெய் சேர்த்து கொட்டியோர், கொட்டியவன் என்று பொருள் கண்டமைக்கு இக்கல்வெட்டில் வரும் 'கொட்டுபிதோன்' என்ற சொல் எடுத்துக்காட்டாக அமைகிறது.

இக்குகைத்தள விதானத்தில் சுதை பூசப்பட்டு அணி வேலைப்பாட்டு ஓவியங்கள் பிற்காலத்தில் வரையப்பட்டுள்ளன. இக்குகைத்தளமும் கல்வெட்டுகளும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

https://t.me/daily_paper

# 4. கீழவளவு

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் மேலூரிலிருந்து திருப்பத்தூர் செல்லும் சாலையில் மதுரையிலிருந்து சுமார் 38 கி.மீ. தொலைவில் கீழவளவு என்ற இவ்வூர் உள்ளது. இவ்வூருக்குச் சற்று முன்பாகவே குன்று ஒன்றுள்ளது. இக்குன்றின் அடிவாரத்திலும் நடுவிலும் இயற்கையான குகைத்தளங்கள் உள்ளன. இவற்றில் வழவழப்பாகத் தேய்த்து உருவாக்கப்பட்ட கற்படுக்கைகள் பல உள்ளன. பஞ்சபாண்டவர் மலை என்றும் பள்ளி என்றும் அழைக்கப்படும் குன்றின் நடுவில் உள்ளவொரு குகைத்தளத்தின் முகப்புப் பகுதியில் வெட்டப்பட்டுள்ள நீர்வடி விளிம்பின் கீழாக தமிழ் - பிராமிக் கல்வெட்டொன்று காணப்படுகின்றது. இக்கல்வெட்டு கி.பி. 1903 ஆம் ஆண்டில் வெங்கோபராவால் கண்டறியப்பட்டது. இக்கல்வெட்டும் குகைத்தளமும் சமணச் சிற்பங்களும் இந்திய அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## கல்வெட்டு: 4:1

இக்கல்வெட்டில் சில எழுத்துக்கள் நேராகவும் சில எழுத்துக்கள் தலைகீழாகவும் சில எழுத்துக்கள் இடம் வலமாகவும் ஒரே வரியில் மாறி மாறி வெட்டப்பட்டுள்ளன. கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும். கல்வெட்டின் பார்வைப்படி கல்வெட்டில் உள்ளவாறும், இடம் வலமாக மாற்றப்பட்டும் படிப்பதற்கு ஏற்பவும் மூன்று விதமாகக் கீழே தரப்பட்டுள்ளன.



கல்வெட்டில் உள்ளபடி



இடம் வலமாக மாற்றியமைக்கப்பட்ட கல்வெட்டு


https://t.me/daily_paper

படிப்பதற்கு ஏற்ப நேராக்கப்பட்ட கல்வெட்டு

**உப[ச] அன் தொண்டி[ல] வோன்கொடு பளிஇ**

உபசன் தொண்டி (இல்)லவோன் கொடுத்த பள்ளி என இக்கல்வெட்டு பொருள் படுகிறது.

**பாடபேதம்**

| | |
|---|---|
| உபச அ போ தநெடுல வோ சோ கொடுபாளிப் | – கிருஷ்ண சாஸ்திரி |
| உபாச அ போத நெடுல வோச சோ கொடுபளிஇ | – சுப்பிரமணிய அய்யர் |
| உபாச அ போதா நாட்டல வோச சோ கொடு பாளிஇ | – நாராயணராவ் |
| உபாச அ பொதா நெடு லாவொ சொ கொடு பாளிஇ | – டி.வி. மகாலிங்கம் |
| உப(ச) அன் தொண்டி (ல) வோன் கொடுபளிஇ | – ஐ. மகாதேவன் |

## கல்வெட்டுச் செய்தி

'உபஜ்ஜாயா' என்ற பாலி மொழிச் சொல்லிலிருந்து உப(ச)ன் என்ற சொல் உருவாகியிருக்கலாம். 'உபசன்' என்ற சொல்லுக்குச் 'சமய ஆசிரியர்' என்று பொருள். இவர்கள் சமணப் பள்ளிகளிலும் சமண சமயத்தவரின் இல்லங்களில் நடைபெற்ற விழாக்களிலும் சமயப்பணி புரிந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். உபாசித்தல் என்பதற்கு வழிபடுதல் என்று பொருள். எனவே உபாசனை வழிபாடு தொடர்பான பணி செய்தவர்கள் 'உபாசகன்' என்றழைக்கப்பட்டார்கள் எனலாம். 'உபசஅன்' என்ற சொல் கொங்கர் புளியங்குளம் கல்வெட்டிலும் திருவாதவூர் கல்வெட்டிலும் கூடக் காணப்படுவது இங்கு ஒப்பு நோக்கற் குரியது.

பாண்டிய நாட்டின் கிழக்குக் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள தொண்டி கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவிலேயே அதே பெயரில் இருந்திருப்பதை இக்கல்வெட்டு புலப்படுத்துகிறது. சங்க இலக்கியமான குறுந்தொகையில் 210 ஆவது பாடலிலும் 238 ஆவது பாடலிலும் குறிப்பிடப்படும் தொண்டியைப் பாண்டிய நாட்டுத் தொண்டியாகக் கருதுவர். கீழவளவுக்கு அருகிலுள்ள மேலூருக்கும் தொண்டிக்கு இடையிலான நெடுஞ்சாலை பழைய வழித்தடத்தை ஒட்டியே அமைக்கப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகிறது. மேற்குக் கடற்கரையில் சேரருக்குரியதாகவும் தொண்டி என்ற ஒரு துறைமுகம் இருந்துள்ளது.

இத்தொண்டியைச் சங்க இலக்கியங்கள் 'பொறையன் தொண்டி' (நற்றிணை 8: 9-10, குறுந்தொகை 128: 1-3 அகநானூறு 60.87) எனச் சுட்டுகின்றன. இதனைக் 'குட்டுவன் தொண்டி எனவும் குறிப்பர் (ஐங்குறு நூறு 178).

https://t.me/daily_paper

'பளிஇ' என்ற சொல்லைப் 'பள்ளி' என்ற சொல்லாகக் கொண்டு 'முனிவராசிரமம்' எனப் பொருள் கொள்ளலாம். 'மாதவர் பள்ளி' என்ற சொல்லாட்சி மணிமேகலையிலிருப்பதும் (18,8) இங்கு ஒப்பு நோக்கற்குரியது.

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளத்தின் வலப்புறப் பகுதியின் முகப்புப் பாறையில் 6 சமணத் தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் உள்ளன. இவற்றின் மீது தீட்டப்பட்ட வண்ண ஓவியங்கள் அங்கங்குச் சிறிதளவு தெரிகின்றன. இச்சிற்பங்கள் ஏறத்தாழ கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. எனவே இவ்விடம் தொடர்ந்து சமணப் பள்ளியாக ஒன்பதாம் நூற்றாண்டுவரை இருந்தது தெளிவு.

இக்குகைத்தளம், தமிழ் - பிராமி கல்வெட்டுகள் மற்றும் சிற்பங்கள் இந்தியத் தொல்லியல் துறையினரால் மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன.

## 5. கொங்கர்புளியங்குளம்

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் மதுரையிலிருந்து தேனி செல்லும் நெடுஞ்சாலையில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கும் செக்கானூரணிக்கும் இடையில் கொங்கர்புளியங்குளம் அமைந்துள்ளது. இவ்வூருக்கு அருகிலுள்ள பெருமாள் கோவில் மலையில் இயற்கையான குகைத்தளத்தில் 50க்கு மேற்பட்ட கற்படுக்கைகளும் மூன்று தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்களும் உள்ளன. இவை 1910இல் முதல் முதலாக அறியப்பட்டு அவ்வாண்டு இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டன. இக்கல்வெட்டுகளும் குகைத்தளங்களும் சமணர் சிற்பமும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### கல்வெட்டு: 5:1

குகைத்தளத்தின் முகப்பு நெற்றிப் பாறைக்குச் சற்றுத்தள்ளி வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகளில் முதலாவதாக இக்கல்வெட்டு உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**குற கொடுபிதவன் உபசஅன் உபறுவ[ன்]**

உபசஅன் ஆகிய உபறுவன் என்பவரால் குகைத்தளத்தின் இப்பகுதி கொடுக்கப்பட்டுள்ளது என்று இக்கல்வெட்டு பொருள்படும்.

https://t.me/daily_paper

TAMIL NADU STATE DEPARTMENT OF AR...
LIBRARY
11802

**பாடபேதம்**

குடு கொடுபிதவன் உபாச அன் [உ] ப[து]வ — கிருஷ்ண சாஸ்திரி
குடு கொடுபிதவன் உபாச அன் உபாருவன் – சுப்பிரமணிய அய்யர்
குடு கொடுபிதவன் உபாச உபாது வ – நாராயணராவ்
குறு கொடுபிதவன் ஊபாச அன ஊபருவ – டி.வி. மகாலிங்கம்
குறகொடுபிதவன் ஊபாச அன் ஊபறுவ – இரா. நாகசாமி
குறகொடு பிதவன் உபசஅன் உபறுவ[ன்] – ஐ. மகாதேவன்
குட்டு கொடுபிதவன் ஊபாசா அன் ஊபட்டுவ – மயிலை. சீனி

## கல்வெட்டு 5:2

குகைத்தளத்திலிருந்து சிறு தொலைவில் உள்ள பாறை முகப்புகளில் இடைவெளிவிட்டு தனித்தனியே வெட்டப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகளுள் இக்கல்வெட்டு நடுவில் உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**குறு கொடல்கு ஈத்தவன் செற்அதன்[ஓ]ன்...**

செற் அதன் என்பவர் குகைத்தளத்தின் இப்பகுதியைக் குடைவிப்பதற்குப் பொன் கொடை அளித்துள்ளார். பொன்னின் மதிப்பு கல்வெட்டின் இறுதியில் குறியீடாக உள்ளது போல் தெரிகிறது.

**பாடபேதம்**

குடு கொடல்கு [இ]த்தவின சேது அதன் லேன – கிருஷ்ண சாஸ்திரி
குடு கொடல்கு இத்தவின் சேது அதன் லேன – சுப்பிரமணிய அய்யர்
குறு கொடல்கு இத்துவின் செறு அதன் பொன் – டி.வி. மகாலிங்கம்
குற கொடல்கு இத்தவன் சேற அதன் என் – இரா. நாகசாமி
குறு கொடல்கு ஈத்தவன் செற அதன் [ஒ] ன் – ஐ. மகாதேவன்
குட்டு கொடலாகு ஈத்தவன் சொறு அதன் பொன் – மயிலை. சீனி

## கல்வெட்டு - 5:3 https://t.me/daily_paper

மூன்று கல்வெட்டுகளில் இக்கல்வெட்டு இறுதியில் உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**'பாகன் ஊர் பே[ர] தன்பிடன் இத்த வெபோன்'**

பாகனூரைச் சேர்ந்த் பேரதன் பிட்டன் என்பவரால் இக்கொடை நல்கப்பட்டுள்ளது என்பது இதன் பொருள்.

**பாடபேதம்**

பாகன் ஊர் பேதாதன் பிடன் ஈத்த வே பொன் – கிருஷ்ண சாஸ்திரி
பாகனூர் போதாதன் பிடன் இத்தா வேலேன் – சுப்பிரமணிய அய்யர்
பாகனூர் போததன் பிடன் இத்து வே பொன் – டி.வி. மகாலிங்கம்
பாகன் ஊர் பேதாதன் பிடன் இத்த வே பொன் – இரா. நாகசாமி
பாகன் ஊர் பே[ர]தன் பிடன் இத்த வெ பொன் – ஐ. மகாதேவன்
பாகன் ஊர் பேத்தன் பிடான் ஈத்த வே பொன் – மயிலை. சீனி

## கல்வெட்டுச் செய்தி

முதற் கல்வெட்டில் உள்ள 'குற' என்பதற்குக் 'கூரை' என்றும் 'கூறு' (பகுதி) என்றும் இருவிதமாகப் பொருள் கொள்ளலாம். 'கொடுபிதவன்' என்பதிலுள்ள 'கொடு', என்னும் பகுதிக்கு 'வழங்கு' என்றும் கொட்டு, குடைவி, செதுக்கு என்றும் இருவிதமாகப் பொருள் கொள்ளலாம்.' உபசஅன்' என்ற சொல்லுக்குரிய விளக்கம் திருவாதவூர் கீழவளவுக் கல்வெட்டுப் பகுதியில் தரப்பட்டுள்ளது போல் சமய ஆசிரியன் என்று பொருள் கொள்ளலாம். 'உபறுவன்' என்ற சொல் கிணறு, குளம் தோண்டும் பணியாளரையும் சாலைப் பணியாளரையும் குறிக்கும் சொல்லாகக் கருதப்படுகிறது. இறுதிப் பகுதி சிதைந்துள்ளமையால் இச்சொல்லை ஆட்பெயராகவும் கொள்ளலாம்.

இரண்டாவது கல்வெட்டில் உள்ள 'குறு' என்ற சொல்லைக் 'கூறு' எனக் கொள்ளலாம். 'கொடல்' என்ற சொல்லுக்குக் 'கொட்டல்' செதுக்குதல் எனப்பொருள் கொண்டு 'கொடல்கு' என்ற சொல்லுக்குக் 'கொட்டுவதற்கு' குடைவதற்கு எனப் பொருள் கொள்ளலாம். இக்கல்வெட்டின் இறுதியில் இரண்டு குறியீடுகள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றின் சரியான பொருள் விளங்கவில்லை. பொன் கொடை பற்றிக் கல்வெட்டு குறிப்பிடுவதால் பொன்னின் எடை அல்லது எண்ணிக்கையைக் குறிக்கும் குறியீடுகளாக இவற்றைக் கருதலாம்.

மூன்றாவது கல்வெட்டில் பாகனூர் குறிக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தினுள் சோழவந்தான் பகுதியில் பாகனூர் அமைந்திருந்தது. இக்கல்வெட்டுள்ள மலையின் மறு பக்கத்தில் வைகையாறு ஓடுகிறது. வைகையாற்றின் வளத்தில் சிறந்து விளங்கிய ஊராக

பாகனூர் கூற்றம் பாண்டியரின் வேள்விக்குடிச் செப்பேட்டில் சுட்டப்படுகிறது. பிடன் என்பதில் 'ட்' மெய் சேர்த்து பிட்டன் என்று கொள்ளலாம். 'இத்த' என்ற சொல்லை 'ஈத்த' என்று படித்து 'வழங்கிய' எனப் பொருள் கொள்ளலாம். 'வெபோன்' என்பதை வெண்பொன் - எனப் பொருள் கொள்ளலாம். இறுதியிலுள்ள குறியீடு பொற்காசின் எடை அல்லது எண்ணிக்கையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இவ்வகைக் குறியீடுகள் முத்திரை குத்திய பழமையான காசுகளிலும் அழகன் குளத்தில் கிடைத்த பகடைக்காய் ஒன்றிலும் பானை ஓட்டிலும் காணப்படுகின்றன.

https://t.me/daily_paper

# 6. மறுகால்தலை

திருநெல்வேலி மாவட்டம், பாளையங் கோட்டைக்கு வடகிழக்கே 9 கி.மீ. தொலைவில் சீவலப்பேரி என்ற ஊரின் அருகில் மறுகால்தலை உள்ளது. தாமிரபரணி, கடனாநதி, சிற்றாறு ஆகிய மூன்று நதிகள் இவ்வூரின் அருகில் இணைகின்றன. இவ்வூருக்குச் செல்லும் சாலை முன்னொரு காலத்தில் திருநெல்வேலியிலிருந்து இராமேசுவரம் செல்லும் பெருவழியாகச் சிறந்த விளங்கிற்று என்பர். இவ்வூரில் உள்ள சிறு சிறு குன்றுகளில் ஒன்றான பூவிலுடையார் மலையின் மேற்குப் பகுதியில் பஞ்சபாண்டவர் படுக்கை என்றழைக்கப்படும் இயற்கையாய் அமைந்த குகைத்தளம் ஒன்றுள்ளது. இக்குகையில் சமணத் துறவியர்கள் ஓய்வெடுப்பதற்கு ஏதுவாக சில படுக்கைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கல்வெட்டை முதன் முதலாக 1906 இல் நெல்லை மாவட்டக் கலெக்டர் ஹெமைடு என்பவர் கண்டறிந்தார். பௌத்த துறவிகள் தங்கியிருந்த இடமாக இது இருக்கலாம் என்றும் அவர் கருதினார்.

## கல்வெட்டு 6:1

பஞ்சபாண்டவர் படுக்கை குகைத்தளத்துப் பாறையின் நெற்றிப் பகுதியில் பெரிய எழுத்துக்களில் ஒருவரியில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. சில எழுத்துக்கள் 40 செ.மீ. உயரம் உள்ளவை. இக்கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**'வெண்காஸிபன் கொடுபித கல்கஞ்சனம்'**

வெண்காசிபன் என்பவன் இங்குள்ள குகைத்தளத்தில் ஒரு கட்டட அமைப்பு அமைத்துக் கொடுத்துள்ளான் என்பது இதன் பொருளாகும்.

### பாடபேதம்

| | |
|---|---|
| வேண் கோஸிபன் குடுபிதகல காஞ்சணன் | – கிருஷ்ண சாஸ்திரி |
| வேண் கோஸிபன் குடுபித கல் காஞ்சனம் | – சுப்பிரமணிய அய்யர் |
| வேண் கோஸிபன் குடுபித கல் காஞ்சனம் | – நாராயணராவ் |
| வேண் கோஸிபன் குடுபித கல் காஞ்சனம் | – டி.வி. மகாலிங்கம் |
| வெண் காஸிபன் கொடுபித கல் கஞ்சணம் | – இரா. நாகசாமி |

வெண் காஸிபன் குடுபித கல் கஞ்சணம் — ஐ. மகாதேவன்

https://t.me/daily_paper

வெண் காஸிபன் கொடுபித கல் கஞ்சணம் — மயிலை. சீனி

## கல்வெட்டுச் செய்தி

சமஸ்கிருதத்தில் 'கஞ்சணம்' என்பது ஒருவகை கோயில் அமைப்பைக் குறிக்கும். பளபளப்பாக்கப்பட்ட வெண்கலத் தகட்டையும் குறிக்கும். இங்குப் படுக்கை அல்லது ஏதோ ஒரு கட்டடப் பகுதியைக் குறிக்கிறது. காசிபன் என்ற சொல்லில் உள்ள 'சி' என்ற எழுத்து அசோகன் பிராமி எழுத்தாகும்.

இத்தொடரில் உள்ள எழுத்துக்கள் ஒரே சீராக இல்லாமல் பெரிதாகவும் ஒழுங்கற்ற முறையிலும் பொறிக்கப்பட்டுள்ளன. தரைப்பகுதிக்கும் கல்வெட்டுப் பகுதிக்கும் இடையில் சுமார் 40 அடி இடைவெளி இருந்ததால் கீழிருந்து படிக்க ஏதுவாகப் பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டதாகக் கொள்ளலாம். தற்போது தரைத்தளம் உயர்ந்துள்ளது.

# 7. வரிச்சியூர்

மதுரை மாவட்டம் மதுரை வடக்கு வட்டத்தில் சிவகங்கை செல்லும் சாலையில் வரிச்சியூர் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள உதயகிரி என்றழைக்கப்படும் சுப்பிரமண்ய மலையில் மூன்று தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்கள் உள்ளன. வடக்குப் பார்த்தமைந்துள்ள சிறிய குகைத்தளத்தின் புருவப் பகுதியிலும் கிழக்குப் பார்த்துள்ள குகைத்தளத்தின் புருவப் பகுதியில் வெட்டுள்ள நீர்வடிவிளிம்பின் மேலும் கீழுமாக இம்மூன்று கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல்வெட்டுகள் 1908இல் படியெடுக்கப்பட்டு அவ்வாண்டு இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் குறிப்புகளாக வெளியிடப்பட்டன. இக்குகைத்தளம், கல்வெட்டுகள் மற்றும் இங்குள்ள குடைவரைக் கோயில்கள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## கல்வெட்டு: 7:1

இக்கல்வெட்டு வடக்கு நோக்கிய சிறிய குகைத்தளத்தின் நெற்றிப்பாறை முகப்பில் உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. 2ஆம் நூற்றாண்டாகும்.



**ப[ளி]ய் கொடுபி . . .**

இப்பள்ளியை அமைத்தவரின் பெயர் சொல்லப்படுகிறது. கல்வெட்டின் இறுதிப் பகுதி சிதைந்துவிட்டதால் கொடையளித்தவரின் பெயரைத் தெரிந்து கொள்ள இயலவில்லை.

**பாடபேதம்** https://t.me/daily_paper

| | |
|---|---|
| பிரேய கொடு பி | – டி.வி மகாலிங்கம் |
| . . . பளிய் காடுபி . . . | – இரா. நாகசாமி |
| ப[ளி]ய் கொடு பி . . . | – ஐ. மகாதேவன் |

## கல்வெட்டு 7:2

இக்கல்வெட்டு கிழக்குப் பார்த்த பெரிய குகைத்தளத்தின் நெற்றிப்பாறையில் நீர்வடி விளிம்பின் மேலாக உள்ளது. கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.மு. 2ஆம் நூற்றாண்டாகும். கல்வெட்டு மிக உயரத்தில் உள்ளது. எழுத்துக்கள் சிதைந்துள்ளது.



**அடா. . . றை ஈதா வைக . . . ஒன் நூறு கலநெல் . . .**

(இப்பள்ளிக்கு) நூறு கலம் நெல் வழங்கப்பட்டமையைக் குறிக்கிறது. கொடை வழங்கியவரின் பெயர் சிதைவுற்றிருக்கலாம். 'ஈதா' என்ற சொல் மகிழ்ச்சி விளிச் சொல்லாகக் கருதப்படுகிறது.

## கல்வெட்டு 7:3

இக்கல்வெட்டு கிழக்குப் பார்த்த பெரிய குகைத்தளத்தின் நெற்றிப் பாறையில் நீர்வடிவிளிம்பின் கீழ்ப் பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**இளநதன் கருஇய நல் முழஉகை**

இச்சிறந்த (நல்ல) குகை இளநதன் என்பவரால் குடைவிக்கப்பட்டது என்பது இதன் பொருள்.

**பாடபேதம்**

கல்வெட்டு 2 மற்றும் 3 ஆகிய இரண்டும் ஒன்றாகவே படிக்கப்பட்டுள்ளன. முதலில் ஒன்றாகப் படித்த ஐ. மகாதேவன் பின்னர் பிரித்துப் படித்துள்ளார். அவரது இரண்டாவது வாசிப்பிற்கு இணங்கவே மேலே இவை மூன்று கல்வெட்டுகளாகத் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| . . . த . . . ரத [வை] . . . க . . . ந ரகல ந[ல] | – டி.வி. மகாலிங்கம் |
| ..டா.. இதா (வை) ஹுறகாகலேன . . . | – இரா. நாகசாமி |
| அடா . . . றை ரதா வைக . . . ஒன் நூறு கல நெல் . . . | – ஐ. மகாதேவன் |
| இளநதன் கருஇய நல் முழஉகை | – ஐ. மகாதேவன் |

## கல்வெட்டுச் செய்திகள்

https://t.me/daily_paper

வரிச்சியூர் கல்வெட்டுகளில் கலம், நெல், நூறு, கருகிய, முழஉகை ஆகிய சொற்கள் பயின்று வருவது சிறப்பானதாகும். எண்-அளவு குறிக்கப்படும் தமிழகக் கல்வெட்டுகளில் இதுவே காலத்தால் முந்தியதாகும். தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் படுக்கைகள் மற்றும் குகை அமைப்புகள் முதலியவை கொடையாகக் கொடுக்கப்பட்ட தகவல்களை மட்டும் காணும் நிலையில் நெல் கொடையாகக் கொடுக்கப்பட்டிருப்பதும் தமிழகக் கல்வெட்டுகளில் இக்கல்வெட்டில் தான் முதன்முலாகத் தெரிய வருகிறது. 'கருஇய' என்ற சொல் தொண்டை மண்டலத்தில் கிடைத்துள்ள கோழிக்கல் ஒன்றில் 'கருகிய' என்று பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. 'முழஉகை' என்ற சொல் அரிட்டாபட்டி கல்வெட்டுகளில் 'முழாகை' என்றும் 'முழஉகைய்' என்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# 8. விக்கிரமங்கலம்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் மதுரைக்கு மேற்கில் விக்கிரமங்கலம் உள்ளது. இங்கு உண்டாங்கல்லு என்ற சிறு குன்று ஒன்று உள்ளது. மதுரையிலிருந்து செக்கானூரணி வழியாக விக்கிரமங்கலம் செல்லும் நகரப் பேருந்துகள் இந்த உண்டாங்கல்லு குன்றின் வழியாகச் செல்கின்றன. இக்குன்றில் ஆறு தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகள் 1923, 1926, 1978 ஆம் ஆண்டுகளில் கண்டறியப்பட்டன.

## கல்வெட்டு:8:1

1978 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட இக்கல்வெட்டு ஒரு சிறு தனிப்பாறையின் கீழாக அமைந்துள்ள மிகச்சிறிய குகைத் தளத்தின் விதானத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**எஇய்ல் அர்இய்தன் சேவித்ஒன்**

எஇய்ல் என்ற ஊரைச் சேர்ந்த அர்இய்தன் என்பவரால் செய்விக்கப்பட்டது என்பது இதன் பொருள்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| எஇய்ல் அரிஇய்தன் சேவித்ஒன் | – ஐ. மகாதேவன் |
| எராயில் அரிஇயதன் சேவித்ஒன் | – தொல்லியல் துறை தமிழ்நாடு அரசு |

## கல்வெட்டு :8:2

https://t.me/daily_paper

இரண்டாவது கல்வெட்டு இங்குள்ள பெரிய குகைத்தளத்தின் நெற்றிப்பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. பெரிய எழுத்துக்களாகவும் சிதைந்தும் உள்ளன. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**எம்ஊர் சிழிவன் அதன்தியன்**

எங்களூரைச் சேர்ந்த சிழிவன் அதன்தியன் என்பவரால் இக்கொடை நல்கப்பட்டுள்ளது என்பது இதன் பொருள்.

### பாடபேதம்

| | |
|---|---|
| எம் ஊர் சஅதன் அதான | – இரா. நாகசாமி |
| எம் ஊர் சிழிவன் அதான | – ஐ. மகாதேவன் |
| ஏம ஊர் சஅதன் அதன் | – மயிலை. சீனி |
| எம் ஊர் சிழிவன் அதன்தியன் | – தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை. |

## கல்வெட்டு :8:3

இக்கல்வெட்டு பெரிய குகைத்தளத்தில் உள்ள கற்படுக்கைகள் ஒன்றின் தலைப்பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்



**அந்தைய் பிகன் மகன் வெந்அதன்**

அந்தை பிக்கன் என்பவருடைய மகன் வெந்அதன் என்பவர் நல்கிய கொடையைக் குறிக்கிறது.

### பாடபேதம்

| | |
|---|---|
| அந்தை பிகன் மகன் வெந்தான | – சுப்பிரமணிய ஐயர் |
| அந்தை பிகன் மகன் வேந்தான | – நாராயணராவ் |
| அந்த பிகன் மகன் வேணி ஆதன | – டி.வி. மகாலிங்கம் |
| அந்தைய் பிகன் மகன் வெந் அதான | – இரா. நாகசாமி |

அந்தை பிகன் மகன் வெந் அதான — ஐ. மகாதேவன்

அந்தை பிகன் மகன் வேண் அதன் — மயிலை. சீனி

https://t.me/daily_paper

## கல்வெட்டு :8:4

மற்றொரு கற்படுக்கையின் தலைப்பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**பேதலை குவிரன்**

பே[த்]தலை என்ற ஊரைச் சேர்ந்த குவிரன் என்பவரால் இந்தப் படுக்கை செதுக்குவிக்கப்பட்டுள்ளது என்பது இதன் பொருள்.

### பாடபேதம்

| | |
|---|---|
| பொதிலை குவிரன் | – சுப்பிரமணிய அய்யர் |
| பொதிலை குவிரன் | – நாராயணராவ் |
| பொதலை குவிரன் | – டி.வி. மகாலிங்கம் |
| பெதலை குவிரன் | – இரா. நாகசாமி |
| பேதலை குவிரன் | – ஐ. மகாதேவன் |
| பொதலை குவிர[ன்] | – மயிலை. சீனி |

## கல்வெட்டு 8:5

மற்றொரு கற்படுக்கையில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**செங்குவிரன்**

செங்குவிரன் என்பவரால் இப்படுக்கை செதுக்குவிக்கப்பட்டுள்ளது என்பது இதன் பொருள். எல்லோரும் ஒன்று போல் படித்துள்ளனர். பாடபேதம் இல்லை.

## கல்வெட்டு 8: 6

இக்கல்வெட்டு மற்றொரு கற்படுக்கையில் உள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.

https://t.me/daily_paper



கு[வி]ரதன்

கு[வி]ரதன் என்பவரால் இப்படுக்கை செய்தளிக்கப்பட்டுள்ளது என்பது இதன் பொருள்.

### பாடபேதம்

| | |
|---|---|
| குவிராதன் | – இரா. நாகசாமி |
| கு[வி]ரா தான | – ஐ. மகாதேவன் |

## கல்வெட்டுச் செய்தி

முதற் கல்வெட்டில் எயில் என்ற சொல் மதிலைக் குறிக்கும். ஊரின் பெயராகவும் கொள்ளலாம். 'அர்இதன்' என்ற ஆட்பெயர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவாதவூர் கல்வெட்டிலும் ஆனைமலை கல்வெட்டிலும் 'ஆரிதன்' என்று காணப்படுகின்றது.

இரண்டாவது கல்வெட்டில் 'ஏம்ஊர்' என்பதை எமஊர் அல்லது ஏமஊர் எனவும் வாசிக்கலாம். அரிட்டாபட்டி கல்வெட்டிலும் சிழிவன் என்ற ஆட்பெயர் காணப்படுகிறது. 'அதன்' என்ற ஆட்பெயரும் 'தியன்' என்ற ஆட்பெயரும் அழகர் மலைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டில் காணப்படும் 'தியன்' என்ற மூன்றெழுத்துக்களும் கள ஆய்வின் போது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆய்வாளர்களால் அண்மையில் படிக்கப்பட்டன. தியன் என்ற ஆட்பெயர் கரூரில் கண்டறியப்பட்டுள்ள மோதிரங்களில் காணப்படுவதும் ஈண்டு ஒப்பு நோக்கற்குரியது. ஐராவதம் மகாதேவன் 'எம்ஊர் சிழிவன் அதான' என்று படித்து 'தானம்' என்று பொருள் கொள்கிறார்.

மூன்றாம் கல்வெட்டில் இறுதியில் உள்ள 'அதன்' என்பதை அதான எனப் படித்து 'தானம்' என்று ஐராவதம் மகாதேவன் பொருள் கொண்டுள்ளார். 'தான' என்ற சொல்லை 'ஸ்தானம்' என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கமாகக் கொண்டு 'இடம்' எனப்பொருள் கொள்ளவும் வாய்ப்புள்ளது. பிகன் என்ற பெயரில் மெய் சேர்த்து பிக்கன் என்று படிக்க வேண்டும். 'பிக்கம்' என்பது இளம்யானை என்று பொருளுடைய ஆட்பெயராகும். மாங்குளம் கல்வெட்டில் அந்தை அஸுதன் என்ற பெயரிலும் மேட்டுப்பட்டி கல்வெட்டுக்களில் அந்தை அரியிதி, அந்தை சேந்தன், அந்தை இராவதன், அந்தை அஸுவன் போன்ற பெயர்களிலும் இடம்பெற்றுள்ள 'அந்தை' என்ற ஆட்பெயரோடு இக்கல்வெட்டிலுள்ள 'அந்தை' என்ற ஆட்பெயரை ஒப்பு நோக்கலாம். அந்தை மரியாதைச் சொல்லாகும். இக்கல்வெட்டில் 'ய' மீது புள்ளி உள்ளதாக ஆய்வாளர்கள் கருதினர். ஐ மகாதேவன் அது பாறையில் உள்ள பள்ளம் என்று ஒதுக்கியுள்ளார்.

நான்காவது கல்வெட்டில் குளித்தலை, செந்தலை, சீத்தலை போன்ற ஊர்ப் பெயர்களைப் போன்று 'பேதலை' என்ற சொல் 'பே(த்)தலை' என்ற ஊரின் பெயரைக் குறிப்பதாகக் கொள்வர். குவிரன் என்ற ஆட்பெயர் இங்கு மேலும் இரு கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. 'குவிரந்தை' என்ற ஆட்பெயர் மேட்டுப்பட்டி கல்வெட்டில் காணப்படுகிறது. குவிரன் என்ற சொல்லைப் பாகதச் சொல்லாகக் கருதுவர். குவிரன் என்ற பெயர் குபேரன் (குவேரன்) என்ற பெயரோடு ஒப்புமையுடையது. கற்படுக்கைகளில் உள்ள கல்வெட்டுகள் தனித்தனியாக இருந்தபோதிலும் அவற்றில் இரண்டினைத் தவறுதலாக இணைத்து கீழ்வருமாறும் படிக்கப்பட்டுள்ளது.

வேண் குவிர கொடுபிதான் – சுப்பிரமணிய அய்யர்

குவிரன் கொடுபித – நாராயணராவ்

ஐந்தாம் கல்வெட்டில் உள்ள செங்குவிரன் எனும் பெயரை அனைவரும் மாற்றமின்றி படித்துள்ளனர். ஆறாம் கல்வெட்டில் உள்ள சொல்லை குவிராதன் எனவும் வாசிக்கலாம். இக்கல்வெட்டைக் 'குவிரா தான்' என்று வாசித்துக் குவிரனுடைய தானம் என்று ஐ. மகாதேவன் பொருள் கொள்கிறார்.

# 9. மேட்டுப்பட்டி

மதுரைக்கு மேற்கே நாற்பது கிலோமீட்டர் தொலைவில் பேரணைப் பகுதியில் மேட்டுப்பட்டி உள்ளது. இவ்வூரில் வைகையாற்றின் தென்கரையில் சித்தர்மலை - மகாலிங்க மலை என்றழைக்கப்படும் மலை உள்ளது. மதுரையிலிருந்து உசிலம்பட்டி பேருந்தில் சென்றால் இக்குன்றின் அடிவாரத்தினை அடையலாம். மலையின் உச்சியில் மகாலிங்க சுவாமி கோயிலுக்குச் செல்லும் வழியில் பஞ்சபாண்டவர் குகை என்று அழைக்கப்படும் இயற்கையான பெரிய நீண்ட குகைத்தளம் ஒன்று உள்ளது. இதன் நெற்றிப் பாறையில் வெட்டப்பட்ட நீர்வடி விளிம்பின் அடியிலும் படுக்கையின் தலைப்பகுதியிலுமாகப் பத்து தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளன. குகைத் தளத்தின் உட்புறமுள்ள படுக்கைகளில் காணப்படும் கல்வெட்டுகள் 1908இலும் குகைத்தளத்தின் முகப்பில் உள்ள கல்வெட்டு 1980க்குப் பிறகும் கண்டறியப்பட்டன.

## கல்வெட்டு 9:1

இக்கல்வெட்டு குகைத் தளத்தின் முகப்புப் பாறையில் தென்புறம் உள்ளது. ஐந்து சொற்களுடன் ஒரு மீட்டர் நீளத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



அமணன் மதிரை அத்திரன் உறை உதயனஸ

*மதுரையைச் சார்ந்த அமணன் (சமண முனிவர்) அத்திரனுடைய அல்லது அத்திரன் உறைவிடம், இது உதயனனின் கொடை என்று இதற்குப் பொருள் கூறலாம்.*

https://t.me/daily_paper

## கல்வெட்டு 9:2

*குகைத் தளத்தில் உள்ள கற்படுக்கைகளில் இடதுபுற முதற் கற்படுக்கையில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டு ஆகும்.*



**அந்தை அரிய்தி**

*அந்தை அரிதி என்பவன் படுக்கை அமைத்தான் என்பது பொருள்*

### பாடபேதம்

| | |
|---|---|
| அந்தை அரிய் | – கிருஷ்ண சாஸ்திரி |
| அந்தை அரியதி | – சுப்பிரமணிய அய்யர் |
| அந்தை அரிய் | – டி.வி. மகாலிங்கம் |
| அந்தை அரிய்தி | – ஐ. மகாதேவன் |
| அந்தை அரிய்தி | – இரா. நாகசாமி |
| அந்தை அரிய்[தி] | – மயிலை. சீனி |

## கல்வெட்டு 9:3

*மேல் வரிசையிலுள்ள மற்றொரு கற்படுக்கையில் இக்கல்வெட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.*



**அந்தை இராவதன்**

*அந்தை இராவதன் கொடுத்த படுக்கை எனப்பொருள்படும்*

### பாடபேதம்

| | |
|---|---|
| தி அந்தை[இர] வாதன் | – கிருஷ்ண சாஸ்திா |
| அந்தை இரவாதன் | – சுப்பிரமணிய அய்யர் |
| தி அந்தை இரவாதன் | – டி.வி மகாலிங்கம் |

அந்தை இராவதன் – ஐ. மகாதேவன்

https://t.me/daily_paper

அந்தை இரவாதன் – இரா. நாகசாமி

அந்தை இரைவதன் – மயிலை. சீனி

## கல்வெட்டு 9:4

மேல்வரிசையில் உள்ள கற்படுக்கை ஒன்றில் இக்கல்வெட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**[ம]திர அந்தை [வி] ஸுவன்**

*மதுரையைச் சார்ந்த விசுவன் அமைத்த படுக்கை என்று இதற்குப் பொருள்கொள்ளலாம்.*

### பாடபேதம்

மதிர அந்தை [வி] ஸுவன் – கிருஷ்ண சாஸ்திரி

மதிர அந்தை – சுப்பிரமணிய அய்யர்

[ம]திர அந்தை விஸுவன் – ஐ. மகாதேவன்

மதிர அந்தை விஸுவன் – இரா. நாகசரம்

மதிரை அந்தை விஸுவன – மயிலை. சீனி

மதிர அந்தை விஸுவன் – டி.வி. மகாலிங்கம்

## கல்வெட்டு 9: 5

மேல் வரிசையில் உள்ள நான்காம் கற்படுக்கையில் இக்கல்வெட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**அந்தை சேந்தன் அதன்**

அந்தை சேந்தன் அதன் என்பவன் படுக்கை அமைத்தான் என்று பொருள். அந்தை சேந்தஅ தான என்று படித்து அந்தை சேந்தன் செய்த தானம் என்று ஐராவதம் மகாதேவன் பொருள் கொள்கிறார்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| அந்தை வேண் அதன் | – கிருஷ்ண சாஸ்திரி) |
| வேணத அதான | – சுப்பிரமணிய அய்யர் |
| அந்தை வேந்த ஆதன் | – டி.வி. மகாலிங்கம் |
| அந்தை சேந்தஅ தான | – ஐ. மகாதேவன் |
| அந்தை சேந்தஅ தான | – இரா. நாகசாமி |
| அந்தை சந்த அதன் | – மயிலை. சீனி |

https://t.me/daily_paper

## கல்வெட்டு 9:6

மேல் வரிசை ஐந்தாவது கற்படுக்கையில் இக்கல்வெட்டு உள்ளது. காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**சந்தந்தை சந்தன்**

சந்தந்தை சந்தன் என்பவன் படுக்கை செய்து கொடுத்தான் என்பது பொருள். சந்தன் என்பது தந்தை மகன் இருவரது பெயருமாகும். அந்தை என்ற சொல் இருவரையும் பிரித்துக் காட்டுகிறது.

**பாடபேதம்**

| | |
|---|---|
| சந்தந்தை சந்தன் | – கிருஷ்ண சாஸ்திரி |
| விஸூவன் சந்தந்தை | – சுப்பிரமணிய அய்யர் |
| சந்தந்தை சந்தன் | – டி.வி. மகாலிங்கம் |
| சந்தந்தை சந்தன் | – ஐ. மகாதேவன் |
| சந்தந்தை சந்தன் | – இரா. நாகசாமி |
| சந்தந்தை சந்தன் | – மயிலை. சீனி |

## கல்வெட்டு 9:7

கீழ்வரிசை கற்படுக்கை ஒன்றினை ஒட்டி இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.

https://t.me/daily_paper



**பதின் [ஊர்] அதை**

*அதை என்பதை அந்தை என்று படித்துப் பதினூர் என்ற ஊரைச் சார்ந்த அந்தை கற்படுக்கை அமைத்தான் என்று பொருள் கூறலாம். அந்தை என்பது மரியாதைச் சொல்லாகும்.*

**பாடபேதம்**

| | |
|---|---|
| பொதின ஊர் அதன் | – கிருஷ்ண சாஸ்திரி |
| பொதின் ஊர் அதான | – சுப்பிரமணிய அய்யர் |
| பொதின் ஊர் அதன் | – டி.வி. மகாலிங்கம் |
| பதின் ஊர் அதை | – ஐ.மகாதேவன் |
| பதின் ஊர் அதை | – இரா. நாகசாமி |
| பதன ஊர் அதன் | – மயிலை. சீனி |

## கல்வெட்டு 9:8

*கீழ்வரிசை கற்படுக்கையில் வெட்டப்பட்டுள்ளது. காலம் ஏறத்தாழ கி.மு. 2 ஆம் நூற்றாண்டாகும்.*



**குவிர அ[ந்தை] சேய் அதன்**

குவிரந்தை சேய் ஆதன் என்பவன் செய்த படுக்கை எனப் பொருள். குவிரந்தை சேய் அதான என்று படித்து குவிர அந்தை என்பவன் செய்த தானம் என்று ஐ. மகாதேவன் பொருள் கூறுகின்றார்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| குவிர அந்தை வேய அதன் | – கிருஷ்ண சாஸ்திரி |
| குவிர அந்தை வேய் அதான | – சுப்பிரமணிய அய்யர் |
| குவிர அந்தை வேள் ஆதன் | – டி.வி. மகாலிங்கம் |
| குவிர அன்தை சேய் அதான | – ஐ. மகாதேவன் |
| குவிர அந்தை செய் அதான | – இரா. நாகசாமி |
| குவிர அந்தை வேள் அதன் | – மயிலை. சீனி |

## கல்வெட்டு 9:9

https://t.me/daily_paper

கீழ்வரிசை கற்படுக்கை ஒன்றின் தலைப்பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. காலம் ஏறத்தாழ கி.மு 2 ஆம் நூற்றாண்டு ஆகும்.



**குவிரந்தை வேள் அதன்**

குவிரந்தை வேளாதன் என்பவன் செய்த படுக்கை எனப் பொருள்படும். இக்கல்வெட்டை ஐ. மகாதேவன் 'குவிர அந்தை வேள்அ தான' என்று படித்து கொடுத்த தானம் என்று பொருள் கொள்கிறார்.

| | |
|---|---|
| குவிர அந்தை வேள்அதான | – ஐ. மகாதேவன் |
| குவிர அந்தை வேள்அ தான | – இரா. நாகசாமி |

நாராயணராவ் கே.வி. சுப்பிரமணய அய்யர் ஆகியோர் கல்வெட்டு 8,9 ஆகியவற்றைக் கலந்தும் ஒன்றாகக் கருதியும் படித்துள்ளனர்.

## கல்வெட்டு 9:10

இக்கல்வெட்டு கீழ்வரிசை கற்படுக்கையில் உள்ளது. காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**திடி இல் அதன்**

திடிஇல் என்ற ஊரைச் சேர்ந்த ஆதன் கொடுத்த படுக்கை என்று பொருள். இக்கல்வெட்டினை 'திடிஇல் அதான' என்று படித்து திடியில் என்ற ஊரைச் சேர்ந்தோர் அளித்த கொடை என்று ஐ. மகாதேவன் பொருள் கூறியுள்ளார். திடியில் என்ற ஊர் தற்போது திடியன் என்ற பெயரில் மேட்டுப்பட்டிக்குத் தென்கிழக்கே உசிலம்பட்டி வட்டத்தில் அமைந்துள்ளது.

**பாடபேதம்**

| | |
|---|---|
| திடி இல் அதன் | – கிருஷ்ண சாஸ்திரி |
| திடியில்அதான | – சுப்பிரமணிய அய்யர் |
| திடயிய் ஆதன் | – டி.வி. மகாலிங்கம் |
| திடிஇல்அ தான | – ஐ. மகாதேவன், |
| தி இளஅ தான | – இரா. நாகசாமி |
| திடி இள அதன் | – மயிலை. சீனி |

## கல்வெட்டுச் செய்திகள்

https://t.me/daily_paper

சமண சமயத்தில் உயர்கதி அடைந்தவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் அவர்கள் வாழ்ந்த மலைகளைச் சித்தர்மலை என்று அழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. சித்தர்மலைக்கு அருகிலுள்ள குகைத்தளத்தில் உள்ள பத்து கல்வெட்டினுள் முதலாவது கல்வெட்டில் சிரமணர் என்ற சொல் மொழி முதல் சகரம் நீக்கப்பட்டு அமணன் என்று குறிப்பிடப்படுகிறது. கி.பி. 2ஆம் நூற்றாண்டு புகளூர் கல்வெட்டிலும் இச்சொல் (அமண்ணன்) வருகிறது.

மதுரை என்ற சொல் இக்கல்வெட்டில் 'மதிரை' என்று குறிப்பிடப்படுகிறது. அழகர் மலை தமிழ்-பிராமி கல்வெட்டுகளிலும் 'மதிரை' என்ற சொல் வருகிறது. இக்கல்வெட்டில் 'உதயனஸ' என்ற சொல்லின் இறுதியில் 'உடையது' என்ற பொருளில் வரும் 'ஸ' என்ற வேற்றுமை உருபு காணப்படுகிறது. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் வேறு எங்கும் இது காணப்படவில்லை. சாதவாகனர் வெளியிட்ட இருமொழி வாசகங்கள் உடைய காசுகளில் மேற்சொன்ன 'ஸ' என்ற வேற்றுமை உருபு காணப்படுகிறது.

இரண்டாவது கல்வெட்டில் அந்தை அரிய்தி என்பதை 'ஆந்தை ஆரிதி' என்றும் கொள்ளலாம். வடமொழி பெயரின் தமிழ் வடிவமாக 'அரிதி' உள்ளது. இப்பெயர் கருங்காலக்குடி ஆனைமலை கல்வெட்டுகளிலும் வருகிறது.

எட்டாவது கல்வெட்டில் வரும் 'குவிர' எனும் சொல் செல்வத்திற்கு அதிபதியான குபேரனைக் குறிக்கவே வந்துள்ளது. இச்சொல் விக்கிரமங்கிலம் கல்வெட்டிலும் வருகின்றது.

# 10. கருங்காலக்குடி

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் மேலூரிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் அமைந்துள்ளது இவ்வூர். கருங்காலக்குடி கிராமத்தில் பஞ்சபாண்டவர் குட்டு என்னும் சிறு குன்று உள்ளது. இக்குன்றில் அமைந்துள்ள இயற்கையான குகைத்தளத்தில் சமணத் துறவியர் தங்குவதற்கான கற்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. குகையின் முகப்பு நெற்றிப்பாறையில் நீர்வடி விளிம்பு வெட்டப்பட்டுள்ளது. இதனில் தமிழ்-பிராமி கல்வெட்டு அமைந்துள்ளது. இது 1912 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டு ஆண்டறிக்கையில் படத்துடன் வெளியிடப்பட்டது. மேலும் இங்கு கி.பி. 9 ஆம் நூற்றாண்டுச் சமணத் திருமேனி, வட்டெழுத்துக் கல்வெட்டுகள் மற்றும் பாறை ஓவியங்களும் உள்ளன. இவை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## கல்வெட்டு 10:1



**எழைய் ஊர் அரிதின் பளி**

https://t.me/daily_paper

என்பது கல்வெட்டின் வாசகமாகும். பளி என்பதில் 'ள்' மெய் சேர்த்து பள்ளி என்று கொள்ள வேண்டும். இப்புனித இடம் மற்றும் கல்படுக்கை எழையூரைச் சேர்ந்த அரிதி என்பவரால் வழங்கப்பட்டது என்பதே இக்கல்வெட்டின் பொருளாகும். எழைஊர் என்பது இடையூர் என்பதின் திரிபு என்பர். இடையர்கள் (கால் நடை மேய்ப்புச் சமூகத்தினர்) வாழும் இடமாக இருந்தமையால் இடையூர் எனப்பட்டிருக்கலாம். ஏடகம்-ஏழகம், நாடி-நாழி என்பது போல இடையூரே மக்கள் வழக்கில் எழையூர் என மருவி வழங்குகிறது.

இக்கல்வெட்டின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும். குற்றெழுத்தில் நெடிலைக் குறிக்கும் பக்கக்கோடு இருப்பினும் இதனை மாங்குளம், அரிட்டாபட்டி கல்வெட்டுகளை ஒப்ப நெடிலையும் குறிலாகப் படித்துப் (பட்டிபுரோலு முறைப்படி) பொருள் கொள்ள வேண்டும். எனவே இக்கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

# 11 முதலை குளம்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் மதுரைக்கு மேற்கில் விக்கிரமங்கலம் அருகில் முதலைகுளம் அமைந்துள்ளது. விக்கிரமங்கலம் தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்கள் உள்ள உண்டாங்கல்லு மலைக்கருகில் சின்ன உண்டாங்கல்லு மலையில் இராக்கிப்புடவு என்ற குகையின் புருவத்தில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் சுமார் 164 செ.மீ. நீளத்தில் தமிழ்-பிராமி கல்வெட்டொன்று பொறிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு



**வேம்பிற்ஊர் பேர் அய்அம் சேதவர்**

இந்தப் பெருங்குளம் வேம்பிற்றூர் ஊரவையினரால் செய்யப்பட்டது என்பது இதன் பொருளாகும்.

## பாடபேதம்

வேம்பிற் ஊற் பேர்அய்அம் சேதவர் – சிரோமணி, ஜெயராஜன்

செம்பிறைஊர் பேர்அய்அம் சேதவர் – இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1978–79

## கல்வெட்டுச் செய்தி

அயம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. இங்குக் குகை போன்ற அமைப்பு நீர்தேக்கி வைக்கும் இடம் என்று கொண்டால் நீர், சுனை, பள்ளம், குளம் என்று தமிழ்ப்பேரகராதி சுட்டும் சொற்பொருள்கள் ஏற்புடையவை ஆகின்றன. இக்கல்வெட்டுள்ள

சின்ன உண்டாங்கல்லு மலையை அடுத்து முதலைகுளம் என்ற ஊர் குளத்தின் பெயரால் இருப்பதாலும் அவ்வூரில் சுமார் 2 கி.மீ. சுற்றளவில் ஒரு பெரிய குளம் இருப்பதாலும் இக்கல்வெட்டிலுள்ள 'அயம்' என்ற சொல்லுக்குக் 'குளம்' எனப் பொருள் கொண்டு 'பேர் அயம்' என்ற சொல்லுக்குப் பெருங்குளம் என்று பொருள் கொள்ளலாம்.

https://t.me/daily_paper

வேம்பிற் ஊர் என்ற சொல்லில் வேம்பில் என்பது ஊர்ப்பெயரையும் ஊர் என்ற பின்னொட்டு அவ்வூரின் ஊரவையையும் சுட்டுவதாகக் கருதுவர். சங்கப் பாடல்களில் புறநானூற்றுப் பாடல் 317ஐப் பாடிய குமரனாரும், குறுந்தொகையில் 362ஆவது பாட்லைப் பாடிய கண்ணன் கூத்தனாரும் வெம்பில் ஊரினராகக் கருதப்படுவர். நம்பி திருவிளையாடலைப் பாடிய செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியும் மதுரைக் கோவையைப் பாடிய சங்கரநாராயணரும் சிராமலை அந்தாதியைப் பாடிய வேம்பையர் கோன் நாராயணனும் இவ்வூரைச் சேர்ந்தவர்களாகலாம். பாண்டிய நாட்டில் மதுரைக்கு வடகிழக்கில் வைகை நதிக்கு வடக்கில் சிவகங்கை மாவட்டத்தில் இப்பெயரில் ஓர் ஊர் அமைந்துள்ளது. பெரிய சின்னமனூர் செப்பேட்டில் களவழி நாட்டு வேம்பற்றூர் என்ற பெயரில் ஓர் ஊர் சுட்டப்பட்டுள்ளது.

'சேதவர்' என்ற சொல்லைச் செய்தவர் என்ற சொல்லாகக் கொள்ளலாம்.

# 12. அழகர் மலை

மதுரைக்கு வடக்கே 24 கிலோமீட்டர் தொலைவில் வரலாற்றுச் சிறப்பும் வழிபாட்டுச் சிறப்பும் மிக்க அழகர் கோயில் உள்ளது. அழகர்கோயில் உள்ள மலைக்கு சோலைமலை, இருங்குன்றம், இடபகிரி, திருமால் குன்றம், திருமாலிருஞ்சோலை என்று பலபெயர்கள் உண்டு. அழகர்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள கோட்டையின் பிரதான வாயிலுக்கு வெளியிலிருந்து கிழக்காக மேலூர் செல்லும் சாலையில் மலைத் தொடரின் அடிவாரத்தில் சுந்தராசன்பட்டி, கிடாரிப்பட்டி என்ற ஊர்கள் உள்ளன. அவற்றின் அருகில் மலைத் தொடர்க் குன்றின் சற்று உயரமான பகுதியில் இயற்கையான குகைத்தளமும் அதனில் ஒரு சுனையும் உள்ளன.

இக்குகைத்தளத்தில் செதுக்கப்பட்டுள்ள கற்படுக்கை ஒன்றிலும் குகையின் நெற்றிப் பகுதியில் வெட்டப்பட்டுள்ள நீர்வடி விளிம்பின் மேலும் கீழுமாக தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளன.

சமணர்கள் இங்குத் தங்குவதற்கு முன்பு இவ்விடம் பழங்குடிகளின் வாழ்விடமாக இருந்திருக்க வேண்டுமென்பதை இக்குகைத்தள விதானத்தில் வரையப்பட்டுள்ள செங்காவியால் ஆன பறவைமுக மனிதர் மற்றும் மான் போன்ற விலங்குகளின் ஓவியங்கள் காட்டுகின்றன. இங்குள்ள சமணத் தீர்த்தங்கரரின் உருவமும் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டும், தொடர்ந்து இவ்விடம் 10 ஆம் நூற்றாண்டு வரை சமணர் வழிபாட்டுத் தளமாக விளங்கியமையை எடுத்துக்காட்டுகின்றன. குகைத் தளத்தினை ஒட்டியே ஒரு பெரிய நீர்நிலை சுனையாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். சற்று எட்டாத உயரத்தில் முகப்பு நெற்றிப்பகுதியில் அமைந்துள்ள தமிழ்-பிராமி கல்வெட்டுகள் 1908 மற்றும் 1963 ஆம்

ஆண்டுகளில் அறியப்பட்டு 1963 மற்றும் 1966 ஆம் ஆண்டுகளில் படியெடுக்கப்பட்டு அவ்வாண்டு கல்வெட்டு ஆண்டறிக்கைகளில் வெளியிடப்பட்டன.

https://t.me/daily_paper

## கல்வெட்டு 12:1

குகைத்தள முகப்புப் பாறை நெற்றிப் பகுதியில் வெட்டப்பட்டுள்ள நீர்வடி விளிம்பின் கீழாக இக்கல்வெட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**மதிரை பொன் கொல்வன் அதன் அதன்**

மதுரையைச் சேர்ந்த பொற்கொல்லன் அதன்அதன் என்பவனது பெயர் குறிக்கப்படுகிறது. இறுதியில் ஒரு குறியீடு உள்ளது.

### பாடபேதம்

மத்திரைய பொன் குலவன அதன அதன் – கிருஷ்ண சாஸ்திரி.
மத்திரைய் பொன் கொலவன் ஆதன அதான – இரா. நாகசாமி.
மத்திரைய் பொன் கொல்லன் அதான் அதான் – மயிலை. சீனி.
மதிரய் பொன் கொலவன் அதன் அதன் –ஐ. மகாதேவன்.
மத்திரைப் பொன் குலவன் அதன் அதன் – டி.வி. மகாலிங்கம்.

## கல்வெட்டு 12:2

முதற்கல்வெட்டின் அருகில் உள்ளது. முன்னும் பின்னும் எழுத்துக்கள் சிதைந்துள்ளன. கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**. . . அ னாகன் த . . .**

னாகன் (நாகன்) என்பவரது பெயர் குறிக்கப்படுகிறது.

### பாட பேதம்

அனகனன் –கிருஷ்ண சாஸ்திரி.
அனகனம் – சுப்பிரமணிய அய்யர்.
அனாகன் – இரா. நாகசாமி.

. . . அனாகன் த . . . –ஐ. மகாதேவன்.

அனகனேன – டி.வி. மகாலிங்கம்.

https://t.me/daily_paper

## கல்வெட்டு 12:3

மேற்சொன்ன கல்வெட்டை அடுத்து இக்கல்வெட்டு நெற்றிப் பாறையில் ஒரு நீண்ட வரியாக வெட்டப்பட்டுள்ளது. இவ்வரி 'மத்திரைக்கே' என்ற சொல்லுடன் தொடங்குகிறது. அடுத்தடுத்து ஆட்பெயர்களும் குறியீடுகளும் உள்ளன. இவற்றைத் தனித்தனிக் கல்வெட்டுகளாகவும் ஒரே கல்வெட்டாகவும் எடுத்துக் கொள்ளலாம். முதலில் வரும் மத்திரைக்கே என்ற சொல்லினை முதற்பெயரோடு சேர்ந்ததாகவும் ஒவ்வொரு பெயருடனும் சேர்ந்ததாகவும் எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் அனைவரும் இக்குகைத் தளத்தினை அமைத்திடவோ அல்லது அங்குள்ள பெரிய அளவிலான சுனையை அமைத்திடவோ கொடையளித்துள்ளனர். காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**மத்திரைகே உபு வாணிகன் வியக்கன் கணதிகன்**

மத்திரையை (மதுரை)ச் சேர்ந்த உப்பு வணிகன் வியக்கன் கணதிகன் என்பவரது பெயர் குறிக்கப்படுகிறது. கணதிகன் என்பதனை அடுத்து வரும் கல்வெட்டின் தொடக்கமாகவும் கொள்வர்

### பாடபேதம்

| | |
|---|---|
| மத்திரை கொப்பு வணிகன் யகனகோனதிகன | –கிருஷ்ண சாஸ்திரி. |
| உபு வணிகன் வியகன் கணதிகன் | – இரா. நாகசாமி. |
| மத்திரை கெ ஊபு வணிகன் | – மயிலை சீனி. |
| மத்திரை கே | – ஐ. மகாதேவன். |
| உபுவணிகன் வியக்கன் | – ஐ. மகாதேவன். |
| மத்தரை கொப்பு வணிகன் | – டி.வி. மகாலிங்கம். |

## கல்வெட்டு: 12:4

முன்கல்வெட்டினைத் தொடர்ந்து அதே நீண்டவரியில் இக்கல்வெட்டும் உள்ளது. முன்கல்வெட்டின் இறுதியில் வரும் குறியீட்டினைக் கொண்டு இக்கல்வெட்டு தனிக் கல்வெட்டாகப் பிரிக்கப்படுகிறது. எனினும் ஐராவதம் மகாதேவன் குறியீட்டினை நடுவில் வருவதாகக் கொண்டு முன்கல்வெட்டின் இறுதிச் சொல்லான ஆட்பெயரை இக்கல்வெட்டுடன்

சேர்த்துப் பொருள் கொள்கிறார். இக்கல்வெட்டின் காலமும் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.
https://t.me/daily_paper



**கணக அதன் மகன் அதன் அதன்**

கணகஅதன் மகன் அதன் அதன் என்பவன் பெயரினைக் குறிக்கிறது. இவர் குனைத்தளம் அல்லது சுனை அமைத்திடப் பங்களித்தவராக இருக்கலாம். இறுதியில் குறியீடு ஒன்றுள்ளது.

**பாடபேதம்**

| | |
|---|---|
| கனக அதன மோகன் அதன அதன | – கிருஷ்ண சாஸ்திரி. |
| கனக அதன் மகன் அதன் அதான | – இரா. நாகசாமி. |
| கணதிகன் கணக அதன் மகன் அதன் அதன் | – ஐ. மகாதேவன். |
| இயகன் கன திகன் | – மயிலை. சீனி. |
| வியக்கன் கணதிகன் | – டி.வி. மகாலிங்கம். |

## கல்வெட்டு 12:5

முன் கல்வெட்டுள்ள நீண்ட வரியில் நான்காவது பகுதியாக இக்கல்வெட்டுள்ளது. பெண் சமணத்துறவியின் பெயரைக் கொண்டுள்ள இக்கல்வெட்டின் இறுதியிலும் குறியீடு உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**சபமிதா இன பமித்தி**

சபமித்தா (சர்ப்பமித்ரா சமஸ்கிருதம்) என்ற சமணப் பெண் துறவி (பமித்தி) என்று பொருள்படும். சப்மிதா என்பதின் இடையில் 'த்' சேர்த்து சப்மித்தா - சப்மித்ரா என்று பொருள் கொள்ள வேண்டும். இவரும் குகைத்தளம் அல்லது சுனை அமைத்திடக் கொடை நல்கியுள்ளார்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| ச(ம) மி சின மிததி | – கிருஷ்ண சாஸ்திரி. |
| ஸபமித இன் போமித்தி | – இரா. நாகசாமி. |
| ஸம்மிஸின் மித்தி | – மயிலை. சீனி. |

ஸபமிதா இன பமித்தி – ஐ. மகாதேவன்.

https://t.me/daily_paper

ஸபமி சின்மித்தி – டி.வி. மகாலிங்கம்.

## கல்வெட்டு 12: 6

முன்கல்வெட்டுகள் உள்ள நெடுவரிசையில் 5ஆவது பகுதியாக இக்கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் இறுதியில் குறியீடு உள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**பாணித வாணிகன் நெடுமலன்**

இதனைப் பணித வணிகன் நெடுமலன் என்றும் 'நெடுமலன்' எனும் சொல்லில் உள்ள மலன் என்பதனுள் 'ல்' சேர்த்து நெடு மல்லன் என்றும் படிக்கலாம். 'பாணிதம்' என்பது சக்கரைப் பாகினையும் 'பணிதம்' என்பது பச்சைக் கற்பூரத்தையும் குறிக்கும். இது தொடர்பான வணிகனாக நெடு மல்லன் குகைத்தளம் மற்றும் சுனை அமைத்திடக் கொடைக்கொடுத்தவன் என்று இக்கல்வெட்டிற்குப் பொருள் சொல்லலாம்.

### பாடபேதம்

ருபனிதி வணி(க) ன்னடு மலன் – கிருஷ்ண சாஸ்திரி.

பணித வணிகன் நெடுமலன் – இரா. நாகசாமி.

வணிகன் நெடுமலன் – சுப்பிரமணிய அய்யர்.

பணித வணிகன் நெட்டு மூலன் – மயிலை. சீனி.

பாணித வாணிகன் நெடுமலன் – ஐ. மகாதேவன்.

பணிதி வணிகன் நெடுமலன் – டி.வி. மகாலிங்கம்.

## கல்வெட்டு 12:7

மேற்கண்ட கல்வெட்டின் நெடுவரிசையில் 6ஆவது பகுதியாக இக்கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் இறுதியில் குறியீடு உள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**கொழு வணிகன் எள சந்தன்**

கலப்பையின் கூர் பகுதியான 'கொழு' வணிகம் செய்யும் எள சந்தன் என்ற வணிகன் கொடுத்த கொடை என்று பொருள்படும். இள சந்தன் - இளையசந்தன் என்பது 'எள' சந்தன் என்றுள்ளது. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் இள-எள என்ற இரு சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பாடபேதம்** https://t.me/daily_paper

| | |
|---|---|
| [வணி] கன யளனதன் | – கிருஷ்ண சாஸ்திரி. |
| வணிகன் யுளநாதன் | – சுப்பிரமணிய அய்யர். |
| கொழு வணிகன் எளசந்தன் | – இரா. நாகசாமி. |
| கொழு வணிகன் இள சந்தன் | – மயிலை. சீனி. |
| கொழு வணிகன் எளசந்தன் | – ஐ. மகாதேவன். |
| கொழு வாணிகன் யுள சந்தன் | – டி.வி. மகாலிங்கம். |

## கல்வெட்டு 12: 8

*முன் பார்த்த கல்வெட்டுகளின் நெடுவரிசையில் குகைத்தள முகப்புப் புருவ நீர் வடி விளிம்பின் கீழ். ஏழாவதாக இக்கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் தொடக்கம் சிதைந்துள்ளது தெரியும் பகுதியில் தொடக்கத்தில் உள்ள எழுத்து 'ஞ்' என உத்தேசமாகக் கொள்ளலாம். இக்கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.*



**. . . [ஞ்]சி கழுமாற நதன் தார அணிஇ கொடுபித அவன்**

*கழுமாறநதன் தாரணி செய்து கொடுத்தான் என்று பொருள். இவனது ஊர் அல்லது ஏதோ ஒரு சிறப்புப் பெயர்... (ஞ்)சி என்று முன்னொட்டுச் சொல்லாக உள்ளது. எழுப்புதல் - எடுத்தல் என்பதில் 'ழு' 'டு' வாக வருவது போல் கழுமாறன் என்பதை கடுமாறன் என்று கொள்ளலாம். பாண்டிய இளவரசனாக அல்லது சிற்றரனாக இவன் இருந்திருக்கலாம். தாரணி என்பது நீர்வடி விளிம்பைக் குறிக்கும். நீர்வடிந்து சேரும் சுனையைக் குறிப்பதாகவும் இருக்கலாம்.*

**பாடபேதம்**

| | |
|---|---|
| சிகத் தமதுனதனதர அனிய சோது போத அவன் | – கிருஷ்ண சாஸ்திரி. |
| சிகரமர மாரன் தான தரஅணி குடுபிதவன் | – சுப்பிரமணிய அய்யர். |
| [ஞ்]சி கழுமாற நதன் தார அணிஇ கொடுபித அவன் | – ஐ. மகாதேவன். |
| ஞ்சி கழுமாறன் தான தார அணிஇகொடு பிதஅவன் | – இரா. நாகசாமி. |
| சிகரு பிறந்தான் அணிய கொடுபிதவன் | – டி.வி. மகாலிங்கம். |

## கல்வெட்டு: 12:9

https://t.me/daily_paper

இக்கல்வெட்டு முன்பார்த்த கல்வெட்டு நெடுவரிசையில் இறுதியில் உள்ளது. இக்கல்வெட்டுள்ள இடத்தில் கல்வெட்டு பொறிக்கும் போது சிதைவுகள் ஏற்பட்டு எழுத்துக்கள் சிதைந்தும் சிதைந்த இடத்தை விட்டு சற்றுத்தள்ளி மீண்டும் கல்வெட்டு தொடர்ச்சியாகப் பொறிக்கப்பட்டது போல் தெரிகிறது. இக்கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**தன்ம[ன்] கஸபன் அவ்[விரு] அ அர்உம் குடுபிதோ**

தன்மண், கஸபன் என்ற (மேலும்) இருவர் கொடை கொடுத்தனர் என்று இது பொருள்படும். ஐராவதம் மகாதேவன் நீர்வடி விளிம்பினை இவர்களும் செய்து கொடுத்தார்கள் என்று இவ்விடத்தில் பொருள் கொள்ளுவது இடத்திற்குத் தகுந்தவாறு ஏற்புடையதாக இருக்கும் என்று குறிப்பிடுகிறார். கல்வெட்டு எண். 12:3இல் குறிப்பிட்டது போல எண் 3 முதல் 9 முடிய ஒரே கல்வெட்டாகக் கொண்டால் அங்கு அமைந்துள்ள சுனையை அமைத்துக் கொடுத்தார்கள் என்று பொருள் கொள்ளலாம். இக்கல்வெட்டுகள் அனைத்திலும் சொல்லப்படுபவர்கள் குகைத்தளம், முகப்பு நீர்வடி விளிம்பு, சுனை என இங்குள்ள பணிகள் அனைத்தையும் செய்யக் கொடை கொடுத்துள்ளனர் என்றும் கருதலாம்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| காஸபன் அதவிர | – இரா. நாகசாமி. |
| தந்மன் கஸபன் அவ்[விரு] அ அர் உம் குடுபிதோர் | – ஐ. மகாதேவன். |

## கல்வெட்டு 12:10

முன்பார்த்த நீண்ட வரிசையில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டின் (12:3) கீழ் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**வெண்ப[ளி]இ அறுலவ வணிகன் எளஅ அடன்**

'ளி' எழுத்தில் உள்ள இகரகுறி சற்று சிதைந்துள்ளது இறுதியில் குறியீடு உள்ளது. வெண்பள்ளி என்ற ஊரைச் சேர்ந்த துணி (அறுவை) வணிகன் எளஅ அடன் என்பது இதன் பொருள். 'அடன்' என்பதை 'ட்' ஒற்றுச் சேர்த்து 'அட்டன்' என்று கொள்ளலாம். இறுதியில் உள்ள குறியீடு காசினைக் குறிக்கிறது என்று கொண்டால் அவன் தந்த காசின் அளவினைக் குறிக்கிறது எனலாம்.

**பாடபேதம்**

https://t.me/daily_paper

வெண்பளிய் அறுவை வணிகன் எளஅ அடன் – இரா. நாகசாமி.

வெண் ப[ளி]இ அறுமை வணிகன் எளஅ அடன் – ஐ. மகாதேவன்.

## கல்வெட்டு 12:11

மேற் சொன்ன கல்வெட்டினை (12:10) அடுத்து உள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டு எனலாம்.



**தியன் சந்தன்**

தியன் சந்தன் என்பவனது பெயர் குறிக்கப்படுகிறது. அடுத்துள்ள குறியீடு அவன் வழங்கிய காசினைக் குறிப்பதாகலாம். பாடபேதம் இல்லை.

**பாடபேதம்**

தியன் சந்தன் – இரா. நாகசாமி.

தியன் சந்தன் – ஐ. மாகதேவன்.

## கல்வெட்டு 12:12

குகைத்தளத்தின் உள்ளே ஒரு கற்படுக்கையின் தலைப் பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டு எனலாம்.



**கணிநாகன் கணிநதன் இருவர் அமகல்**

கணிநாகன், கணிநதன் என்ற இருவர் அமைத்த கற்படுக்கை எனப் பொருள் கொள்ளலாம். 'அம்' என்பதை 'அமை' என்று கொள்ளலாம்.

**பாடபேதம்**

கணி நாகன் கனி நதன் இருவர் அமகல் –ஐ. மகாதேவன்.

கணிநாதன் கணிய்நதன் – இரா. நாகசாமி.

## குறியீடுகள் https://t.me/daily_paper

அழகர்மலை கல்வெட்டில் பின்வரும் நண்டு போன்ற குறியீடுகள் என்மரது பெயர்களின் முடிவில் பொறிக்கப்பட்டுள்ளன.



இவற்றில் முதல் குறியீடு ஐவரது பெயருக்குப் பின்னர் வருகிறது. 2ஆவது குறியீடு இருவரது பெயருக்குப் பின்னரும், 3ஆவது குறியீடு ஒருவரது பெயருக்குப் பின்னரும் வருகிறது. இக்குறியீடு கொடுமணல் அகழாய்வுக்குழியில் கிடைத்த சங்ககாலப் பானையோட்டில் காணப்படுகிறது. இலங்கையிலுள்ள தமிழ் பிராமி கல்வெட்டுகளிலும் இவை காணப்படுகின்றன. இது பொன்னைக் குறிப்பதாகவோ அல்லது குலக் குறியீடாகவோ இருக்க வாய்ப்புள்ளது. இங்குப் பொன் என்பது காசைக் குறிக்கும் சொல்லாக இருக்க வேண்டும். குகைத்தளத்தினை உருவாக்க இவர்கள் கல்வெட்டில் உள்ள கொடை செய்த காசின் அளவு இக்குறியீடுகளின் மூலம் உணர்த்தப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இதனை மயிலை. சீனி வேங்கடசாமி தனது 'சங்ககாலத்துப் பிராமி கல்வெட்டெழுத்துக்கள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். பானை ஓடுகளிலும் இக்குறியீடு வருவது குலக்குறியீடாகவும் இது பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இக்குறியீடுகள் சிந்துவெளி குறியீடுகளிலும் காணப்படுகின்றன. இலங்கையில் அனைக்கோட்டையில் கிடைத்தப் பிராமி மற்றும் குறியீடு இணைந்து பதிக்கப்பட்ட முத்திரையில் குறியீடுகளுக்கு ஒலி உச்சரிப்பு உள்ளது அறியப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# 13 சித்தன்னவாசல்

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் வட்டத்தில் பாண்டியர் கால ஓவியங்களால் புகழ்பெற்ற சித்தன்னவாசல் உள்ளது. இவ்வூர் மலையின் கிழக்குப்புறம் உள்ள குகைத்தளம் ஏழடிபாட்டம் என மக்களால் அழைக்கப்படுகிறது. அங்கு வழவழப்பாகச் செதுக்கப் பெற்ற அகலமான கற்படுக்கையின் பக்கவாட்டிலும் தலைப் பகுதியிலுமாக ஆழமாகவும் செம்மையாகவும் செதுக்கப்பட்ட தமிழ்-பிராமிக் கல்வெட்டுள்ளது. மேலும் 16 கற்படுக்கைகளும் இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுகளும் உள்ளன.

இன்று வரை சிறப்பான பாதுகாப்போடு உள்ள இக்கல்வெட்டினை 1914ஆம் ஆண்டு மத்தியத் தொல்லியல் துறை தனது கல்வெட்டு ஆண்டறிக்கையில் தெளிவான படத்துடன் வெளியிட்டது. அவ்வாண்டில் கிருஷ்ண சாஸ்திரியும், பின்னர் 1924 இல் கே.வி. சுப்ரமண்ய அய்யரும் 1972 இல் திரு ஆர். பன்னீர்செல்வமும் இக்கல்வெட்டினை வாசித்தனர். இருப்பினும் 1991இல் இதன் வாசகம் இறுதி செய்யப்பட்டது. இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.

## கல்வெட்டு 13:1

https://t.me/daily_paper



**எருமிநாடு குமுழ்ஊர் பிறந்த காவுடி ஈ**
**தென்குசிறுபோசில் இளயர் செய்த அதிட்அனம்**

என்பது கல்வெட்டு வாசகம்.எருமி நாட்டு குமிழூரில் பிறந்த காவுடிக்கு தெற்கு சிறுபோசிலைச் சேர்ந்த இளயர் செய்து கொடுத்த இருப்பிடம் என்பது இதன் பொருள்.

### பாடபேதம்

எ உமி நாடு குமுத்த ஊர் பிடனதவுதி இதென கு சிதூ போசில இளயர் செய்த அதிடானம்
– கிருஷ்ண சாஸ்திரி

எ ஓமி நாடு குமட்டூர் பிறந்த காவுடி இதென்கு சிறுபொசில் இளயர் செய்த அதிதானம்
–சுப்பிரமணிய அய்யர்

எவுமி நாட்ட குழுட்டூர் பிட்த கவுடி இதென்கு சித்த பொசில் இளயர் செயதே அதிடானம்
– நாராயணராவ்.

எஓமி நாடு குமுதூ ஊர் பிறந்த காவுடி இதென்கு சிறுபொசில் இளயர் செய்த அதிதானம்
– டி.வி. மகாலிங்கம்.

எருமி நாடு குமிழ் ஊர் பிறந்த காவுடி ஈதேன்கு சிறுபோவில் இளையர் செய்த அதிட்அனம்
– இரா. நாகசாமி.

எருமி நாடு குமுழ் ஊர் பிறந்த கவுடிஇ தென்கு சிறு பொசில் இளயர் செய்த அதிட்அனம்
– ஐ. மகாதேவன்.

எஉமி நாடு குமுடு ஊர் பிறந்த காவுட இதென்கு சிது பொசில் இளயர் செய்த அதிட்அனம்
– சி.சிவராமமூர்த்தி.

எஓமி நாட்டு குமட்டுர் பிறந்தான் காவுடி இதெனுக்கு சிது பொசில் இளையர் செய்த அதிட்டானம்
–கே. ஆர். சீனிவாசன்.

## கல்வெட்டுச்செய்தி

இதில் இடம்பெறும் எருமி நாடு என்பது எருமைநாடு என்றும், சமஸ்கிருதத்தில் மகிஷ மண்டலம் என்றும் அழைக்கப்பெற்ற கன்னட நாட்டினைக் குறிக்கும். அப்பகுதியில் இருந்த ஊர் குமிழூர். இச்சொல் குமிழ் என்று தேக்கு மர வகையின் அடியாகப் பெயர் பெற்றிருக்கலாம். காவிடிஈ என்பது காவுண்டன் என்ற சொல்லின் பெண்பால் பெயர். ‘கௌடி’ என்ற கன்னடப் பெண் துறவியின் பெயர், தமிழில் காவுடி என்று எழுதப்பட்டுள்ளது. இறுதியில் உள்ள ‘இ’, பளிஇ, கணிஇ என்ற பிற தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் வரும் வகையில் இகர இறுதிச் சொல்லான காவுடி என்பதிலும் எழுதப் பெற்றுள்ளது.

தென்கு சிறுபோசில் என்பது தெற்கு சிறுவாயில் என்று பிற்காலத்தில் வழக்கில் இருந்த நாட்டுப் பிரிவின் பண்டைய வடிவம். வாயில் என்ற தமிழ்ச்சொல் 'ஹொசிலு' என்று கன்னடப்படுத்தப்பட்டு, அதன் தமிழ் வடிவமான 'போசில்' என்று இடம்பெறுகிறது என்கிறார் ஐராவதம் மகாதேவன்.

https://t.me/daily_paper

தென்+கு = தெற்கு என்று எழுதப்படுவதற்கு பதிலாகத் தென்கு என்று அப்படியே புணர்ச்சியின்றி எழுதப்பட்டுள்ளது.

இளயர் என்ற சொல் வீரர் பிரிவினரைக் குறிக்கும். இவர்களைத் துளு நாட்டிலிருந்து வந்தவர் என்று மகாதேவன் வழக்கினை ஆதாரமாக்கிக் கூறுகிறார். எனினும் வீரயுகத்தில் போரிலும், ஆளுமையிலும், தலைமை பெறும் முன்னர், இளையர் என்று படிநிலைகளில் பயிற்சி பெற்ற பின்னரே பொறுப்பிற்கு வரும் முறை உலகெங்கிலும் இருந்த முறையாகும். எவ்வாறாயினும் இளயர் என்போர் வீரர் குழுவினர் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. பிற்காலத்தில் சேவகர் (போர்புரியும்) என்ற சொல் இவர்களைக் குறித்ததை நடுகற் கல்வெட்டுகள் காட்டும்.

அதிட்அனம் என்பது இருக்கையைக் குறிக்கும். 'அதிட்டானம்' என்று சமஸ்கிருதத்தில் இச்சொல் வழங்கும். அதிட்டானம் என்ற சரியான வடிவம் புகளூர் கல்வெட்டில் இடம் பெறுகிறது.

சித்தன்ன வாசல் கல்வெட்டு தனித் தன்மை வாய்ந்தது. இக்கல்வெட்டின் மூலமே, தமிழகத்திற்கும் கன்னட நாட்டிற்கும் இருந்த தொடர்பினை நேரடியாக அறிகிறோம். எருமைநாடு என்ற பெயர் சங்க இலக்கியங்களிலேயே இடம்பெறும் ஒன்றாகும். அடுத்த 'காவுடி' என்ற சொல் சமண மதத்தில் இருந்த பெண்பாற் துறவியைக் குறிக்கிறது. சமண மதத்தில் அவ்வளவு பண்டைக் காலத்திலேயே பெண்குரத்தியர் இருந்ததற்கான முதற் சான்றாக இது அமைகிறது. சிறுபோசில் என்ற சொல்லும் 'சிறுவாயில்' என்பதன் கன்னட வடிவம் என்றாகும் நிலையில், இக்கல்வெட்டில் இடம்பெறும் கன்னட மொழியின் தாக்கத்தினை முதன் முதலாகக் காட்டும் சான்றாக இது அமைகிறது.

## 14. ஐயர் மலை

கரூர் மாவட்டம் குளித்தலை வட்டத்தில் சத்திய மங்கலத்தினைச் சேர்ந்த ஐயர் மலை எனும் சிற்றூர் உள்ளது. இங்குள்ள இரத்தினகிரீஸ்வரர் மலையின் உயரே அமைந்த இயற்கைக் குகைத்தளத்தில் கற்படுக்கையுடன் தமிழ்-பிராமி கல்வெட்டு காணப்படுகிறது. மத்திய தொல்லியல் துறையின் கல்வெட்டு ஆண்டறிக்கையில் படத்துடனும், இந்திய தொல்லியல் மறுபார்வையில் செய்தியாகவும் 1973-74 இல் இது வெளியிடப்பட்டது. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.

## கல்வெட்டு 14:1 https://t.me/daily_paper



**பனைதுறை வெஸன் அதட் அனம்**

என்பது அங்குள்ள கல்வெட்டு வாசகம். பனைதுறை என்ற இடத்தினைச் சேர்ந்த வெஸன் என்பவனால் செய்தளிக்கப்பட்ட இருக்கை என்பது இதன் பொருள். கல்வெட்டு பொறித்தவர் 'றை' என்ற எழுத்தை முதலில் வெட்டாது தவறுதலாக விட்டுவிட்டுப் பின்னர் இடைவெளியில் சிறிய எழுத்தாகச் சேர்த்துள்ளார். பாடபேதம் இல்லை.

## கல்வெட்டுச்செய்தி

இக்கல்வெட்டில் உள்ள மூன்று சொற்களில் முதல் சொல்லின் பனைதுறை என்பதே தமிழ்ச்சொல். பிற இரண்டும் பிராகிரதச் சொற்களாகும். பனை என்ற மரப்பெயரும், நீர்நிலை என்ற பொருளுடைய துறை என்ற சொல்லும் இணைந்த இடப்பெயர் இது. பொதுவாக ஆறு, கடல் போன்ற நீர்நிலைகளையொட்டி மக்களால் பயன்படுத்தப்படும் இடமாக இருப்பின் அது துறை என்று பெயர் பெறும். பனை மரங்கள் நிறைந்தும் அத்துறைப் பகுதி இருக்க வேண்டும். அவ்வகையில் பாலை அல்லது நெய்தல் சார்ந்த முறையே கழி அல்லது கடல் சார்ந்த துறையாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் இவ்வூரில் அத்தகைய நில அமைப்பு இல்லை. இருப்பினும் காவிரி ஆறு வெகு தொலைவில் இல்லாத நிலையிலும், சேரர் பகுதிக்கு மிக அணித்தாக இருக்கும் நிலையிலும், சேர மரபினரின் அடையாளமான 'பனை' என்ற பெயரும் காவிரித்துறையும் பின்புலமாகி இப்பெயர் வழங்கக் காரணம் ஆகலாம். சேரநாட்டு எடக்கல் கல்வெட்டில் பனைமரம் என்று கருதத்தக்க மூன்று கவருடைய மரக்கிளை போன்ற பொறிப்பு கல்வெட்டின் இறுதியில் இடம்பெற்றுள்ளது இங்கு நினைவு கூறத்தக்கது.

வெஸன் என்பதற்கு 'வெஸ்ஸ' என்ற சொல்லடியிற் பிறந்த வைஸ்ய என்பதை அடிப்படையாகக் கொண்டு வணிகன் என்ற பொருள் கொள்ளலாம். அல்லது 'விஸ்ஸ' என்று சொல்லடியிற் பிறந்த 'வைஸ்வ' என்பதை அடிப்படையாகக் கொண்டு, உத்திராட நாளிற் பிறந்ததனால் அப்பெயர் பெற்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். சமண சமயம் பெரிதும் வணிகர்களால் ஆதரிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, இவ்விரண்டில் முதலில் குறித்த வணிகன் என்ற பொருளையே ஏற்கலாம்.

அதட்அனம் என்பது நிலையான இருக்கை என்று பொருள்படும். அதிட்டானம் என்ற பிராகிருதச் சொல்லின் திரிபு வடிவம் இது. டகரம் இரட்டாதும், தகரத்தில் இகரம் ஏற்றாதும் எழுதப்பட்டுள்ளது. சித்தன்னவாசல் கல்வெட்டில் டகரம் மட்டும் இரட்டாத 'அதிட்அனம்' என்ற சொல்லாலும், புகளூர் கல்வெட்டில் 'அதிட்டானம்' என்ற சரியான சொல் வடிவமும் இடம்பெற்றுள்ளன.

# 15 திருமலை

https://t.me/daily_paper

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் திருமலையில் அமைந்துள்ள குடைவரைக் கோயிலுக்கு மேல் பகுதியில் மலையில் தொல்மாந்தர் ஓவியங்களும் இரண்டு தமிழ் பிராமி கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல்வெட்டுகளுள் ஒன்றையும் ஓவியங்களையும் தமிழகத் தொல்லியல்துறை மதுரை பிரிவு அலுவலர்கள் 1989ல் கண்டறிந்தனர். மற்றொரு கல்வெட்டு 1977-78இல் இந்திய அரசு கல்வெட்டுப் பிரிவினரால் கண்டறியப்பட்டது. இவை முறையே கல்வெட்டு காலாண்டு இதழ் எண் 24 மற்றும் எபிகிராபிகா இந்திகா எண். 42 ஆகியவற்றில் வெளியிடப்பட்டன.

## கல்வெட்டு 15:1

மலையின் மேல் வடபகுதியில் மேல்புறம் அமைந்துள்ள குகைத்தளத்தின் முகப்புப் பாறையில் வெட்டப்பட்டுள்ளது. முன்பகுதி எழுத்துக்கள் சிதைந்துள்ளன. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**. . . வ கரண்டை**

கரண்டை என்பது குகை, குகைத்தளம், என்பதைக் குறிக்கும். நிகண்டுகள் மற்றும் தமிழ்ப் பேரகராதியில் இப்பொருள் சொல்லப்படுகிறது. கரடு என்பது சிறு குன்றைக் குறிக்கும். அதன் அடிப்படையில் கரண்டை என்ற சொல் பிறந்திருக்கலாம். கல்வெட்டு படிப்பதில் பாடபேதம் இல்லை.

## கல்வெட்டு 15:2

மலை மீது வடக்கு நோக்கிய பகுதியில் கீழ்ப்புறம் அமைந்துள்ள சிறு குகைத்தள நெற்றிப் பகுதியில் இக்கல்வெட்டு மிக மெலிதாக வெட்டப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டாகும்.



**எருகாடு ஊரு காவிதி கோன் கொறிய பளிய்**

'கொறிய' என்ற சொல்லில் 'ற்' மெய் சேர்த்து 'பளிய்' என்பதில் 'ள்' சேர்த்து பள்ளிய் என்றும் கொற்றிய என்றும் கொள்ளலாம். இதன் பொருள் எருகாடு ஊரைச் சேர்ந்த காவிதி கோன் என்பவரால் இக்குகைத்தளம் அமைக்கப்பட்டது என்பதாகும்.

பாடபேதம்

https://t.me/daily_paper

எர்காடு ஊரு காவிதிகன் கொறிய பாளிய் – நடன. காசிநாதன்

எக்காடு ஊர் காவிதிகன் கொறிய பாளிய் – எம்.டி. சம்பத்

எருகாடு ஊரு காவிதிகோன் கொறிய பாளிய் – ஐ மகாதேவன்

## கல்வெட்டுச் செய்தி

திருப்பரங்குன்றம் தமிழ்-பிராமி கல்வெட்டில் 'எருகாடூர்', பிள்ளையார்பட்டி கல்வெட்டில் 'எக்காட்டூர்' என இதே ஊர்ப் பெயர்கள் உள்ளன எனலாம். எனவே இவ்வூர் பாண்டிய நாட்டில் இருந்திருக்க வேண்டும் என ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுகிறார். எருக்காட்டூர் தாயங் கண்ணனார் அகம் 149, 319 மற்றும் புறம் 397 ஆம் பாடல்களைப் பாடியவர். உ.வே. சாமிநாத ஐயர் இவ்வூர் திருவாரூருக்கு அருகில் உள்ளதென்பார். 'எரு' - உரத்தைக் குறிக்கும். எருகட்டு ஊர் என்பது எருவிற்காக 'கிடை' வைத்த இடம் என்று பொருள்படும். எருக்கம் காடுகள் நிறைந்த இடம் என்பதாலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

காவிதி என்னும் பட்டம் வேளாளர், வைஷ்சியர், அமைச்சர், கணக்கர், வரி தண்டும் அரசுத் தலை ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டது எனத் தமிழ்ப்பேரகராதி குறிப்பிடுகிறது. 'கோன்' என்பது தலைவன், அரசன் எனப் பொருள்படும். இக்கல்வெட்டில் எருகாடு ஊரினைச் சேர்ந்த காவிதி பட்டம் பெற்ற தலைவன் பள்ளி அமைத்தான் என்று வருவதால் கொடையாளியின் இயற்பெயர் குறிக்கப்பட வில்லை எனலாம்.

# 16. திருப்பரங்குன்றம்

மதுரை நகருக்குத் தெற்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருப்பரங்குன்றம். இக்குன்றின் மேற்குப் பகுதியில் உயரமான இடத்தில் இயற்கையாக அமைந்த குகைத்தளம் ஒன்று உள்ளது. அதனைச் சீராக்கி துறவியர் தங்குவதற்கு ஏற்ப கற்படுக்கைகள் அமைத்து அதன் தலைப் பகுதியிலும், பக்கவாட்டிலும் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. இங்கு மொத்தம் மூன்று கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் பற்றிய செய்தி இந்திய அரசின் கல்வெட்டு ஆண்டறிக்கை 1951-52இல் எண் 140-142 ஆக மூன்றும் 1908இல் 333 ஆம் எண்ணிலுமாக ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளன. இந்நான்கு கல்வெட்டுகளை மூன்று கல்வெட்டுகளாகக் கொள்ளவேண்டும்.

## கல்வெட்டு எண். 16:1

இக்கல்வெட்டு கற்படுக்கை ஒன்றின் தலைப்பகுதியில் வலமிருந்து இடமாக பொறிக்கப் பட்டுள்ளது. எழுத்துக்களும் தலைகீழாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால் படுக்கையின் தலைப்பகுதியில் அமர்ந்து பார்ப்பவர்களுக்கு இது இடமிருந்து வலமாக வெட்டப்பட்டுள்ளது போலவே தோன்றும். இதன்காலம் ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டாகும்.

https://t.me/daily_paper



**அந்துவன் கொடுபிதவன்**

என்பது இக்கல்வெட்டின் பாடமாகும். இக்கற்படுக்கையைச் செய்து கொடுத்தவன் அந்துவன் என்பதே இதன் பொருள். கொடுபிதவன் என்பதில் 'த்' சேர்த்து கொடுப்பித்தவன்' என்று கொள்ள வேண்டும். அந்துவன் என்னும் பெயர் சங்ககாலத்தில் ஓரிரு புலவர்களுக்கும் வழங்கியுள்ளதைக் காணலாம். பாடபேதம் இல்லை.

## கல்வெட்டு எண்: 16:2

இரண்டு படுக்கைகளின் பக்கவாட்டுப் பகுதிகளில் இரண்டு துண்டுகளாக இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இரண்டு சொற்களை மட்டுமே கொண்டது இக்கல்வெட்டு. இதன் காலமும் கி.மு. முதல் நூற்றாண்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை ஆண்டு *1951-52*இல் *140-141* என இரண்டு கல்வெட்டுகளாக வெளியிடப்பட்டுள்ளது.



**மாரயது கய[ம்]**

இவ்விரண்டு சொற்களில் முதற் சொல் படுக்கையின் வலதுபுறம் வலமிருந்து இடமாகத் தலைகீழாக வெட்டப்பட்டுள்ளது. கய[ம்] என்னும் சொல் மற்றொரு படுக்கையின் மேலாக சாதாரண முறையில் இடமிருந்து வலமாக நேராகவே எழுதப்பட்டுள்ளது.

மாராயம் என்பது அரசனால் வழங்கப்பட்ட ஒரு பட்டம் ஆகும். மாராயம் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற ஒருவர் நீர்நிலை (கயம் - குளம்) ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்த செய்தியை இச்சிறு கல்வெட்டுக் கூறுகிறது எனலாம்.

### பாடபேதம்

| | |
|---|---|
| மாதாயேவ நய | – இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கை |
| மதயேவ | – டி.வி. மகாலிங்கம் |
| மாறயத்... | – இரா. நாகசாமி |
| .....கய.... | – இரா.நாகசாமி. |
| மாரயது கய[ம்] | – ஐ. மகாதேவன். |
| நய | – டி.வி. மகாலிங்கம். |

## கல்வெட்டு 16:3

https://t.me/daily_paper

வரிசையான கற்படுக்கைகளின் தலைப் பகுதிகளுக்குப் பின்புறம் உள்ள பாறைப் பகுதியில் நீளமாக வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு எழுத்துக்கள் சற்று வளர்ச்சி அடைந்துள்ளமை கொண்டு இதன் காலத்தை கி.பி. முதல் நூற்றாண்டு எனக் கணிக்கலாம்.

முதல்பகுதி தடித்த எழுத்துக்களாகவும் இரண்டாம் பகுதி மெலிந்த எழுகத்துக்களாகவும் உள்ளன. நடுவில் ஒரு குத்துக்கோடு உள்ளது.



**எரு காடூர் இழ குடும்பிகன் போலாலயன் செய்தா ஆய்சயன் நெடுசாதன்**

எருகாடூர் இழ குடும்பிகன் போலாலயன் சார்பாக ஆய்சயன் நெடுசாத்தன் இந்தக் கற்படுக்கையைச் செய்தான் என்று கொள்ளலாம். 'எருகாடூர்' என்ற சொல்லில் 'க்' மெய்யும், 'ஆய்சயன்' என்பதில் 'ச்' ஒற்றும், 'நெடுசாதன்' என்பதில் 'த்' மெய்யும் சேர்த்து முறையே எருக்காடூர், ஆய்ச்சயன், நெடுசாத்தன் என்று கொள்ள வேண்டும்.

### பாடபேதம்

எருகோடூர் இஜம் குடும்பிகன் போலாலையன் சேய்த ஆய்சயன னெடு சாதன்
—கிருஷ்ண சாஸ்திரி.

எருகோடூர் ஈழகுடும்பிகன் போலலையன் செய்தா ஆய சயன் நெடு சாதன்
– சுப்பிரமணிய அய்யர்.

எருகோடூர் இளகுடும்பிகன் போலாலையன் செய்த ஆயசயன நெடு சாதன[ம்]
– டி.வி. மகாலிங்கம்.

எருகாடூர் ஈழகுடும்பிகன் போலாலயன் செய்தா அ ஆயசயன் நெடு சாதன
– இரா. நாகசாமி.

எருகாடூர் இழகும்பிகன் பொலாலையன் செய்தா[ன்] ஆய்சயன் நெடுசாதன்
– ஐ. மகாதேவன்

எருகாடுர் இழகுடும்பிகன் பொலாலையன் செய்தா ஆய்சயன் நெடுசாதன்
– மயிலை. சீனி.

எருகாடூர் என்பது சிவகங்கை மாவட்டம் திருமலை தமிழ்-பிராமி கல்வெட்டிலும், பிள்ளையார்ப்பட்டி குடைவரைக் கல்வெட்டிலும் (எக்காடூர்) இடம்பெற்றுள்ளது. ஒரு வேளை இவ்வூர் திருப்புத்தூர் வட்டத்தில் அமைந்திருந்த ஓர் ஊராக இருக்கலாம். சங்க இலக்கியமான புறநானூறு 397 ஆம் பாடலைப் பாடியவர் எருக்காட்டூர் தாயங்கண்ணனார் என்னும் புலவர் ஆவார்.எக்காட்டூர், எருக்காடூர் இரண்டும் ஒன்றே எனக் கருதலாம்.

இழகுடும்பிகன் என்னும் சொல்லை இழ, குடும்பிகன் என இரண்டாகப் பிரிக்கலாம். குடும்பிகன் என்பது குடும்பத் தலைவர் எனப் பொருள் தரும். கிரஹபதி என்னும் வடசொல்லின்

தமிழ் வடிவமே குடும்பிகன் என்பதாகும். இழ அல்லது ஈழ என்பது கள் இறக்கும் தொழிலைக் குறிக்கும். எனவே இவனைக்கள் இறக்கும் குடும்பத்தின் தலைவன் எனக் கருதலாம். என ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுகிறார். போலாலயன் என்பது கொடையாளியின் இயற்பெயர் ஆகும். ஆய்சயன நெடுசாத்தன் என்பதும் இயற்பெயர் என்றே கொள்ளத்தகும்.

https://t.me/daily_paper

# 17. முத்துப்பட்டி

மதுரை மாவட்டம் மதுரை தெற்கு வட்டத்தில் வடபழஞ்சி அருகில் முத்துப்பட்டி அமைந்துள்ளது. முத்துப்பட்டியில் உள்ள கரடிபட்டிமலையில் மூன்று தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளன. கரடிப்பட்டி மலை, பெருமாள் மலை என்றும் அழைக்கப்படுகிறது. 220 மீட்டர் உயரமுள்ள இம்மலையின் தென்பகுதியில் இயற்கையான குகைத்தளம் உள்ளது. ஊர் மக்களால் பஞ்சவர் படுக்கை என இது அழைக்கப்படுகிறது. குகைத்தள முகப்பில் மழைநீர் வடிய விளிம்பு வெட்டப்பட்டுள்ளது. இதன் முகப்பிலும் படுக்கை அருகிலும், சிறு குகைத்தளத் தனிக்கல்லிலுமாக மூன்று தமிழ்பிராமி கல்வெட்டுகள் இங்குள்ளன. இவை 1910இல் முதலில் அறியப்பட்டன. அதன் பிறகு பல்வேறு ஆய்வாளர்களாலும் ஆய்வு செய்யப்பட்டன.

## கல்வெட்டு 17:1

சிறு குகைத்தளத்தில் ஒரு சிறு பாறை கற்படுக்கையாக வளவளப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது. அச்சிறுபாறையின் உட்புறம் செதுக்கப்படாது மேடுபள்ளமாக உள்ளபகுதியில் தலைகீழாக வலது இடமாக இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டாகும்.



**நாகபேரூதைய் முசிறி கோடன் எளமகன்**

என்பது கல்வெட்டு வாசகம். பேரூரதைய் என்பதில் 'ந்' மெய் சேர்த்து 'பேரூரந்தைய்' எனப் படிக்க வேண்டும். நாகபேரூர் அந்தை மற்றும் முசிறியைச் சேர்ந்த இளமகன் கோடன் ஆகிய இருவரும் கொடுத்த கொடை என்று பொருள் கொள்ளலாம். நாகபேரூரின் அந்தையான முசிறிகோடன் என்ற இளமகனின் கொடை என்றும் பொருள் கொள்ளலாம்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| நாக பேரூர் அதை சாத்தன் மகன் | – இரா. நாகசாமி. |
| நாகப் பேரூரதைய் முசிறி கோடன் எளமகன் | – ஐ. மகாதேவன். |

## கல்வெட்டு 17:2

https://t.me/daily_paper

இடையன் தருமம் என்று அழைக்கப்படுகின்றன பெரிய குகைத்தளத்தின் முகப்பு நெற்றிப் பகுதியில் மூன்று பகுதிகளாக இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.பி. முதல் நூற்றாண்டு எனலாம்.



**சைய்அளன் விந்தைஊர் கவிய்**

என்பது கல்வெட்டு வாசகம். விந்தையூரைச் சேர்ந்த சைய்அளன் என்பவனின் அமைந்த குகைத்தளம் என்று பொருள்படும்.

### பாடபேதம்

| | |
|---|---|
| விந்தை ஊர் சைய அளன் கவிய் | – கிருஷ்ண சாஸ்திரி. |
| சையளன் விந்தை ஊர் கவிய் | – சுப்பிரமணிய அய்யர். |
| விந்தை ஊர் சையான் கவிய் | – டி.வி. மகாலிங்கம். |
| சை அளன் விந்தை ஊர் காவிய் | – இரா. நாகசாமி. |
| விந்தை ஊர் சைய் அளன் கவிய | – ஐ. மகாதேவன். |
| விந்தை ஊர் சையளன் காவய் | – மயிலை. சீனி. |

சேர நாட்டுக் கடற்கரை துறைமுகப்பட்டினமான முசிறியைச் சேர்ந்தவரான முசிறி கோடன் பாண்டிய நாட்டில் கொடை தந்துள்ளார். முசிறிக்கு 'முயிற்கோடு' என்ற பெயர் வழங்கியிருப்பதால் இக்கல்வெட்டில் குறிக்கப்படும் முசிறிக் கோடன், முசிறிக்கோட்டை சேர்ந்தவர் என்றும் பொருள் கொள்ளலாம். அன்மையில் கேரளத்தில் பட்டனம் என்ற இடத்தில் நிகழ்ந்த அகழ்வாய்வு மற்றும் அங்குக்கிடைத்த தமிழ்-பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓட்டின் அடிப்படையில் அவ்விடம் சங்ககால முசிறியாக இருக்குமென ஊகிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் வரும் இளமகன் என்ற சொல்லுக்கு போர்வீரன் என்று பொருள் கொள்ளலாம். இளையர் என்ற சொல் சித்தன்னவாசல் தமிழ்-பிராமி கல்வெட்டிலும் முற்கால தர்மபுரிப் பகுதி நடுகற்களிலும் வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவது கல்வெட்டில் வரும் 'சைய்அளன்' என்ற பெயரை இலங்கை சிங்கள-பிராமி கல்வெட்டுகளில் வரும் 'சைம்ஹல' மற்றும் அலகாபாத் தூண் கல்வெட்டில்வரும் 'சைம்ஹலக' என்ற பெயர்களுடன் ஐராவதம் மகாதேவன் ஒப்பிடுகிறார். கவி என்பது குகையைக் குறிக்கும் சொல்லாக இன்றும் கிருஷ்ணகிரி, தருமபுரி பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. கவிழ்ந்து அமைந்த - கவிழ்ந்து மூடிய என்ற பொருளில் இச்சொல் வந்திருக்கலாம். 'விந்தை' என்ற சொல்லுக்கு கொற்றவை, அழகு, அறிவு என்ற பொருள்கள் உள்ளன.

மூன்றாவது கல்வெட்டில் உள்ள 'திடி' என்ற சொல் இவ்வூர்ப்பகுதியில் உள்ள 'திடியன்' என்ற குன்று சார்ந்த ஊர்ப்பெயராகலாம்.

## கல்வெட்டு 17:3

https://t.me/daily_paper

பஞ்சபாண்டவர் படுக்கை எனப்படும் பெரிய குகைத்தளத்தில் உள்ள கற்படுக்கையில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. கல்வெட்டு சிதைந்துள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.பி . முதல் நூற்றாண்டாகும்.



**திடிக் காத்தான் [ம] . . . னம் எய் . . .**

என்பது கல்வெட்டு வாசகம் 'திடி' என்பதில் 'ட்' ஒட்டுச் சேர்த்து 'திட்டி' என்று கொள்ளலாம். திட்டியைச் சேர்ந்த காத்தான் என்பவன் தந்த (கற்படுக்கை) கொடையைக் குறிப்பிடுகிறது.

### பாடபேதம்

| | |
|---|---|
| . . . தி . . . க்காத்தான் ம். . . னம். . . ய் | – இரா. நாகசாமி. |
| தி டிக்காத் தான் [ம]. . . னம். . .எய் | – ஐ. மகாதேவன். |

## கல்வெட்டுச் செய்திகள்

முதல் கல்வெட்டில் குறிக்கப்படும் நாகபேரூர் இப்பகுதியில் அமைந்துள்ள மற்றொரு சிறுமலைத் தொடரான நாகமலை, அருகில் உள்ள நாகமலைப் புதுக்கோட்டையைக் குறிப்பதாக இருக்கலாம். கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வேள்விக்குடிச் செப்பேடு 'நாக மாமலைச் சோலை' நனிமிசை வண்டலம்பும் பாகனூர், பற்றிக் குறிப்பிடுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

# 18. ஐம்பை

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூருக்கருகில் தென் பெண்ணையாற்றின் வடகரையில் ஐம்பை என்னும் ஊர் உள்ளது. இங்கு ஆளுருட்டி மலையில் தாசிமடம் என்று அப்பகுதி மக்களால் அழைக்கப் பெறும் இரு இயற்கைக் குகைத் தளங்களில் ஒன்றின் உட்பகுதியில் பின்புறமாக நிற்கும் பாறையில் தமிழ்-பிராமி கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

*1987* ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவரான கே.செல்வராஜ், தனது கள ஆய்வின் போது இக்கல்வெட்டு இருப்பதைக் கண்டறிந்தார். அப்போதைய துறை இயக்குநர் இரா. நாகசாமியால் இது படிக்கப்பட்டுத் தமிழிலும், ஆங்கிலத்திலும் படத்துடன் கட்டுரையாக நாளிதழ்களில் முதலில் வெளியிடப்பட்டது.

## கல்வெட்டு 18:1 https://t.me/daily_paper

இக்கல்வெட்டு தாசிமடம் குகைத்தளத்தில் உள்ள பாறையில் தெளிவாக வெட்டப்பட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.பி. முதல் நூற்றாண்டாகும்



**ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்தபளி**

என்பது கல்வெட்டு வாசகம் ஸதியபுத்திரன் அதியன் நெடுமான் அஞ்சி கொடையாக அமைத்த பள்ளி என்பது இதன் பொருள். பளி என்ற சொல்லில் 'ள்' சேர்த்துப் 'பள்ளி' என்று பொருள் கொள்ளவேண்டும்.

## கல்வெட்டுச் செய்தி

அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகச் சிறப்பு வாய்ந்த அரிய கல்வெட்டாதலின் இது குறித்துப் பலரும் கட்டுரைகள் எழுதியுள்ளனர். கல்வெட்டினை முதலில் வெளியிட்ட இரா. நாகசாமி, எழுத்தமைதி அடிப்படையில் இதனைக் கி.பி. முதல் நூற்றாண்டுக்குரியது என்றார். இதில் வரும் எழுத்து மாற்றங்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனப் புலவர் செ. இராசுவும், பிராகிருதச் சொல் இடம்பெற்றிருப்பதை அடிப்படையாகக் கொண்டு கி.பி. எட்டாம் நூற்றாண்டு ஆதல் வேண்டும் என்று மதிவாணனும் கருத்துரைத்துள்ளனர். பலர் கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரையிலான காலத்தைக் கூறியுள்ளனர். ஆக இக்கல்வெட்டுக்கு கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரை சுமார் ஆயிரம் ஆண்டு இடைவெளியில் காலம் குறித்துக் கருத்து கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் இக்கல்வெட்டுக்கு இரு அடிப்படைகளில் காலத்தை வரையறுக்கலாம். ஒன்று எழுத்து வழக்கும், எழுத்தமைதியும். இக்கல்வெட்டில் அதியந், நெடுமாந் ஆகிய இரு சொற்களின் இறுதியில் வரும் 'ந்' கரம் மெய்யாகவும், ஈத்த என்ற சொல்லில் முதலில் வரும் 'த்' மெய்யாகவும், அடுத்த 'த்' உயிர்மெய் குறிலாகவும் ஒரே வரிவடிவத்திலும், நெடுமான் என்பதில் உள்ள 'மா', பாளி என்பதில் உள்ள 'பா' ஆகிய இரு எழுத்துக்களிலும் ஒரு தலைக்கோடு மூலம் உயிர்மெய் நெடிலும் எழுதப்பட்டுள்ளன. தமிழ் பிராமி எழுத்து வளர்ச்சியில் இவ்வாறு மெய்யும், உயிர்மெய்க்குறிலும், உயிர்மெய் நெடிலும் வேறுபடுத்தப்படும் முறை, இரண்டாம் நிலை வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.

அடுத்தது இதில் குறிக்கப்படும் மன்னன் குறித்த ஆய்வு. கரூரை அடுத்த புகளூரில், கோஆதன் செல்லிரும் பொறை, பெருங்கடுக்கோ, இளங்கடுங்கோ ஆகியோரின் பெயர் இடம்பெறும் கல்வெட்டு உள்ளது. அவ்விரும்பொறையும், அதியமான் நெடுமான் அஞ்சியின் மகன் பொகுட்டெழினியும் போர் புரிந்தனர் என்பது சங்க இலக்கியம் தரும் செய்தி. ஆக இரும்பொறை காலமும் அதியனின் மகன் காலமும் ஒன்றாகிறது. ஆக ஜம்பை கல்வெட்டு

https://t.me/daily_paper

குறிக்கும் அதியமான், இரும்பொறைக்கு முந்திய தலைமுறையினன் எனக் கொள்ளலாம். ஆக தமிழ் மொழிக்குப் பிராமி எழுத்துகளைப் பயன்படுத்தத் தொடங்கிய காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்று ஏற்றுக் கொள்ளும் நிலையில் ஜம்பை கல்வெட்டினை இரண்டாம் கட்ட வளர்ச்சிக் காலமான கி.மு. 2ஆம் நூற்றாண்டாகக் கொண்டு, புகளூர் கல்வெட்டுக்குக் காலத்தால் முந்தியது, என்று கூறுவது பொருத்தம் உடையதாக இருக்கும்.

இக்கல்வெட்டின் சிறப்பு சங்க இலக்கியங்கள் குறிக்கும் மன்னர்களுள், முடியுடை மூவேந்தர் தவிர அடுத்த நிலையில் இருந்த குறுநில மன்னர்களுள் ஒருவனான அதியமான் மரபினன் பெயரைத் தாங்கி இருப்பதாகும். அதிலும் அவன் பெயருக்கு முன்னே உள்ள 'சதியபுதோ' என்ற சொல் மேலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. கல்வெட்டின் முதற் சொல்லான இது, மௌரியப் பேரரசன் அசோகனின் இரண்டாம் பாறைக் கல்வெட்டில் இடம் பெறுகிறது. சபாஸ்கார்கி, கால்சி, ஜௌகதா, கிர்நார் ஆகிய நான்கு இடங்களில் இக்கல்வெட்டின் வாசகம் ஒன்று போலப் பொறிக்கப்பட்டுள்ளது. வடமேற்கு இந்தியாவில் உள்ள சபாஸ்கார்கியில் ஆரியோபாலி வகையிலும், பிற மூன்று இடங்களிலும் இந்தோ - பாலி வகையிலும் இவை எழுதப்பட்டுள்ளன. எனவே முன்னதில் மட்டும் 'சத்யபுத்ர' என்று சமஸ்கிருத ஒலியமைப்பிலும், பிறவற்றில் 'சதியபுத' என்று பிராகிருத ஒலியமைப்பிலும் இச்சொல் எழுதப்பட்டுள்ளது. இப்பிராகிருதச் சொல்லின் மூலவடிவம் தமிழில் உள்ள 'அதியமான்' என்பதே ஆகும். இதனை சேஷ ஐயர் முதலில் மொழியியல் அடிப்படையில் ஒப்புமைப்படுத்திக் கூறினார். பின்னர் பர்ரோ, அதியமானின் தொல் திராவிட வடிவம் சதியமான் என்பதே என்றும் அதுவே தமிழில் 'அதியமான்' என்று மாறியது என்றும், தொல் திராவிட வடிவே, பிராகிருதத்தில் இடம்பெற்றுள்ளது என்றும் ஆராய்ந்தெழுதினார். இவ்வாய்வுகள் அனைத்திற்கும் நேரடிச் சான்றாக இக்கல்வெட்டுக் கண்டுபிடிப்பும் அதில் அதியந் 'சதியபுதோ' என்ற இரு சொற்களும் இணைந்து இடம்பெற்றிருந்ததும் அமைந்தது. இதன் மூலம் மௌரியர் கல்வெட்டு குறிக்கும் 'சதியபுதோ' அதியமான்களே என்பது உறுதியாயிற்று.

அதியன் நெடுமான் அஞ்சி என்ற அடுத்த மூன்று சொற்களில் அதியன் என்பது குலப்பெயர் ஆகும். நெடுமான் என்பது அஞ்சி என்ற இயற்பெயருக்குரிய அடைமொழியாக அமைகிறது. ஈத்த என்பதில் உள்ள 'ஈ' உயர்ந்தோர் கொடுத்தல் என்ற பொருளது. பாளி என்ற சொல் படுக்கும் அல்லது தூங்கும் இடம் என்று தொடக்க காலத்தில பொருள்பட்டது. பின்னர் முனிவர்கள் தங்கும் இடம், பள்ளிக்கூடம் ஆகிய பொருள்களையும் குறித்தது. மாங்குளம் கல்வெட்டிலும் இச்சொல் இடம் பெறுகிறது.

# 19. ஆனைமலை

மதுரை மாவட்டம் மதுரை வடக்கு வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர் நரசிங்கம் என்பது. மதுரை மேலூர் சாலையிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒத்தைக் கடை என்னும் சிற்றூரிலிருந்து கிழக்காகச் சென்றால் நரசிங்கம் என்னும் ஊரை அடையலாம். இவ்விடத்தில் யானை ஒன்று துதிக்கையை முன்புறம் நீட்டியும், வாலைப் பின்புறம் நீட்டியும் படுத்திருப்பது போல மலை ஒன்று இயற்கையாகவே யானைபோல் அமைந்துள்ளது. எனவே

https://t.me/daily_paper

இம்மலை யானைமலை என்று அழைக்கப்படுகிறது. இம் மலையின் துதிக்கைப்பகுதியின் அடிவாரத்தில் அமைந்துள்ளது நரசிங்கம். யானையின் தலைபோல உள்ள மலைப்பகுதியின் மேற்பரப்பில் ஓர் இயற்கையான குகைத்தளம் உள்ளது. இக்குகையின் உட்புறத்தளத்தைச் செதுக்கிக் கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. குகையின் நெற்றிப் பகுதியில் மழைநீர் வழிந்தோட காடி வெட்டப்பட்டு அதன் கீழாக தமிழ்-பிராமி கல்வெட்டு செதுக்கப்பட்டுள்ளது. 1906 ஆம் ஆண்டில் கே.வி. சுப்பிரமணிய அய்யரால் இக்கல்வெட்டு கண்டறியப்பட்டது.

## கல்வெட்டு 19:1

குகைத்தளத்தின் முகப்பு நெற்றிப் பகுதியில் வெட்டப்பட்டுள்ள நீர்வடி விளம்பின் கீழாக இக்கல்வெட்டு இருவரிகளில் வெட்டப்பட்டுள்ளது. இதற்கு முற்பட்ட கல்வெட்டுகள் ஒரே வரியில் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும் இதன் காலம் ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**'இவகுன்றது உறையுள் பாதந்தான் ஏரி ஆரிதன்**
**அத்துவாயி அரட்டகாயிபன்'**

என்பது இக்கல்வெட்டின் வாசகம்

இவகுன்றம் என்னும் இம்மலையில் ஏரிஆரிதன், அத்துவாயி அரட்ட காயிபன் என்னும் இரு துறவியர் தங்குவதற்கான கற்படுக்கை என்பது இதன் பொருள்.

### பாடபேதம்

இவ[ம்] ஜேனடுது உடையுள் பாதந்தான் ஏரி ஆரிதன் அட்டவாயி அரட[ம்]த காயிபன்
–கிருஷ்ண சாஸ்திரி

இவகுன்றது உறையுள் நதன் அதான எரி அரிதன் அட்டவாயி அரட்டகாயிபன்
– சுப்பிரமணிய அய்யர்

இவகுன்றது உறையுள் பாதந்தான் எரி அரிதன் அதன் துவாயி அரிட்ட கோயிபன்
– டி.வி . மகாலிங்கம்

இவகுன்றத்து உறையுள் பாதந்தான் எரி அரிதன் அத்துவாயி அரட்ட காயிபன்
– இரா. நாகசாமி

இவகுன்றத்து உறையுள் பதந்தன் ஏரி ஆரிதன் அத்துவாயி அரட்ட காயிபன்
– ஐ. மகாதேவன்

இவ்குன்றதூ உறையுள் உதன் ஏரி அரிதன் அத்துவாயி அரிட்ட கோயிபன்
– மயிலை. சீனி.

## கல்வெட்டுசெய்தி

https://t.me/daily_paper

இவம் என்னும் சொல் இபம் என்னும் சமஸ்கிருதச் சொல்லின் மறுவடிவமாகும். யானை என்பது இதன் பொருள். உறையுள் என்பது உறைவிடம் என்பதைக் குறிக்கும். பாதந்தான் என்பதைப் பாய் அல்லது படுக்கை தந்தான் எனக் கொள்ளலாம். ஆனால் இச்சொல்லைப் பதந்தன் எனக் கொண்டு மரியாதைச் சொல்லாகக் கருதுவர் ஐ. மகாதேவன். ஏரி என்னும் ஊரைச் சேர்ந்த ஆரிதன் என்பது ஒரு துறவியின் பெயர். அட்டவாயி என்பதன் தமிழ்வடிவமாக அத்துவாயி என்பதைக் கொள்ளலாம். அர்த்தம் உரைப்பவன், சமயச் சொற்பொழிவு நிகழ்த்துபவன் என்றும் இதற்குப் பொருள் கூறலாம். அரட்டன் என்பது அத்துறவியின் பெயராகவும் காசிபன் என்பது கோத்திரப் பெயராகவும் கொள்ளப்படும். அரிதன், அரட்டகாயிபன் என்னும் இருதுறவியருக்கான தங்குமிடமாக இக்குகைத் தளத்தைக் கொள்ளலாம்.

# 20. புகளூர்

கரூரிலிருந்து சேலம் செல்லும் பெருவழியில் 15 கிலோமீட்டர் தொலைவில் காவிரிக்கரையில் அமைந்த ஊர் புகளூர். நஞ்சைப் புகளூர், புஞ்சைப் புகளூர் என்று இரு பகுதிகள் உண்டு. இன்று வேலாயுதம்பாளையம் என்ற பகுதியே இவ்வூர்ப் பெயராக உள்ளது. இங்குள்ள ஆறுநாட்டார் மலை உச்சியில் அருணகிரிநாதரால் பாடப்பட்ட புகழியூர் முருகர் கோயில் உள்ளது. அதற்குச் சற்று கீழாக மலையின் தெற்கு மற்றும் வடபகுதிகளில் இயற்கையான குகைத்தளங்கள் அமைந்துள்ளன. தென்புற குகைத்தள முகப்பு நெற்றிப் பகுதியிலும், கற்படுக்கைகள், மற்றும் பாறைச் சுவர்களிலும் வடபுற குகைத்தள கற்படுக்கையிலும் தமிழ் பிராமி கல்வெட்டுகள் 12 உள்ளன. இக்குகைத்தளங்களும், கல்வெட்டுகளும் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையால் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்கல்வெட்டுகள் 1927-28 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டன. 1965 ஆம் ஆண்டில் ஐராவதம் மகாதேவனால் தெளிவாகப் படிக்கப்பட்டு சேரர்கள் கல்வெட்டு என்று வெளிப்படுத்தப்பட்டது. பதிற்றுப்பத்தின் ஏழு, எட்டு, ஒன்பது ஆகியவற்றின் பாட்டுடைத் தலைவர்களான சேர மன்னர்கள் இவர்கள் என ஆர். பன்னீர் செல்வத்தின் ஆய்வினால் வெளிப்பட்டது.

## கல்வெட்டு: 20:1

ஆறுநாட்டார் மலையில் தென்புறக் குகைத்தள முகப்பின் நெற்றியில் இரு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் கீழாக உள்ள கல்வெட்டு இது. எழுத்துக்கள் மிகவும் தேய்ந்துள்ளன. மைப்படியில் சரியாகப் பதிவாகாதவை எனினும் நேரில் பாவைப்படியில் நன்கு புலனாகின்றன. இக்கல்வெட்டின் காலம் ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். கல்வெட்டு நான்கு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முற்பட்ட காலக் கல்வெட்டுகள் ஒரே வரியாகப் பொறிக்கப்பட்டுள்ளன என்பது நோக்கத் தக்கது.



https://t.me/daily_paper

1. முதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
2. கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
3. பெருங்கடுங்கோன் மகன் ளங்
4. கடுங்கோ ளங்கோ ஆக அறுத்த கல்

என்பது இக்கல்வெட்டின் வாசகமாகும். யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற மூத்த சமணத்துறைவிக்கான உறைவிடம். அரசன் ஆதன் செல்லிரும் பொறையின் மகன் பெருங்கடுங்கோவின் மகனான (இ)ளங்கடுங்கோ இளவரசனாக வந்தபோது அமைத்துக் கொடுக்கப்பட்டது என்பது இதன் பொருள். இளங்கடுங்கோ அமைத்துக் கொடுத்தது என்பது ஒரு கருத்து என்றாலும் தன் மகன் இளங்கடுங்கோ இளவரசனான போது தந்தை பெருங்கடுங்கோ அமைத்தான் என்றும் கல்வெட்டு வாசக இடைவெளி நிறுத்த வேறுபாட்டால் பொருள் கொள்ளலாம்.

**பாடபேதம்**

. . . அமணன் யாற்றூர் செய்காயபன்ய கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன் . . . கடுங்கோ [இ]ளங்கோ ஆக அறுத்த –டி.வி. மகாலிங்கம்.

மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் கோ ஆ . . . ல்லிரும்புறை மகன்
பெருங்கடுங்கோன் மகன் கடுங்கோன் ளங்கடுங்கோ ளங்கோ ஆக அறுபித கல்
– இரா.நாகசாமி.

மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய் கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ இளங்கோ ஆக அறுத்த கல் –ஐ. மகாதேவன்

## கல்வெட்டு 20:2

குகைத்தள முகப்பின் நெற்றிப்பகுதியில் உள்ள நீர்வடிவிளிம்பினைச் சற்று உயர்த்தி மீண்டும் வெட்டிய போது இக்கல்வெட்டு வெட்டப்பட்டது போல் தெரிகிறது. முதற் கல்வெட்டிற்குச் சற்று மேலாக இக்கல்வெட்டுள்ளது. மழை, வெய்யில் காரணமாக மிகவும் தெளிவில்லாதும் இரண்டாவது வரியில் பாறை சிதைந்து கல்வெட்டு எழுத்துக்கள் புலப்படாமலும் உள்ளன. இதன் கீழ் உள்ள முதல் கல்வெட்டை விடப் பிற்பட்டதாக இருக்கலாம். இதன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். கல்வெட்டு நான்கு வரிகளாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

https://t.me/daily_paper



1. மூதாமண்ணன் யாற்று செங்காயபன் உறைய்
2. கோ ஆ . . . ல்லிரும்புறை மகன் பெருங்
3. கடுங்கோன் மகன் கடுங்கோன் ளங்கடுங்
4. கோ ளங்கோ ஆக அறுபித கல்

என்பது இதன் வாசகம். மூத்த சமண முனிவர் யாற்று செங்காயபனுக்கான உறைவிடம் அரசன் ஆதன் செல்லிரும்புறை மகன் பெருங்கடுங்கோவின் மகன் கடுங்கோன் இளங்கடுங்கோ இளவரசனாகிய போது இந்த உறைவிடம் செய்யப்பட்டது என்பது இதன் பொருள் 'அறுபித' என்பதில் 'த்' ஒற்றுச் சேர்த்து அறுப்பித்த என்று கொள்ள வேண்டும். கல்லை அறுத்தல் - செதுக்குதல் என்று பொருள்படும். இக்கல்வெட்டில் 'புறை' என்றும் இக் கல்வெட்டில் 'பொறை' என்றும் சேரர் குலப்பெயர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கல்வெட்டு 20:3

குகைத்தளத்தினுள் அமைந்துள்ள கற்படுக்கை ஒன்றினில் இக்கல்வெட்டுள்ளது. மிகவும் சிதைந்துள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.பி. 2 ஆம் நூற்றாண்டாகும். மூன்று வரிகளில் உள்ளது.



1. யாற்றூர் செங்காயபன்
2. தாவன் ஊர்ப் பின் அன் குற்றன்
3. ன் அறுபித்த அதிட்டானம்

என்பது இதன் வாசகமாகும். யாற்றூர் செங்காயபனுக்கான அதிட்டானம் (இருக்கை) தாவன் ஊரைச் சேர்ந்த பின்னன் குற்றன் என்பவனால் செதுக்கித் தரப்பட்டது என்பது இதன் பொருளாகும்.

**பாடபேதம்**

ய . . . இளனகலிவ . . . னைதஅதித . . . தத அதிட்டானம் – டி.வி. மகாலிங்கம்

யாற்றூர் செங்காயபன் தாவன் ஊர்ப் பின் அன் குற்றன் ன் அறுபித்த அதிட்டானம் – ஐ. மகாதேவன்

## கல்வெட்டு: 20:4 https://t.me/daily_paper

குகைத்தளத்தினுள் வலப்புறம் உள்ள கற்படுக்கையில் உள்ளது. பெரும்பகுதி சிதைந்து இறுதிச் சொல்லுக்கான எழுத்துக்கள் மட்டும் உள்ளன. காலம் ஏறுத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது.



. . . அதி
ட்டான்னம்

என்பது இக்கல்வெட்டில் எஞ்சியுள்ள சொல்லாகும். அதிட்டானம் என்பது இருக்கை என்ற பொருள்படும்.

### பாடபேதம்

| | |
|---|---|
| [தி] அதிட்டனம் | – டி.வி. மகாலிங்கம் |
| . . . த்த அதிட்டானம் | – இரா. நாகசாமி |
| அதிட்டான்னம் | – ஐ. மகாதேவன் |

## கல்வெட்டு 20:5

தெற்கு நோக்கிய குகைத்தளத்தில் கிழக்குப் புறம் அமைந்த சிறு குகைத்தளத்தின் பண்படுத்தப்படாத பாறைத் தரையில் இக்கல்வெட்டுள்ளது. பெரிதும் தேய்ந்துள்ளது. எனினும் நன்கு காணக் கூடியதாய் உள்ளது. இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.



1. நலி[ய்] ஊர் ஆ பிடன் குறும்மகன்
2. கீரன் கொறி செயிபித பளி

என்பது இக்கல்வெட்டின் வாசகம். 'நலிய்ஊர்' என்பதில் 'ல்' ஒற்று சேர்த்து நல்லி ஊர் என்றும், 'பிடன்' என்பதில் 'ட்' சேர்த்து பிட்டன் என்றும், 'கொறி' என்பதில் 'ற்' சேர்த்து கொற்றி என்றும் 'பளி' என்பதில் 'ள்' சேர்த்து பள்ளி என்றும் கொள்ள வேண்டும் இந்த புனித இடம் அல்லது கற்படுக்கை (பள்ளி) நல்லியூரைச் சேர்ந்த பிட்டன் என்பவரது இளைய மகளான (குறும் மகள்) கொற்றி என்பவளால் செய்யப்பட்டது என்பது இக்கல்வெட்டின் பொருளாகும்.

### பாடபேதம்

https://t.me/daily_paper

நல்லிபி ஊர்அு பிடன் குறும்மகள் கீரன் கொற்ற . . . —இரா. நாகசாமி

நலிய்ஊர் ஆ பிடன் குறும்மகள் கீரன் கொறி செயிபிதபளி – ஐ. மகாதேவன்

நள்ளி ஊர்பிடன் குறும்மகள் கீரன் கொற்றி செய்பிதபளி – மயிலை. சீனி

## கல்வெட்டு 20:6

குகைத்தளத்தில் உள்ள கற்படுக்கையின் மேலாக இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு ஒரேவரியில் உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.



**நல்லி[ய்]ஊர் ஆ பிடந்தை மகள் கீரன் கொற்றி அதிடானம்**

என்பது இக்கல்வெட்டு வாசகம், 'பிடந்தை' என்பதிலும் 'அதிடானம்' என்பதிலும் 'ட்' சேர்த்து பிட்டந்தை, அதிட்டானம் என்று படிக்க வேண்டும். நல்லியூரைச் சேர்ந்த பிட்டந்தை என்பவரின் மகள் கீரன் கொற்றி என்பாள் கொடையாக அமைத்த இருக்கை - இருப்பிடம் என்பது இக்கல்வெட்டின் பொருளாகும்.

### பாடபேதம்

நல்லப் பேரூர் பிடந்தை மகஙன கீரன் கொற்றன் – டி.வி. மகாலிங்கம்

நல்லி பிஊர் அ பிடந்தை மகள் கீரன் கொற்ற – இரா. நாகசாமி

நல்லி(ய்) ஊர் ஆ பிடந்தை மகள் கீரன் கொற்றி அதிடானம் – ஐ. மகாதேவன்

நள்ளிவ் ஊர்ப் பிடந்தை மகன் கீரன் கொற்றன் – மயிலை. சீனி.

## கல்வெட்டு 20:7

தெற்கு நோக்கிய பகுதியில் மேற்புறமுள்ள குகைத்தகளத்தில் முதல் கற்படுக்கையில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. கல்வெட்டின் முதல் வரியின் இறுதிப்பகுதியில் கல் பெயர்ந்து சிதைந்துள்ளது. இரண்டு வரிகளில் கல்வெட்டுள்ளது. காலம் ஏறத்தாழ கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.

https://t.me/daily_paper



1. கொற்றந்தை ளவன்
2. முன்று

என்பது இதன் வாசகமாகும். 'ற்', 'ன்' ஆகியவை புள்ளிகளுடன் உள்ளன. 'ள்வன்' என்பதில் 'வ' 'எ' போலவும் 'ன்' ய போல உள்ளன. அப்படி எனில் 'ளஎய' என்ற சொல்வரும். இது பொருந்தாத சொல்லாக உள்ளது. முதல்வரி கடைசி எழுத்தின் முன்னதாக ஒன்றன் கீழ் மூன்று சிறு கோடுகள் மெலிதாக ஒன்றாக உள்ளன. கொற்றந்தை இளவன் என்பவரால் இம்முற்றம் (முன்று) கொடையளிக்கப்பட்டது என்று பொருள்படும். முன்று என்பதை மூன்று என்று கொண்டால் மூன்று கோடுகள் உள்ளமை எண் மூன்றினைக் குறிக்குமா? என்ற ஐயம் எழுகிறது.

### பாட பேதம்

| | |
|---|---|
| கற்றக [போ]ல எயி மன்று | – டி. மகாலிங்கம் |
| கொற்றதை ளஎய் மூன்று | – இரா. நாகசாமி |
| கொற்றந்தை [இ]ளவ[ன்] முன்று | – ஐ. மகாதேவன் |

## கல்வெட்டு 20:8

மேற்சொன்ன இடத்தில் மற்றொரு படுக்கையில் சிதைந்த நிலையில் இக்கல்வெட்டுள்ளது. கல்வெட்டு பாறை பாளமாகச் சிதைந்துள்ளது. இறுதிச் சொல் மட்டும் எஞ்சியுள்ளது காலம் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு எனலாம்



**. . . அதிட்டானம்**

இருக்கை புனித இருப்பிடம் என்று இச்சொல்லிற்குப் பொருள்.

## கல்வெட்டு 20:9

மேற்சொன்ன இடத்தில் மூன்றாவது கற்படுக்கையில் உள்ளது. இரண்டு வரிகளில் உள்ள இக்கல்வெட்டின் காலம் சுமார் கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



1. கருஊர் பொன் வாணிகன்

2. நத்தி அதிட்டானம்

https://t.me/daily_paper

என்பது இதன் வாசகமாகும். இந்தப் புனித இருக்கை கருவூரைச் சேர்ந்த பொன் வணிகனின் கொடை என்பது இதன் பொருளாகும்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| கருஊர் பொன் வாணிகன் நெத்தி அதிட்டானம் | – டி.வி. மகாலிங்கம் |
| கருஊர் பொன் வாணிகன் நத்தி அதிட்டானம் | – இரா. நாகசாமி |
| கருஊர் பொன் வாணிகன் நத்தி அதிட்டானம் | – ஐ. மகாதேவன் |
| கருவூர் பொன் வாணிகன் பொத்தி அதிட்டானம் | – மயிலை. சீனி |

## கல்வெட்டு 20:10

மேற்சொன்ன இடத்தில் நான்காவது கற்படுக்கையில் உள்ளது. இரண்டுவரிகளில் உள்ள இக்கல்வெட்டு சுமார் கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.



1. எண்ணை வாண்ணிக

2. ன் வெறி ஆதன் அதிட்டானம்

என்பது இதன் வாசகம். வெறி என்பது வெள்ளி என்று கொள்ளலாம். இந்த புனித இருக்கை வெள்ளி ஆதன் என்ற எண்ணை வாணிகனின் கொடை என்று பொருள் கொள்ளலாம்.

**பாடபேதம்**

| | |
|---|---|
| ண்ணவாண்ணிகன் | – இரா. நாகசாமி |
| எண்ணை வாண்ணிகன் வெறி ஆதன் அதிட்டானம் | – ஐ. மகாதேவன் |

## கல்வெட்டு 20:11

மேற் சொன்ன இடத்தில் ஐந்தாவது படுக்கையில் உள்ள மிகவும் சிதைந்த கல்வெட்டு. ஐந்து வரிகளில் முதலில் உள்ள சில எழுத்துக்களே புலனாகின்றன.

1. . . .

https://t.me/daily_paper

2. பெ . . .

3. கன் . . .

4. மக . . .

5. ளவா . . .

## கல்வெட்டு 20:12

ஆறுநாட்டார் மலையில் வடபுறமுள்ள சூளாமணி எனப்படும் குகைத்தளத்தில் உள்ள கற்படுக்கையில் இக்கல்வெட்டுள்ளது. இதன்காலம் ஏறத்தாழ கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



**ணாகன் மகன் பெருங்கீரன்**

என்பது கல்வெட்டு வாசகம். நாகன் மகன் பெருங்கீரன் என்பவனது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. 'பெரு' என்ற இடத்தில் ஒரு கோடு செதுக்கப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில் வெட்டப்பட்டிருக்க வேண்டும். இக்கோட்டினைக் கருத்தில் கொண்டால் 'ளங்கிரன்' என்ற பெயராகப் பொருள்படும்.

### பாடபேதம்

| | |
|---|---|
| ணாகன் மகன் பெருங்கீரன் | – டி.வி. மகாலிங்கம் |
| ணாகன் மகன் பெருங்கீரன் | – ஐ. மகாதேவன் |
| ணாகன் மகன் ளங்கீரன் | – இரா. நாகசாமி |

## கல்வெட்டுச் செய்தி

புகளூர்க் கல்வெட்டுகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை. அதிக அளவில் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள இடங்களில் ஒன்று புகளூர். இங்கு 12 தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளன. இன்றைய கரூர் பண்டைய கருவூர் - வஞ்சி என்ற சேரர் தலைநகராக இருந்தது என்பதை அறிய இக்கல்வெட்டுகள் சேரமரபினர் பெயர்களுடனும், கருஊர் என்ற இடப்பெயர்க் குறிப்புடனும் விளங்குகின்றன. முதலிரு கல்வெட்டுகள் ஒன்று போலவே உள்ளன. இரண்டாவது கல்வெட்டு குகைத்தளத்தின் நீர் வடிவிளிம்பினை சற்று உயர்த்தி மீண்டும் வெட்டியமையால் வெட்டப்பட்டதாக இருக்கவேண்டும். இக்கல்வெட்டுகளில் இளங்கோ ஆக, ளங்கோ ஆகி என்று இருவகையாக கால உணர்த்துதல் இருப்பதால் இளங்கோ (இளவரசன்) ஆக வேண்டுமென்பதற்காக, இளங்கோ (இளவரசன்) ஆனபின் கல்லை

அறுப்பித்துக் கொடுத்தான் என்று இரு நிகழ்வுகளை உணரலாம். அறுத்த - அறுபித என்ற சொற்கள் 'தானே செய்த', 'பிறரைக் கொண்டு செய்த' என்ற இரு பொருள்படுகின்றன.

https://t.me/daily_paper

இக்கல்வெட்டுகள் பிற்காலத் தமிழ்-பிராமி என்ற இரண்டாம் நிலையில் கொள்ளப்படுகின்றன. ஒரே நீண்டவரியாக பொறிக்கப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டுகள் இங்கு இரண்டு முதல் ஐந்து வரிகளாக மடித்து பொறிக்கப்பட்டமையைக் காணலாம். மெய்யெழுத்துக்குப் புள்ளியிடும் மரபு இங்கு தெரியவருகிறது.

இங்கு கொடுக்கப்பட்ட கொடைகள் அறுபிதகல், அதிட்டானம், முன்று, பள்ளி என்ற வகையின. இவை முறையே குகைத்தளம் அல்லது நீர்வடி விளிம்பு, (கல்) அமைத்தல், முனிவர்களுக்கு புனித இருக்கை (அதிட்டானம்) அமைத்தல், முற்றம் (முன்று) அமைத்தல், புனித இருப்பிடம் அல்லது கற்படுக்கை (பள்ளி) அமைத்தல் என்று பொருள்படுகின்றன. மூன்று கல்வெட்டுகள் 'யாற்றூர் செங்காயபன்' என்பவருக்கு கொடை தரப்பட்டதைக் குறிக்கின்றன. ஆத்தூர் என்றொரு ஊர் புகளூர் பகுதியில் இன்றுமுள்ளது. செங்காயபன் மூதா அமண்ணன் என்பவர் முதிய அல்லது மூத்த துறவியாகச் சொல்லப்படுகிறார். இவர் சமண முனிவர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து, பௌத்த முனிவர் என்றும் சிலர் கருதுவர்.

சேர மன்னர்களின் மூன்று தலைமுறையினர் இங்கு சொல்லப்படுகின்றனர். கோ ஆதன் செல்லிரும்பொறை ஆட்சி செய்கின்ற அரசனாக இருந்ததால் கோ என்ற சொல் அரசன் என்று குறிக்கும் வண்ணம் பெயர் முன்னதாக உள்ளது. இவனது மகன் பெருங்கடுங்கோ மூத்த இளவரசனாக இருக்க, பேரன் இளைய இளவரசனாகப் பட்டம் பெறும் நிகழ்வை இக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இம்மூவரும் சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தின் 7,8, 9 வது பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்களாவர். இங்கு இளவரசனாகக் காணப்படும் பெருங்கடுங்கோ அரசனானதும் பெருஞ்சேரல் எனப்பெயர் பெற்றுள்ளான் என்பதை பதிற்றுப்பத்து மூலம் ஊகிக்கலாம். அதேபோல இளங்கடுங்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்ற பெயருடன் பின்னர் அரசனாகியிருக்கலாம். இதனை 9 வது பத்து காட்டுகிறது. இக்கல்வெட்டுகளில் முதலில் குறிக்கப்படும் கோஆதன் செல்லிரும்பொறை 7 வது பத்தில் செல்வக்கடுங்கோவாழியாதன் என்று சொல்லப்பட்டுள்ளான். புகளூர் கல்வெட்டுகளில் கீரன் கொற்றி என்பவள் கொடையாளியாக இருகல்வெட்டுகளில் காணப்படுகிறாள். இவள் பிட்டன் அல்லது பிட்டந்தையின் இளைய மகளாகக் குறிக்கப்படுகிறாள். மற்றொரு கல்வெட்டில் கொற்றந்தை குறிக்கப்படுகிறான். பிட்டந்தை, கொற்றந்தை எனப் பிட்டனும், கொற்றனும் அந்தை என்று மரியாதைச் சொல்லுடன் குறிக்கப் பட்டுள்ளனர். சங்க இலக்கியங்களில் சேரரது படைத்தலைவராக இவர்கள் காணப்படுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

கல்வெட்டுகளில் குறிக்கப்படும் யாற்றூர் இன்று புகளூருக்கு அருகில் உள்ள ஆத்தூர் என்றும் நல்லியூர் இன்று புகளூருக்கு அருகில் உள்ள நன்னியூர் என்றும் கருதலாம். புகளூர் கல்வெட்டில் கருஊரைச் சேர்ந்த பொன் வாணிகன் கொடை கொடுத்துள்ளான். அதேபோல எண்ணை வாணிகனும் கொடை கொடுத்துள்ளான். அரசியல், சமயம், வணிகம் தொடர்பான தொன்மையான செய்திகளைப் புகளூர் கல்வெட்டுகள் கொண்டுள்ளன. சிறப்புமிக்க இக்கல்வெட்டுகளும், குகைத்தளங்களும் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

https://t.me/daily_paper

# 21. மாமண்டூர்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டத்தில் காஞ்சிபுரம் - வந்தவாசி சாலையில் காஞ்சிபுரத்திலிருந்து 12கி.மி தொலைவில் உள்ள தூசி என்ற ஊரருகில் மாம்ண்டூர் உள்ளது. வேறுசில ஊர்களும் மாமண்டூர் என்ற பெயரில் இருப்பதால் இதனை தனித்தறிய தூசி மாமண்டூர் என்றழைக்கின்றனர். இங்கு மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயில்கள் உள்ளன. இங்கு பெரிய ஏரி ஒன்றைச் சார்ந்த சிறு குன்றில் உள்ள சிறிய குகைத்தளத்தின் முகப்பில் தமிழ்-பிராமி கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு 1939-40 ஆம் ஆண்டில் அறியப்பட்டு அவ்வாண்டு கல்வெட்டறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கல்வெட்டு 21:1

பல்லவர் குடவரைக் கோயில்களுக்கு வடபகுதியில் உள்ள சிறு குன்றில் ஒரு இயற்கையான குகைத்தளம் உள்ளது. இதன் முகப்புப்பகுதியில் பந்தல் அமைப்பதற்காகக் கழிகள் சொருக செதுக்கப்பட்ட இரு துளைகளுக்குக் கீழ் இக்கல்வெட்டுள்ளது. பாறையின் மேடுபள்ளங்களுக்கு ஏற்ப கல்வெட்டு நான்கு வரிகளில் இடைவெளிவிட்டு வெட்டப்பட்டுள்ளது. சில எழுத்துக்கள் சிதைந்துள்ளன. இதன் காலம் ஏறத்தாழ கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



1. கணிமான்
2. தேனூர் தந்த கோன் குன்று ஆசி
3. செயிதான் தசன் சிறு
4. . . . . வன்

என்பது இக்கல்வெட்டின் வாசகமாகும். தேனூரைக் கைப்பற்றிய தலைவனான (கோன்) கணிமான் என்பவனுடைய குன்று; இதனில் பந்தல் தாங்கும் வசதியை (ஆசி) செய்த தச்சன் சிறு...வன் என்பவன்; என இக்கல்வெட்டிற்குப் பொருள் கொள்ளலாம். தசன் என்பதில் 'ச்' மெய் சேர்த்து தச்சன் என்று கொள்ள வேண்டும்.

### பாடபேதம்

கணிமான் தேனூர் தந்த கோன் குன்று. . . செயிதான் தசன் சிறு[வ்]வன் – இரா. நாகசாமி

கணிமான் தேனூர் தந்தகோன் குன்று ஆசி செயிதான் தசன் சிறு. . . வன் – ஐ. மகாதேவன்

### கல்வெட்டுச் செய்தி

https://t.me/daily_paper

இக்கல்வெட்டில் முதல் எழுத்தான 'க', மூன்றாம் எழுத்தான 'மா' ஆகியவை தென்பிராமி எழுத்துச் சாயலைப் பெற்றுள்ளன. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் சிற்றரசு தலைவர்களைக் குறிக்கும் கல்வெட்டுகளில் இதுவும் ஒன்று. தச்சனின் பெயர் வருவது தமிழகக் கட்டடக் கலை வரலாற்றிற்குச் சிறப்பாகும்.

'ஒல்லையூர் தந்த பூதபாண்டியன்' (புறம்: 71) பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி (புறம் 367 தலைப்பு) ஆகிய சங்கப்பெயர்கள் தந்த என்ற சொல்லிற்கு 'வெற்றி பெற்ற' என்ற பொருள் தருவது இங்கு நோக்கத்தக்கதாகும். கணிமான் என்ற சொல் கற்றறிந்தவன், சோதிடன் என்று பொருள்படும். இங்கு தலைவனின் பெயராக உள்ளது.

## 22. குன்னக்குடி

சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் காரைக்குடிச் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்கு குன்றின் மீதுள்ள முருகப்பெருமான் கோயில் சிறப்புடைய ஒன்றாகும். இக்குன்றின் மேற்புறம் ஞானியார் மடம் என்றொரு குகைத்தளம் உள்ளது. இது பிற்காலச் சுவர் எடுப்புகளுடன் சிறு மண்டபமும் பிற்கால முனிவர் சிற்பமும் கொண்டுள்ளது. இதனின் வெட்டப்பட்ட நீர்வடி விளிம்பில் இரு தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளை ஒட்டி எடுக்கப்பட்ட சுவர் மற்றும் சிற்பத்தின் பின் கற்படுக்கைகள் உள்ளன.

### கல்வெட்டு 22:1

இக்கல்வெட்டு 1909 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. 1992ல் ஐ. மகாதேவன் உடன் சென்ற தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை குழுவினர் கல்வெட்டின் முதல் எழுத்தை அதன் மீது பூசிக்கட்டப்பட்டிருந்த சுண்ணாம்புக் காரையை உடைத்து அறிந்தனர். எழுத்துக்கள் தலைகீழாகவும் மேல் கீழாகவும் மாற்றி எழுதப்பட்டவை. கண்ணாடியில் பிம்பமாகத் தெளிவாக நேராகத் தெரியக் கூடியவை. இதன் காலம் ஏறத்தாழ கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



**காபிஊர் ஆதன் சாத்தன்**

என்பது இக்கல்வெட்டு வாசகமாகும். காபி என்பதில் 'ப்' மெய்சேர்த்து 'காப்பி' என்று படிக்கலாம் காப்பி ஊரைச் சேர்ந்த ஆதன் சாத்தன் என்ற ஆட்பெயராக உள்ளது. சாத்தன் என்ற சொல்லில் 'த்' புள்ளியிட்டு எழுதப்பட்டுள்ளது.

**பாடபேதம்**

https://t.me/daily_paper

ஊபி ஊர் அதன் சாத்தன் – தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி – 26
. . . பி ஊர் ஆதன் சாத்தன் – இரா. நாகசாமி
காபி ஊர் ஆதன் சாத்தன் – ஐ. மகாதேவன்

## கல்வெட்டு 22:2

நீர்வடிவிளிம்பின் மறுபக்கம் உள்ளது. மூன்று எழுத்துக்கள் தெரிகின்றன. மண்டபக் கட்டத்தினுள் மேலும் எழுத்துக்கள் மறைந்துள்ளன. இது முன் கல்வெட்டின் தொடர்ச்சியாகலாம். நீர்வடி விளிம்பு இவ்விடத்தில் பாறையின் வடிவிற்கேற்ப உட்சென்று வெளிவருவதால் இக்கல்வெட்டு முன் கல்வெட்டிற்கு அதிக இடைவெளிவிட்டு வெட்டப்பட்டுள்ளது என்றும் கருதத் தோன்றுகிறது. இதுவும் எழுத்துக்கள் கண்ணாடியில் தெரிவது போன்று இடம் வலமாக, மேல் கீழாகப் பொறிக்கப்பட்டதாகும். இதன்காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



**ஊறு து . . .**

என்பது வெளித்தெரியும் கல்வெட்டுச் சொல்லாகும். ஊறு என்பதில் 'ற்' சேர்த்து ஊற்று என்று கொள்ளலாம். முன் கல்வெட்டில் சொல்லப்பட்டவர் நீர் ஊற்று அமைத்தார் என்பது இதன் பொருளாகலாம்.

**பாடபேதம்**

. . . குடு . . . த – இரா. நாகசாமி
ஊறுது . . . – ஐ. மகாதேவன்

## கல்வெட்டுச் செய்தி

காப்பியம் என்பது ஒரு குடிப் பெயராக இருக்கவேண்டும். தொல்காப்பியர், காப்பியாற்றுக் காப்பியனார், காப்பியன் சேந்தனார் முதலிய புலவர்களது பெயர்கள் இங்கு கருத்தில் கொள்ள வேண்டியவையாகும். காப்பியக்குடி என்றொரு ஊர் இன்று சீர்காழி அருகில் உள்ளது. காப்பியக்குடி என்பதற்கு ஒத்த பெயரே 'காப்பிஊர்' எனலாம். இக்குகைத்தளத்திற்குச் செல்லும் வழியில் பாறையில் சதுரவடிவில் ஒரு சுனை வெட்டப்பட்டு இன்றும் நீர் தேங்கிப் பயன்பாட்டில் உள்ளது. இரண்டாவது கல்வெட்டில் சொல்லப்படும் ஊறு என்ற ஊற்றினை இது நினைவுபடுத்துகிறது.

# 23. தொண்டூர்

https://t.me/daily_paper

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்தில் செஞ்சியிலிருந்து வடகிழக்கில் 22 கி.மீ. தொலைவில் தொண்டூர் உள்ளது. இவ்வூரின் தென்புறமுள்ள குன்றில் பஞ்சனார்படி என்றழைக்கப்படும் இயற்கையான குகைத்தளத்தில் தமிழ் பிராமி கல்வெட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அலுவலர் மா. சந்திரமூர்த்தி இக்கல்வெட்டினை 1991ல் கண்டறிந்தார். 20.1.1991இல் தினமணி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது.

## கல்வெட்டு 23:1

பஞ்சனார்படி குகைத்தளத்தின் வெளியே தரைப்பாறையில் இரு வரிகளில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. மிகவும் தேய்ந்து தெளிவில்லாமல் உள்ளது. இதன் காலம் ஏறத்தாழ கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



**[இ] ளங்காயிபன் ஏவ அகழ்ஊரறம்**

**மோசி செயித அதிடானம்**

என்பது இதன் வாசகமாகும். தொடக்கத்தில் 'இ'க்கான மூன்று புள்ளிகள் உள்ளது போல் தெரிகிறது. இறுதியில் மூன்று என்பது ஒன்றன்கீழ் ஒன்றான படுக்கைக் கோடுகளால் காட்டப்பட்டுள்ளது. இளங்காயிபன் பணித்தபடி (ஏவ) அகழூரினர் இந்த அறத்தைச் செய்தனர். இந்த புனித இருக்கை (அதிட்டானம்) மோசியால் செய்யப்பட்டது. என இருசெய்திகளாகப் பொருள்தருகிறது. இறுதியில் உள்ள மூன்று கோடுகள் அங்குள்ள படுக்கைகளில் மூன்று படுக்கைகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறதா என்பது தெரியவில்லை.

1 மற்றும் 12வது எழுத்துக்கள் நடன. காசிநாதனால் 'ஸ' என படிக்கப்பட்டன. 15ஆவது எழுத்தான 'ற' கல்வெட்டு வெட்டியவரால் பிழையாக வலம் இடமாக வெட்டப்பட்டுள்ளது மூன்றாவது எழுத்து 'ங்' புள்ளியுடன் உள்ளது. அகழூர் என்பது அகழ் ஊர் என இக்கல்வெட்டில் உள்ளது. இன்று தொண்டூர் அருகில் அகலூர் என்றொரு ஊர் உள்ளது. அகழூரினர் ஒன்றாக இணைந்து இளங்காயிபன் என்பவர் பணிக்க அறம் செய்துள்ளனர் என்பது ஒரு நிறுவன அமைப்பினை உணர்த்தும். மோசி என்பது ஆட்பெயர். 'திருந்து மொழி மோசிபாடிய ஆயும்' என்பது புறப்பாடல் வரி (புறம் 158).

https://t.me/daily_paper

# 24. குடுமியான்மலை

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டையிலிருந்து 16 கி.மீட்டர் தொலைவில் குடுமியான்மலை உள்ளது. இவ்வூரில் உள்ள குடைவரைக் கோயில் 7 ஆம் நூற்றாண்டு இசைக்கல்வெட்டால் வரலாற்றுப் புகழுடையது. இம்மலையின் தென்மேற்கே பாறைச் சரிவில் இயற்கையான குகைத்தளம் உள்ளது. இங்குள்ள கல்வெட்டு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அலுவலர்கள் பொ.இராசேந்திரன் சொ. சாந்தலிங்கம் ஆகியோரால் 1991 ல் கண்டறியப்பட்டது. தமிழ்நாடுஅரசு தொல்லியல் துறையினர் ஐராவதம் மகாதேவனுடன் மீளாய்வு செய்தபோது கல்வெட்டு முழுமையாகப் படிக்கப்பட்டது.

## கல்வெட்டு 24:1

மேற்சொன்ன குகைத்தளக் கற்படுக்கையில் இக்கல்வெட்டுள்ளது. மிகவும் தெளிவில்லாமல் எழுத்துக்கள் உள்ளன. இதன் காலம் சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகும். ள், ந் எழுத்துக்கள் புள்ளியுடன் உள்ளன. 'கொ' எழுத்தில் ஒகரக் குறிலைக் குறிக்கவும் புள்ளியுள்ளது.



**நாழள் கொற்றந்தய் ப[ளி]ய்**

என்பது இதன் வாசகம். நாழள் என்ற ஊரைச் சேர்ந்த கொற்றந்தை செய்த பள்ளி என்று பொருள்படும். ஞாழல் என்ற மலர் சங்க இலக்கியங்களில் பரவலாகக் குறிக்கப்பட்டுள்ளது. இம்மலரின் பெயரில் அமைந்த ஊரே இங்கு நாழள் என்று குறிக்கப்பட்டுள்ளது எனலாம். இம்மலர் உடைய மரம் புலிநகக் கொன்றை, மயில் கொன்றை என்று தற்காலத்தில் அழைக்கப்படுகிறது. அந்தை மரியாதைக்குரிய சொல். கொற்றந்தை மரியாதைக்குரியவராக இங்கு காட்டப்பட்டுள்ளார்.

# 25. திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மலையில் மேற்குப் பகுதியில் இயற்கையான குகைத்தளம் உள்ளது. இங்கு உள்ள ஒரு தமிழ்-பிராமி கல்வெட்டு 1937-38 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டு வெளியிடப்பட்டது. எனினும் மீளாய்வுகளில் இக்கல்வெட்டு எங்குள்ளது என்பது அறியக் கூடியதாக இல்லை. மைப்படியை' வைத்து ஐ. மகாதேவன் நூலில் சொல்லப்பட்டுள்ள வாசகம் மற்றும் கருத்துக்கள் இங்கு காட்டப்படுகின்றன. இக்குகைத்தளத்தில் தொடக்கக்கால வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் சில உள்ளன.

## கல்வெட்டு 25:1

https://t.me/daily_paper

இக்கல்வெட்டின் காலம் சுமார் கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்



. . . பன் கே

என்பது அறியக் கிடைக்கும் எழுத்துக்களாகும்.

**பாடபேதம்**

சௌனகாயி பங்கே – மயிலை. சீனி

கூபக$_3$க$_4$ரி – இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1937 – 38

# 26. எடக்கல்

கேரளமாநிலம் மலபார்ப் பகுதியில் வயநாடு மாவட்டத்தில் கணபதிவட்டம் என்ற ஊர் உள்ளது. இங்கு 18ஆம் நூற்றாண்டில் திப்பு சுல்தானின் ஆயுதத் தயாரிப்புக் கூடம் இருந்ததால் சுல்தான் பத்தேரி (சுல்தான் பேட்டரி) என்று இவ்வூர் வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு தென்மேற்கே 6 கி.மீ. தொலைவில் கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரத்தில் எடக்கல் மலையின் உச்சி மேற்புறச் சரிவில் வரலாற்றுக்கு முற்பட்ட கால பொறிப்புகளுடன் கூடிய இயற்கைக் குகைத்தளம் உள்ளது. அதனில் உள்ள தமிழ்பிராமி கல்வெட்டுகள் 1894ல் கண்டறியப்பட்டன. 1897ல் ஆய்வு செய்யப்பட்டன. 1996ல் ஐ மகாதேவன் குழுவினரால் மீளாய்வு செய்யப்பட்டன. மீளாய்வில் மேலும் இரு கல்வெட்டுகள் அவர்களால் கண்டறியப்பட்டன. எனினும் முன் ஆய்வில் அறியப்பட்ட இரு கல்வெட்டுகள் பிற்கால எழுத்துப் பொறிப்புகளால் உருக்குலைந்துள்ளன. அதனால் அவரது நூலில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் இங்குத் தரப்படுகின்றன.

## கல்வெட்டு 26:1

எடக்கல் குகையின் வடக்கு பாறைச்சுவரில் இக்கல்வெட்டுள்ளது. இது ஐ.மகாதேவன் குழுவினரால் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு. இதன் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



ஒபனபவிர அ

https://t.me/daily_paper

என்பது கல்வெட்டு வாசகமாகும். 'ப்' மெய் இரு முறை சேர்த்து ஒப்பனப்ப வீரன் என்று கொள்ளலாம். ஒப்பனப்பவீரனை (எழுதியது) என்று பொருள்படும். இங்கு கற்படுக்கைகள் ஏதுமில்லை. எனவே சமணர் தொடர்பாகக் கொடை வழங்கப்பட்டதாகக் கருத இடமில்லை. ஆட்பெயர் பொழுது போக்காகப் பொறிக்கப்பட்டதாகக் கருதலாம். ஒப்பு, ஒப்பனை என்பவை அழகு என்று பொருள்படும். ஆட் பெயர் அழகானவன் என்ற அடிப்படையில் எழுந்துள்ளது. அப்பன் மரியாதைச் சொல்லாகும் 'அ' என்ற வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டிப்பட்டிகாசில் 'தின்னன் எதிரான் சேந்தன்அ' என்றுள்ளமை இங்கு கருதத்தக்கது.

## கல்வெட்டு 26:2

மேற்சொன்ன பாறையில் உள்ள மற்றொரு கல்வெட்டாகும். இதன்காலமும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு எனலாம். ஒரு குத்துக்கோடு நடுவிலும் பனைமரம் என்று கருதத்தக்க குறியீடு இறுதியிலும் உள்ளன.



**கடும்மிபுத சேர**

என்பது கல்வெட்டு வாசகமாகும். கடும்மி என்பதும் புதசேர என்பதும் குத்துக் கோட்டால் பிறிக்கப்பட்டுள்ளன. இக்கோடு இப்பாறையில் முன்னதாகச் செதுக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட பொறிப்புக் கோடுகளில் ஒன்றாக இருக்கவேண்டும். கடும்மிபுத என்பவன் சேரன் என்று இக்கல்வெட்டு பொருள்படும். கடும்பி தமிழ்ச் சொல். புத பிராகிருத சொல். இதன் தமிழ் வடிவம் கடும்மான் என்பதாக இருக்கலாம். அதியமான் என்பதை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

## கல்வெட்டு 26:3

இக்கல்வெட்டு அதே பாறையில் மூன்றாவதாக உள்ளது இதன் மீது தற்கால எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு உருக் குலைந்து விட்டது. ஹால்ட்ஸ் எடுத்து பாவெட் பதிப்பித்த மைப்படி துணையுடன் ஐ. மகாதேவனால் ஆய்வுசெய்யப்பட்டது. இதன் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டாகும்.



**கோ பூதிவிர**

https://t.me/daily_paper

பூதிவீரன் (ஒரு) சிற்றரசன் என்று இது பொருள்படும். பூதி என்ற பிராகிருதச் சொல்லின் தமிழ் வடிவம் பூதி. இடைக்காலத்தில் சோழப்பேரரசில் கொடும்பாளூர் வேளிர்கள் பூதி என்ற முன்னொட்டுச் சொல்லுடன் பெயர்கள் கொண்டிருந்தனர். பூதி விக்கிரம கேசரி என்ற கொடும்பாளூர் வேளிர் தலைவனை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். கடும்மிபுத சேர கல்வெட்டுடன் இக்கல்வெட்டுள்ளதால் சேரர் சிற்றரசன் பெயராகக் கொள்ளலாம்.

## கல்வெட்டு 26:4

முற்சொன்ன கல்வெட்டு போல இதுவும் உருக்குலைந்து விட்டது. இதன்காலம் சுமார் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு எனலாம்.



கோ[வ]ாதான்

என்பது கல்வெட்டுச் சொல். ஆதன் என்பவன் அரசன் - தலைவன் என்று பொருள்படும்.

## கல்வெட்டுச் செய்திகள்

கேரளத்தில் கிடைத்துள்ள காலத்தால் முற்பட்ட கல்வெட்டுகள் இவை. கேரளத்தின் வரலாற்றுத் தொடக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் சான்றுகள் இவை. இங்கு தொல்பழங்காலக் கீறல்கள், பிற்காலத் தமிழ்-பிராமி கல்வெட்டுகள், தொடக்ககால வட்டெழுத்துக் கல்வெட்டுகள் ஆகியவை உள்ளமை இவ்விடத்தின் தொடர்ந்த வரலாற்றுச் சிறப்பைக் காட்டுவன. இங்கு சேர அரசர்கள், தலைவர்கள், வீரர் பெயர்கள் இருப்பதும் பிற்காலத்தில் சுல்தான் ஆயுதக் கூடம் இருந்தமையும் இவ்விடத்தின் போர்க்களப் பின்புலத்தைக் காட்டுவன.

# 27. நெகனூர்பட்டி

திருவண்ணாமலை மாவட்டம் செஞ்சி வட்டத்தில் நெகனூர்பட்டி அமைந்துள்ளது. இவ்வூரில் அடுக்கன் கல் என்ற இயற்கைக் குகைத்தளமுள்ளது. இதன் வெளியே தெற்கு நோக்கிய பாறைப் பகுதியில் பிற்காலத் தமிழ்-பிராமி கல்வெட்டுள்ளது. 1992ல் இந்திய அரசு தொல்லியல் துறையின் கல்வெட்டாய்வாளர் சு. இராசவேலு இதனைக் கண்டறிந்தார்.

## கல்வெட்டு 27:1

https://t.me/daily_paper

இக்கல்வெட்டு நான்குவரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டைச் சுற்றிலுமாக சதுரக்கட்டம் வெட்டப்பட்டுள்ளது. மெய் எழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளன. எழுத்துக்களுக்குத் தலைக் கோடு உள்ளது. மழை, வெய்யிலால் கல்வெட்டு தேய்ந்துள்ளது. எனினும் படிப்பதற்கு இயலுமாறுள்ளது. இதன்காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டாகும்.



1. பெரும் பொகழ்
2. சேக்கந்தி தாயியரு
3. சேக்கந்தண்ணி செ
4. யி வித்த பள்ளி

என்பது கல்வெட்டு வாசகமாகும். பெரும் பொகழ் என்ற ஊரைச் சேர்ந்த சேக்கந்தி என்பவரின் தாயான சேக்கந்தண்ணி என்பவர் இந்த பள்ளியைச் செய்வித்தார் என்பது இதன் பொருளாகும். முதல்வரி கடைசி எழுத்து 'ழ்' சு. இராசவேலுவால் 'ய்' என்று படிக்கப்பட்டது. இரண்டாம் வரி கடைசி எழுத்து 'ரு' எம்.டி. சம்பத்தால் 'உ' என்று படிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டுச் செய்தி

கல்வெட்டில் சேக்கந்தண்ணி என்பதை சேக்கந் அண்ணி என்று பிரித்துப் படிக்க வேண்டும். இவரைச் சமணப் பெண் துறவியாகக் கொள்ளலாம். சேக்கிழார் என்பதில் 'சே' குடிப் பெயராக இருப்பது போல இங்கும் குடிப்பெயர் எனக்கருதலாம். 'சே' என்பது காளை என்ற பொருளில் அகப்பாடலில் (அகம் 36 'கயிறு இடு கதச் சேப்போல') குறிக்கப்படுகிறது. கந்தி என்ற சொல் சீவக சிந்தாமணியில் (26:49 கறந்த பால் அனைய கந்தி) பெண் துறவி என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. சூடாமணி கந்தி, கௌந்தி என்ற சொற்களுக்கும் பெண் துறவி என்று பொருள் சொல்கிறது. தாயியரு என்பது தற்காலக் கன்னட மொழியில் தாயாருக்கு வழக்கு சொல்லாக உள்ளது. அண்ணி என்பது மரியாதைச் சொல்லாகப் பயன்பட்டுள்ளது. பெரும்புகை என்றொரு ஊர் அருகில் உள்ளது. அங்குள்ள குன்றிலும் கற்படுக்கைகள் கண்டறியப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் சொல்லப்படும் பெரும்பொகல் இன்றைய 'பெரும்புகை' யாக இருக்கலாம்.

# 28. அம்மன் கோயில்பட்டி

https://t.me/daily_paper

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தில் ஓமலூர் - தாரமங்கலம் சாலையில் பெரியேரிப்பட்டி என்ற ஊரின் சிற்றூராக அம்மன் கோயில்பட்டி உள்ளது. இவ்வூரில் உப்பாற்றின் வடகரையில் பெருமாள் கோயில் பாறையில் அமைந்த 'தேப்பாலி' எனப்படும் சுனையின் அருகில் பிற்காலத் தமிழ்-பிராமி கல்வெட்டுள்ளது. இக்கல்வெட்டு 1979ல் புது.போ. வெங்கடராமன் என்ற பள்ளி ஆசிரியரால் கண்டறியப்பட்டது. தற்போது இக்கல்வெட்டு, சுனை மற்றும் பாறைப்பகுதி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மரபுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## கல்வெட்டு 28: 1

இரண்டு வரிகளில் இக்கல்வெட்டுள்ளது. சுனைக்கு வடியும் மழைநீர் மற்றும் வெய்யில் காரணமாகக் கல்வெட்டு தேய்ந்துள்ளது. எனினும் படிக்கும் அளவு தெளிவாகத் தெரிகிறது. 'ர', 'க' முதலிய கீழ்நீளும் கோடுகளை உடைய எழுத்துக்களில் கீழ்க்கோடு இடப்புறம் வளைந்து தூண்டில் முள்போல உள்ளது. எனவே இக்கல்வெட்டு தென்பிராமி எழுத்துச் சாயல் உடையதாக ஐ. மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். இக்கல்வெட்டு சுமார் கி.பி. நான்காம் நூற்றாண்டு எனலாம்.



**பரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன்**
**கோபன் கணதேவன் தொட சுனை**

என்பது கல்வெட்டு வாசகம். கணதேவன் என்பதில் 'ண்' மெய் சேர்த்து கண்ணதேவன் என்றும் 'தொட' என்பதில் 'ட்' மெய் சேர்த்து 'தொட்ட' என்றும் கொள்ளவேண்டும். பரம்பன் கோகூர் என்ற ஊரின் கிழாரின் மகன் வியக்கன் கோபன் கண்ணதேவன் இந்த சுனையைத் தோண்டுவித்தான் என்பது இதன் பொருள். கோகூரின் கிழாரான பரம்பன் என்றும் தந்தையின் பெயரைக் கருத இடமுள்ளது. பரம்பன் என்ற சொல் வரம்பன் என்று படித்து இமயவரம்பன் என்ற சேரமன்னனுடன் சில ஆய்வாளர்களால் தவறாகச் சொல்லப்பட்டுள்ளது.

## கல்வெட்டுச்செய்தி

தென்பிராமி சாயல் பெற்ற எழுத்துக்கள் உடைய தமிழ்-பிராமி கல்வெட்டு இது. இக்கல்வெட்டு சுனை பற்றிச் சொல்கிறது. சமணச் சார்புடைய அறம் அல்லது செயலைக் குறிக்கவில்லை. இக்கல்வெட்டை சமயச்சார்பற்ற கல்வெட்டாகக் கருதுவேண்டும். கோகூர்

என்பது கோவூர் என்பதுடன் தொடர்புடையது போலத் தெரிகிறது. ஐ. மகாதேவன் கோங்கு மரத்தின் அடிப்படையில் கோங்கர் - [illegible] மனக் கருதுகின்றார். 'குளம் தொட்டு வளம் பெருக்கி' என்ற பட்டினப்பாலை வரியும் (பட்டின. 284), 'தொட்டனைத்து ஊறும் மணற் கேணி' என்ற குறளடியும் இக் கல்வெட்டில் வரும் தொட (தொட்ட) என்ற வினைச் சொல்லை நினைவு படுத்துகின்றன. 'ஊழ்படு பாறை நெடுஞ்சுனை' என்ற அகப்பாடல் அடி (அகம் 2:3-4) தொன்மையான பாறையில் அமையும் சுனையைக் குறிப்பிடுவது இங்கு நோக்கத் தக்கது. வியக்கன் என்பது விசாக நட்சத்திரத்தின் அடிப்படையிலான ஆட்பெயர். இயக்கன் (யக்சன்) வியக்கனுடன் தொடர்புடையது போல இருப்பினும் சான்றுகள் இல்லை. கோபன் -விஷ்னு கோபன் என்று ஆட் பெயரில் உள்ளது போலவாகும். 'கோப', என்ற சொல் 'பாதுகாப்புத் தருபவன்' என்ற பொருளுடையது.

https://t.me/daily_paper

# 29. அரச்சலூர்

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு-காங்கேயம் சாலையில் அரச்சலூர் அமைந்துள்ளது. இவ்வூரை ஒட்டியுள்ள நாகமலையில் ஆண்டிப் பாறை என்றழைக்கப்படுமிடத்தில் இயற்கையான குகைத்தளமும் கற்படுக்கைகளும் உள்ளன. கற்படுக்கைகளினிடையே சிறப்புடைய இசைக் கல்வெட்டுகள் மூன்று பிற்காலத் தமிழ்-பிராமி எழுத்தில் உள்ளன. 1960 இல் புலவர் இராசு இக்கல்வெட்டுகளைக் கண்டறிந்தார்.

## கல்வெட்டு 29:1

இரண்டு வரிகளில், கற்படுக்கைகளின் இடையே இக்கல்வெட்டுள்ளது. கல்வெட்டு மிகவும், சிதைந்துள்ளது. இருவரிகளிலும் எழுத்துக்கள் சில உடைந்துள்ளன. இதன் காலம் ஏறத்தாழ கி.பி. நான்காம் நூற்றாண்டாகும்.



**எழுத்தும் புணருத்தான் மலைய் வண்ணக்கன் தேவன் சாத்தன்**

என்பது கல்வெட்டு வாசகமாகும். மலை வண்ணக்கனான தேவன் சாத்தன் (இசை) எழுத்துக்களைச் சேர்த்தமைத்தான் என்பது இதன் பொருளாகும். 'எ' எழுத்தினுள் குறிலைக் குறிக்க புள்ளியிடப்பட்டுள்ளது. எழுத்துக்கள் தலைக்கோடு பெற்றுள்ளன.

**பாடபேதம்**

எழுத்தும் புணர்த்தான் மணிய
வண்ணக்கன் ஆதன் சாத்தன் – தி.நா. இராமசந்திரன்

சித்தம் தீர்த்தம் பூண தந்தான் – டி.வி. மகாலிங்கம்

எழுத்துப் புணருத்தான் மணிய்

https://t.me/daily_paper

வண்ணக்கன் தேவன் சாத்தன் – இரா. நாகசாமி

எழுத்தும் புணருத்தான் மலைய்

வண்ணக்கன் தேவன் சாத்தன் – ஐ. மகாதேவன்

முன்னதாக 'ஏழுதானம் பண்ணுவித்தான்' என்று முதல் மூன்று சொற்களைப்படித்த ஐ. மகாதேவன் அடுத்தடுத்த கள ஆய்வுகளில் சரிசெய்து இறுதியான வாசகத்தைப் படித்துள்ளார்.

## கல்வெட்டு 29:2

முன் சொன்ன கல்வெட்டின் இடதுபுறம் 5 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கள் தேய்ந்து போயுள்ளன. எனினும் படிக்கக் கூடியனவாக உள்ளன. இதன்காலம் சுமார் கி.பி. நான்காம் நூற்றாண்டாகும்.

1 த தை தா தை த

2 தை தா தே தா தை

3 தா தே தை தே தா

4. தை தா தே தா தை

5. த தை தா தை த



இசை ஓசை எழுத்துக்கள் உயரத்திலும் அகலத்திலும் வரிசையாக ஒரு சதுரக்கட்ட அமைப்பில் (Column - Row-Table) உள்ளது சிறப்பாகும். மேலிருந்து கீழாகப் பார்த்தாலும் இடமிருந்து வலமாகப் பார்த்தாலும் ஒரே மாதிரியாக இவ்வெழுத்துக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

## கல்வெட்டு 29:3

முதல் கல்வெட்டின் வலது புறம் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கள் பல இல்லை எனினும் முன் கல்வெட்டின் அடிப்படையில் இக்கல்வெட்டினைப் படித்திடலாம். இக்கல்வெட்டின் காலமும் கி.பி. நான்காம் நூற்றாண்டாகும்.

1. கை த தை த கை

2. த [கை] [த] [கை] [த]

3. தை த கை த [தை]

4. த கை [த] [கை] [த]

5. [கை] [த] [கை] த [கை]



https://t.me/daily_paper

முன்னது போலவே எழுத்துக்கள், இசை ஓசைக்கேற்ப உயரத்திலும் அகலத்திலும் வரிசையாக ஒரு சதுரக்கட்டம் வரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

## கல்வெட்டுச்செய்தி

'எழுத்தும் புணருத்தான்' என்பதில் உள்ள 'உம்' விகுதி ஏனைய இரு இசை எழுத்துக் கல்வெட்டுகளும் ஒருவருடைய (தேவன் சாத்தன்) செயலே என்பதைக் காட்டுகிறது. மலை வண்ணக்கன் என்பதில் 'லை' - 'ணி' யாகப்படிக்கப்பட்டது. மலை வண்ணக்கன் என்பது மலைப் பிரதேசத்தைச் சேர்ந்த வண்ணக்கன் என்ற குடியைச் சேர்ந்தவன் எனப் பொருள்படும். இடைக்காலக்கல் வெட்டுகளில் வண்ணக்கன், காசுகளின் தரம் சோதிப்பவன் என்ற பொருளில் பயின்றுவருகிறது. இப்பகுதியில் உள்ள கொடுமணல் அகழாய்வில் சங்ககாலத்திய வண்ண மணிகள் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் அறியப்பட்டுள்ளதால் மணிகளைச் சோதிப்பவன் என்பதும் பொருந்துகிறது. எனினும் 'மணி' என்பதை விட 'மலை' என்பதே எழுத்தின் அடிப்படையில் ஏறத்தாழ சரியாக உள்ளது.

சிலப்பதிகார உரையில் (சிலம்பு 17:13 உரை) அடியார்க்குநல்லார் படவடிவ இசைக்குறிப்புகள் (பாலை) உண்டு என்றும் அவை வட்டப்பாலை, சதுரப்பாலை என்று இருவகைப்படுமென்கிறார். இங்குள்ள இசை ஓசை எழுத்துக்கள் சதுரப்பாலையாக இருக்கலாம் என இசை அறிஞர் எஸ். இராமநாதன் குறிப்பிட்டுள்ளது இங்கு நோக்கத் தக்கதாகும்.

# 30. மன்னார் கோயில்

அய்யனார்குளம் என்னும் ஊர் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில், அம்பாசமுத்திரத்திலிருந்து வடமேற்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரை அம்பாசமுத்திரம் - தென்காசி சாலையில் உள்ள பிரிவுச் சாலையில் சென்றடையலாம். பாபநாசம் செல்லும் சாலையில் சிவந்திபுரம் என்ற ஊரில் இறங்கி வடக்கு நோக்கிச் செல்லும் பாதையில் சென்றாலும் இவ்வூரை அடையலாம். அய்யனார்குளம் பொதிகை மலையைப் பின்புலமாகக் கொண்டு இயற்கை எழில் சூழப்பெற்று விளங்குகிறது. இப்பகுதியில் சிறுசிறு பாறைக்குன்றுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றுள் இராசாப்பாறை, நிலப்பாறை என அழைக்கப்படும் இருபாறைகளில் தமிழ்-பிராமி கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் கோயில் என்ற ஊரும் இக்கல்வெட்டுள்ள இடத்தை ஒட்டி உள்ளதால் மன்னார்கோயில் கல்வெட்டுகள் என்று குறிப்பது பொருந்தும் என ஐ. மகாதேவன் குறிப்பிற்கிணங்க இந்நூலிலும் மன்னார்கோயில் என்றே குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டுகள் 2002ல் குற்றாலம் பராசக்தி கல்லூரி மாணவி மனோகரி தந்த தகவலின் படி தொல்லியல் துறை அலுவலர்கள் முனைவர் செந்தில்செல்வக்குமரன் மற்றும் சொ. சந்திரவாணன் ஆகியோர் கண்டறிந்தனர்.

## கல்வெட்டு 30: 1 https://t.me/daily_paper

இராசாப்பாறையில் இயற்கையாய் அமைந்த குகைத்தளத்தின் முகப்பு நெற்றிப்பகுதியில் நீர்வடி விளிம்பு வெட்டப்பட்டு உள்ளே இரு கற்படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் உட்கூரைப் பகுதியில் 3 வரிகளில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் சுமார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.



1. பள்ளி செய்வித்தான்
2. கடிகை [கோ] வின் மகன்
3. பெருங்கூற்றன்

என்பது கல்வெட்டு வாசகமாகும். கோ என்ற எழுத்து ஊகிக்கப்பட்டதாகும். கடிகை கோவின் மகன் பெருங்கூற்றன் என்பவன் பள்ளி செய்வித்தான் என்று பொருள்படும்.

## கல்வெட்டு 30:2

நிலாப்பாறையின் மீதாக இரண்டு கற்படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. படுக்கைகள் திறந்த வெளியில் இப்பாறை மீது செதுக்கப்பட்டவை. இவற்றின் தலைப்பகுதியில் 2 வரிகளில் தமிழ்-பிராமி கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் மூன்றுபுறமும் இருக்கோடுகள் கட்டமிட்டு செவ்வகமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.



1. குணாவின் ஸங்கோ
2. செய்பித பளிஇ

என்பது இக்கல்வெட்டின் வாசகம் குணாவைச் சேர்ந்த இளங்கோ என்பவரால் இப்பள்ளி செய்விக்கப்பட்டது என்பது இதன் பொருளாகும், 'பளி' என்பதில் 'ள்' மெய்சேர்த்து பள்ளி என்று படித்தல் வேண்டும்.

## கல்வெட்டுச் செய்திகள்

https://t.me/daily_paper

இக்கல்வெட்டுகள் கால அமைப்படி ஊர் வரிசையில் முன்னதாக வைக்கப்பட வேண்டும். எனினும் ஐ. மகாதேவன் தனது ஆய்வு நூல் எழுதி முடிந்த நிலையில் இக்கல்வெட்டு அறியப்பட்டதால் தன் நூலில் இறுதியில் சேர்த்துள்ளார். அவரது நூல் தமிழ்-பிராமி கல்வெட்டுகளை ஆவணப்படுத்திய நூல் ஆதலாலும் அதனையே பலரும் மேற்கோள் நூலகப் பயன்படுத்துவதாலும் அவரது நூலின் ஊர் வரிசையிலேயே இவ்வூர் கல்வெட்டும் இந்நூலிலும் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது.

பள்ளி என்ற சொல் முதற்கல்வெட்டில் 'பள்ளி' என முழுமையாகவும் இரண்டாம் கல்வெட்டில் பளிஇ என்றும் உள்ளது. இரண்டாம் கல்வெட்டு திறந்த வெளிப்பாறை மீதுள்ள கற்படுக்கை மீது வெட்டப்பட்டு பள்ளி என்று குறிப்பதால் பள்ளி என்று தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் குறிக்கப்படுபவை படுக்கைகளே என்றும் பள்ளி கொள்தல் - உறங்குதல் என்ற பொருளிலேயே வருகிறது என்பதும் நோக்கத்தக்கது.

'ளங்கோ' என்ற சொல் இளவரசன் என்ற பொருளைத் தருகின்றது. கரூர் அருகிலுள்ள புகளூர் என்ற இடத்தில் 'பெருங்கடுங்கோ மகன் ளங்கடுங்கோ ளங்கோ ஆகி அறுபித்த கல்' என்று வருவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. எனவே இவ்விரு கல்வெட்டும் சேர மன்னர்களோடு தொடர்புடையதாக கொள்ளலாம். மேலும் அம்பாசமுத்திரம் என்ற ஊரின் கோயில் கல்வெட்டுக்களில் அவ்வூரின் பெயரை 'ளங்கோய்க்குடி' எனச் சுட்டுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் ஐ. மகாதேவன் இளங்கோ என்பது ஆட்பெயர் என்றும் வைசியர் குலத்தவர் 'மணிகள் தெரிந்த இளங்கோக்கள்' என்று பிற்கால இலக்கிய குறிப்புகளில் சுட்டப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறார்.

கடிகை என்பதற்கு பள்ளி, பல்கலைக் கழகம், ஊர்ச்சபை, கெண்டி, நாழிகை என்று பல பொருள்கள் உள்ளன. 'காஞ்சி மாநகரம்', 'கடிகை மாநகரம்' என்று இலக்கியங்களில் சுட்டப்படுகிறது. எனவே பெருங்கூற்றன் என்பவன் ஒரு நிறுவனம் அல்லது ஊரவைக்குத் தலைவனாக இருந்தவனின் மகனாக இருந்திருக்க வேண்டும் எனலாம். குணா என்பது இடப்பெயர். குணதிசை மேற்குத் திசையைக் குறிக்கும்.

நிலாப்பாறையில் பனைமர குறியீடு உள்ளது. இது எடக்கல் கல்வெட்டு ஒன்றின் இறுதியிலும் வருகிறது. பனை மரக்குறியீடு சேரருடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இலங்கை அனைக்கோட்டையில் கிடைத்த இக்குறியீடு 'கோ' என்ற சொல்லிற்குக் கீழே எழுதப்பட்டு அப்பொருளை உணர்த்துவதாகக் கொள்ளப்பட்டுள்ளது.

5

https://t.me/daily_paper

# தமிழ் - பிராமி கல்வெட்டுகள் உணர்த்தும் சமயம்

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளங்கள் எச்சமயத்தவர்க்கு உரியவை என்பதில் அறிஞர்களிடையே இன்றும் கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. குகைத்தளங்களில் உள்ள கல்வெட்டுகள் மிகச் சுருக்கமானவை. இவற்றில் பெரும்பாலான கல்வெட்டுகளில் குகைத்தளங்களில் வாழ்ந்த சமயத்தவர் பற்றி வெளிப்படையான சான்றுகள் கிட்டவில்லை. இதனால் இவை பௌத்த சமயதவர்க்கு உரியனவா? சமண சமயத்தவருக்கு உரியனவா? ஆசீவக சமயத்தவருக்கு உரியனவா? என்பதில் இன்றும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

டி.வி. மகாலிங்கம்[1] ஆ. வேலுப்பிள்ளை[2] போன்றவர்கள் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளங்கள் சில சமணத்திற்கும் சில பௌத்தத்திற்கும் சில ஆசீவகத்திற்கும் உரியவையாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். கே.வி. சுப்பிரமணிய அய்யர், வி. வெங்கையா போன்றவர்கள் அனைத்துக் குகைத்தளங்களும் பௌத்த சமயத்தவருக்கு உரியவை என்று எண்ணுகின்றனர்[3]. க. நெடுஞ்செழியன் இவற்றை ஆசீவகர்களுக்குரியவை என்று கருதுகிறார்[4]. எச். கிருஷ்ணசாஸ்திரி போன்றவர்கள் இக்குகைத்தளங்களில் பழங்குடிகள் இருந்தனர். பின்னர் பௌத்தர்களும் அதன்பின்பு சமணர்களும் அங்கு வாழ்ந்துள்ளனர் என்று கருதுகின்றனர்[5]. அண்மைக்காலத்தில், பல புதிய தமிழ்-பிராமி கல்வெட்டுகள் கண்டறியப் பட்டுள்ளன. தமிழ்-பிராமி கல்வெட்டுகள் மீளாய்வு செய்யப்பட்டு மீண்டும் நன்கு படிக்கப்பெற்று திருந்திய வாசகங்கள் வெளிவந்துள்ளன. இப்பின்னணியில் இவை எச்சமயத்தவர்க்குரியவை என்று ஆய்வுசெய்து ஏதேனும் ஒரு முடிவுக்கு வர வாய்ப்பு உள்ளது.

## பௌத்தம்

தமிழ்-பிராமி கல்வெட்டு உள்ள குகைத்தளங்கள் அனைத்தும் பௌத்த சமயத் துறவிகள் தங்குவதற்குரியவை என்று கருதும் கே.வி. சுப்பிரமணிய அய்யரின் கருத்து தமிழ்-பிராமி கல்வெட்டுகள் கண்டறிந்து அவற்றைப் படிக்கத் தொடங்கிய தொடக்க காலத்ததாகும். தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளங்களின் அமைப்பு இலங்கையில் பௌத்த துறவிகள் வாழ்ந்த பிராமி கல்வெட்டு குகைத்தளங்களோடு ஒத்துக் காணப்படுகின்றன. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் வரும் பெயர்களும், கல்வெட்டுகள் காணப்படும் மலைகளுக்கு வழங்கும் பெயர்களும் இவை பௌத்த சமயத்தவர்க்குரியவை என்பதை உறுதிப்படுத்துகின்றன என்று கே.வி. சுப்பிரமணிய அய்யர் கருதுகின்றார்[6].

பொதுவாக இந்தியநாட்டில் தொடக்கக் காலத்தில் அமைக்கப்பட்ட துறவிகளுக்கான இருப்பிடங்கள் இவ்வாறு எளிமையான முறையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

https://t.me/daily_paper

தமிழ்நாட்டில் காணப்படுவது போன்று ஒரிசாவில் காரவேலன் கல்வெட்டுகள் உள்ள உதயகிரி, கண்டகிரி குன்றுகளில் சமண சமயத்துறவியருக்கு உறைவிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன[7]. எனவே சமயத்துறவியருக்கு இந்திய வரலாற்றில் தொடக்கக் காலத்தில் உருவாக்கப்பட்ட குகைத்தள அமைப்புமுறையைப் பின்பற்றியே தமிழ்-பிராமி குகைத்தளங்களின் உட்புறம் கற்படுக்கையும் முகப்பில் நீர்வடி விளிம்பும் வெட்டப்பட்டுள்ளன. எனவே இந்த அமைப்புமுறையைப் பௌத்தர்களுக்கு மட்டும் உரியது என்று கருத முடியாது. மேலும் இலங்கை பிராமிக் கல்வெட்டுகள் தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் சமகாலத்தவை, முந்தியவை அல்ல என்பதினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள மலை மற்றும் கற்படுக்கைகளைப் பாமர மக்கள் பஞ்ச பாண்டவர் மலை, பஞ்சவர்படுக்கை என்று அழைக்கின்றனர். பாண்டவர்கள் வனவாசத்தின் போது வந்து தங்கிய இடமாக இவற்றைக் கருதுகின்றனர். இவற்றைப் புத்தரோடு தொடர்புப்படுத்தி அவர் துறவறம் ஏற்ற பின் முதன் முதலில் உணவு உண்ட இடமான *பாண்டவ பப்பதம்* என்பதன் மருஉ என்று மயிலை. சீனி. வேங்கடசாமி, கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் கருதுகின்றனர்[8]. விக்கிரமங்கலத்தில் தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள மலையை அங்குள்ள மக்கள் அதன் அமைப்பு முறையை வைத்து *உண்டாங்கல்* (உருண்டைக்கல்) என்று அழைத்து வருகின்றனர். இதனை அய்யர் அவர்கள் பௌத்தத் துறவிகள் உண்ணும் இடமாகக் கொள்கிறார்.

தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள மலைகள் சிலவற்றில் கழுகுகள் வந்து தங்குவதைக் கொண்டு பிற்காலத்தில் கழுகுமலை என்று பெயரிட்டிருக்கின்றனர். புத்தர் வடநாட்டில் தமது துறவு வாழ்வினை மேற்கொண்ட *கிர்ச்சரகூடம்* என்பதே தமிழ்நாட்டில் கழுகுமலை என்று அழைக்கப்பட்டது[9] என்று மயிலை. சீனி வேங்கடசாமி குறிப்பிடுகிறார். தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள மலைகளிலுள்ள பழமையான கல்வெட்டுகள் இதற்கு மாறாக அவற்றிற்கு வேறு பெயர் இருந்ததைத் தெரிவிப்பது இங்கு நோக்கத்தக்கது.

தமிழ்-பிராமி, கல்வெட்டுகளில் வரும் உபாசன், மாதவிரை என்ற சொற்கள் பௌத்த சமய வழக்கிலுள்ள சொற்களாகும், இவை பௌத்த சமயத்திற்குரியது என்று கே.வி. சுப்பிரமணிய அய்யர் கருதுகின்றார். உபாசகா என்ற சொல் உபாத்தியாயா என்ற சொல்லில் இருந்து வந்தது என்று கூறும் கிருஷ்ணசாஸ்திரிகளின் கூற்றினைக் கொண்டு ஐராவதம் மகாதேவன் இச்சொல் சமணசமயத்தில் பஞ்சபரமேஷ்டிகளில் ஒருவராகக் கருதப்படும் உபாத்தியாயரைக் குறிக்கும் சொல் என்று கருதுகின்றார்[10]. சமண சமயத்தில் இல்லறத்தினைப் பின்பற்றுவோர் உண்ணாநோன்பிகள் சாவகநோன்பிகள் என்று தமிழ்நாட்டில் அழைக்கப்பட்டிருக்கின்றனர். சிலப்பதிகாரத்தின் காவிய நாயகனாக விளங்கும் கோவலன் சமண சமயத்தினைச் சார்ந்தவன் ஆவான். அவனை இளங்கோவடிகள் சாவக நோன்பிகள் என்றே குறிப்பிடுகின்றார்[11]. எனவே கொங்கர்புளியங்குளம், திருவாதவூர் கல்வெட்டுகளில் வரும் 'உபாசகன்' என்ற சொல் சமண சமயத்து இல்லறத்தாரைக் குறிக்கும் சொல்லாகக் கொள்ளலாம்.

அழகர் கோவில் தமிழ்பிராமி கல்வெட்டில் மாதவிரை, தவரை என்று வரும் சொற்கள் பௌத்த சமய பிக்குணி மற்றும் பிக்குவைக் குறிக்கும் என்று கே.வி. சுப்பிரமணிய அய்யர் கருதுகின்றார். இதனால் அழகர்மலைக் குகைத்தளம் பௌத்தருக்குரியது என்று எண்ணினார்.

https://t.me/daily_paper

ஆனால் அதனை மீளாய்வு செய்து தற்போது அச்சொற்கள் மதிரை என்றும் அவ்விருஅர்உம் என்றும் படிக்கப்பட்டுள்ளன. இதனால் தவறாகப் படிக்கப்பட்ட வாசகத்தினைக் கொண்டும் பிற்காலத்தில் தமிழ்-பிராமிக் கல்வெட்டுள்ள மலைகளுக்குத் தவறாக வழங்கிய பெயர்களைக் கொண்டும் அவை பௌத்த சமயத்தவருக்கே முற்றிலும் உரியன என்று கருதுவது ஏற்புடையதாக இல்லை.

மேலும் தமிழ்நாட்டில் பௌத்தம் குறித்து எழுதிய பேரா. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, கே.வி. சுப்பிரமணிய அய்யரின் வாதங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக உள்ளன என்று குறிப்பிட்டுத் தமிழ்-பிராமி கல்வெட்டுக் குகைத்தளங்களை முற்றிலுமாகப் பௌத்தருக்கே உரியவை என்று கொள்ள முடியாது, சமண சமயத்திற்கு உரியவையும் அவற்றில் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்[13].

## ஆசீவகம்

மகாவீரர் காலத்தில் வாழ்ந்த மற்கலி கோசலர் என்பவரால் ஆசீவகம் தோற்றுவிக்கப்பட்டது. அசோகனும் அவனது பேரன் தசரதனும் ஆசீவக சமயத்தவருக்கு ஆதரவளித்துள்ளனர்[14]. சமணமும், பௌத்தமும் சங்ககாலத்திலேயே தமிழ்நாட்டிற்கு வந்ததுபோலவே ஆசீவகமும் தமிழ்நாட்டில் சங்ககாலத்தில் பரவியிருந்தமையைச் சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆசீவகர் கொள்கையான ஊழ் பற்றிய கருத்துக்கள் காட்டுகின்றன. நியதி என்றழைக்கப்படும் ஊழ் கோட்பாட்டினைக் கொள்கையாகக் கொண்ட இச்சமயம் சமண பௌத்த சமயங்களைப் போன்று தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை[15].

இலக்கியங்கள் வாயிலாகவே ஆசீவகர் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தந்தை ஆசீவக சமயத்தில் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. மணிமேகலையில் ஆசீவகச் சமயக் கோட்பாடுகள் அக்காவிய காலத்தில் வழங்கிய பிற கோட்பாடுகளோடு எடுத்துக் கூறப்படுகிறது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு சமணசமய காவியமான நீலகேசியில் ஆசீவகக் கோட்பாடுகளுக்கு மறுப்புரை சொல்லப்பட்டிருக்கிறது. கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிவஞானசித்தியாரிலும் ஆசீவகக் கோட்பாடுகள் கூறப்பட்டு மறுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நிகண்டுகளிலும் ஆசீவகர் பற்றிய குறிப்புகள் வருகின்றன. சமண, பௌத்த சமயங்களைப் போன்று இலக்கியச் சான்றுகளைத் தவிர்த்து தொல்லியல் மற்றும் பிற சான்றுகளில் ஆசீவக சமயம் குறித்த சான்றுகளைக் காண்பது அரிதாக உள்ளது. தென்னிந்தியாவில் வழங்கிய சமயத் தத்துவங்களில் ஒன்றாக ஆசீவகம் கருதப்பட்டுள்ளது. அதற்குப் பௌத்தமும், சமணமும், சைவமும் மறுப்புரை வழங்கியதையே தமிழ் இலக்கியங்களில் அதிகமாகக் காணமுடிகிறது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரை ஆசீவகர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்துள்ளனர் என்பதற்குக் காட்டப்படும் சான்றுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை, ஐயப்பாட்டிற்கு உரியவை என்று தமிழகத்தில் ஆசீவர்கள் பற்றி ஆய்வு செய்த ர. விசயலட்சுமி கருதுவது பொருத்தமாக உள்ளது[16]. தமிழ் கல்வெட்டுகளில் வரும் ஆசு, ஆசுவிகள், ஆசுபொதுமக்கள் ஆசுவிமக்கள் என்பதை ஆசீவகரைக் குறித்தது என்றும் இவர்களுக்காக விதிக்கப்பட்ட வரி ஆசுவக்கடமை, ஆசுவிகள் பேர் கடமை என்றும் கருதுவதுண்டு. ஆனால் இவை ஊர்காவல்புரியும் வீரர்கள் பொருட்டு

https://t.me/daily_paper

வாங்கப்பட்ட வரிகளாகும். ஆசு என்பதற்குக் கூர்மையான என்று பொருள். இதனை ஏந்திய வீரர்கள் ஆசுவிகள் எனப்பட்டனர்[17].

சமண, பௌத்த சமயங்களைப் போன்று ஆசீவகர்கள் தமிழ்நாட்டுச் சமூகத்தில் இடம் பிடிக்கவில்லை. இவர்கள் தமிழ்நாட்டில் சமய நிறுவனங்கள் அமைத்து தமது கொள்கையை மக்களிடையே பரப்பியமைக்கும் தொல்லியல் சான்றுகள் இல்லை. இந்நிலையில் டி.வி. மகாலிங்கம் தமிழ்நாட்டில் இவர்கள் பெற்றிருந்த இடத்தைப் பற்றிக் கூறுவது[18] மிகைப்படுத்திக் கூறப்பட்ட கூற்றாகவே கொள்ள வேண்டும் என்று ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுகின்றார்.

தமிழ்பிராமிக் கல்வெட்டுகள் உள்ள குகைத்தளங்கள் ஆசீவகருகுரியது என்று கருதும் க.நெடுஞ்செழியன் தனது கருத்திற்குப் பின்வரும் ஆதாரங்களை முன்வைத்துள்ளார்[19]. மாங்குளம் கல்வெட்டில் வரும் கணி என்ற சொல் சமண சங்கத்தினைச் சார்ந்த மூத்த துறவியைக் குறிக்கும் சொல்லாகக் கொள்ள முடியாது என்றும் காலத்தினை அளந்து அறியும் கணியர் என்பவர்களையே குறிக்கும் என்றும் காலத்தைக் கணித்துக் கூறுவதைச் சமணர்கள் ஏற்பதில்லை என்றும் க.நெடுஞ்செழியன் கருதுகிறார். எனினும் சங்ககாலத்தில் மதுரை நகரில் வாழ்ந்த சமணத் துறவிகள் முக்காலத்தினையும் அளந்து அறியும் பண்பினைப் பெற்றிருந்தனர் என்று மதுரைக்காஞ்சி கூறுவது இங்குக் கருதத்தக்கது.

நிறக்கோட்பாட்டின்படி பிறப்பை ஆசீவகர்கள் பிரித்துள்ளனர். இதில் இறுதியாக வருவது வெண்பிறப்பு, கழிவெண்பிறப்பு ஆகும். கழிவெண்பிறப்பை அடைந்தவர்களே வீடுபேறு பெறமுடியும் என்று ஆசீவகர் கருதுவர். கலிவெண்பிறப்பு பரமசுக்க (உயர்ந்த வெள்ளை) என்று பாலி, பிராக்கிருத மொழிகளில் கூறப்படும். சங்க இலக்கியப் புலவர்களான ஓலைக்கடையத்தனார் நல்வெள்ளையார், முக்கல் ஆசான் நல்வெள்ளையார் ஆகியோர் பரமசுக்க நிலையை அடைந்தவர்கள் என்றும் இதேபோன்று மறுகால்தலை தமிழ்-பிராமி கல்வெட்டு குறிக்கும் 'வெண்காசிபன்' என்பவனும் ஆசீவகச் சமயத்தைச் சார்ந்த 'பரமசுக்க' நிலையை அடைந்தவர் என்றும் க. நெடுஞ்செழியன் கருதுகின்றார். இதேபோன்று விக்கிரமங்கலம் கல்வெட்டில் குறிப்பிடும் வெந்ஆதன் (வெண் ஆதன்) ஆசீவகச் சமயத்தினரைச் சார்ந்தவன் என்றும் கருதுகின்றனர். கருமை, வெள்ளை, வெண்மை என்று நிறங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களுக்குப் பெயரிடும் பொது வழக்கம் பழங்காலத்தில் இருந்துள்ளது. இதற்குச் சமயப் பின்னணி கொடுத்து பொருள் கூறுவது சிந்திக்கத்தக்கது.

## சமணம்

தமிழ் - பிராமி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளங்களைப் பௌத்தர்குரியவை அல்ல, என்று கூறி அவை சமணருக்குரியதாகக் கருதும் இரா. நாகசாமி, அதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறுகின்றார்[20]. தமிழகம் பௌத்த சமயத்தினை ஆதரித்த அசோகனது ஆட்சிப்பரப்பில் இல்லாது சுயாட்சி படைத்த தமிழ் மன்னர்களின் ஆட்சியில் கீழ் இருந்தது. இதனால் பௌத்த சமயத்தினைப் பரப்புவதற்குரிய அசோகனது அதிகாரிகள் தமிழ்நாட்டில் இல்லை. எனவே பௌத்தம் தமிழகத்தில் வளர வாய்ப்பில்லாது போயிற்று. தமிழ்நாட்டு

https://t.me/daily_paper

அகழாய்வில் பெரிய அளவிலான புத்த சமயச் சின்னங்கள் கண்டறியப்படவில்லை. தமிழ்-பிராமி கல்வெட்டுக் குகைத்தளங்களில் பிற்காலத்தினைச் சார்ந்த பௌத்தசமய எச்சங்கள் காணப்படவில்லை. அவற்றில் சமண சமய எச்சங்களான தீர்த்தங்கரர் சிற்பங்களே காணப்படுகின்றன. பௌத்த பிக்குகள் மற்றும் சங்கங்கள் பற்றிய குறிப்புகளைத் தமிழ்பிராமி கல்வெட்டுகளில் காணமுடியவில்லை. தமிழ்நாட்டு மன்னர்கள் சமண சமயத்திற்கே ஆதரவு அளித்துள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்நாட்டு மன்னர்கள் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதாகக் கூறுகின்றனரே அன்றிப் பௌத்தத்திலிருந்து மாறியதாகக் கூறவில்லை. எனவே சமணத்தின் செல்வாக்கு தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க அளவு இருந்தது. பௌத்த சமயத்திற்கு இத்தகைய ஆதரவு இல்லை என்று இரா. நாகசாமி கருதுகின்றார். இதேபோன்ற கருத்தினை கே.வி. இராமனும் கொண்டுள்ளார்[21]. சமணரை வாதிட்டு வெல்ல மதுரைக்கு கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வந்த சம்பந்தர் தமது மதுரைப் பதிகத்தில் மதுரையைச் சுற்றியிருந்த ஆனைமலை முதலிய குன்றங்களில் சமணர்கள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இரா. நாகசாமியின் மேற்கண்ட கருத்துக்களை ஆ. வேலுப்பிள்ளை மறுத்தாலும்[22] தமிழ்-பிராமி கல்வெட்டு குகைத்தளங்கள் பௌத்தருக்குரியவை என்று அவரால் உறுதி செய்ய இயலவில்லை. டி.வி. மகாலிங்கத்தினைப் பின்பற்றி இக்குகைத்தளங்களைப் பௌத்த-சமண-ஆசீவக சமயத்திற்குரியதாக இருக்கவேண்டும் என்று கூறுகின்றார். இவை ஒரே சமயத்திற்குரியவை அல்ல என்று கருதுகின்றார். ஆனால் அண்மையில் ஐராவதம் மகாதேவன் நூல் வெளிவந்தபோது அதனை மதிப்பீடு செய்த ஆ.வேலுப்பிள்ளை தமது கட்டுரையில்[23] தமிழ்-பிராமி கல்வெட்டுக் குகைத்தளங்கள் சமண சமயத்திற்குரியவை என்னும் மகாதேவன் கூற்றினை மறுக்கவில்லை.

அண்மையில் வெளியிடப்பட்ட ஐராவதம் மகாதேவன் அவர்களின் தமிழ்பிராமி கல்வெட்டுகள் குறித்த நூல் தமிழ்-பிராமி கல்வெட்டு குகைத்தளங்கள் சமண சமயத்திற்கே உரியவை என்றே கூறுகிறது. இதற்குச் சான்றாக இந்நூலில் பல அகச்சான்றுகளையும், புறச்சான்றுகளையும் ஐராவதம் மகாதேவன் எடுத்துக் காட்டியுள்ளார், (பக்.126-139). தமிழ்-பிராமி குகைத்தளங்கள் பௌத்தருக்குரியவை என்று கருதும் கே.வி. சுப்பிரமணிய அய்யர், வெங்கையா, எச். கிருஷ்ணசாஸ்திரி ஆகியோரின் கருத்துக்கள் தவறு என்பதைத் தற்போது முழுவதுமாகப் படிக்கப்பட்ட தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன என்கின்றார் மகாதேவன்.

முன்னர் கண்டபடி உபாசகன் என்ற சொல்லும் மாதவிரை என்ற சொல்லும் பௌத்த சமயச் சார்புடையவை அல்ல என்கின்றார். அழகர்மலைக் கல்வெட்டில் வரும் பம்மிதி என்ற சொல் சமணப் பெண் துறவியைக் குறிக்கும் சொல் என்று கூறுகின்றார். மாங்குளம் கல்வெட்டில் வரும் கணி என்ற சொல் சமணத் துறவிகளின் தலைவரைக் குறிக்கும் (மூத்த ஆச்சாரியர்) சமண சமயத்திற்குரிய சொல்வழக்காகும். அமணன் என்ற சொல் வரும் புகளூர் கல்வெட்டிற்கு முற்பட்ட காலத்தினைச் சார்ந்த கி.மு. இரண்டாம் நூற்றாண்டு மேட்டுப்பட்டி தமிழ்-பிராமி கல்வெட்டில் அமணன் என்ற பெயர் வருகிறது. சிரமணன் என்ற சொல்லில் முதலில் உள்ள அகரம் கெட்டு அமணன் என்று மாறி உள்ளது. அமணன் என்ற சொல் வடஇந்தியாவில்

உடலை வருத்தித் தவஞ்செய்யும் பௌத்த - சமண-ஆசீவகத் துறவிகளைக் குறித்தாலும் தமிழ்நாட்டில் சமணரைக் குறிக்கவே இச்சொல் வழங்கப்பட்டுள்ளது என்கிறார் மகாதேவன்.

https://t.me/daily_paper

அசோகமன்னன் தமது கல்வெட்டுகளில் பௌத்த சமயத்தவரைக் குறிக்க சங்கத்தினைக் குறிப்பிட்டுள்ளான். சமண சமயத்தவரைக் குறிக்க சிரமணர் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளான்[24]. சிராவகரைக் குறிக்க ஆசீவகர் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளான் எனவே அணைப்பட்டி புகளூர் கல்வெட்டுகளில் வரும் அமணன் என்ற சொல் சமண சமயத்தவரையே குறித்தது எனலாம். தமிழ்-பிராமி கல்வெட்டுக் குகைத்தளங்களைப் பௌத்த சமயத்தினைச் சார்ந்தவை என்று கே.வி. சுப்பிரமணிய அய்யர் போன்றோர் எழுதிய காலத்தில் அமணன் என்ற சொல்வரும், தமிழ்-பிராமி கல்வெட்டுகள் கண்டறியப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

மேட்டுப்பட்டி கல்வெட்டில் மதுரையைச் சார்ந்த அமணன் அத்திரன் என்பவன் குறிப்பிடப்படுகின்றான் சங்க நூலான மதுரைக்காஞ்சி மதுரையில் இருந்த பல்வேறு சமய இருக்கைகள் பற்றிக் கூறும்போது மதுரையில் இருந்த சமணப்பள்ளி பற்றியும் அதில் உறைந்த சமண முனிவர்களை வழிபடச் சென்ற சமணசமய இல்லறத்தார் பற்றியும் கூறுகிறது[25]. மதுரையில் பௌத்த-ஆசீவகப் பள்ளிகள் இருந்ததாகக் குறிப்பிடவில்லை. எனினும் மதுரைக்காஞ்சி குறிப்பிடும் கடவுள்பள்ளியைப் பௌத்தப்பள்ளி என்று நச்சினார்க்கினியர் கூறுவார். இது தவறு என்ற கருத்துண்டு[26]. இதனால் தமிழ்நாட்டில் அதிக அளவில் மதுரையைச் சுற்றிக் காணப்படும் தமிழ்-பிராமிக் குகைத்தளங்களையும அதேபோன்று பிற இடங்களில் காணப்படும் தமிழ்-பிராமி குகைத்தளங்களையும் சமணருக்குரியதாகக் கருதவேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் புதிய தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புகளும், பழைய-புதிய கல்வெட்டுகளை மீளாய்வு செய்து அவற்றைத் திருத்தமுறப்படித்த தமிழ்பிராமிக் கல்வெட்டு வாசகங்களும், தமிழ்பிராமி குகைத்தளங்கள் சமணசமயச் சார்புடையவை என்று கருதுவதற்கு மிகுந்த வாய்ப்பளிக்கின்றன.

## முனிவர்கள் உறைவிடம்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடையில் வாழ்ந்த சமண முனிவர்களின் எளிய வாழ்வை இக்குகைத்தளங்களும் அங்குள்ள கல்வெட்டுகளும் காட்டுகின்றன. இம்முனிவர்களை எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதைக் காட்டுகின்ற முறையில் இவர்கள் பெயர்களைச் சில தமிழ்பிராமி கல்வெட்டுகளே சுட்டுகின்றன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த மேட்டுப்பட்டி கல்வெட்டிலும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு புகளூர் கல்வெட்டிலும் இம்முனிவர்களைக் குறிக்க 'அமணன், அமண்ணன்' என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முன்னர் கூறியபடி அமணன் என்ற சொல் தமிழ்நாட்டில் சமணரைக் குறிக்க வழங்கிய சொல்லாக இருப்பதால் இம்முனிவர்களைச் சமண சமயத்தவரைச் சார்ந்தவர்கள் என்று கூறலாம். மாங்குளம் கல்வெட்டில் வரும் 'கணி' என்ற சொல் சமண முனிவர் கூட்டத்திற்குத் தலைவராக உள்ளவரைக் குறிக்கும் சொல்லாகும்.

சமண சமயம் கி.பி. முதல் நூற்றாண்டு அளவிலேயே திகம்பரர், சுவேதாம்பரர் என்ற இருபிரிவுகளாகப் பிரிந்தது. இப்பிரிவுகளின் தாக்கம் சங்க காலத்திற்குப் பிறகே தமிழ்நாட்டில் ஏற்பட்டது. எனவே இப்பிரிவிற்கு முன்பாக ஒன்றாக வாழ்ந்த சமண சமயத்துறவிகளே தமிழ்-பிராமி குகைத்தளங்களில் வாழ்ந்திருக்க வேண்டும்.

https://t.me/daily_paper

சமண முனிவர்களின் வாழ்விடங்களைப் பற்றி சங்க இலக்கியங்களில் காண்பது அரிதாகவே உள்ளது. நற்றிணை 141 ஆம் பாடலிலும் அகநானூறு 132 ஆம் பாடலிலும் குன்றங்களில் வாழ்ந்த இம்முனிவர்களின் தன்மை பற்றிக் குறிப்புகள் உள்ளன. நீண்ட சடையோடு நீராடாத சமண முனிவர்கள் குன்றங்களில் வாழ்ந்தது பற்றி நற்றிணை தெரிவிக்கிறது.

நீடியசடையோடு ஆடாமேனிக்
குன்றுறை தவசியர் (நற்றிணை எண். 141)

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் குன்றங்களிலுள்ள சிறிய பாதைகளில் அணிவகுத்துச் செல்லும் யானைக்கூட்டமானது, பட்டினி கிடப்பதால் வாடிய தோற்றத்துடன் நீராடாமல் விளங்கும் முனிவர்கள் கூட்டத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

உண்ணாமையின் உயங்கிய மருங்கின்
ஆடா படிவத்து ஆன்றோர் போல
வரைசெறி சிறுநெறி நிரையுடன் செல்லும்
கானயானை கவினழி குன்றம் (அகநானூறு எண். 132)

உண்ணாநோன்பு இருப்பதும் நீராடாமல் இருப்பதும் சமண முனிவர்களின் பண்பாகும். இதனைக் கண்ணுற்ற சங்கப் புலவர்கள் தம்பாடல்களில் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். இல்வாழ்வு, துறவுவாழ்வு பற்றிப் பெரிதும் பேசும் சங்க இலக்கியங்களில் துறவறம் மேற்கொண்டு வாழ்ந்த இக்குகைத்தளங்கள் பற்றிய குறிப்புக்களைக் காண்பது அரிதாக உள்ளமை இயற்கையே.

## ஆதரவு

சமண சமயத்திற்குச் சங்ககாலத்தில் அனைத்துத் தரப்பினரும் ஆதரவளித்திருப்பதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. பாண்டியர், சேரர், அதியமான் போன்ற பேரரசர்கள் சமணமுனிவர்களுக்குக் குகைத்தளங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளனர். மேலும் தமிழ்நாட்டில் வாழ்ந்த சிற்றரசர்கள், கிராமத் தலைவர்கள், அரச உறவினர்கள், அதிகாரிகள், வணிகர்கள், பல்வேறு சமூகத்தினைச் சார்ந்த செல்வந்தர்கள் என்று பல்வேறு தரப்பினர்கள் குகைத்தளத்தினை உருவாக்கிய அறக்கொடையாளர்களாகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர்.

## முனிவர்கள்

https://t.me/daily_paper

தமிழ்-பிராமி கல்வெட்டுக் குகைத்தளங்களில் கூட்டம் கூட்டமாக சமண முனிவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். இவர்களுக்குத் தலைமைத் துறவியாக விளங்கியவர்கள் 'கணி' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளனர். கணம் என்றால் கூட்டம் என்று பொருள். இதற்குத் தலைவர்களாக விளங்கியவர் 'கணி' என்று அழைக்கப்பட்டனர். மாங்குளம் குகைத்தளத்தில் 'நந்தஸிரிய் இகுவ்அன்' என்ற துறவி தலைமைக் குருவாக விளங்கியுள்ளார். இவருக்குக் கீழ் வாழ்ந்த துறவியர் கூட்டத்திற்கு நெடுஞ்செழியன், அவனது உறவினர், வெள்ளறையில் வாழ்ந்த வணிகர் குழுவினர் பல குகைத்தளங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளனர். ஆற்றூர் செங்காயபன் கூட்டத்தினர் புகளூர் மலையில் வாழ்ந்துள்ளனர். இவர் துறவியரின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர் என்ற பொருளில் 'முதா அமண்ணன்' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறார். மூத்தவன் என்பதே கல்வெட்டில் 'மூதா' என்று குறிப்பிடப்படுகிறது. குகைத்தளத்தில் வாழ்ந்த முனிவர்கள், அனைவரும் போற்றத்தக்கவர்களாக விளங்கினர். முக்காலத்தினையும் உணர்ந்த சமயதத்துவத்திற்கு விளக்கம் அளிப்பவர்களாக விளங்கினர். தங்களுக்குக் கீழ் இருந்த மாணவர்களுக்குச் சமண ஒழுக்கத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர். அத்திரன், செங்காயபன், இளங்காயபன், நந்தஸிரிய் இகுவ்அன் என்ற பல முக்கிய முனிவர்களது பெயர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. அழகர்கோயில் கல்வெட்டில் 'பமித்தி' என்ற பெண் துறவியைக் குறிக்கும் சொல் காணப்படுவதால் பெண் துறவிகளும் குகைத்தளங்களில் இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. பமித்தி ஸபமிதா (ஸர்ப்பமித்ரா) என்ற பெண் துறவியின் பெயர் அழகர் மலையில் உள்ள கல்வெட்டில் வருகிறது. 'கந்தி' என்ற பெண் துறவியைக் குறிக்கும் சொல் நெகனூர்பட்டி நான்காம் நூற்றாண்டு கல்வெட்டில் வருகிறது. சேக்கந்தண்ணி என்பவர் சமணப்பள்ளி ஒன்றினைச் செய்வித்ததாக இது குறிப்பிடுகிறது. சேக்கந்தி என்றழைக்கப்பட்ட சமணப்பெண் துறவியின் தாயார் சேக்கந்தண்ணி ஆவாள்.

## சமண சமயத்தவர்

சமண சமயத்து இல்லறத்தினைச் சார்ந்தவர்கள் சாவகர், உண்ணாநோன்பிகள் என்று குறிப்பிடப்படுகின்றனர். மதுரைக்காஞ்சி மதுரையில் இருந்த சமண முனிவர்களைச் சாவகர் சென்று வழிபட்டதாகக் குறிப்பிடுகிறது. சாவகர் தமிழ்-பிராமி கல்வெட்டுள்ள குகைத்தளங்களில் வாழ்ந்த முனிவர்களை, அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குச் சென்று வழிபட்டுள்ளனர். இவர்கள் உபவாசம் (உண்ணாநோன்பு) இருந்தமையால் 'உபாசகர்' என்று அழைக்கப்பட்டனர். சமண முனிவர்கள் உறைவதற்குத் திருவாதவூர், கொங்கர்புளியங்குளம், கீழவளவு போன்ற இடங்களில் இவர்கள் குகைத்தளங்களை உருவாக்கிக் கொடுத்ததாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. 'உபாசன் பரஅரக' என்பவர் திருவாதவூர் கல்வெட்டிலும் 'உபாசஅன் தொண்டிஎவோன்' கீழவளவு கல்வெட்டிலும், 'உபாசஅன் உபறுஅன்' என்பவர் கொங்கர்புளியங்குளம் கல்வெட்டிலும் குறிப்பிடப்படுகின்றனர். தமிழ்பிராமி கல்வெட்டில் வரும் 'உபாசன்' என்ற சொல்லை சமணர்கள் போற்றும் பஞ்சபரமேஷ்டிகளில் ஒருவரான 'உபாத்தியாயரை'க் குறிக்கிறது என்று ஐ. மகாதேவன் கருதுகின்றார்[28]. இவர் சமணசமய சடங்குகளை நடத்துகின்றவர் ஆவார்.

## தொல்குடியினர் வழிபட்ட இடம்

https://t.me/daily_paper

அழகர் மலை, திருமலை; கருங்காலக்குடி தொண்டூர் ஆகிய இடங்களில் உள்ள குகைத்தளங்களில் செங்காவி மற்றும் வெண்நிறத்தில் வரையப்பட்ட பாறை ஓவியங்கள் உள்ளன. இவை தொல் குடியினரால் வரையப்பட்டவை என்பது பறவை முகம் கொண்ட மனிதர்கள் மற்றும் விலங்குகளின் உருவ அமைப்புகளைக் கொண்டு உணரலாம். தொல்குடியினர் வழிபட்ட இடங்களே பின்னாளில் சமண முனிவர்கள் தங்குமிடங்களாக மாறியுள்ளன என்பது ஊகிக்கக் கூடியதாகும். இன்று கீழவளவு, மேட்டுப்பட்டி, குன்றக்குடி வரிச்சியூர் ஆகிய இடங்களில் வேல் மற்றும் முருகர் வழிபாடுகள் நிகழ்வதையும் பாமர மக்களின் வழிபாட்டு இடங்களாக இவை விளங்குவதையும் காணலாம்.

## அடிக்குறிப்புகள்

1. T.V. Mahalingam, *Early South Indian Palaeography* University of Madras, 1974, p. 176.
2. A. Velu Pillai, *Epigraphical Evidences for Tamil Studies*, International Institute of Tamil Studies, Chennai 1980, p. 92.
3. K.V. Subramaniya Ayyar, The Earliest Monuments of the Pandya country and their Inscriptions, *Proceedings and Transactions of the third oriental conference of Madras* 1924.

   மயிலை. சீனி. வேங்கடசாமி, *பௌத்தமும் தமிழும்*, கழகவெளியீடு, சென்னை, 1957, பக். 60–63, 64–70.
4. க. நெடுஞ்செழியனின் ஐராவதம் மகாதேவனது *"Early Tamil Epigraphy from the Earliest times to the sixth century AD"* நூல்குறித்த ஆய்வுரை.
5. H. Krishna Sastri, ARE 1919, pp. 330-332p, ARE 1908 -09 Paragraph-7.
6. K.V. Subramaniya Iyyar, *Ibid*
7. *Jaina Art and Architecture*, Vol. I. A. Ghosh (Ed), Bharatiya Janapith, New Delhi - 1974, pp.74-81.
8. *பௌத்தமும் தமிழும்*, பக். 64–67
9. *மேலது.* பக். 71–72.
10. I. Mahadevan, *Early Tamil Epigraphy from the earliest times to the sixth century A.D.*, Cre-A, Chennai and Harvard University, USA, p. 127.
11. *சிலப்பதிகாரம்*, கொலைக்களக்காதை, அடி. 18–19.
12. I. Mahadevan, *Ibid.* pp. 371, 379.
13. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, *தமிழ்நாட்டில் பௌத்தம்*, *சிந்தனை*, பேராதனை 1968.

14. ர. விஜயலட்சுமி, *தமிழகத்தில் ஆசீவர்கள்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988 பக். 99.
https://t.me/daily_paper
15. A.L. Basham, *The wonder that was India*, Calcutta, 1998, pp. 294-296.

A.L. Basham, *History and Doctriences of the Ajivikas*, Reprint 1981/ Delhi.

16. *தமிழகத்தில் ஆசீவர்கள்*, பக். 100:

17. எ. சுப்பராயலு, *தமிழ்கல்வெட்டுச் சொல்லகராதி*, முதல் தொகுதி அ–ஜெ, சாந்தி சாதனா, சென்னை, 2003, ப. 46.

18. *Early South Indian Palaeography*, p. 188.

19. க. நெடுஞ்செழியனின் ஐராவதம் மகாதேவனின் நூல்மதிப்பீட்டுக் கட்டுரை.

20. R. Nagaswamy, The origin of Brahmi Script (Ed) S.P. Gupta, K.S. Ramchandran, Delhi 1980, 80-81.

21. K.V. Raman, The Brahmi Inscriptions of Tamilnadu An Historical Assessment, *The Srilanka Journal of South Asian Studies*, Vol. I, Jaffna 1976.

22. *Epigraphical Evidences for Tamil Studies*, pp.88-90.

23. *International Journal of Dravidian Linguistics*, LIJDL Vol. XXXIII No. I, Trivananthapuram, 2003.

24. *Early South Indian Palaeography*, p. 167

25. *மதுரைக் காஞ்சி*, அடி. 475–488.

26. *Epigraphical Evidences for Tamil Studies* p. 100.

27. U.P. Shwa, Jaina - Rupa - Mandama, abhirav, Publications, New Delhi-p.3

28. I. Mahadevan, *Ibid* p. 553.

# 6

https://t.me/daily_paper

# தமிழ்-பிராமி கல்வெட்டுகள் காட்டும் தமிழகச் சமூகப் பொருளாதார நிலை

தமிழ்பிராமி கல்வெட்டுகள் மூலமாக அக்காலச் சமூகம், பொருளியல் வாழ்வைப் பற்றிய அறியக் கிடைக்கும் செய்திகள் குறைவே. பொன்னையும் பொருளையும் வெறுத்து துறவு வாழ்வை மேற்கொண்ட துறவியரையும் அவர்களது இருப்பிடங்களையும் அவற்றை உருவாக்கிக் கொடுத்த கொடையாளர்களையும் பற்றியே இவை கூறுகின்றன. எனினும் இக்குகைத்தளங்களைக் கல்தச்சர்களைக் கொண்டு பொருள் செலவுசெய்து உருவாக்கிய கொடையாளிகள் மற்றும் அவர்கள் அளித்த கொடைகள் மூலம் சமூகப் பொருளாதாரச் செய்திகளை நம்மால் ஊகிக்கமுடியும்.

## குடிகள்

நால்வருணப் பாகுபாட்டை தமிழ்-பிராமி கல்வெட்டுகள் குறிப்பிடவில்லை. பல்வேறு தொழில் செய்த குடியினர் பெயர்களே அறக்கொடையாளராகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. சங்ககாலச் சமூகம் தொழில் அடிப்படையில் பிரிந்த குடிநிறை சமூகமாகவே இருந்துள்ளது என்பதை இலக்கியங்களும் காட்டுகின்றன. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் கீழ்க்கண்ட குடியினர் பற்றித் தெரியவருகிறது.

## இளையர்

சித்தன்னவாசல் கல்வெட்டில் முனிவர்களது குகைத்தளத்தை உருவாக்கிய அறக்கொடையாளராக இளையர் என்ற குடியினர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் படைத்தொழிலை மேற்கொண்ட குடியினராகச் சங்ககாலத்தில் திகழ்ந்துள்ளனர். முத்துப்பட்டி கல்வெட்டில் குறிப்பிடப்படும் எளமகன் (இளமகன்) இக்குடியினரைச் சார்ந்தவனாகவே இருக்க வேண்டும். செங்கம் நடுகல் கல்வெட்டுகளில் போர்த் தொழில் செய்த படைவீரர்கள் இளமகன் என்றே குறிப்பிடப்படுகின்றனர். எனவே இளமகன் அல்லது இளமக்கள் என்பவர்கள் அரசனிடத்திலோ அல்லது சிறுகுடித்தலைவர்களிடத்திலோ பணிபுரிந்த படைத்தொழில் புரியும் குடியினராக இருக்க வேண்டும் எனலாம்.

## ஈழகுடும்பிகன்

https://t.me/daily_paper

திருப்பரங்குன்றம் கல்வெட்டில் ஈழகுடும்பிகன் போலாலயன் என்பவன் குறிப்பிடப்படுகின்றான். இவன் எருகாட்டூரில் இருந்த ஈழநாட்டைச் (இலங்கை) சார்ந்த குடியினனாக இருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். சங்கஇலக்கியப் புலவர்களில் ஒருவராக ஈழத்துப் பூதன்தேவனார் விளங்கியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஈழகுடும்பிகன் போலாலயன் கள்ளிறக்கும் குடும்பத்தினைச் சார்ந்தவனாக இருக்கவேண்டும் என்று ஐ. மகாதேவன் கருதுகிறார்[1]. ஈழவர் என்பவர்கள் கள்ளிறக்கும் தொழிலை மேற்கொண்டவர்கள் என்பதைப் பிற்காலச் செப்பேடுகள், கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

## மலைய்வண்ணக்கன் - மணிய்வண்ணக்கன்

அரச்சலூர் கல்வெட்டில் வரும் அறக்கொடையாளர் பெயரை இருவிதமாகப் படித்துள்ளனர். மலைய்வண்ணக்கன் என்று இதனைப் படித்த மகாதேவன் மலைசார்ந்த குடியினைச் சார்ந்தவன் என்று இவனைக் கருதுகின்றார்[2]. கொங்கு நாட்டில் கொங்கு வேளாளரில் வண்ணக்கர் கோத்திரம் என்ற பிரிவு இன்றும் வழங்கப்படுகிறது. வண்ணக்கன் என்பதற்கு மேலும் ஒரு பொருள் சொல்லப்படுகிறது. வர்ணகா என்பதற்கு பாடல் வல்ல இசையாசிரியன் என்று பொருள் கூறி இவன் அரச்சலூர் இசைக்கல்வெட்டை உருவாக்கியவன் என்று கருதுகின்றனர். மணிய் வண்ணக்கன் என்று இக்கல்வெட்டைப் படிப்பவர்கள் மணிகளைப் பரிசோதிக்கும் தொழிலை மேற்கொண்டவன் இவன் என்று கருதுகின்றனர்.

சங்கப் புலவர்களில் வண்ணக்கன் என்ற பெயரைப் பெற்ற புதுக்கயத்து வண்ணக்கன் சம்பூர்கிழான், வடம வண்ணக்கன் தாமோதரன், வண்ணக்கன் கோமருங்குமரனார் என்ற புலவர்கள் இருந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

## வேள்

வேள் என்று பெயர் பெற்ற குடியினர் சங்க காலத்தில் புகழுடன் வாழ்ந்துள்ளனர். கடையேழு வள்ளல்களில் சிலர் இவ்வேளிர் குடியினரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். மேட்டுப்பட்டி கல்வெட்டில் குவிரஅந்தை வேள்அதன் (வேளாதன்) என்பவன் குறிப்பிடப்படுகின்றான்.

## கொல்லர், தச்சர்

பொன் செய் கொல்லன், பாறையை உடைத்துக் கட்டடங்களை உருவாக்கும் தச்சர் பெயர்கள் அழகர்மலை, மாமண்டூர் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.

## வணிகர்

வணிகர்கள் பெருமளவு சமண சமயத்திற்கு ஆதரவு அளித்திருக்கின்றனர். அழகர்மலை, மாங்குளம், புகளூர் முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் இதற்குச் சிறந்த சான்றுகளாக உள்ளன. பாண்டியரின் தலைநகரான மதுரை வணிகத்தில் சிறந்து விளங்கிய நகரமாக இருந்துள்ளதை மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது. பல்வேறு வணிகம் செய்த வணிகரின் கடைத்தெருக்கள் மதுரையில் இருந்துள்ளன. பல நாடுகளைச் சார்ந்த வணிகர் இதில் தங்கியிருந்து வணிகம் செய்துள்ளனர். மதுரையில் இருந்து பல பொருட்களைக் கொண்டு வணிகம் செய்த வணிகர்கள் சேர்ந்து அழகர்மலைப் பள்ளியை உருவாக்கியுள்ளனர். அவர்களது பெயர்கள் பின்வருமாறு கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது:

1. மதிரை பொன்கொல்வன் அதன்அதன்
2. உபு வாணிகன் வியகன் (உப்பு வணிகன்)
3. பாணித வாணிகன் நெடுமலன்
4. கொழு வாணிகன் எளசந்தன்
5. வெண்பள்ளி அறுவை வணிகன் எளஅ அடன்

இவர்கள் அனைவரும் தொடர்ச்சியாக அமைந்த நீண்ட இரு கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர். தொடக்கத்தில் குறிக்கப்படும் மதிரையை (மதுரை) இவர்கள் அனைவருக்கும் உரிய ஊர் என்று கொள்ளலாம். மதுரையைச் சார்ந்த பொன்வணிகன் இங்கு குறிப்பிடப்படுகின்றான். ஆனால் இவன் பெயர் குறிப்பிடப்படவில்லை.

சங்க காலத்தில் உப்பு வணிகம் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்றிருக்கிறது. நெல்லும் உப்பும் ஒரே விலையாகச் சங்ககாலத்தில் இருந்துள்ளன. நெல்லை வாங்கிக் கொண்டு உப்பை அதே அளவு பண்டமாற்றாகக் கொடுத்துள்ளனர். (அகம் 140,340). இதனால் உப்பு வணிகர் வணிகர்களில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். அழகர்மலைக் கல்வெட்டில் வியகன் என்ற உப்புவணிகன் குறிப்பிடப்படுகின்றான்.

பாணிதவாணிகன் நெடுமலன் என்பவன் அழகர்மலைக் கல்வெட்டில் அறக்கொடையாளராக இடம் பெற்றுள்ளான். பணிதம் என்றால் சர்க்கரை என்று பொருள் கூறி இவன் சர்க்கரை வியாபாரியாக இருக்க வேண்டும் என்று ஐராவதம் மகாதேவன் கருதுகின்றார். பளிதம் என்ற சொல்லே கல்வெட்டில் பாணித என்று குறிப்பிடப்படுகிறது. பளிதம் என்றால் பச்சைக்கற்பூரம் என்று பொருள். சங்க காலத்தில் அதனை அடைகாயோடு (பாக்கு) சேர்ந்து அருந்தினர். எனவே பாணித வணிகன் என்பவன் பச்சைக்கற்பூர வியாபாரியாக இருக்க வேண்டும் என்று மயிலை. சீனி. வேங்கடசாமி கருதுகின்றார்[3]. கொழு வணிகன் கலப்பை வியாபாரம் செய்யும் வணிகன் என்று ஐ.மகாதேவன் கருதுகின்றார்[4]. இரா. நாகசாமி இவன் இரும்பு வியாபாரியாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார்[5]. சங்ககாலத்தில் துணியை வியாபாரம் செய்த வணிகர்கள் அறுவை வணிகர் என்றழைக்கப்பட்டனர். வெண்பள்ளி என்ற ஊரைச் சார்ந்த இளஆட்டன் (எளஅஅடன்) அழகர்மலைக் கல்வெட்டில்

https://t.me/daily_paper

குறிப்பிடப்படுகின்றான். மதுரையில் அறுவை வாணிகம் செய்த சங்கப்புலவர் ஒருவர் இருந்துள்ளார். இவர் இளவேட்டனார் என்றழைக்கப்பட்டுள்ளார். சங்கப் பாடல்கள் சிலவற்றைப் பாடியுள்ள மதுரையைச் சார்ந்த புலவர்கள் சிலர் வணிகர்களாக இருந்தமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அவர்கள் மதுரைக் கொல்லன் புல்லன், மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார், மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார், மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராய்த்தனார், மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார் ஆகியோராவர்.

https://t.me/daily_paper

சங்ககாலத்தில் சேரரின் தலைநகராக விளங்கிய கருவூரும் வணிகச் சிறப்பு பெற்ற நகரமாகத் திகழ்ந்துள்ளது. கருவூருக்கு அருகில் அமைந்த புகளூர்ச் சமணப்பள்ளிக் கல்வெட்டில், கருவூர் பொன்வணிகன் நந்தி என்பவன் குறிப்பிடப்படுகின்றான் இவனும் சமண முனிவர்களுக்குப் படுக்கை அமைத்துக் கொடுத்துள்ளான். புகளூர் கல்வெட்டில் எண்ணைவணிகன் வெநிஆதன் (வெண்ணி ஆதன்) என்பவன் குறிப்பிடப்படுகின்றான்.

## நிகமம்

வெள்ளறை என்ற ஊர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் வணிகத் தளமாக விளங்கியதை மாங்குளம் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இவ்வூர் நிகமத்தினைச் சார்ந்தவர்கள் மாங்குளம் மலையில் முனிவர்களது உறைவிடங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர். நிகமம் என்றால் வணிகர்குழு அல்லது வணிகருக்குரிய கடைத்தெரு என்று பொருள். நிகமம் என்பதே சங்க இலக்கியத்தில நியமம் என்று குறிப்பிடப்படுகிறது. சங்க காலத்தில் பல முக்கிய நகரங்களைச் சார்ந்து நியமங்கள் இருந்திருக்கின்றன.

மாங்குளம் கல்வெட்டு குறிப்பிடும் வெள்ளறை மாங்குளம் மலைக்கு அருகில் அமைந்த ஊராகும். தற்போது இது வெள்ளரிப்பட்டி என்ற பெயரில் வழங்குகிறது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் இவ்வூரில் இருந்த நிகமத்தில் பல வணிகர்கள் சேர்ந்து குழுவாக வாழ்ந்துள்ளனர். மதுரைக்கு அருகில் அமைந்த இவ்வூரில் பாண்டியரின் தலைநகரில் வணிகம் செய்ய ஏதுவாக நிகமம் ஒன்று இங்கு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இது பெருவழியில் பயணம் செய்த வணிகர்கள் தங்கவும் பொருள்களை வைத்துப் பாதுகாக்கவும் விற்பனை செய்யவும் பயன்பட்டிருக்க வேண்டும். காவிதி என்ற பட்டம்பெற்ற வணிகர்கள் வெள்ளறை நிகமத்தில் இருந்துள்ளதை மாங்குளம் கல்வெட்டு தெரிவிக்கிறது.

## தொழில்கள்

பொன்னைக் கொண்டு ஆபரணங்கள் செய்தல், கடலிலிருந்து உப்பை எடுத்தல், கரும்பிலிருந்து சர்க்கரை எடுத்தல், ஆடை நெய்தல், இரும்பை உருக்கி கலப்பை போன்ற பொருட்கள் செய்தல் எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தல் முதலிய தொழில்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளதை அழகர்மலை, புகளூர் கல்வெட்டுகள் மூலம் உய்த்தறிய முடிகிறது. கல்லை உடைத்து கட்டடங்களை உருவாக்குதல் சங்க காலத்திலேயே தொடங்கிவிட்டது என்பதற்குத் தமிழ்பிராமி கல்வெட்டுக் குகைத்தளங்களே சிறந்த சான்றுகளாகும். மாமண்டூர் கல்வெட்டில் அக்குகைத்தளத்தினை உருவாக்கிய தச்சன் பெயர் குறிப்பிடப்படுகிறது.

மலையைக் குடைந்து குகைத்தளத்தினை உருவாக்கும் தொழிலை 'குயித்தல்' (குடைத்தல்) என்று கொங்கர்புளியங்குளம் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

https://t.me/daily_paper

## செலாவணி (காசுகள்)

கொங்கர்புளியங்குளம், அழகர்மலை கல்வெட்டுகளில் குகைத்தளங்களை உருவாக்கியவர்களின் பெயர்கள் உள்ள கல்வெட்டுகளில் அவர்கள் பெயருக்குப் பின்னர் குறியீடுகள் காணப்படுகின்றன. இவை குகைத்தளத்தினை உருவாக்கச் செலவுசெய்த பொன்னைக் குறிக்கும் குறியீடுகள் என்று மயிலை. சீனி. வேங்கடசாமி கருதுகின்றார். இக்குறியீடுகள் முத்திரை குத்திய காசுகளில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

கொங்கர் புளியங்குளம் கல்வெட்டில் காசினைக் குறிக்க வரும் வெபோன் என்ற சொல் சங்ககாலத்தில் காசுகள் வழக்கத்தில் இருந்ததைக் காட்டுகிறது. 'வெண்பொன்' என்பதே கல்வெட்டில் 'வெபோன்' என்று குறிப்பிடப்படுகிறது. இக்காசு தமிழ்-பிராமி கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட காலத்தில் இந்திய நாடெங்கும் புழக்கத்தில் இருந்த முத்திரை குத்தப்பட்ட வெள்ளி நாணயமாக இருக்க வேண்டும்.

## வேளாண்மை

விக்கிரமங்கலம் கல்வெட்டில் வரும் பேர்அயம் என்ற சொல் ஏரியைக் குறிப்பதாக மகாதேவன் கருதுகின்றார்[6]. வரிச்சியூர் கல்வெட்டு நூறு கலம் நெல் பற்றித் தெரிவிப்பதாகக் கூறுகின்றார்[7]. இவை தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் காலத்தில் வேளாண் நீர்பாசண வசதிகள், வேளாண் விளைச்சல், அவற்றின் விளைச்சல் மிகுதி, பகிர்மானம் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் காலத்தில் இருந்த சமுதாயப் பொருளாதார நிலை வருமாறு:

- வேள் நிலையிலிருந்து வேந்தர் நிலைக்கு மாறியதாகவும் வேள் மற்றும் குடிநிலை எச்சங்களை உடையதாகவும் விளங்கியது.
- வேளாண்மை வளர்ச்சிக்கு உறுதுணையான பாசண வசதிகளில் கவனம் செலுத்தப்பட்டதால் ஏரி பராமரிப்புகள் (பேரயம்); நெல், கரும்பு, எள், பருத்தி முதலிய பயிர் உற்பத்திகள்; கரும்பிலிருந்து சர்க்கரை (பாணித), எள்ளிலிருந்து எண்ணெய், பஞ்சிலிருந்து துணி (அறுவை), உழவிற்கு உபகரணமான கொழு (கலப்பை) உற்பத்தி என வேளாண் சார் ஆலைத் தொழில்கள்; இவை தொடர்பான வணிகம் ஆகிய குறிப்புகள் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன எனலாம்.
- பொன், வெள்ளி, மணிக்கற்கள், பற்றிய குறிப்புகள் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படுவதும், முத்திரை குத்திய காசுகளின் குறியீடுகள் காணப்படுவதும் அக்கால செலாவணிகளின் தன்மையையும் சமூகத்தின் போகத்துய்ப்பு நிலையையும் காட்டுகின்றன.

https://t.me/daily_paper

- முசிறி, தொண்டி முதலிய பண்டைத் துறைமுகங்களின் பெயர்கள் கடல் கடந்த பன்னாட்டு வணிகத்தை உணர்த்துகின்றன.

- அழகர்மலையில் ஐந்துவகை வணிகர்களும் புகளூரில் இருவகை வணிகர்களும், மாங்குளத்தில் வணிகநிகமமும் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் குறிக்கப்படுவதிலிருந்து பல்வகை வணிகர்களும் ஓரிடத்தில் கூடும் நடைமுறை இருந்ததையும் அவர்கள் கட்டுக் கோப்புடன் குழுக்கள் அமைத்துக் கொண்டதையும் அறியமுடிகிறது.

- ஆட்பெயர்களில் நிறைய பிராகிருதப் பெயர்கள் உள்ளதும் சாதவாகனர் காசில் தமிழ்-பிராமி உள்ளதும் தமிழ் நாட்டுடனான தக்கண, வட இந்திய வணிகத்தைக் காட்டுவனவாகும்.

- பானை ஓடுகளில் கீரல்களாக உள்ள தமிழ்-பிராமி சொற்கள் கடல்கடந்து இந்தோ-ரோமானிய வணிகத்தையும், உரைக்கல்லில் காணப்படும் தமிழ்-பிராமி பொறிப்பு கிழக்காசிய வணிகத்தையும் தமிழகம் பெற்றிருந்தது எனத் தெளிவாகக் காட்டுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. I Mahadevan, *Early Tamil Epigraphy*, p. 584.
2. *மேலது*, பக். 616 – 617.
3. மயிலை. சீனி. வேங்கடசாமி, *சங்ககாலத்துப் பிராமி கல்வெட்டுகள்*, கழகவெளியீடு, சென்னை, 1981, பக். 57.
4. I. Mahadevan, *Ibid.* P. 573.
5. *கல்வெட்டியல்*, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, 1980, பக். 52.
6. I. Mahadevan, *Ibid.* P. 568-569.
7. *மேலது* பக். 558.

# 7

https://t.me/daily_paper

# தமிழ்-பிராமி கல்வெட்டுகள் காட்டும் அரசியல்

தமிழகத்தில் கிடைக்கும் பிராமி கல்வெட்டுகள் மூலம் சங்க காலத்திய வரலாறு ஓரளவு பெறப்படுகிறது. பாண்டியர் மற்றும் சேர மன்னர்களின் பெயர்களைச் சுட்டக் கூடிய கல்வெட்டுகள் ஒருசில இடங்களில் காணப்படுகின்றன. தகடூரை ஆண்ட அதியமான் மரபினரின் பெயர் தாங்கிய கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டுகள் தவிர, பானை ஓடுகளிலும் காசுகளிலும் சில பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றின் மூலம் அறியப்படும் வரலாற்றுச் செய்திகளை இங்கே காணலாம்.

## நெடுஞ்சழியன்

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் பாண்டிய மரபினர். இவர்களைப் பற்றிய செய்திகள் மகாபாரதம், மகாவம்சம் ஆகிய நூல்களில் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களும் விரிவாகப் பேசுகின்றன. ஆயினும் கல்வெட்டுச் சான்றுகளே மிக நம்பகத்தன்மையுடைவை என்பதால் அவற்றில் இடம்பெறும் பாண்டியர் பற்றிய செய்திகள் முக்கியமானவையாகும். மதுரையைச் சுற்றிலும் 14 இடங்களில் தமிழ்-பிராமிகல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் மிகத் தொன்மையானதாகக் கருதப்படுபவை மாங்குளம் (மீனாட்சிபுரம்) கல்வெட்டுகளாகும். இங்குக்கிடைத்துள்ள ஆறு கல்வெட்டுகளில் இரண்டில் நெடுஞ்செழியன் என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. பாண்டியர் மரபில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என இரு அரசர்கள் சங்க இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளனர். முதலாமவன் சேரன் செங்குட்டுவனுக்கும், இலங்கை வேந்தன் கயவாகுவுக்கும் சமகாலத்தவன் என்பதால் அவனது காலத்தை கி.பி. 2ஆம் நூற்றாண்டு எனக் கருதுவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேரன் மாந்தரன் சேரல் இரும்பொறையின் சமகாலத்தவன் எனக்கருதப்படுவதால் அவனும் காலத்தால் பிற்பட்டவனே. ஆனால் மாங்குளம் கல்வெட்டின் தொல்லெழுத்தமைதி கொண்டு இவை கி.மு. 2 ஆம் நூற்றாண்டினது எனக்கணித்துள்ளனர். எனவே இக்கல்வெட்டுகளில் இடம் பெறும் நெடுஞ்செழியன் அசோகனது காலத்தில் வாழ்ந்த ஒரு பாண்டிய அரசன் எனக் கொள்ளலாம். முற்சொல்லப்பட்ட இருவரையும் விட காலத்தால் மிக முற்பட்டவன் எனலாம். அசோகனது பாறைச் சாசனங்களிலேயே பாண்டியர் பற்றிய குறிப்பு இருப்பதால் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே பாண்டிய அரசர்கள் இருந்தமை உறுதிப்படுகிறது.

மற்றொரு கல்வெட்டில் நெடுஞ்செழியனின் உறவினன் (சாலகன்) குறிப்பிடப்படுவதால் முன்னவன் சாதாரண மனிதன் அல்ல என்பதும் முக்கியத்துவம் பெற்ற ஒருவன் என்பதும்

https://t.me/daily_paper

அறியப்படும். மேலும் இக்கல்வெட்டில் 'வழுதி' என்னும் சொல்லும் இடம் பெற்றுள்ளது. வழுதி என்பது பாண்டிய மன்னர்களின் பெயர்களில் குறிப்பிடப்படும் பின்னொட்டுச் சொல்லாகும். முதுகுடுமிப் பெருவழுதி, இளம்பெருவழுதி, உக்கிரப்பெருவழுதி என்ற சில அரசர்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளனர். கடலன், பணஅன் போன்ற கல்வெட்டுச் சொற்களும் பாண்டியரது துறைமுகத் தொடர்பையும், வாணிகத்தொடர்பையும் குறிப்பனவாக உள்ளன. எனவே இக்கல்வெட்டுகள் பாண்டிய அரசமரபினரையே குறிக்கின்றன என்று கொள்ளலாம்.

## பெருவழுதி

ரா. கிருஷ்ணமூர்த்தி கண்டறிந்து வெளியிட்டுள்ள சங்கப்பாண்டியர் காசு ஒன்றில் 'பெருவழுதி' என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. இதன் எழுத்தமைதி கொண்டும் இக்காசு கி.மு. 2 ஆம் நூற்றாண்டினது எனக் கருதுகின்றனர்.

## மாறன் – கடுமான்

அழகர் மலைக் கல்வெட்டு ஒன்றில் 'கழுமாறநதன்' என்றபெயர் இடம்பெறுகிறது. இதில் கழுமாறன் என்பது 'கடுமான்' என்பதன் மாற்றுச் சொல்லாக இருக்கலாம் என்பர். மாறன் என்பதும் பாண்டிய மரபின் பெயர் ஆகும். எனவே 'கடுமாறன்' என்னும் பாண்டியனாக இவனைக் கருதலாம்.

## சிழிவன்

அரிட்டாபட்டியில் இரண்டு பிராமிக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இரண்டும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையே. ஒன்றில் 'நெல்வெளி சிழிவன் அதினன் வெளியன்' என்னும் பெயரும், மற்றொன்றில் 'இலஞ்சி இளம் பேராதன்' எனும் பெயரும் வரக் காணலாம். சிழிவன் என்பதைச் செழியன் எனும் சொல்லின் மாற்றுவடிவமாகக் கொண்டு இதனைப் பாண்டியர் மரபின் பெயர் எனக் கொள்ளலாம். இலஞ்சி இளம் பேராதன் என்பவனையும் பாண்டிய மரபின் வேளிர் தலைவன் எனக் கருதலாம்.

## சேரர் கல்வெட்டுகள்

கரூருக்கு அருகில் உள்ள புகளூரில் கண்டறியப்பட்டுள்ள இரண்டு கல்வெட்டுகளில் மூன்று சேர மன்னர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவர்கள் இரும்பொறை மரபினர் ஆவர். கோஆதன் செல்விரும்பொறை, அவன்மகன் பெருங்கடுங்கோன் அவனது மகன் இளங்கடுங்கோன் ஆகிய மூவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்து பாடல்களின் 7, 8,9 ஆம் பத்துகளின் பாட்டுடைத் தலைவர்களான, செல்வக் கடுங்கோவாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய மூவருடனும் இவர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இங்குக் கூறப்படும் பெருஞ்சேரல் இரும்பொறை

https://t.me/daily_paper

அதியமான்நெடுமான் அஞ்சியுடன் போரிட்டு வென்றவன். முரசுகட்டிலில் அமர்ந்து உறங்கிய புலவர் மோசி கீரனாரின் களைப்புத் தீர கவரிவீசிக் கருணை செய்தவன். இவன் மகன் இளங்கடுங்கோ இளவரசுப் பட்டம் எய்திய போது சமணத்துறவியருக்கு உறைவிடம் அமைத்துக் கொடுத்துள்ளான்.

இச்சேரமன்னர்களின் காலம் கி.பி. 1-2 ஆம் நூற்றாண்டு எனலாம். கேரள மாநிலத்தில் எடக்கல் என்னுமிடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகளிலும் சேரர்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இச்சேரர்கள் கருவூர்ப் பகுதியை ஆண்ட பொறையர் குடிக்கும் வேறானவர்கள். மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஆட்சி புரிந்த இவர்கள் பற்றிய விரிவான செய்திகள் அறியப்படவில்லை. 'கடுமி புதசேர' என்ற பெயரை மட்டும் ஒரு கல்வெட்டு தருகிறது. 'கடுமான்' என்பதே 'கடுமிபுத' என வழங்கியுள்ளது. சதியபுத என்பது அதியமான் எனப்பட்டது போல இதனைக் கொள்ளலாம். கடுமான் என்பது குட்டுவன் கோதை, மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஆகியோர் பெற்றிருந்த சிறப்புப் பெயராகும். மற்றொரு கல்வெட்டில் 'கோ ஆதன்' எனும் ஒரு பெயர் மட்டுமே உள்ளது. ஆதன் என்னும் சொல் சேரர் வழியினரின் பெயர்களில் காணப்படுவதே எனினும் எம்மன்னனைக் குறித்தது என்பதைத் திடமாக இக்கல்வெட்டு உணர்த்தவில்லை.

கரூரில் கிடைத்த செப்புக்காசுகளில் கொல்லிப்புறை, கொல்லிரும்புறை, எனும் பெயர்கள் காணப்படுகின்றன.மறுபுறத்தில் வில் அம்பு சின்னங்களும் இருப்பதால் இவை சேரர் காசுகள் என முடிவு காணப்பட்டுள்ளது. குட்டுவன்கோதை, மாக்கோதை என்ற பெயர்களுடன் அரசர் தலைபொறித்த வெள்ளிக்காசுகளும் கிடைத்துள்ளன. மேற்கண்ட கல்வெட்டுகளையும், காசுகளையும் கொண்டு சங்கச்சேரர் பற்றிய ஓரளவு செய்திகளே அறியமுடிகின்றன.

## சோழர் பற்றிய செய்திகள்

சங்ககாலச் சோழமன்னர்கள் காலத்திய பிராமி கல்வெட்டுகளோ, காசுகளோ இதுவரை தமிழகத்தில் கிடைக்கப் பெறவில்லை. வேறு சில தொல்பொருட்களில் சில பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பெயர் ஒற்றுமை கருதி இவை சோழ மரபின் மன்னர்கள் என ஊகிக்கப்பட்டுள்ளன.

கரூரில் கிடைத்த வெள்ளி மோதிரம் ஒன்றில் 'தித்தன்' என்னும் பெயர் காணப்படுகிறது. சங்கப்பாடல்களில் உறையூர் தித்தன், தித்தன் வெளியன் என இருபெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன வீரைவேண்மான் வெளியன் தித்தன் என ஒருவன் இலக்கியங்களில் இடம்பெறுகிறான். வீரை என்பதனை வீராம்பட்டினம் (அரிக்கமேடு) எனும் இடமாகக் கருதுகின்றனர்.

தேரிருவேலி அகழாய்வில் கிடைத்த பானை ஓடு ஒன்றில் 'நெடுங்கிள்' என்ற பெயர் காணப்படுகிறது. நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி என்னும் இருசோழ வேந்தர்கள் சங்க இலக்கியங்களில் பாடப்பட்டுள்ளனர். இவ்விருவரின் சமகாலத்தவர் கோவூர்கிழார் எனும் சங்கப்புலவர். காரியாறு என்னுமிடத்தில் நெடுங்கிள்ளி மரணமடைந்தான். தேரிருவேலி பானை ஓட்டில் காணப்படும் 'நெடுங்கிள்' என்னும் பெயர் சோழ மன்னனைக் குறிக்கும் எனக் கருத

https://t.me/daily_paper

இயலாது. அரசனின் பெயர் தாக்கத்தால் சாதாரணமானவர்களும் அப்பெயரை வைத்துக்கொண்டனர் எனக் கொள்ளலாம். எனினும் இப்பெயர் வழக்கு முக்கியத்துவம் பெறுகிறது.

## அதியமான் மரபினர்

தமிழ்நாட்டில் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ஒரு சிற்றரசர் குடி அதியர் குடி. அசோகனது கல்வெட்டுகளில் பேசப்படும் 'சத்யபுத்ரர்' இக்குடியினரே எனத் தற்போது முடிவு ஏற்பட்டுள்ளதால் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே சேர, சோழ, பாண்டியர்க்கு இணையான ஓர் அரச குடியாக அதியர்குடி திகழ்ந்துள்ளது எனலாம்.

அதியன் நெடுமிடல் அதியமான் நெடுமான், அஞ்சி, எழுனி பொகுட்டெழினி எனப்பல அரசர்கள் இம்மரபில் வந்தவர்கள். இவர்களில் நெடுமான் அஞ்சி ஔவையாரின் சமகாலத்தவன். இவனைப்புகழ்ந்து பலபாடல்களை ஔவையார் பாடியுள்ளமை புறநானூற்றில் காணலாம். இவனே சேரமன்னன் பெருஞ்சேரல் இரும் பொறையால் வெல்லப்பட்டவன். இவ்விருவரின் காலமும் கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டாகும். அதியமான் நெடுமான் அஞ்சியின் பெயர் தாங்கிய பிராமி கல்வெட்டு திருக்கோயிலூருக்கு அருகில் 'ஜம்பை' எனுமிடத்தில் கண்டறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதனைக் கி.பி. முதல் நூற்றாண்டினது என்பர்.

## சிற்றரசமரபினர்

கரூரில் (புகழூரில்) கிடைத்த கல்வெட்டுகள் இரண்டில் பிட்டன், பிட்டந்தை, கொற்றந்தை ஆகிய பெயர்கள் இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் பிட்டன் என்னும் தலைவன் குதிரை மலையின் தலைவனாகவும், சேரர் படைத் தலைவனாகவும் பேசப்படுகிறான். என இக்கல்வெட்டுகளில் சேர அரசர்களோடு இவனும் தானமளித்துள்ளான் எனவே கருத வேண்டும். கொற்றந்தை என்னும் பெயர் குடுமியான்மலைக் கல்வெட்டிலும் இடம்பெறுவது கொண்டு இப்பெயர்கள் பரவலாகச் சங்காலத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டமை பெறப்படும்.

காஞ்சிபுரத்திற்கு அருகில் மாமண்டூரில் கிடைத்துள்ள கல்வெட்டு 'கணிமான் தேனூர் தந்த கோன்' எனக் குறிப்பிடுகிறது. கணிமான் என்பது சேரமரபின் தலைவனைக் குறிப்பதாகக் கருதலாம். அதியமான், மலையமான் போல கணிமான் எனும் சிற்றரசன் காஞ்சிப்பகுதியில் சில காலம் ஆட்சி செய்திருக்கலாம்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் கிடைத்த ஈயக் காசுகளில் 'அதிண்ணன் எதிரான் சேந்தன்' எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அதிணனின் அடுத்த வந்த சேந்தன் என இப்பெயர்களுக்குப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. அதிணன் எனும் பெயர் சங்க

இலக்கியங்களில் எங்கும் இடம் பெறவில்லை. அரிட்டாபட்டி தமிழ்-பிராமி கல்வெட்டில் 'அதிணன்' எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலங்களில் காணப்படும் எழுத்தமைதி கொண்டு இவை கி.பி. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகிறது.

https://t.me/daily_paper

அழகன்குளத்தில் கிடைத்துள்ள பானை ஓடு ஒன்றில் 'பதுமாற்கோதை' என்னும் பெயர் காணப்படுகிறது. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு எனலாம். கோதை எனும் பின்னொட்டுச் சொல்லைக் கொண்டு இது சேர இளவரசியைக் குறித்தது எனக் கருதலாம். பதுமன் எனும் பெயர் வெள் ஆவிக் கோமான் பதுமன் எனும் சேரர் தலைவனை நினைவுபடுத்துகிறது. இவனது இரண்டு மகள்கள் சேர அரசர்களும் மணம் முடிக்கப்பட்டுள்ளனர். எனினும் இப்பானை ஓட்டில் குறிப்பிடப்படும் பெயர் சேரர் தலைவனைக் குறிப்பதாகக் கொள்ள இயலாது.

## பட்டங்களும், அலுவலர்களும்

அரசன் என்பதைக் குறிக்க 'கோ' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கரூர் (புகளூர்) கல்வெட்டில் காணலாம். இங்கு இளவரசர்களைக் குறிக்க இளங்கோ என்ற சொல்லும் ஆளப்பட்டுள்ளது. கோ, கோன் என்னும் சொற்கள் முறையே எடக்கல், மாமண்டூர், ஆகிய இடங்களில் தலைவன் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாங்குளம் கல்வெட்டில் இடம்பெறும் 'பணஅன்' என்னும் சொல்லை அரசருக்குரிய சேவகன் எனப் பொருள் கொள்கிறார் திரு ஐராவதம் மகாதேவன். மாங்குளம் கல்வெட்டில் வரும் காழிதிகன், அழகர்மலைக் கல்வெட்டில்வரும் கண அதிகன் ஆகிய சொற்களில் வரும் 'அதிகன்' எனும் சொல்லைத் தனியாகப்பிரித்து அதற்குக் கண்காணிப்பாளர் எனும் பொருள் தருகிறார் அவர். காழ் + அதிகன் முத்துப்பரிசோதகர், கண + அதிகன், கணக்கு மேற்பார்வையாளர் எனக் கொள்கிறார். இதன் மூலம் அரச அலுவலர்களின் பதவிகள் கூறப்படுகின்றன.

'காவிதி' என்னும் சொல் மாங்குளம் கல்வெட்டிலும், திருமலை கல்வெட்டிலும் பயின்று வருகின்றன. இது வேளாளர்களுக்கும், வணிகர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்ட சிறப்புப் பட்டமாகும். திருப்பரங்குன்றம் கல்வெட்டில் 'மாராயம்' என்னும் பட்டம் இடம்பெறுகிறது. இது 'மகாராஜர்' என்பதிலிருந்து திரிந்து வழங்கியதாக இருக்கலாம்.

தமிழ் பிராமி கல்வெட்டுகள் அளவிலும் உள்ளடக்கத்திலும் சிறியனவாக இருப்பதால் பிற்காலக் கல்வெட்டுகளில் காணப்படுவது போன்ற விரிவான அரசியல் செய்திகளைப் பெறமுடியவில்லை. அரசு தோற்றகாலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் இவை என்பதால் குறைந்த அளவிலான செய்திகள் கிடைக்கின்றன எனக் கருதலாம்.

https://t.me/daily_paper

# 8

# தமிழ் - பிராமி கல்வெட்டுகளின் மொழி நிலை

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் முதலில் கண்டறியப்பட்ட காலத்தில் அவை ஏற்கனவே அறியப்பட்ட வட இந்தியக் கல்வெட்டுகள் மற்றும் இலங்கைக் கல்வெட்டுகளின் அடிப்படையில் பிராகிருத மொழியாகப் படிக்கப்பட்டு, அங்கனம் படிப்பதிலும் பொருள் கொள்வதிலும் குழப்பம் இருந்து வந்தது. இவற்றை முதலில் தமிழாகக் கருதிப் படித்திடாமையால் இக்குழப்பம் ஏற்பட்டது. கே.வி. சுப்பிரமணிய அய்யர் இக்கல்வெட்டுகள் அடிப்படையில் தமிழ் மொழியில் எழுதப்பட்டு கூடுதலாகக் கலவகையாக பிராகிருதச் சொற்கள் சேர்க்கப்பட்டு உள்ளதாகக் கருத்துத் தெரிவித்தார். கமில் ஜிலெபில் இவை தமிழ் என்றால் ஏன் அவ்வளவு வேறுபாடாக உள்ளது? இவை எந்த அளவு தமிழ்? எந்த வகைத்தமிழ் என்று கேள்விகள் எழுப்பினார். கிருஷ்ணசாஸ்திரி இவற்றில் 5 தமிழ் வார்த்தைகளைக் கண்டறிந்தார். கே.வி. சுப்பிரமணிய அய்யர் 12 தமிழ் வார்த்தைகளைக் கண்டறிந்தார். கமில் ஜிலெபயில் இவற்றில் 43 திராவிட வார்த்தைகள், 47 இந்தோ- ஆரிய வார்த்தைகள், 37 தெரியாத வார்த்தைகள் உள்ளன என்று பட்டியலிட்டார். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் இவை தமிழ் அல்லது தொடக்க நிலை தென்திராவிடக் கல்வெட்டுகள் என்றும் டி.வி. மகாலிங்கம் இவை தொடக்க நிலை தமிழ்க் கல்வெட்டுகள் என்றும் கருத்துத் தெரிவித்தனர். இக்கல்வெட்டுகள் அனைத்தையும் தெளிவாகப் படித்த ஐராவதம் மகாதேவன் சமீபத்தில் இக்கல்வெட்டுகளில் 307 வேர்ச் சொற்கள் உள்ளன. அவை

| | |
|---|---|
| திராவிடம் | 213 |
| இந்தோ-ஆரியம் | 81 |
| சந்தேகத்திற்கிடமானவை | 13 |

என்று கண்டறிந்துள்ளார். திராவிடம் தவிர பிற சொற்கள் பெயர்சொற்களாகவே இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் உள்ள அனைத்து வினைச் சொற்களும் திராவிடச் சொற்கள் என்று முடிவு செய்துள்ளார்.[1] அவர் திராவிடம் என்று குறிப்பிட்டாலும் பெரும்பாலான சொற்கள் திராவிட மொழிகளின் தாயான தமிழ் மொழிச் சொற்கள் என்பதில் ஐயமில்லை. அண்மையில் ஐராவதம் மகாதேவனது நூலுக்கு விமரிசனம் எழுதிய கார்த்திகேசு சிவதம்பி, ஏதோ ஒரு வகையில் தமிழ்மொழிக்கு ஒரு நிறுவன அமைப்பு (தமிழ்ச் சங்கம்போல) இருந்தமையாலேயே பெயர்ச் சொற்கள் மட்டும் கடன் சொற்களாகவும் வினைச் சொற்கள் தமிழ் - திராவிடமாகவும் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.[2]

இனி தமிழ் இலக்கணங்களின் அடிப்படையில் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் சொற்களை இங்குக் காண்போம்.

https://t.me/daily_paper

## மொழி முதல் வரும் உயிர்

**"பன்னீர் உயிரும் மொழி முதல் ஆகும்" – தொல். 49**

என்பது தொல்காப்பிய விதி. இவற்றுள் ஐ, ஒ, ஔ ஆகிய மூன்று தவிர்த்த ஏனைய ஒன்பதும் தமிழ்-பிராமி கல்வெட்டுக்களில் மொழி முதலாக அமைந்து வந்துள்ளன. இதற்கு எடுத்துக் காட்டாக

| | | |
|---|---|---|
| அதிட்டானம் | – | புகளூர் |
| ஆக | – | புகளூர் |
| இருவர் | – | அழகர் மலை |
| ஈத்த | – | ஜம்பை |
| உறை | – | திருவாதவூர் |
| ஊர் | – | விக்கிரமங்கலம் |
| எம் | – | விக்கிரமங்கலம் |
| ஏவ | – | தொண்டூர் |
| ஒபனப | – | எடக்கல் |

ஆகிய சொற்களைக் குறிப்பிடலாம்.

## மெய்ஏறி வரும் உயிர் (உயிர்மெய்)

'ஐ' 'ஔ' நீஙகலாக 10 உயிர் எழுத்துக்களும் தமிழ்-பிராமி கல்வெட்டுக்களில் உயிர் ஏறி உயிர்மெய்யாக மொழி முதலாக இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் – | – | 'அ' | – | அழகர்மலை |
| காத்தான் | – | 'ஆ' | – | முத்துப்பட்டி |
| கிழார் | – | 'இ' | – | அம்மன்கோயில்பட்டி |
| கீரன் | – | 'ஈ' | – | புகளூர் |
| குன்று | – | 'உ' | – | மாமண்டூர் |
| நெல் | – | 'எ' | – | வரிச்சியூர் |
| வேள் | – | 'ஏ' | – | மேட்டுப்பட்டி |
| பொன் | – | 'ஒ' | – | அழகர்மலை |
| கோன் | – | 'ஓ' | – | மாமண்டூர் |

போன்ற சொற்கள் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## 'யகர' மொழிமுதல்

https://t.me/daily_paper

"ஆ வோடல்லது யகரம் முதலாது" – தொல். 65

என்பது தொல்காப்பிய நூற்பா. இதன்படி புகளூர் கல்வெட்டில் 'ய' கரமெய் 'ஆ' வோடிணைந்து யாற்றூர் என்பதில் மொழிமுதலாக வந்துள்ளது.

## மொழிமுதல் 'ண' கரம்

"க த ந ப ம எனும் ஆவைந்தெழுத்தும் எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே" – தொல். 61

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே அஐ ஔ எனும் மூன்றலங் கடையே" – தொல். 62

"உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர் வஎன் எழுத்தோடு வருதலில்லை" – தொல். 63

"ஆ எ ஒ எனும் மூஉயிர் ஞகரத்து உரிய" – தொல். 64

"ஆ வோடல்லது யகரம் முதலாது" – தொல். 65

என்று மொழிக்கு முதல் வரும் எழுத்துக்களைப் பற்றித் தொல்காப்பியர் நூற்பா வகுத்துள்ளார். இதில் தொல்காப்பியர் 'ண' கரம் எந்த இடத்திலும் மொழிக்கு முதலில் வரும் என்று சுட்டவில்லை. இருப்பினும், புகளூர்க் கல்வெட்டில் உள்ள 'ணாகன் மகன் ஸங்கீரன்' என்ற கல்வெட்டில் ணாகன் என்ற பெயரில் ணா' காரம் மொழி முதல் எழுத்தாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

## ஆண்பால் ஒருமை விகுதி

ஆண்பால் ஒருமை விகுதியாகப் பல சொற்களில் 'அன்' விகுதி காணப்படுகிறது.

(எ-டு)

| | | |
|---|---|---|
| பணஅன் | – | மாங்குளம் |
| கடல்அன் | – | மாங்குளம் |
| ஸாலகன் | – | மாங்குளம் |
| சடிகன் | – | மாங்குளம் |
| வாணிகன் | – | அழகர்மலை |
| வணிகன் | – | அழகர்மலை |
| குடும்பிகன் | – | திருப்பரங்குன்றம் |

## பெண்பால் ஒருமை விகுதி

பெண்பால் ஒருமையில் 'அள்' விகுதி காணப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக புகளூர் கல்வெட்டில் காணப்படும் குறும்மகள், மகள் ஆகிய சொற்களைச் சுட்டலாம்.

## இகர யகரம் இறுதி விரவுதல்

https://t.me/daily_paper

"இகர யகரம் இறுதி விரவும்" - தொல். 58

என்கிறார் தொல்காப்பியர். இதற்கு இகர வீற்று மொழிக்கண் யகரத்திற்கு இகரமும், இகரத்திற்கு யகரமும் மாறி வரும் எனப் பொருள் கொண்டு, இதற்கு நாய், நாஇ எனும் எடுத்துக்காட்டினையும் உரையாசிரியர்கள் தருவர். மேற்குறிப்பிட்டுள்ள நூற்பாவில் உள்ள 'விரவி' என்ற சொல்லுக்குச் 'சேர்தல்' எனப் பொருள் கொண்டு சொல்லின் இறுதியில் 'இகரத்தின்' பின்னர் 'ய்' சேர்ந்து வரும் எனவும் பொருள் கொள்ளலாம். இவ்வகைக்குக் கீழ்க்காணும் சொற்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

| | சொல் | எழுதப்பட்டுள்ள முறை | கல்வெட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| 1. | பள்ளி | பளிஇய் | மாங்குளம் |
| 2. | பள்ளி | பளிய் | மாங்குளம் |
| 3. | கணி | கணிய் | மாங்குளம் |
| 4. | நத்தி | நத்திய் | மாங்குளம் |
| 5. | நெல்வெளி | நெல்வெளிஇய் | அரிட்டாபட்டி |
| 6. | கருக்கிய | கருஇய | வரிச்சியூர் |
| 7. | பள்ளி | பளிய் | திருமலை |
| 8. | பள்ளி | ப(ளி)ய் | குடுமியான்மலை |
| 9. | காவிதி | காவிதிஇய் | மாங்குளம் |
| 10. | வழு(த்)தி | வழுத்திய் | மாங்குளம் |
| 11. | மணி | மணிய் | அரச்சலூர் |
| 12. | இலஞ்சி | இலஞ்சிய் | அரிட்டாபட்டி |

மேற்குறிப்பிட்ட இகர ஈற்றுச் சொற்களில் இகரத்துடன் யகரவொற்று (ய) சேர்த்து எழுதப்பட்டுள்ளமை, யகரவொற்று அச்சொற்களில் நிலைமொழி ஈற்றின் உறுப்பாக விளங்கியிருந்தமையைத் தெளிவு படுத்துவதாக உள்ளது. மேற்குறிப்பிட்ட சொற்களோடு ஐகாரம் இணையும் போது இக்கூற்று தெளிவாகிறது.

| | | |
|---|---|---|
| பள்ளி + ஐ | = | பள்ளியை |
| கணி + ஐ | = | கணியை |
| மணி + ஐ | = | மணியை |
| காவிதி + ஐ | = | காவிதியை |
| வழு(த்)தி + ஐ | = | வழு(த்)தியை |

மேற்குறிப்பிட்ட சொற்களில் நிலைமொழி ஈற்றிலுள்ள 'இகரத்துடன் 'ஐகாரம்' சேரும்போது இவற்றின் இடையில் யகரமெய் தோன்றுவதைக் காணலாம். அங்ஙனம் தோன்றும் 'யகர மெய்யை நிலைமொழி ஈற்றின் உறுப்பு ஆகக் கொள்வதே ஏற்புடையதாக

இருக்கும் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் சொற்களின் சரியான வடிவத்தைப் புரிந்து கொள்ளத் துணை செய்கிறது.

https://t.me/daily_paper

## ஐகார ஈற்றுச் சொற்கள்

தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் தந்தை, அந்தை, ம(த்)திரை, உறைய் போன்ற ஐகார ஈற்றுச் சொற்களும் யகர மெய் சேர்த்து 'தந்தைய்', அந்தைய், மத்திரைய், உறைய் என எழுதப்பட்டுள்ளமையைக் காணலாம்.

அகர இகரம் ஐகாரம் ஆகும் என்பது தொல்காப்பிய விதி. அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல ஆகும் என்பார் இளம்பூரணர். யகர ஒற்றானது உயிரெழுத்தான இகரத்தின் மாற்றொலியனாக (cellophone) ஒரு நிலையிலும், இகர உயிர் யகரத்தின் மாற்றொலியனாக மற்றொரு நிலையிலும் கருதப்பட்டதால், அகர யகரம் ஐகாரம் எனப்பட்டது.

எனவே ஐ = அ + இ அல்லது அ+ய் என்பது தெளிவு.

எனவே, 'இகர யகரம் இறுதி விரவும்' என்ற நூற்பாவிற்கேற்ப ஐகார ஈற்றுச் சொற்களிலும், ஐகார ஈற்றுச் சொற்களின் உறுப்பாக 'யகர ஒற்று அமைவது இயல்பாகிறது.

அகர யகரம் ஐகாரமாகும் என்ற விதிக்கேற்ப, குடுமியான்மலைக் கல்வெட்டில் 'கொற்றந்தய்' என்ற பெயரில் வரும் ஈற்று ஐகாரம் 'அய்' காரமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

## விகுதியைத் தனியாகப் பிரித்தெழுதுதல்

தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் பல இடங்களில் விகுதி அதற்குரிய சொல்லிலிருந்து தனியாகப் பிரித்தெழுதப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது. இவ்வகைக்கும் கீழ்க்காணும் சொற்களை எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம்.

| | சொல் | எழுதப்பட்டுள்ள முறை | கல்வெட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| 1. | கொட்டியவன் | கொடிய் அவன் | மாங்குளம் |
| 2. | வெள்ளறை | வெள் அறை | மாங்குளம் |
| 3. | கொட்டியோர் | கொடிஓர் | மாங்குளம் |
| 4. | அரிதன் | அர் இதன் | திருவாதவூர் |
| 5. | பரசு | பர் அசு | திருவாதவூர் |
| 6. | உபாசன் | உப(ச)அன் | கீழவளவு |
| 7. | உபாசன் | உபசஅன் | கொங்கர்புளியங்குளம் |
| 8. | பாகனூர் | பாகன் ஊர் | கொங்கர்புளியன்குளம் |
| 9. | நல்முழாகை | நல்முழஉகை | வரிச்சியூர் |
| 10. | எயில் | எஇய்ல் | விக்கிரமங்கலம் |

https://t.me/daily_paper

| | | | |
|---|---|---|---|
| 11. | செய்வித்தோன் | [illegible] | விக்கிரமங்கலம் |
| 12. | பதினூர் | பதின்ஊர் | மேட்டுப்பட்டி |
| 13. | திடியில் | திடி இல் | மேட்டுப்பட்டி |
| 14. | வேம்பிற்றூர் | வேம்பிற்ஊர் | முதலைக்குளம் |
| 15. | பேரயம் | பேர்அய்அம் | முதலைக்குளம் |
| 16. | குமிழூர் | குமிழ் ஊர் | சித்தன்னவாசல் |
| 17. | அதிட்டானம் | அதட் அனம் | ஐவர் மலை |
| 18. | விந்தையூர் | விந்தை ஊர் | முத்துப்பட்டி |
| 19. | சய்யளன் | சைய்அளன் | முத்துப்பட்டி |
| 20. | நல்லியூர் | நல்லி(ய்)ஊர் | புகளூர் |
| 21. | காபியூர் | காபிஊர் | குன்றக்குடி |
| 22. | அகழூர் | அகழ்ஊர் | தொண்டூர் |
| 23. | கருவூர் | கருஊர் | புகளூர் |

*பொதுவான இலக்கண முறைப்படி உயிர் எழுத்து நிலைமொழியின் இறுதியில் உள்ள மெய்யோடு இணைய வேண்டும். எடுத்துக்காட்டாக ஆல்இலை என்பது ஆலிலை என்றும், மணி அழகு என்பது மணியழகு என்றும் எழுதப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட சொற்கள் பலவற்றில் உடம்போடு உயிர் சேராத நிலையில் எழுதப்பட்டுள்ளன.*

## ஒற்றுமிகாது எழுதுதல்

*ஒற்று மிகுத்தெழுதப்பட்டிருக்க வேண்டிய பல சொற்கள், தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் ஒற்று மிகாத நிலையிலேயே எழுதப்பட்டுள்ளன. (எ-டு)*

| | கல்வெட்டுச்சொல் | சொல் | இடம் |
|---|---|---|---|
| 1. | கொடுபிதோன் | கொட்டுபித்தோன் | மாங்குளம் |
| 2. | கொடுபிதவன் | கொடுபித்தவன் | கொங்கர்புளியங்குளம், திருப்பரங்குன்றம் |
| 3. | செய்பித | செய்பித்த | மன்னார்கோயில் |
| 4. | உபு | உப்பு | அழகர்மலை |
| 5. | தசன் | தச்சன் | மாமண்டூர் |

## ம் > ஞ் ஆக வருதல்

*நிலைமொழியில் 'மகர மெய் நிற்க, வருமொழியில் சகர உயிர் மெய் வந்து புணரும் போது, 'ம்' ஆனது 'ஞ்' சாகத் திரிவதை சில கல்வெட்டுக்களில் காண முடிகிறது.*

(எ-டு)

https://t.me/daily_paper

1. இளஞ்சடிகன் (இளம் + சடிகன்) - மாங்குளம்

2. நெடுஞ்சழியன் (நெடும் + சழியன்-) மாங்குளம்

## ம் > ங் ஆக வருதல்

நிலைமொழியில் மகர ஒற்றும் வருமொழியில் ககர உயிர்மெய்யும் வந்து, இரண்டும் இணையும் போது, மகரமெய் 'ங' கர மெய்யாக மாறுவதைப் பல கல்வெட்டுக்களில் காணமுடிகிறது.

(எ-டு)

| | | | |
|---|---|---|---|
| 1. | பெருங் கடுங்கோன் | பெரும்+கடும்+கோன் | புகளூர் |
| 2. | (இ)ளங்கடுங்கோ | இளம்+கடும்+கோ | புகளூர் |
| 3. | (இ)ளங்காயிபன் | இளம்+காயிபன் | தொண்டூர்கல்வெட்டு |
| 4. | செங்காயபன் | செம்+காயபன் | புகளூர் கல்வெட்டு |

## ள் > ண் ஆக வருதல்

மறுகால்தலை கல்வெட்டில் உள்ள வெண்காசிபன் என்ற சொல்லை வெள்+காசிபன் எனப் பகுக்கலாம். இங்கு ளகர மெய் 'ணகரமெய்யாக மாறியிருப்பதைக் காணலாம்.

## 'உகரம் 'ஊ' காரமாக நீட்டித்து எழுதப்படல்

ஐராவதம் மகாதேவன் அவர்களின் கணிப்புப்படி தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்களில் ஏறத்தாழ 16 இடங்களில் 'உ' கரம் 'ஊ' காரமாக நீட்டி எழுதப்பட்டுள்ளது

(எ-டு)

| | இயல்புநிலை | நீட்டித்தெழுதப் பட்டுள்ள சொல் | கல்வெட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| 1. | அந்துவன் |  | திருப்பரங்குன்றம் |
| 2. | அவ்(வி)(ரு)அ அர்உம் (அவ்விரு வரும்) |  | அழகர்மலை |
| 3. | அஸுதன் |  | மாங்குளம் |
| 4. | உதயனஸ |  | மேட்டுப்பட்டி |
| 5. | உப(ச)அன் |  | கீழவளவு |

https://t.me/daily_paper



| | | | |
|---|---|---|---|
| 6. | உபசன் | | திருவாதவூர் |
| 7. | உபறுவ(ன்) | | கொங்கர்புளியங்குளம் |
| 8. | உபு வாணிகன் | | அழகர்மலை |
| 9. | உறை | | திருவாதவூர், மேட்டுப்பட்டி |
| 10. | குன்றதூ | | ஆனைமலை |
| 11. | கொட்டபித்த அ | | மாங்குளம் |
| 12. | கொட்டுபிதோன் | | திருவாதவூர் |
| 13. | கொடுபிதோன் | | மாங்குளம் |
| 14. | நிகமது | | மாங்குளம் |
| 15. | பர் அசு | | திருவாதவூர் |
| 16. | பிணஉ | | மாங்குளம் |

## இகரம் மறைதல்

*புகளூர்க் கல்வெட்டில் நிலை மொழியில் 'ன்' கர ஒற்றிருக்க வருமொழியில் உள்ள 'இ' கரம் மறைந்து விடுவதாகத் தோன்றுகிறது*

*(எ-டு)*

1. மகன் + இளங்கடுங்கோ – மகன் ளங்கடுங்கோ – புகளூர்
2. கடுங்கோன் + இளங்கடுங்கோ – கடுங்கோன் ளங்கடுங்கோ – புகளூர்
3. ணாகன் மகன் + இளங்கீரன் ணாகன் மகன்ளங்கீரன் – புகளூர்

*சில சொற்களில், நிலை மொழியிலுள்ள 'ன்' கர ஒற்றும் மறைந்துள்ளது*

*(எ-டு) கடுங்கோன் + இளங்கோ - கடுங்கோளங்கோ - புகளூர்*

## 'அன்' விகுதி மறைதல்

*தமிழ் பிராமிக் கல்வெட்டில் பலசொற்களில் 'அன்' விகுதி மறைந்துள்ளமையைக் காணலாம்.*

*(எ-டு)*

1. அரட்டகாயிபன் (அரட்டன் + பாயிபன்)
2. கணக அதன் (கணக்கன் + ஆதன்)
3. குவிர அந்தை (குவிரன்+அந்தை)
4. நந்தஸிரிய் (நந்தன்+ஸிரிய்)

## பிராகிருதச் சொற்கள்

https://t.me/daily_paper

ஸிரி, இகுவன், தம்மம், பளி, ஸுதன், நிகமம், கணி போன்ற பல பிராகிருதச் (பாகதச்) சொற்கள் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

## ஈ, தா கொடு

**"ஈதாகொடு எனக் கிளக்கும் மூன்றும் இரவின் கிளவி ஆகிடன் உடைத்தே"(தொல். 927)**

**"ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே" (தொல்.928)**

**"தா என் கிளவி ஒப்போன் கூற்றே" (தொல். 929)**

**"கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே" (தொல். 930)**

எனச் சொல்லதிகாரத்தில் தொல்காப்பியர் வரையறை செய்துள்ளபடி 'ஈ' என்ற சொல் தாழ்ந்தோன் உயர்ந்தோனிடம் இரந்து பெறும் போதும், 'தா' என்னும் சொல் தன்னை ஒத்தவன் ஒருவனிடம் இரந்து தானம் பெறும் போதும், 'கொடு' என்ற சொல் உயர்ந்தவன் தாழ்ந்தவனிடம் இரந்து பெறும் போதும் பயன்படுத்தப்பட வேண்டும். ஜம்பைக் கல்வெட்டு சமுதாயத்தில் உயர்ந்த நிலையிலிருந்த அரசனாகிய நெடுமான் அஞ்சி ப(ள்)ளி அமைத்தளித்ததைக் குறிப்பிடுகிறது. இதைக் குறிப்பிடும் போது 'ஈத்த பள்ளி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை மேற்குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்பவுள்ளது. மாமண்டூர் கல்வெட்டில் காணப்படும் 'கணிமான் தேனூர் தந்த கோன் குன்று' என்ற வாசகத்தில் கொடையளித்தவனாகக் கருதப்படும் குறுநிலத்தலைவனும், அக்கொடையைப் பெற்றுக் கொண்டவரும் சமுதாயத்தில் இணையான ஒரே நிலையில் ஒப்ப வாழ்ந்தவர்களாக இருக்கக் கூடும். மறுகால் தலை கல்வெட்டில், 'வெண்காசிபன் குடுபித கல்கஞ்சணம்' என்ற வாசகம் உள்ளது. கொடையினை அளித்துள்ள வெண்காசிபனைக் காட்டிலும் அக்கொடையினைப் பெற்றுக் கொண்ட சமண முனிவர் சமுதாயத்தில் உயர்நிலையில் இருந்தவர் என்பதை இக்கல்வெட்டு புலப்படுத்துவதாக இருக்கலாம்.

## அடிக்குறிப்புகள்

1. Iravatham Mahadevan *Early Tamil Epigraphy* pp 102-103.

2. கா. சிவத்தம்பி *சங்ககால வரலாறும் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளும்* (ஐராவதம் மகாதேவனின் ஆய்வு வெளிக்கொணரும் சிலமுக்கிய விடயங்கள் பற்றிய ஓர் ஆய்வுக் குறிப்பு) குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை – 2004.

https://t.me/daily_paper

9

# தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்கள்

தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் குகைத் தளம், படுக்கை, சுனை மற்றும் பிறவற்றைச் செய்து தந்தவர்கள், கொடை தந்தவர்களின் பெயர்கள் குறிப்பிடும் போதும் கொடை பெற்ற முனிவர்களைக் குறிப்பிடும் போதும் ஊர்ப் பெயர்கள் இடம் பெறுகின்றன. தமிழகத்தின் தொன்மைச் சான்றுகளான சங்க இலக்கியங்களில் ஏராளமான ஊர்ப் பெயர்கள் பதிவாகியுள்ளன. எனினும் தமிழ் - பிராமி கல்வெட்டுகளில் பதிவாகியுள்ள ஊர்ப் பெயர்கள் காலவரிசையில் எவ்வித உச்சரிப்பு மாற்றமும் அடையாது அப்படியே இன்றளவும் இருப்பவையாகும். தமிழ்-பிராமி கல்வெட்டுகள் சமயம் சார்ந்தவை. குகைத்தளங்களும் ஊரைவிட்டு ஒதுங்கியவை. ஊர்ப் பெயர்கள் சமய வழிபாடு என்ற நோக்கில் அன்று எவ்வளவு தொலைவிற்கு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன, எவ்வகை மக்கள் மேற்கொண்டனர் என்பதை அறியத் தருவனவாகும் ஊர்ப்பெயர்களின் வேர்ச் சொற்கள் ஒட்டுச் சொற்களைக் கொண்டு ஊர்களின் தன்மையை அறியமுடியும். அண்மையில் தமிழ் - பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்ப் பெயர்களையும் தக்கணத்தில் இதே காலத்தியக் கல்வெட்டுகளில் அறியப்பட்ட ஊர்ப் பெயர்களையும் ஆய்வு செய்த ஆய்வாளர். அலோகா பராசர் சென் சமய முக்கியத்துவம் உடைய இடங்களுக்குப் பயணித்தவர்கள் சமூகத்தில் வகித்த நிலைப்பாடு மற்றும் பயணித்த தொலைவு ஆகியவை தக்கணத்தை விடத் தமிழகத்தில் அளவிலும், வகையிலும் கூடுதலாக உள்ளது என்று கண்டுள்ளனர் என்ற கருத்தை முன்வைத்தள்ளார்[1].

தமிழ் பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்ப் பெயர்கள் பின்வருமாறு:

| ஊர்ப்பெயர் | காணப்படும் கல்வெட்டுள்ள ஊர் |
|---|---|
| வெள்அறை | மாங்குளம் |
| வெள்அறைய் | மாங்குளம் |
| நெல்வெளிஇய் | அரிட்டாபட்டி |
| இலஞ்சிய் | அரிட்டாபட்டி |
| பாங்காடு | திருவாதவூர் |
| பேதலை | விக்கிரமங்கலம் |
| மதிரய் | அழகர்மலை |
| மத்திரை | அழகர்கோயில் |
| பதின்(ஊ)ர் | மேட்டுப்பட்டி |

https://t.me/daily_paper

| | |
|---|---|
| வெண்பள்ளி | அழகர்மலை |
| குமுழ்ஊர் (எருமிநாட்டு) | சித்தன்னவாசல் |
| ஏழைய்ஊர் | கருங்காலக்குடி |
| திடிஇல் | மேட்டுப்பட்டி |
| பனைதுறை | ஐயர்மலை |
| எருக்காடுஊரு | திருமலை |
| எருக்காடூர் | பிள்ளையார்பட்டி |
| நாகபேரூர் | முத்துப்பட்டி |
| முசிறி | முத்துப்பட்டி |
| இவகுன்றம் | ஆனைமலை |
| யாற்றூர் | புகழூர் |
| (தா)வன்ஊர் | புகழூர் |
| தேனூர் | மாமண்டூர் |
| காபிஊர் | குன்றக்குடி |
| அகழ்ஊர் | தொண்டூர் |
| நாழள் | குடுமியான்மலை |
| பரம்பன்கோகூர் | அம்மன்கோயில்பட்டி |
| குணா | அய்யனார்குளம் |
| சிறுபோசில் | சித்தன்னவாசல் |
| கருஊர் | புகழூர் |
| நல்லிஊர் | புகழூர் |
| எயில் | விக்கிரமங்கலம் |
| வேம்பற்ஊர் | நடுமுதலைக்குளம் |

இனிஊர்ப் பெயர்களை ஒவ்வொன்றாகச் சற்றுவிளக்கமாகக் காண்போம்.

## மதிரை – மதிரைய் – மத்திரை

மேட்டுப்பட்டி சித்தர்மலையிலுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டில் மதுரை என்ற ஊர்ப்பெயர் 'மதிர' என்றொரு இடத்திலும், 'மதிரை' என்றொரு இடத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. அழகர் மலைக் கல்வெட்டில் 'மதிரய்' என்றோரிடத்திலும் 'மத்திரை' என்று வேறோர் இடத்திலும் வெட்டப்பட்டுள்ளது. இலக்கியங்கள் இவ்வூரின் பெயரை மதுரையென்றும் கூடலென்றும் குறிப்பிடக் கல்வெட்டு 'மதிரை' என்றுரைப்பது கவனத்திற்குரியது. மதிலரண் மிக்க மாநகர் என்ற பொருளில் 'மதில்+ஐ' என்றழைக்கப்பட்டு மதிரை ஆகியிருக்கலாம். 'கோட்டை' என்ற பொருளிலான 'எயில்' என்ற பெயருடன் ஊர்களிருப்பது போன்று மதிலின் சிறப்பு காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இகர யகரம் ஐகாரம் ஆகும் என்ற நூற்பாவிற்கொப்ப

மதிரை என்ற பெயர் மதிரய் என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு இடத்தில் 'த்' கர ஒற்று இரட்டித்து மத்திரை என்று பொறிக்கப்பட்டுள்ளது.

https://t.me/daily_paper

நான்மாடக் கூடல், சிவராஜதானி, பூலோக கயிலாயம், துவாத சாந்தபுரம், ஆலவாய், கடம்பவனம், என்று இவ்வூர் பல்வேறு பெயர்களாலும் சுட்டப்படுகிறது. மருதமரத்தை அடியொற்றி இவ்வூர் அமைந்துள்ளதென்றும் கருதுவர். சங்கப் புலவர்களில் ஏறத்தாழ நூறுபேர் மதுரையைச் சேர்ந்தவர்கள். ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருக்களையுடைய ஊர் என மதுரைக்காஞ்சியும்[2], நெடுநல்வாடையும் சுட்டுகின்றன[3]. வென்று எழுகொடியோடு வேழம் சென்று புகுகின்ற ஓங்கு நிலை வாயிலை உடைய அரண்மனை இங்கிருந்துள்ளது. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப் பூவோடு புரையும் சீறூராக இம்மதுரை மாநகர் திகழ்ந்திருந்ததாகச் சங்க இலக்கியங்கள் சொல்லும்.

## கருவூர்

புகளூர் தென்புறக் குகைத்தளத்திலுள்ள கல்வெட்டுக்களுள் ஒன்றில் கருவூர் பொன்வாணிகன் நத்தி என்பவர் அதிட்டானம் அமைத்துக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. சங்க காலத்துச் சேரவேந்தர்களில் இரும்பொறை மரபினரின் தலைநகராகக் கரூர் விளங்கியதாகக் கருதப்படுகிறது. மேற்குக் கடற்கரையிலிருந்து பாலக்காட்டுக் கணவாய் வழியாகக் கிழக்குக் கடற்கரைக்குச் சென்ற வணிக வழித்தடத்தில் கரூர் அமைந்துள்ளது. மேலும் தெற்கிலுள்ள மதுரையோடும் வணிக வழியால் இணைக்கப் பட்டிருந்திருக்கிறது. கரூரில் ஓடும் ஆன்பொருனை நதி இன்று அமராவதி என்றழைக்கப்படுகிறது.[4]

சங்கப் புலவர்களில் 11பேர் கருவூரினர் என்பதும், கருவூரில் எண்ணற்ற உரோமானிய தங்க, வெள்ளி நாணயங்கள் கிடைத்து வருவதும், சங்க காலத்தில் இவ்வூர் தனிச்சிறப்புடன் திகழ்ந்திருந்தமையை மேலும் உறுதி செய்கின்றன. கரூவூரில் சமீப காலங்களில் நூற்றுக்கணக்கான சேர நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கொல்லிப்புறை, கொல்லி இரும் புறையன், மாக்கோதை, குட்டுவன்கோதை எனச் சேரர் மன்னர்களின் பெயர்பொறித்த காசுகள் கிடைத்திருப்பதும் ஈண்டு குறிப்பிடத் தகுந்தது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பு நாணயங்கள் முதல் உருவம் பொறித்தது கி.பி. 3ஆம் நூற்றாண்டு வெள்ளி நாணயம் வரை இங்கு கிடைத்திருப்பது சங்க காலத்தில் கருவூர் சிறப்புடன் திகழ்ந்திருந்தமையைத் தெளிவுப்படுத்துகின்றது.

சோழர் காலத்தைச் சேர்ந்த 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் கருவூர் "கருவூரான வஞ்சி மா(ண்) நகரம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால், (இ.க.ஆ 335/1927 - 28) கருவூருக்கு வஞ்சி என்ற மாற்றுப் பெயரும் இருந்துள்ளதெனலாம். புராண ரீதியாகக் கருவூர் 'கர்ப்பபுரி' என்றழைக்கப்படுகிறது.

## தொண்டி

மதுரை மாவட்டத்தில் மேலூரிலிருந்து திருப்பத்தூருக்குச் செல்லும் சாலையில் உள்ள கீழவளவில் உள்ள கல்வெட்டில் தொண்டியைச் சேர்ந்தவர் பள்ளியமைத்தளித்துள்ள செய்தி

https://t.me/daily_paper

காணப்படுகிறது. சங்க காலத்தில் கிழக்குக் கடற்கரையில் ஒன்றும், மேற்குக் கரையில் ஒன்றுமாக இரண்டு தொண்டிப் பட்டினங்கள் இருந்துள்ளன. சேரநாட்டுத் தொண்டியைப் பற்றி அம்மூவனார் பாடியுள்ள பத்து செய்யுட்கள் ஐங்குறு நூற்றில் உள்ளன. அதே புலவர்,

> மணங் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
> வளங்கெழு தொண்டி

எனப் பாண்டி நாட்டுத் தொண்டியைச் சிறப்பித்துப் பாடியுள்ள பாடல் அகநானூற்றில் பத்தாம் பாடலாக இடம்பெற்றுள்ளது. இவ்விரு தொண்டிகளுள் குணதிசைக்கண் அமைந்துள்ள பாண்டிநாட்டு மீனவன் தொண்டியே கீழவளவிற்கு அருகிலுள்ளது. கீழவளவிற் கருகிலுள்ள மேலூர், பாண்டி நாட்டுத் தொண்டியோடு நெடுஞ்சாலையால் சங்க காலத்திலேயே இணைக்கப்பட்டிருக்கக்கூடும் எனக் கருதுவர்.

மதுரைக்கருகில் முத்துப்பட்டியிலுள்ள (கரடிப்பட்டிமலைக்) கல்வெட்டில் 'நாக பேரூரதைய் முசிறி கோடன் எள மகன்' என்ற வாசகம் காணப்படுகிறது. இதிலிருந்து சேரநாட்டுத் துறைமுகமான முசிறியைச் சேர்ந்த ஒருவர் மதுரையருகிலுள்ள நாகமலைக்கு வந்திருந்தமை தெளிவாகிறது. இதே போன்று சேர நாட்டுத் தொண்டித்துறை முகத்தைச் சேர்ந்த ஒருவர் கீழவளவுக்கு வந்து கொடையளித்திருக்கவும் வாய்ப்புள்ளது.

## முசிறி

மதுரையிலிருந்து தேனி செல்லும் சாலையில் பல்கலைக்கழகம் செல்லும் வழியில் முத்துப்பட்டி அருகிலுள்ள கரடிப்பட்டி மலையில் உள்ள தமிழ்-பிராமிக் கல்வெட்டில், 'நாகப்பேரூரதைய் முசிறி கோடன் எள மகன்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. பாஸ்கர ரவி வர்மனின் கொச்சிப் பட்டயம் முசிறியை 'முயிறிக்கோடு' என்று குறிப்பதற்கேற்ப, இக்கல்வெட்டில் முசிறி கோடன் என்ற ஆட்பெயர் அமைந்துள்ளதால், இக்கல்வெட்டு குறிப்பிடும் முசிறியைச் சேர நாட்டுத் துறைமுகப்பட்டனமான முசிறியாகக் கருதலாம். பெரிபுளூஸ், மென்மை மிக்க புடவைகளும், சித்திர ஆடைகளும், பவளமும், செம்பும், ஈயமும், இத்துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது. குட்ட நாட்டிலிருந்து வரும் மிளகும், முத்தும் யானைத் தந்தங்களும், பட்டும், இரத்தினமும், இத்துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகியுள்ளன. மிளகு ஏற்றுமதி பொன் இறக்குமதி குறித்து அகநானூற்றுப் பாடலும் குறிப்பிடுகிறது[6].

வியன்னா அருங்காட்சியகத்திலுள்ள கி.பி. 2ஆம் நூற்றாண்டு ஆவணம் ஒன்று முசிறி வணிகருக்கும் அலெக்சாண்ட்ரியா வணிகருக்குமிடையிலான வணிக ஒப்பந்தமாகக் காணப்படுகிறது. இவற்றிலிருந்து சங்க காலத்தில் முசிறித் துறைமுகப் பட்டினம் சிறப்பான நிலையிலிருந்தமை தெளிவாகிறது. இம்முசிறியைச் சேர்ந்தவர் நாகப்பேரூரைச் (மதுரை அருகிலுள்ள நாகமலை) சேர்ந்த அ(ந்)தை என்பவரிடம் போர் வீரராகப் (இளமகன்) பணியாற்றியுள்ளமை, மதுரைப் பகுதிக்கும் முசிறித் துறை முகத்திற்குமிடையில் நெருக்கமான தொடர்பிருந்தமையைப் புலப்படுத்துகிறது.

## இவகுன்றம்

https://t.me/daily_paper

மதுரை மேலூர் சாலையில் ஒத்தக்கடை அருகிலுள்ள யானைமலையில் உள்ள தமிழ் பிராமி கல்வெட்டில், இவகுன்றத்து உறையுள் என்ற சொல்லாட்சி காணப்படுகிறது. இதனை "இவகுன்றத்தூருறையுள்" எனவும் வாசிக்கலாம். எனவே, இக்கல்வெட்டில் சுட்டப்படும் இடப்பெயரை இவகுன்றம் எனக் கொள்வதற்குப் பதிலாக இவகுன்றத்தூர் எனக் கொள்ளலாம். 'இவகுன்றம்' என்பதற்கு இவ்குன்றம் (இந்த குன்றம்) எனவும், யானை மலை (இவம்=யானை) எனவும் இருவிதமாகப் பொருள் கொள்ளலாம். ஆனைமாமலை ஆதியாய இடங்களில் என தேவாரம் சுட்டுவதிலிருந்து[6] தேவார காலத்தில் இம்மலைக்கு யானை மலை என்ற பெயர் வழங்கியுள்ளது தெளிவாகிறது. எனவே, சங்ககாலத்திலும் யானைமலை என்ற பொருளிலேயே இம்மலைக்கு இவகுன்றம் என்ற பெயர் வழங்கியுள்ளதெனக் கருதுவது பிழையாகாது.

## நாகபேரூர்

மதுரை நகரிலிருந்து காமராசர் பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் வழியிலமைந்துள்ள முத்துப்பட்டி கிராமத்திற்கருகிலுள்ள கரடிப்பட்டி மலையிலுள்ள கல்வெட்டில் நாகபேரூர் என்ற ஊர்ப் பெயர் காணப்படுகிறது. இம்மலைக்கருகிலுள்ள நாகமலையே கல்வெட்டுக் காலத்தில் 'நாக பேரூர்' (நாகப்பேரூர்) என்றழைக்கப்பட்டிருக்க வேண்டும் இப்பகுதியில் முதுமக்கள் தாழி கண்டறியப்பட்டிருப்பது, இப்பகுதியில் தொன்மையான ஊரிருக்கை இருந்தமையை உறுதிசெய்கிறது.

## இலஞ்சிய்

மதுரையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில், மதுரையிலிருந்து 25 கி.மீ தூரத்தில் சற்று உள்ளடங்கி உள்ள அரிட்டாபட்டி கழிஞ்சமலையில் உள்ள சமணர் உறைவிடத்தில் பாறையின் நெற்றியிலுள்ள கல்வெட்டொன்றில் 'இலஞ்சிய்' என்ற ஊர்ப் பெயர் காணப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி - குற்றாலம் பகுதியில் 'இலஞ்சி' என்ற ஊர் இருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இக்கல்வெட்டுக்கு அருகில் உள்ள மற்றொரு தமிழ்-பிராமிக் கல்வெட்டில் நெல்வெளிஇய் என்ற ஊர்ப்பெயர் சுட்டப்பட்டுள்ளதால் இங்குச் சமண முனிவர்களுக்கு முழாகை (குகைத்தளம்) அமைத்துக் கொடுத்த கொடையாளர்கள் முறையே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இலஞ்சி, மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள் என்று கருதலாம். இகர யகரம் இறுதி விரவும் என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கேற்ப[7] இவ்விரு இகர ஈற்றுப்பெயர்களிலும் இகரத்தைத் தொடர்ந்து யகர ஒற்று விரவி வந்துள்ளதெனலாம்.

## நெல்வெளிஇய்

அரிட்டாபட்டியிலுள்ள தமிழ்-பிராமிக் கல்வெட்டில் காணப்படும் 'நெல்வெளிஇய்' என்ற ஊர்ப்பெயருக்கு நெல்வயல்கள் நிறைந்த ஊர் எனப் பொருள் கொள்ளலாம். இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் திருநெல்வேலியை இப்பெயர் குறிப்பதாகக் கருதலாம்.

## எருகாடு ஊரு

https://t.me/daily_paper

திருமலை கல்வெட்டில் 'எருகாடு ஊரு' எனவும், திருப்பரங்குன்றம் கல்வெட்டில் 'எருகாடூர்' எனவும் குறிப்பிடப்படும் ஊர்ப்பெயர் சங்கப்புலவர் தாயங்கண்ணனாரின் (புறநானூறு, 397) ஊர்ப்பெயரான எருக்காட்டூர் போன்றே ஒலிக்கிறது. தாயங் கண்ணனாரின் எருக்காட்டூரை உ.வே.சா. அவர்கள் தஞ்சைப் பகுதியிலுள்ள 'எருக்கங் காடாக' இனம் காண்கிறார். தமிழ்-பிராமி கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ள 'எருகாடு ஊரை' பாண்டிய நாட்டுப் பகுதிக்குள் அடையாளம் காண்பதே பொருத்தமாக இருக்கும். 'எரு' என்ற பகுதிச் சொல் உரத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆடுமாடுகளைத் தொழுவமர்த்தி எருகட்டுகின்ற பழக்கம் இன்றும் பாண்டிய நாட்டுப் பகுதிகளில் உண்டு. நாகப்பேரூர், யாற்றூர், தாவன்ஊர், காபி ஊர், அகழ்ஊர், பாகன்ஊர், ஏழைய் ஊர் எனப் பல பெயர்களில் 'ஊர்' என்ற இடச்சுட்டு விகுதி 'ர்' என மெய்யெழுத்தோடு முடிந்திருக்க, இவ்வூர்ப் பெயரில் மட்டும் உகரமேறி 'ஊரு' என ஒலித்து நிற்பது குறிப்பிடத்தக்கது.

## நாழள்

குடுமியான் மலையில் உள்ள தமிழ் பிராமிக்கல்வெட்டு 'நாழள்' என்ற ஊரைச் சேர்ந்த கொற்றந்தய் என்பவர் பள்ளி அமைத்தளித்ததைக் குறிப்பிடுகிறது. புலி நகக் கொன்றை அல்லது மயில் கொன்றை என்றழைக்கப்படும் நாழல் சிவப்பு அல்லது பொன் மஞ்சள் வண்ணமலர்களையுடையது. ஐங்குறுநூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஞாழர் பட்டு, யாப்பெருங்கலக்காரிகை விருத்தியில் காணப்படும் ஞாழல் மூதூர், குமிழி ஞாழல், கொடி ஞாழல், மதுரை அளக்கர் ஞாழல் போன்ற சங்கப்புலவர்களின் ஊர்கள் எனப் பல இடப்பெயர்களில் ஞாழல் இடம்பெற்றிருப்பது ஈண்டு ஒப்புநோக்கர்குறியது.

## திடிஇல்

மேட்டுப்பட்டி கல்வெட்டில் திடிஇல் என்ற ஊரார் கொடையளித்த செய்தியுள்ளது. மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்திலுள்ள திடியன் கிராமத்தை இவ்வூராக அடையாளம் காண்பர். 'திடி' என்ற பகுதி' திட்டி, திட்டு, திட்டை' (மேடு) என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

## வெள் அறைய்

மாங்குளத்திலுள்ள இரண்டு கல்வெட்டுக்களில் 'வெள்அறை' என்ற இடப்பெயர் காணப்படுகிறது. 'வெள்' என்ற பகுதி 'வெண்மை' நிறத்தைச் சுட்டுவதாக அமையும்; 'அறைய்' என்ற விகுதி பாறையைக் குறிக்கும். எனவே 'வெள்அறைய்' என்ற பெயருக்கு 'வெண்குன்று' எனப் பொருள் கொள்ளலாம். மதுரை மாவட்டத்தில், மேலூர் மாவட்டத்தில், இக்கல்வெட்டுள்ள மலைக்குத் தெற்கிலுள்ள வெள்ளரிப்பட்டியை 'வெள் அறைய்' ஆகக் கருதுகின்றனர்.

## வெண்ப(ளி)இ

https://t.me/daily_paper

அழகர்மலையிலுள்ள தமிழ்பிராமி கல்வெட்டொன்றில் வெண்ப(ள்ளி)இ என்ற ஊரைச் சேர்ந்த அறுவை வணிகர் குறிப்பிடப்பட்டுள்ளார். 'வெண்' என்ற பகுதி, வெள்ளை வண்ணத்தையும் தூய்மை, ஒளி போன்ற கருத்துக்களையும் புலப்படுத்துவதாக உள்ளது. 'பள்ளி' என்ற விகுதி உள்கிராமம் எனப் பொருள்படும். (திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு) அகநானூற்றில் (107:8) 'ஆன் நிலைப் பள்ளி' எனச் சுட்டப்படுவதோடு இதனை ஒப்பு நோக்கலாம்.

'வெண்' என்ற பகுதியோடு அமைந்துள்ள வெண்காடு (திருவெண்காடு) வெண்டுறை (திருவண்டுதுறை), வெள்ளறை (திருவெள்ளறை), வெண்பாக்கம் (சென்னை - பூண்டிநீர்த்தேக்கப்பகுதியிலிருந்த கிராமம்) போன்ற பெயர்களோடு இப்பெயரை ஒப்பு நோக்கலாம்.

## தேனூர்

மாமண்டூரிலுள்ள கல்வெட்டில் தேனூர் என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இங்கு சுட்டப்பட்டுள்ள தேனூர் அடையாளம் காணப்படவேண்டும். இப்பகுதியில் தேசூர் என்ற பெயரில் ஊர் உள்ளது.

## (த)ாவன் ஊர்

புகளூர் கல்வெட்டில் கொடையளித்தவராகக் குறிப்பிடப்படும் பின்அன் குற்றனின் ஊராகத் (த)ாவன் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவன் என்பது ஆட்பெயராகக் காணப்படுகிறது.

## அகழ்ஊர்

தொண்டூர் கல்வெட்டில் அகழ்ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்திலுள்ள அகலூராக இனங் காணப்படுகிறது. 'அகழ்' என்பது அகழ்தலாகிய தோண்டுதலையும், தோண்டி அமைக்கப்பட்ட ஏரி, குளத்தினையும் குறிக்கும். இவ்வூருக்கு இவ்வூரிலுள்ள ஏரியால் இப்பெயரேற்பட்டிருக்கலாம்.

## பனைதுறை

ஐயர்மலைக் கல்வெட்டில் பனைதுறை என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இவ்வூருக்கருகில் ஓடுகின்ற காவிரியாற்றின் கரையில் பனைமரங்கள் நிறைந்த பகுதியிலமைந்த ஊர் என்ற முறையில் 'பனைதுறை' என்ற ஊர்ப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

## வெண்ப(ளி)இ

https://t.me/daily_paper

அழகர்மலையிலுள்ள தமிழ்பிராமி கல்வெட்டொன்றில் வெண்ப(ள்ளி)இ என்ற ஊரைச் சேர்ந்த அறுவை வணிகர் குறிப்பிடப்பட்டுள்ளார். 'வெண்' என்ற பகுதி, வெள்ளை வண்ணத்தையும் தூய்மை, ஒளி போன்ற கருத்துக்களையும் புலப்படுத்துவதாக உள்ளது. 'பள்ளி' என்ற விகுதி உள்கிராமம் எனப் பொருள்படும். (திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு) அகநானூற்றில் (107:8) 'ஆன் நிலைப் பள்ளி' எனச் சுட்டப்படுவதோடு இதனை ஒப்பு நோக்கலாம்.

'வெண்' என்ற பகுதியோடு அமைந்துள்ள வெண்காடு (திருவெண்காடு) வெண்டுறை (திருவண்டுதுறை), வெள்ளறை (திருவெள்ளறை), வெண்பாக்கம் (சென்னை - பூண்டிநீர்த்தேக்கப்பகுதியிலிருந்த கிராமம்) போன்ற பெயர்களோடு இப்பெயரை ஒப்பு நோக்கலாம்.

## தேனூர்

மாமண்டூரிலுள்ள கல்வெட்டில் தேனூர் என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இங்கு சுட்டப்பட்டுள்ள தேனூர் அடையாளம் காணப்படவேண்டும். இப்பகுதியில் தேசூர் என்ற பெயரில் ஊர் உள்ளது.

## (த)ாவன் ஊர்

புகளூர் கல்வெட்டில் கொடையளித்தவராகக் குறிப்பிடப்படும் பின்அன் குற்றனின் ஊராகத் (த)ாவன் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவன் என்பது ஆட்பெயராகக் காணப்படுகிறது.

## அகழ்ஊர்

தொண்டூர் கல்வெட்டில் அகழ்ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்திலுள்ள அகலூராக இனங் காணப்படுகிறது. 'அகழ்' என்பது அகழ்தலாகிய தோண்டுதலையும், தோண்டி அமைக்கப்பட்ட ஏரி, குளத்தினையும் குறிக்கும். இவ்வூருக்கு இவ்வூரிலுள்ள ஏரியால் இப்பெயரேற்பட்டிருக்கலாம்.

## பனைதுறை

ஐயர்மலைக் கல்வெட்டில் பனைதுறை என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இவ்வூருக்கருகில் ஓடுகின்ற காவிரியாற்றின் கரையில் பனைமரங்கள் நிறைந்த பகுதியிலமைந்த ஊர் என்ற முறையில் 'பனைதுறை' என்ற ஊர்ப்பெயர் ஏ ற்பட்டிருக்கலாம்.

## யாற்றூர்

https://t.me/daily_paper

யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற சமணத்துறவிக்கு உறைய் (உறைவிடம்) அமைத்துக் கொடுக்கப்பட்டதைப் புகளூர்க் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. கரூர் மாவட்டம் கரூர் வட்டத்திலமைந்துள்ள ஆத்தூர், புகளூர் மலைக்கருகிலுள்ள ஆத்தூராகையால், இவ்வூரே இங்கு குறிப்பிடப்படும் 'யாற்றூர்' எனக் கருதலாம். யாறு + ஊர் > யாற்றூர் > ஆற்றூர் > ஆத்தூர்

## பாங்கா(டு)

திருவாதவூர் கல்வெட்டில் பாங்காடு என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. 'பா' என்பது அகன்ற என்ற பொருளிலும், காடு என்பது பண்படுத்தப்படாத நிலம் என்ற பொருளிலும் வர, இவ்வூர்ப் பெயருக்கு விரிந்தகாடு என்று பொருள் கொள்ளலாம். திருவாதவூரருகிலுள்ள 'பனங்காடி' என்ற ஊர்ப் பெயர் 'பாங்காடு' என்ற ஊர்ப்பெயரின் திரிபாக இருக்கலாம்.

## எஇய்ல்

விக்கிரமங்கலம் உண்டாங்கல்லுப் பாறையிலுள்ள தமிழ் -பிராமிக்கல்வெட்டில் 'எஇய்ல்' என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. எயில் என்ற பெயர் மதிரலண் உள்ள ஊர், கோட்டை சூழ்ந்த ஊர் என்று பொருள்படும். எயில் என்ற ஊர்ப்பெயர் புறநானூறு மற்றும் நற்றிணை போன்ற சங்கப்பாடல்களிலும், காணப்படுவதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது[6].

## பேதலை

விக்கிரமங்கலத்திலுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டொன்றில் 'பேதலை' என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. குளித்தலை, சீத்தலை, செந்தலை போன்றுள்ளது இவ்வூர்ப் பெயர். இவ்வூர்ப் பெயர் பேய் என்ற பகுதியையும், தலை என்ற விகுதியையும் கொண்டுள்ளதெனலாம்.

## ஏழைய் ஊர்

கருங்காலக்குடியிலுள்ள பஞ்சபாண்டவர் மலையில் உள்ள தமிழ்-பிராமிக் கல்வெட்டில் 'ஏழைய் ஊர்' என்ற ஊர்ப்பெயருள்ளது. ஏழை என்ற பகுதியை 'இடை' எனக் கொண்டு நடுவூர் அல்லது இடை(யர்) ஊர் எனப் பொருள் கொள்வர்.

## நலி(ய்) ஊர் நல்லி(ய்) ஊர்

புகளூர் கல்வெட்டில் காணப்படும் இவ்வூர்ப் பெயரை நலிபிஊர் என்றும் நல்லிபி ஊர் என்றும் கூட வாசிக்கலாம். இதற்கு நல்லூர் எனப் பொருள் கொள்ளலாம். 8-9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் கல்வெட்டில் நல்லிமங்கலம் (தெ.க. 14:12அ) என்ற

ஊர்ப்பெயர் சுட்டப்படுவதை இங்கு ஒப்பு நோக்கலாம். இன்று புகளூர் அருகில் நன்னியூர் என்ற பெயரில் ஓர்ஊர் உள்ளது.

https://t.me/daily_paper

## பதின்(ஊ)ர்

மேட்டுப்பட்டி சித்தர்மலையிலுள்ள சமணப்படுக்கைகளில் தலைப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் பதின்(ஊ)ர் என்ற ஊர்ப்பெயருள்ளது. 'பத்து' என்ற பகுதி எண்ணிக்கையைக் குறிப்பதாக உள்ளது. இங்கு இப்பத்து எதனைச் சிறப்பாகச் சுட்டுகிறதென்பது தெளிவாகப் புரியவில்லை.

## குணா

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம் வட்டம் மன்னார் கோயிலில் (அய்யனார் குளம் பகுதி) இராஜாக்கள் பாறை அருகிலுள்ள நிலாப்பாறையில் உள்ள சமணப்படுக்கையின் தலைப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்-பிராமிகல்வெட்டு குணாவைச் சேர்ந்த 'இளங்கோ' என்பவர் பள்ளியமைத்தளித்ததைத் தெரிவிக்கிறது. குணக்கு என்பதற்குக் கிழக்கு என்று பொருளுள்ளதால், கீழ்த்திசையில் அமைந்த ஊர் என்ற பொருளில் 'குணா' என்ற பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

## பரம்பன் கோகூர்

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்திலுள்ள பெரியேரிப்பட்டியின் உள்கிராமமான அம்மன் கோயில்பட்டியில் உள்ள பெருமாள் கோயில் பாறையில் உள்ள சுனைக்கருகிலுள்ள கல்வெட்டில் 'பரம்பன் கோகூர்' என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இவ்வூர் பரம்பன் + கோகு + ஊர் எனப் பகுத்துப் பொருள்காணும் வகையில் அமைந்துள்ளது. பரம்பர் என்பது நிலத்தைப் பண்படுத்தி உழுத பயிர்செய்கின்ற உழுகுடிகளைக் குறிக்கலாம். கோகு என்பதைக் 'கோங்கு' என்ற மரப்பெயரின் சுருங்கிய வடிவமாகக் கொள்ளலாம். இந்த வகையில் உழுகுடிகள் வாழும் கோங்கு மரங்கள் நிறைந்த ஊர் என இவ்வூர்ப் பெயருக்குப் பொருள் கொள்ளலாம்.

## பாகன் ஊர்

மதுரை தேனி சாலையில் மதுரைப் பல்கலைக்கழகத்திற்கும், செக்கானூரணிக்கும் நடுவிலமைந்துள்ள கொங்கர் புளியங்குளம் பகுதியிலமைந்துள்ள மலையிலுள்ள தமிழ்பிராமிக் கல்வெட்டு பாகனூரைச் சேர்ந்த பே(ர)தன் பி(ட்)டன் என்பவர் வழங்கிய கொடையைக் குறிப்பிடுகிறது. சோழவந்தான் இரயில் நிலையம் பகுதியிலுள்ள கல்லில் காணப்படும் கல்வெட்டில் பெரும்பாகனூர் என்ற ஊர்ப் பெயர் காணப்படுவதால், சோழவந்தான் பகுதியிலேயே பாகனூர் அமைந்திருந்ததெனலாம். இக்கல்வெட்டு சிவாலயத்திலிருந்த கல்வெட்டாகக் கருதப்படுகிறது (தெ.கா. 14: 64- 9 ஆம் நூற்றாண்டு) 'பாகன்' என்ற பகுதிச் சொல் யானைப்பாகனைக் குறிக்கலாம். கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வேள்விக்குடி

செப்பேட்டிலும் 'பாகனூர் கூற்றத்து நாகமாமலை' எனக் கல்வெட்டுள்ள மலைத் தொடர் பற்றிய குறிப்புள்ளதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

https://t.me/daily_paper

## காபிஊர்

குன்றக்குடி மலையில், சுப்பிரமணியர் மலைக்கு மேற்கில் உள்ள ஞானியார்மடம் என்றழைக்கப்படும் பகுதியில், "காபிஊர் ஆதன் சாத்தான்" என்ற வாசகத்துடன் தமிழ்-பிராமிக் கல்வெட்டுள்ளது. காப்பியத் தொல்குடி என்ற பெயரில் தொல்குடி ஒன்றிருந்தமையைச் சிலம்பு எடுத்துக்காட்டுகிறது (சிலப்பதிகாரம் 30:83) தொல்காப்பிய இலக்கணத்தை நல்கிய தொல்காப்பியர், பதிற்றுப்பத்தில் நான்காம்பத்தின் ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனார், நற்றிணை 246 ஆம் பாடலின் ஆசிரியர் காப்பியன் சேர்ந்தனார் போன்றோரை இக்குடியினராகக் கருதலாம். இக்குடியினர் வாழ்ந்த ஊர் என்ற பொருளில் இவ்வூருக்குக் காபிஊர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் காபி+ஊர் > காபிஊர் > காபியூர்.

## வேம்பிற் ஊர்

மதுரை உசிலம்பட்டி வட்டத்திலுள்ள நடு முதலைக்குளத்திலிருக்கும் சின்ன உண்டாங்கல்லுப்பாறையில் ராக்காச்சிபுடவு பகுதியிலிருக்கும் தமிழ்-பிராமிக் கல்வெட்டில் வேம்பிற்ஊர் என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை வட்டத்திலுள்ள வேப்பத்தூராக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. ஆற்றூர் ஆத்தூரென மருவுதல் போல, குற்றாலம் குத்தாலம் எனக் கூறப்படுவதுபோல வேம்பில் ஊர் என்பது வேம்பில்+பற்று+ஊர் என்று வழங்கி வேப்பத்தூர் எனத் திரிந்திருக்க வாய்ப்புள்ளது.

## குமுழ்ஊர்

சித்தன்ன வாசலில் மலையில் உள்ள ஏழடிப்பாட்டத்திலுள்ள கல்வெட்டில் 'குமுழ்ஊர்' என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இவ்வூர் 'எருமி நாடு' என்ற நாட்டுப் பிரிவுக்குள் இருந்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது'. எருமிநாடு என்பது கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர்ப் பகுதியைக் குறிக்கும். (எருமை + நாடு; எருமை = மகிஷன்; மகிஷ + ஊர் > மைசூர்). குமுழ் என்பது குமுழ மரத்தைக் குறிக்கலாம். சங்க காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த அகநானூற்றுப் புலவரின் ஊர் குமிழி ஞாழல் எனப்படுவதோடு ஒப்ப நோக்க இத்தகைய பெயர்கள் சங்க காலத்தில் வழங்கியிருப்பது தெளிவாகிறது.

## தென்கு சிறுபொசில்

சித்தன்னவாசல் மலைக்குக் கிழக்கில் உள்ள பகுதி தென் சிறுவாயில் நாடு எனப்படுகிறது (25,320,636, பு.கோ.க.) 'பொசில்' என்பதற்கு வாயில் எனப்பொருள் கொள்ளலாம். கன்னடத்தில் ஹொசிலு என்றால் வாயில் என்று பொருள். எனவே, தென் சிறுவாயில் என்ற பெயரே இங்கு 'தென்கு சிறுபொசில்' எனக் கன்னடத்தாக்கத்துடன்

பொறிக்கப்பட்டுள்ளதெனலாம். இதில் குறிப்பிடப்படும் சிறுவாயில் (சிறுபொசில்) என்ற பெயரே இன்று சிறு+அன்னல்+வாயில் என்ற பொருளில் சிற்றன்னவாசல் (சித்தன்னவாசல்) என வழங்கி வருகிறதெனலாம்.

https://t.me/daily_paper

## கடிகை

மன்னார் கோயில் கல்வெட்டில் கடிகை கோவின் மகன் பெருங்கூற்றன் என்பவர் சுட்டப்படுகிறார். கடிகை என்பது பொதுவாகப் பலர்கூடிப் பயில்கின்ற கல்வி மையத்தைக் குறிக்கும். சேர்தல், கூட்டம், அவை என்றெல்லாம் இதற்குப் பல்வேறுவிதமாகப் பொருள்கொள்ளலாம். சோளிங்கபுரத்திலுள்ள பெருமாள்கோயிலைப் பேயாழ்வார், 'வண்பூங்கடிகை இளங்குமரன் தன் விண்ணகர்' (3444) என்று சுட்டுவதால் சோளிங்கபுரத்திற்குக் கடிகை என்ற ஊர்ப் பெயர் வழங்கியுள்ளமை தெளிவாகிறது. ஆய் மன்னர்களின், ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருப்பரப்புப் பட்டயத்தில் கடிகைப்பட்டனம் என்ற ஊர்ப்பெயர் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. ஆய்மன்னர்களின் தலைநகராக விளங்கிய ஆய்குடிக்கருகில் இம்மன்னார் கோயில் கல்வெட்டுள்ளமையால், இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கடிகை மேற்குறிப்பிட்ட கடிகைப் பட்டனத்திலிருந்துள்ளதெனலாம். இன்று இப்பெயரே கடயம் என்று மருவி வழங்கிவருகிற தெனக் கொண்டால், மன்னார்கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கடிகை இருந்த இடமே இன்று அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள கடயம் எனலாம்.

நாடோடியாக ஒவ்வொரு இடமாக ஊர்ந்து சென்ற மனிதன் ஓரிடத்தில் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தங்கியதால் 'ஊர்' ஏற்பட்டது என்பர் அவ்விதம் ஏற்பட்ட இடப்பெயர்களின் பின்னதாக இடைக்காலக் கல்வெட்டுகளில் ஊர் வேளாண்மை தொடர்பான குடியிருப்புகளைக் குறித்தது. தமிழ் பிராமி கல்வெட்டுகளில் தேனூர், காபி ஊர், அகழ்ஊர், கருஊர் ஆகிய பெயர்களைக் காண்கின்றோம் நீர்த்துறைகளில் அமைந்தவை 'துறை' என்ற ஒட்டுச்சொல் பெற்றன. பனைதுறை தமிழ்பிராமி கல்வெட்டில் காணப்படுகின்றது. மதில் சிறப்புடைய ஊர் 'எயில்'. மரப்பெயர்களில் ஞாழல் (நாழள்), வேம்பிற்ஊர், பனைதுறை ஆகியவையும்; திசை அடிப்படையில் 'குணா' என்ற ஊரும், பாறை, குன்று அடிப்படையில் வெள்அறைய், இவகுன்றம் ஆகியவையும் தமிழ் - பிராமி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவ்விதம் தமிழக வரலாற்றுத் தொடக்க காலத்தில் அதாவது எழுதப்பட்ட ஆவணங்கள் கிடைக்கத் தொடங்கும் காலத்திலேயே தமிழகம் நல்ல சமுதாய வாழ்விற்கான அடிப்படைப் பண்புகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## அடிக்குறிப்புகள்:

https://t.me/daily_paper

1. Aloka Parasher - Sen 'Names of Travellers and Inscriptions' paper presented in Symposium on Formative Phase in South Indian History, Chennai 6.2.2002.

2. வையை அன்ன வழக்குடைய வாயில்
வகை பெற எழுந்து வானம் மூழ்கி
சில் காற்று இசைக்கும் பல்புழை நல்இல்
யாறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில் – மதுரைக் காஞ்சி 356 – 359

3. மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் ஆறு கிடந்தன்ன அகநெடுந்தெருவில் – நெடு. 29–30

3. வென்று எழு கொடியோடு வேழம் சென்றுபுக குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில் – நெடு 87–88

4. 'காவிரி அன்றியும் பூவிரி புனல் ஒரு மூன்று உடன் கூடிய கூடல்'

காவிரியும், ஆன் பொருனையும், குடவன் ஆறும் ஒன்று கூடும் கூடல் என்று உரை கொள்வர். கரூருக்கு அருகில் அமராவதி (ஆன்பொருனை) காவிரியுடன் கலக்கிறது. அங்கு திருமுக்கூடல் என்ற ஊரும் உள்ளது.

5. யவனர் தந்த வினைமாண் நன்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளங்கெழு முசிறி – அகம் 149

6. தேவாரம் III. 39:1

7. தொல்காப்பியம் நூற்பா: 58

8. புறம் 3:9, 33:8; நற்றிணை 43:11

https://t.me/daily_paper

10

# தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் ஆட்பெயர்கள்

தமிழ் பிராமி கல்வெட்டுகளில் கீழ்க்கண்ட ஆட்பெயர்கள் காணப்படுகின்றன. அஞ்சி, அடன் (அட்டன்), அத்திரன், அதன், அதன் அதன், அந்துவன், அந்தை அரிய்தி, அந்தை அஸ¬தன், அந்தை இராவதன், அந்தை சேந்த(ன்), அந்தைப் பிகன், அந்தை (வி) ஸ¬வன், அர்இதன், அர்இய்தன், அரட்ட காயிபன், அரிதி, ஆதன் சாத்தன், ஆதன் செல்லிரும்பொறை, ஆதன், ஆய்சயன் நெடுசாதன், ஆரிதன், இளவோன், இளங்கடுங்கோ, இளங்காயிபன், இளங்கோ, இளஞ்சடிகன், உதயன(ன்), உபறுவ(ன்), எளசு அடன், எளசந்தன், ஒபனப விரஅ, கடல்அன் வழுத்திய், கடுங்கோன் (இ)ளங்கடுங்கோ, கணிமான், கவுடிஇ, கழுமாற நதன், கஸபன், காத்தான், காயபன், கீரன் கொறி, கீரன் கொற்றி, குவிர அ(ந்)தை, குவிர அந்தை வேள், குவிரன், கொற்றந்தை, கோடன், சடிகன், சந்தந்தை சந்தன், சந்தரிதன், சந்திர நந்தி , சிழிவன், சிழிவன் அதினன் வெளியன், செங்காயபன், செங்குவிரன், செற்அதன், செக்கந் தண்ணி, சேக்கந்தி, கைய் அளன், நாகன், தந்ம(ன்), தியன் சந்தன், தே(வ)ன் (ச)ா(த்த)ன், நக்க(ன்), நத்தி, நடன், நதஸிரிய் குவ(ன்) நெடுஞ்சழியன், நெடுமலன், பார்அசு, பிடந்தை, (பிட்டந்தை), பிடன் (பிட்டன்), பின்அன் குற்றன், பூதிவிர, பெருங்கடுங் கோன், பெருங்கீரன், பே(ர)தன் பிடன், போலாலயன், மோசி, வியக்கன் கோபன் கணதேவன், வியகன், வெண்காசிபன், வெநிஆதன், வெஸன், னாகன், ஸபமிதா போன்ற பல ஆட்பெயர்கள் காணப்படுகின்றன.

## பெண்பாற் பெயர்கள்

குறமகள் இளவெயினி (புறநானூறு 157) பேய் மகள் இளவெயினி (புறநானூறு 11) வையாவிக்கோப்பெரும் பேகனின் மனைவி கண்ணகி (புறநானூறு, 143, 144, 145, 146, 147) போன்ற சங்க காலப் பெயர்களில் காணப்படுவது போன்றே தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களிலும் பெண்பாற் பெயர்கள் 'இ' கர விகுதியுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. புகளூர் கல்வெட்டில் காணப்படும் பிட்டன் குறும்மகள் கீரன் கொற்றி, பிடந்தை மகள் கீரன் கொற்றி; நெகனூர் பட்டியிலுள்ள சேக்கந்தி தாயியரு சேக்கந்தண்ணி, ஆகியவை இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். புகளூர் கல்வெட்டில் காணப்படும் 'குறும்மகள்' என்பதற்கு இளைய மகள் எனப் பொருள் கொள்ளலாம். சேக்கந்தி என்ற பெயரிலுள்ள 'கந்தி' என்ற சொல் சமணப் பெண் துறவியைக் குறிக்கும். 'தாய்' என்ற சொல் 'தாயியரு' என்று வெட்டப்பட்டுள்ளது. மேலும் அழகர்மலை கல்வெட்டில் 'ஸபமிதா' என்று காணப்படும் பெயரும் பெண்பால் பெயரே, எனினும் இது வட மொழிப் பெயராகும்.

## இள

https://t.me/daily_paper

சங்க காலத்தில் இள என்ற முன்னொட்டோடு பல பெயர்கள் வழங்கி வந்துள்ளன. உறையூர் இளம் பொன் வாணிகனார் (புறநானூறு 264), கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி (புறநானூறு 182), குறமகள் இளவெயினி (புறநானூறு 157) தொண்டைமான் இளந்திரையன் (புறநானூறு 185), பொருந்தில் இளங்கீரனார் (புறநானூறு 53), மதுரை இளங்கண்ணி கௌசிகனார் (புறநானூர் 309), இளங்கண்டீரக்கோ (புறநானூறு 151), இளங்குமணன் (புறநானூறு 47), இளந்தத்தன், இளம் விச்சிக்கோ (புறநானூறு 151), இளவெளிமான் (புறநானூறு 207,. 237), நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி (புறம் 10), உருவப்பல்தேர் இளஞ் சேட்சென்னி (புறநானூறு 4), செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி, (புறநானூறு 370, 378) போன்ற சங்க காலப் பெயர்கள் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளெனலாம்.

இதே போன்று 'இள' என்ற சிறப்பு முன்னொட்டோடு தமிழ்-பிராமி கல்வெட்டுகளிலும் பெயர்கள் காணப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. புகளூர் கல்வெட்டில் காணப்படும் (இ)ளங்கடுங்கோ, தொண்டூர் கல்வெட்டில் காணப்படும் (இ)ளங்காயிபன், மன்னார் கோயில் கல்வெட்டிலுள்ள (இ)ளங்கோ, மாங்குளம் கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ள இளஞ்சடிகன், வரிச்சியூர் கல்வெட்டு குறிப்பிடுகின்ற இளநதன், அழகர்மலை கல்வெட்டிலுள்ள எளஅ அடன் எளசந்தன் போன்றவை இவ்வகைக்குரிய எடுத்துக்காட்டுகள்.

## பெரு

பெருமைக்குரிய, உயர்ந்த, மூத்த எனப் பொருள்படக் கூடிய 'பெரு' என்ற சிறப்பு முன்னொட்டோடு சங்க காலத்தில் பல பெயர்கள் வழக்கிலிருந்துள்ளன. கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி, (புறநானூறு 182), கோடைபாடிய பெரும் பூதனார் (புற நானூறு 259), கோப்பெருஞ்சோழன் (புறநானூறு 214, 215, 216), பாரதம் பாடிய பெருந்தேவனார், (புறநானூற்றிலுள்ள கடவுள் வாழ்த்தைப் பாடியவர்), பாலைபாடிய பெருங்கடுங்கோ (புறநானூறு 282), பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு (புறநானூறு 246, 247), பெருஞ்சித்திரனார் (புறநானூறு 158, 159, 160, 161, 162, 163, 207, 208, 237, 238), பெருந்தலைச் சாத்தனார் (புறநானூறு 151, 164, 165, 205, 206, 294), பெரும்பதுமனார் (புறநானூறு 199) வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் (புறநானூறு 125), கண்டீரக்கோப்பெரு நள்ளி (புறநானூறு 148, 149, 150, 158) கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி (புறநானூறு 21, 367), சேரமான் கருவூர் எறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரலிரும் பொறை (புறநானூறு 5), சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை (புறநானூறு 50, 281), சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை, (புறநானூறு 53, 125) இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி (புறநானூறு 16, 125, 367, 377), கரிகால் பெருவளத்தான் (புறநானூறு 7, 65, 66, 224), குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் (புறநானூறு 58, 60. 197), முதுகுடுமிப் பெருவழுதி (புறநானூறு6, 9, 12, 15, 64), பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி (புறநானூறு 58), போன்ற சங்க காலப்பெயர்களில் 'பெரு' என்ற சிறப்பு முன்னொட்டு இடம்பெற்றுள்ளமை கவனத்திற்குரியது.

தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்களில், புகளூர் கல்வெட்டில் காணப்படும் “பெருங்கடுங்கோன்,” “பெருங்கீரன்”, மன்னார்கோயில் கல்வெட்டிலுள்ள “பெருங்கூற்றன்”, கொங்கர்புளியங்குளம் கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ள பெ(ர)தன் பி(ட்)டன் போன்ற பெயர்களில் காணப்படும் ‘பெரு’ என்ற சிறப்பு முன்னொட்டும் இவ்வகையினதே. இவர்கள் சமுதாயத்தில் பெருமைக்குரிய உயர்நிலையில் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பானவர்களாகத் திகழ்ந்தவர்கள் என்பதை இச்சிறப்பு முன்னொட்டு சுட்டுவதாகக் கருதலாம்.

https://t.me/daily_paper

## நெடு

சங்ககாலப் பெயர்கள் பலவற்றில் ‘நெடு’ என்ற கூறு பரவலாகக் காணப்படுகிறது. அடைநெடுங்கல்லியார் (புறநானூறு 283, 344, 345), பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் (புறநானூறு 72), வடநெடுந் தத்தனார் (புறநானூறு 176), அதியமான் நெடுமான் அஞ்சி, கடிய நெடு வேட்டுவன் (புறநானூறு 205), காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி (புறநானூறு 44, 45, 47), சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் (புறநானூறு 62, 63, 368), தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நம்பி நெடுஞ்செழியன் (புறநானூறு 239) போன்ற பலபெயர்களில் ‘நெடு’ என்ற கூறு இடம்பெற்றுள்ளமை கவனத்திற்குரியது.

‘பெரு’ என்ற சிறப்புக் கூறு போன்றே ‘நெடு’ என்ற சிறப்புக் கூறும், ‘பெருமைக்குரிய, மூத்த என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மாங்குளம் கல்வெட்டிலுள்ள ‘நெடிஞ்சழியன்’, ‘நெடுஞ்சழியன்’, திருப்பரங்குன்றத்துக் கல்வெட்டில் காணப்படும் நெடுசா(த்)தன், அழகர்மலைக் கல்வெட்டில் காணப்படும் ‘நெடும(ல்)லன்’, ஐம்பை கல்வெட்டு சுட்டும் ‘நெடுமா’ அஞ்சி போன்ற பெயர்களில் ‘நெடு’ என்ற சிறப்புக் கூறுள்ளது. நெடுஞ்செழியன் பாண்டிய வேந்தன், நெடுமான் அஞ்சி அதியமரபைச் சேர்ந்த மன்னன், ‘மல்லன்’ என்ற சொல், மற்போரில் சிறந்த வீரன் என்றும் ‘உயர்ந்தவர்’ பிரபலமானவர்[1] என்றும் பல்வேறு விதமாகப் பொருள்படினும், சமுதாயத்தில் சிறந்து விளங்கியவரையே குறிக்கிறது என்பது தெளிவு.

## அந்தை

மாங்குளம் தமிழ்-பிராமிக் கல்வெட்டில் அந்தை அஸுதன் என்ற பெயரும், மேட்டுப்பட்டி கல்வெட்டுகளில் அந்தை அரிய்தி, அந்தை இராவதன், அந்தை விஸுவன், அந்தை சேந்த அதன், அ(ந்)தை, குவிர அ(ந்)தை போன்ற பெயர்களும் விக்கிரமங்கலம் கல்வெட்டில் அந்தைய் பிகன் என்ற பெயரும், புகளூர் கல்வெட்டில் கொற்றந்தை என்ற பெயரும் காணப்படுகின்றன. ஒரே ஒரு இடத்தில் மட்டும் அந்தை என்ற பெயர் தனித்துக் காணப்பட பிற இடங்களில் பெரும்பாலும் பெயரின் முன்னொட்டாகவும், கொற்றந்தை என்ற பெயரில் பின்னொட்டாகவும் காணப்படுகிறது. ‘அந்தை’ என்ற சொல் ஒரு குடும்பத்திலுள்ள மூத்தவரையோ, அல்லது ஒரு ஊரிலுள்ள முதன்மையானவரையோ குறிக்கும் எனக் கருதப்படுகிறது.[2]

## அந்துவன்

https://t.me/daily_paper

திருப்பரங்குன்றத்திலுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டில் கொடையாளியின் பெயராக அந்துவன் என்ற பெயர் காணப்படுகிறது. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் 71ஆவது புறநானூற்றுப் பாடலில் 'அந்துவன் சாத்தன்' என்பவர் பூதப் பாண்டியனின் நண்பராகச் சுட்டப்பட்டுள்ளார். புறநானூற்றிலுள்ள 359ஆவது காஞ்சித்திணைப் பாடலைப் பாடியவராக 'அந்துவன் கீரன்' என்ற பெயர் காணப்படுகிறது. புறநானூற்றிலுள்ள 13ஆவது பாடல் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், அந்துவஞ் சேரலிரும்பொறையோடு வேண்மாடத்து மேலிருந்து சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியயைப் பாடிய பாடலாகக் காணப்படுகிறது. இவற்றிலிருந்து 'அந்துவன்' என்ற பெயர் சங்க காலத்தில் பரவலாக வழக்கிலிருந்தமை தெளிவாகிறது. அகநானூற்றிலுள்ள 59ஆவது பாடலில் மருதனிள நாகனார் தண்பரங்குன்றத்து அந்துவன் பாடிய சந்து கெழு நெடுவரை (அகநானூறு 59: 11-12) என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து, சங்க காலத்தில் திருப்பரங்குன்றத்தில் (தண்பரங்குன்றத்தில்) அந்துவன் என்ற புலவர் இருந்துள்ளமையும் உறுதியாகிறது. அகநானூற்றில் 43 ஆம் பாடலின் ஆசிரியர் நல்லந்துவனார் 'மதுரை ஆசிரியர்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதால், இவர் மதுரையைச் சேர்ந்தவர் என்பது தெளிவு. நல்லந்துவனார் என்ற பெயரில் 'நல்' என்ற சிறப்பு முன்னொட்டையும், 'ஆர்' என்ற சிறப்பு விகுதியையும் நீக்கி விட்டால் 'அந்துவன்' என்ற இயற்பெயரே மிஞ்சும். சங்கப் பாடல்களில் அந்துவன், நல்லந்துவனார், ஆசிரியன் நல்லந்துவனார், மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் போன்ற புலவர்கள் இயற்றியதாக நற்றிணை (88), அகநானூறு (43) பரிபாடல் (6, 8, 11, 20), கலித்தொகை ஆகியவற்றில் சில பாடல்களுள்ளன. இம்மூன்று பெயர்களும் ஒரே புலவரையே குறிப்பதாகப் பேராசிரியர் முனைவர் இரா. சாரங்கபாணி அவர்கள் கருதுவது ஏற்புடையதாக உள்ளது3. நல்லந்துவனார் என்ற பெயரில் காணப்படுவது போன்ற, 'நல்' என்ற சிறப்பு முன்னொட்டு நக்கீரனார், நப்பசலையார், நச்செள்ளையார், நல்லுருத்திரன், நல்லிறையனார், நன்னாகனார், நல்வெள்ளியார் போன்ற பல பெயர்களில் காணப்படுவதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது. 4

## சந்தரிதன்

மாங்குளம் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கொடையாளர்களில் 'சந்தரிதன்' என்பவரும் ஒருவர். இப்பெயரைச் சந்தன் + ஆரிதன் எனப் பகுத்துப் பொருள் காணலாம். 'ஆரிதன்' என்ற பெயர் ஆனைமலைக் கல்வெட்டிலும், 'ஆர்இதன்' என்ற பெயர் திருவாதவூர் கல்வெட்டிலும் காணப்படுகின்றன. 'ஆரிதன்' என்ற பெயருக்கு ஹாரித கோத்ரத்தைச் சேர்ந்தவர் எனப் பொருள் கொள்ளலாம். 'சந்தம்' என்ற சொல்லுக்கு அழகு என்றும், சந்திரன் (நிலவு) என்றும் பொருள் கொள்ளலாம்5. விக்கிரமங்கலம் கல்வெட்டில் 'அர்இய்தன்' என்றுள்ள ஆட்பெயரும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது 'ஆரி' என்ற சொல்லுக்கு அருமை மேன்மை எனப் பொருளுண்டு6. இந்தவகையில் 'ஆரிதன்' என்ற ஆட்பெயருக்கு மேன்மையானவர் எனப் பொருள் கொள்ளலாம்.

## ஆதன்

https://t.me/daily_paper

சங்ககாலப் பெயர்களில் [illegible] குழலாதனார், கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார், குடவாயில் நல்லாதனார், குன்றுகட் பாலியாதன், ஆதன் அழிசி, ஆதனுங்கன், ஓய்மான் வில்லியாதன், வட்டாற்று எழினி யாதன் போன்ற பெயர்கள் 'ஆதன்' என்ற பெயரை ஒட்டி அமைந்தவை. 'ஆதன்' என்பதற்கு அருகன் என்று பொருள். தமிழ் பிராமி கல்வெட்டுக்களிலும் ஆதன் (அதன்) என்ற பெயர் பரவலாகக் காணப்படுகிறது. கொங்கற்புளியங்குளம் கல்வெட்டிலுள்ள செற்அதன் என்ற பெயர், விக்கிரமங்கலம் கல்வெட்டுக்களில் காணப்படும் சிழிவன் அதன் தியன், அந்தைய்பிகன் மகன் வெந்அதன், கு(வி)ராதன், மேட்டுப்பட்டிக் கல்வெட்டிலுள்ள அந்தை சேந்த அதன், குவிர அந்தை சேய் அதன். குவிர அந்தை வேள் அதன், திடிஇல் அதன், அழகர்மலைக் கல்வெட்டில் காணப்படும் அதன் அதன், அதன் மகன் அதன் அதன், புகளூர் கல்வெட்டில் காணப்படும் கோ ஆதன் செல்லிரும்பொறை, புகளூர் கல்வெட்டில் காணப்படும் வெ(ந்)நி ஆதன், குன்னக்குடி கல்வெட்டிலுள்ள ஆதன் சாத்தன் போன்றவை 'ஆதன்' (அதன்) என்ற பெயரை 'அடிப்படையாகக் கொண்டமைந்தவை.

## சிழிவன் அதினன் வெளியன்

அரிட்டாபட்டி கழிஞ்சமலையிலுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டில் முழாகை அமைத்தளித்த கொடையாளரின் பெயராக நெல்வேலியைச் சேர்ந்த சிழிவன் அதினன் வெளியன் என்ற பெயர் காணப்படுகிறது. சங்கப் பாடலான அகநானூற்றில் குறிஞ்சித் திணைப்பாடலில் 'தித்தன் வெளியன்' என்ற மன்னனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும், (அகநானூறு 152:5) மற்றொரு பாடலில் பரணர் 'வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்' என்பவரைச் சுட்டியுள்ளமையும் (அகநானூறு 208:5) புறநானூற்றில் எருமை வெளியனார் மீது ஒரு பாடல் (புறநானூறு 273) பாடப்பட்டுள்ளமையும் சங்க காலத்தில் 'வெளியன்' என்ற ஆட்பெயர் வழக்கிலிருந்தமையைத் தெளிவுபடுத்துகின்றன. இக்கல்வெட்டில் உள்ள பெயரில் 'சிழிவன்' என்பதைச் 'செழியன்' என்று கொண்டு பாண்டிய மரபினனான அதி(ன்)னன் மகன் வெளியன் என இப்பெயருக்கு விளக்கம் காணலாம். இன்றைய தினம் சீர்காழி கோவிந்தராசன், சிதம்பரம் ஜெயராமன் என்று ஊர்ப்பெயரோடு சேர்த்து ஆட்பெயரைச் சுட்டுதல் போல சங்க காலத்திலும் இருந்தமையை இப்பெயருக்கு முன்னால் இடம்பெற்றுள்ள 'திருநெல்வேலி' என்ற ஊர்ப்பெயர் புலப்படுத்துகிறது எனலாம்.

## செழிவன் அதன் தியன்

விக்கிரமங்கலம் தமிழ்-பிராமிக் கல்வெட்டில் "எம்ஊர் சிழிவன் அதான" என்று பொதுவாக வாசிக்கப்படும் வாசகத்தினை "எம் ஊர் சிழிவன் அதன் தியன்" எனவும் வாசிக்கலாம். 'சிழிவன்' என்பதனைப் பாண்டியருக்குரிய சிறப்புப் பெயரான 'செழியின்' என்பதன் மாற்று வடிவமாகக் கொள்ளலாம். 'அதன்' என்பதனை அழகர் மலைக் கல்வெட்டில் காணப்படும் 'அதன் அதன்'[7] என்ற பெயரோடும், 'அதன் மகன் அதன் அதன்[8] என்ற பெயரோடும் எடக்கல் கல்வெட்டிலுள்ள 'கோவாதன்'[9] (கோ+ஆதன்) என்ற பெயரிலுள்ள 'ஆதன்'

https://t.me/daily_paper

என்ற வடிவேோடும், குன்னக்குடி மலையில் ஞானியார் மடம் என்ற பகுதியிலுள்ள கல்வெட்டிலிருக்கும் 'ஆதன் சாத்தன்' என்ற பெயரோடும்,[10] புகளூர் கல்வெட்டில் உள்ள கோ ஆதன் செல்லிரும்பொறை[11] என்ற பெயரோடும் ஒப்பு நோக்கலாம். இக்கல்வெட்டில் காணப்படும் தியன் என்ற பெயரை, கரூரில் கண்டறியப்பட்டுள்ள கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த தங்க நாணயத்தில் காணப்படும் 'தியன்'[12] என்ற பெயரோடும் அழகர்மலைக் கல்வெட்டிலுள்ள 'தியன் சந்தன்'[13] என்ற பெயரோடும், கரூரில் கிடைத்துள்ள, கி.மு. முதல் நூற்றாண்டினதான, தங்க நாணயத்திலுள்ள 'தியன் ஓதலன்'[14] என்ற பெயரோடும், ஒப்பு நோக்கலாம்.

## சைய் அளன்

முத்துப்பட்டியிலுள்ள பெருமாள் மலையில் இடையன் தருமம் என்றழைக்கப்படும் பகுதியிலுள்ள தமிழ்-பிராமிக் கல்வெட்டில் கொடையளித்தவரின் பெயராக விந்தையூரைச் சேர்ந்த 'சைய் அளன்' என்ற பெயர் காணப்படுகிறது. இப்பெயரை 'சைம்ஹலன்' எனக் கொண்டு சிங்கள நாட்டைச் சேர்ந்தவன் என்றும், 'சிம்ஹளன்' எனக் கொண்டு 'சிங்கம் போன்றவன்' என்றும் பொருள் கொள்வர்[15] 'சையம்' என்பதை மலைப் பெயராகக் கொண்டு சஹயாத்ரி மலையைச் சேர்ந்தவன் எனவும் பொருள் கொள்வர்.[16]

## குவிரன்,செங்குவிரன்

விக்கிரமங்கலத்திலுள்ள உண்டாங்கல்லு மலையிலுள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் குவிரன், செங்குவிரன், கு(வி)ரதன்(?) ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. குவிரன் என்ற பெயரோடு செல்வத்திற்குரிய கடவுளாகிய குபேரனின் பெயரை ஒப்பு நோக்கலாம். செங்குவிரன் என்ற பெயரிலுள்ள 'செம்' என்னும் முன்னொட்டைச் செங்குட்டுவன், செங்காயபன், போன்ற பெயர்களிலுள்ள 'செம்(மை)' என்ற முன்னொட்டோடு ஒப்பு நோக்கலாம். செம்பொன், செங்கோல் போன்ற சொற்களிலுள்ள 'செம்' என்ற முன்னொட்டும் இங்குக் கவனித்திற்குரியது.

## தேவன் சாத்தன்

அரச்சலூர் பகுதியிலுள்ள நாகமலையில் உள்ள ஆண்டிப் பாறையில் உள்ள கல்வெட்டில் தேவன் சாத்தன் என்ற பெயர் உள்ளது. சாத்தன் என்ற சொல்லுக்கு வணிகக் கூட்டத்தலைவன், அருகன், புத்தன், வெளிநாடுகளிற் சென்று வணிகம் மேற்கொள்ளும் வணிகக் கூட்டத்தவர் எனப் பல பொருளுண்டு. ஆடுதுறை மாசாத்தனார், ஒக்கூர் மாசாத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், பெருந்தலைச் சாத்தனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மோசி சாத்தனார் வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் வடம வண்ணக்கன் பேரி சாத்தனார், சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன், எனச் சங்க காலத்தில் சாத்தன் என்ற ஆட்பெயரோடு பலர் காணப்படுகின்றனர். 'தேவன்' என்ற ஆட்பெயர் அம்மன் கோயில் பட்டி கல்வெட்டிலும் (வியக்கன் கோபன் கணதேவன்) காணப்படுகிறது. நெடு சா(த்)தன் என்ற பெயர் திருப்பரங்குன்றம் கல்வெட்டிலுள்ளது.

அரச்சலூர்க் கல்வெட்டு இத்தேவன் சாத்தனை மலைய் வண்ணக்கன் என்று சுட்டுகிறது. வடம வண்ணக்கன் தாமோதரன்[19] என்ற சங்கப்புலவர் ஒருவருள்ளமையும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது.

https://t.me/daily_paper

## நெடுஞ்சழியன்

மாங்குளம் (மீனாட்சிபுரம்) கல்வெட்டில், "நெடுஞ்சழியன் பணஅன் கடல்அன் வழுத்திய்" என்ற பெயர் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் குறிக்கப்படுகின்ற நெடுஞ்செழியன் கடலனென்றும், வழுதியென்றும், பணவன் என்றும் குறிக்கப்படுகிறான். இவற்றைப் பாண்டிய வேந்தர்களுக்குரிய சிறப்புப் பெயர்களாகக் கருதலாம். சங்க காலத்தில் கைவண் செழியன், இயல்தேர்ச் செழியன், கொடித்தேர்ச் செழியன், கொற்றச் செழியன் மற்போர்ச் செழியன் என்றெல்லாம் போற்றப்பட்ட தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், கோவலனுக்குத் தவறுதலாக நீதி வழங்கியதால் உயிர் நீத்தவராகக் கருதப்படும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், என்று இரு பாண்டிய வேந்தர்கள் இருந்துள்ளனர். இங்கு இக்கல்வெட்டில் குறிக்கப்படுகின்ற நெடுஞ்செழியன் இவ்விருவரின்றும் வேறானவராகக் கருதப்படுகிறார்.

மாங்குள (மீனாட்சிபுரத்)திலுள்ள மற்றொரு கல்வெட்டில் "நெடுஞ்சழியன் ஸாலகன் இளஞ்சடிகன் தந்தைய் சடிகன்" சுட்டப்பட்டுள்ளார். இங்குச் 'சாலகன்' என்ற உறவு முறைப் பெயர், மனைவியின் உடன் பிறந்தாள் கணவனைக் (சாலகன் ? சகலன்) குறிக்கும்.

## நத்திய்

மாங்குளம் மலையிலுள்ள தமிழ் பிராமி கல்வெட்டில் சமண முனிவரின் (கணியின்) பெயராக 'நித்திய்' என்ற பெயர் காணப்படுகிறது. 'இகர யகரம் இறுதி விரவும்' என்ற முறையில் 'இப்பெயரில்' யகர ஒற்று இறுதியில் இடம்பெற்றுள்ளது. புகளூரிலுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டில் கருவூர்ப் பொன் வாணிகன் ஒருவரின் பெயராக 'நத்தி' என்ற பெயர் காணப்படுகிறது. திருநாதர் குன்றிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டில் 'சந்திர நந்தி' என்ற ஆட்பெயர் காணப்படுகிறது. பறையன் பட்டு வட்டெழுத்துக் கல்வெட்டில் 'வச்சணந்தி' என்ற பெயருள்ளது.

## வெண் காஸிபன்

மறுகால்தலையிலுள்ள பூவிலுடையார்மலையில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டில் கல்கஞ்சணத்தை அமைத்துக் கொடுத்த கொடையாளியின் பெயர் வெண் காஸிபன் என்றுள்ளது. 'வெண்' என்ற முன்னொட்டோடு காணப்படும், சிறுவெண்டேரையார் ஐயாதிச் சிறுவெண்தேரையார் வெண்கண்ணனார்,[20] வெண் கொற்றனார் போன்ற சங்கப்புலவர்களின் பெயரோடு 'வெண் காஸிபன்' என்ற பெயர் ஒப்பு நோக்கற்குரியது.

'காசிபன்' என்ற பெயர் பொதுவாக அதிதியிடம் தேவர்களையும் திதியிடம் அசுரர்களையும் பெற்ற ஒரு முனிவரைக் குறிக்கும்[21] 'காஸா' என்ற சொல்லுக்கு முதல் தரமான

https://t.me/daily_paper

என்று பொருள் உண்டு[22]. காஸிபன் என்ற பெயரைக் 'கஸாபன்' எனக் கொண்டால் 'முதல்தரமானவன்' எனப் பெருள் கூறலாம். அழகர்மலையிலள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டில் காணப்படும் 'கஸபன்' என்ற ஆட்பெயர்[23] புகளூர் கல்வெட்டிலுள்ள 'செங்காயபன்' என்ற ஆட்பெயரிலுள்ள 'காயபன்' என்ற இறுதிப் பகுதி ஆனைமலைக் கல்வெட்டிலுள்ள 'அரட்டகாயிபன்' என்ற ஆட்பெயரிலுள்ள 'காயிபன்' என்ற இறுதிப் பகுதி தொண்டூர் கல்வெட்டிலுள்ள 'இளங்காயிபன்' என்ற ஆட்பெயரிலுள்ள 'காயிபன்' ஆகியவற்றை 'வெண்காஸிபன்' என்ற பெயரோடு ஒப்பு நோக்கலாம்.

## ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி

விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோயிலூரிலிருந்து சுமார் 15 கி.மீ, தொலைவில் தென் பெண்ணையாற்றின் வடகரையிலுள்ள ஜம்பையிலிருக்கும் ஆளுருட்டி மலையில் தாசிமடம் என்றழைக்கப்படும் இயற்கையான குகையில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்பிராமி கல்வெட்டு, சதியபுதோவாகிய நெடுமான் அஞ்சி சமண முனிவர்களுக்காகப் பள்ளியமைத் தீந்தமையைத் தெரிவிக்கிறது.

அசோகரது இரண்டாம் கட்டளைக் கல்தூணில், அசோகப் பேரரசின் எல்லைகளுக்கப்பாலிருந்தவையாக சேர, சோழ, பாண்டிய, சத்திய புத்ர, கேரளபுத்ர, தம்ம பன்னி (இலங்கை) ஆகிய அரசுப் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. சத்திய புத்ர' என்பதற்கு உண்மை பேணுவோர் கூட்டம் எனப் பொருள் கொண்டு, இத்தொடர் வாய்மொழிக் கோசரைக் குறிப்பதாகக் கருதி, கொங்கு நாடே சத்திய புத்திரர் நாடு என்ற கருத்துருவானது. பின்னர் சத்ய புதோ என்ற தொடர் அதிகமான்களைக் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தமாக இருக்குமென கே.ஜி. சேஷய்யர் கருத்து தெரிவித்தார். டி.பரோ அவர்கள் தக்க மொழியியல் ஆதாரங்களோடு இக்கூற்றை வலுவுள்ளதாக்கினார். ஜம்பை கல்வெட்டு இக்கருதுகோளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. அதியமான் நெடுமானஞ்சியே 'சதியபுதோ' என்று இக்கல்வெட்டு மிகத் தெளிவாகச் சுட்டுகிறது. இக்கல்வெட்டில் வரும் 'சதியபுதோ' என்பது 'அதியமான்' என்னும் சொல்லின் பிராகிருத வடிவமே தவிர 'சத்யபுத்ர' என்பதன் மறுவடிவமல்ல என்று கருதப்படுகிறது. 'சதிய' என்ற சொல்லில் சகர ஒற்று கெட்டு 'அதிய' என்று (சமணர் என்ற சொல் அமணர் என்றும் குறிக்கப்படுவது போன்று) திரிந்த தென்றும், 'புதோ' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'மகன்' என்று பொருள் கொள்ளலாமென்பதால், அதியர் மகன் (அதியமான்) என்பதன் வடமொழி வடிவமே 'சதியபுதோ' என்றும் கருதுவர். இந்த வகையில், 'ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி' என்பதை 'அதியர் மகன் அதியந் நெடுமான் அஞ்சி' எனத் தமிழ்ப்படுத்தலாம். நன்னன்சேய் நன்னன்' என்பது போல் அதியன் மகன் அதியன் 'என வந்துள்ளதெனப் புலவர் செ. இராசு அவர்கள் கருதுவது[32] இந்த வகையில் ஏற்புடையதாகவே உள்ளது.

அதியர்கள் உதியர்களாகிய சேர மரபினரின் வழிவந்தவர்களென்பதால் சேரர்களுக்குரிய பனம் பூமாலையை அணிந்தவர்களாகப் போற்றப்படுகின்றனர்.[33] புறநானூற்றுப் பாடல்கள் அதியாமனை மழவர் பெரும்[34] என்றும் மழவர் பெருமகன் [35] என்றும் போற்றுகின்றன. இவன் ஊறாக் குதிரையாகிய குதிரை மலையை ஆண்டவன். இம்மலை இன்று இராணி மூக்கு மலை

என்றழைக்கப்படுகிறது[36]. திருக்கோயிலூரைத் தலை நகராகக் கொண்டு மலை நாட்டை ஆட்சி செய்த திருமுடிக்காரியை அதியமான் வென்ற சிறப்பினை, https://t.me/daily_paper

முரண்மிகு கோவலூர் நூறிநின்

அரண் அடு திகிரி ஏந்திய தோளே (புறநானூறு 99: 13-14)

என ஔவையார் அரச வாகையால் புகழ்ந்துள்ளார். இவ்வெற்றியைத் தொடர்ந்தே அதியமான் ஐம்பையில் இக்கொடையினை ஈந்திருக்க வேண்டும்.

அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றி ஔவையார், அஞ்சியத்தை மகள் நாகையார், பரணர், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், அரிசில் கிழார், பெருஞ்சித்திரனார், மாமூலனார் போன்ற பலரும் பாடியுள்ளமை இவன் மிகச் சிறப்புடன் விளங்கியிருந்தமையைப் புலப்படுத்துகிறது. புறநானூற்றில் மட்டுமே இவ்வேந்தனைக் குறித்து 25 பாடல்கள் (87,88,89, 90,91,92,93,94,95,97,98,99,100,101,103,104,158,206,208,231,232,235,310,315,390) உள்ளமை இவன் பெருமை மிக்க வேந்தனாக இருந்தமையை உள்ளங்கை நெல்லிக்கனியாக்குகிறது. 'அஞ்சித்தல்' என்பதற்குப் பூசித்தல் என்ற பொருளுண்டு 'அஞ்சி' என்ற பெயருக்கேற்ப இவ்வேந்தன் மக்களின் பூசனைக்குரியவனாக விளங்கியிருக்கிறான் எனலாம்.

## இலஞ்சிய் எளம்பேராதன் மகன் எமயவன்

அண்டர் மகன் குறுவழுதி, மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனார், போன்ற சங்க காலப் பெயர்கள் போன்று இப்பெயரிலும் இன்னார் மகன் இன்னார் என்ற விபரம் சுட்டப்பட்டுள்ளது. ஊர்ப்பெயரோடு, சேர்த்து ஆட்பெயரைச் சுட்டும் மரபும் இப்பெயரில் காணப்படுகிறது. ஆதன் அழிசி, ஆதனுங்கன், குறுங்கட் பாலியாதன், ஓய்மான் வில்லியாதன் போன்ற சங்கப் பெயர்களில் உள்ளது போன்றே 'ஆதன்' என இப்பெயரும் அமைந்துள்ளது. பெருவழுதி, பெரும்பூதனார், கோப்பெருஞ்சோழன், பெருந்தேவனார், பெருங்கடுங்கோ, பெருங்கோப்பெண்டு போன்ற சங்க கால ஆட்பெயர்களில் இடம்பெற்றிருக்கின்ற உயர்வினைக் குறிக்கும் 'பெரு' (பேர்) என்ற முன்னொட்டு ஆதன் என்ற இப்பெயரிலும் இணைந்து காணப்படுகிறது. இதே போன்றே 'இளம்' என்ற முன்னொட்டும் சங்க கால ஆட்பெயர்களில் பரவலாகக் காணப்படுகின்ற ஒன்றே. உறையூர் இளம் பொன்வாணிகனார், குறமகள் இளவெயினி, தொண்டைமான் இளந்திரையன், போன்ற சங்க காலப் பெயர்கள் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். இவை போன்றே பேராதன் என்ற பெயருக்கு முன்னரும் 'இளம்' என்ற முன்னொட்டு காணப்படுகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற பெயரிலிருந்து இமயத்தை மையமாகக் கொண்டும் பெயர் சூட்டும் மரபிருந்தமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இக் கல்வெட்டில் காணப்படும் எமயவன் என்ற பெயர் இதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு.

## கடிகை கோவின் மகன் பெருங்கூற்றன்

அம்பா சமுத்திரம் அருகிலுள்ள அய்யனார் குளம் பகுதியிலுள்ள இராசாப்பாறை என்னும் குன்றிலுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டில் கடிகை கோவின் மகன் பெருங்கூற்றன் என்பவர் பள்ளி

https://t.me/daily_paper

செய்வித்தளித்துள்ள செய்தி காணப்படுகிறது. இக்கல்வெட்டில் காணப்படும் கடிகை என்பதை ஊர்ப் பெயராகக் கொண்டு, 'கடிகை கோ' என்ற பெயருக்குக் கடிகை என்ற ஊரின் கோ அல்லது தலைவன் என்று பொருள் கொள்ளலாம். கடிகை என்பதற்குப் பல்கலைக் கழகம், பள்ளி, ஊர்ச் சபை, கெண்டி, நாழிகை என்று பல பொருளுண்டு. இந்த வகையில் 'கடிகை கோ' என்பதற்குப் பல்கலைக்கழகத்தின் தலைவன் அல்லது ஊரவையின் தலைவர் என்றும் பொருள் கொள்ளலாம்.

நிலாப்பாறையின் அடிப்பகுதியில் ஒரு குறியீடு பொறிக்கப்பட்டிருப்பதும் இங்குக் கவனத்திற்குரியது. சிவபெருமானின் கையிலுள்ள திரிசூலம் போன்ற இக்குறியீடு தலைவனின் கையிலிருக்கும் கோலை அடையாளப்படுத்துவதாக இருக்க வேண்டும். இக்குறியீட்டிற்குக் 'கோ' எனப் பொருள் கொள்வர்.[40]



இக்கல்வெட்டில் காணப்படும் பெருங்கூற்றன் என்ற பெயர், கி.பி. 5 ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் காணப்படும் 'கோச்சேந்தன் கூற்றன்' என்ற பெயரோடு ஒப்புநோக்கற்குரியது.

## குணாவின் எங்கோ

அம்பாசமுத்திரத்திலிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள அய்யனார் குளம் பகுதியிலுள்ள இராஜாக்கள் பாறை, நிலாப்பாறை என்றழைக்கப்படும் குன்றுப்பகுதியில் உள்ள தமிழ்பிராமி கல்வெட்டில் பள்ளி செய்வித்த கொடையாளரின் பெயராகக் 'குணாவின் எங்கோ' என்ற ஆட்பெயர் காணப்படுகிறது. இவ்வாட்பெயருக்கு "இளவரசனாக இருந்த குணாவன்" என்றும்[41] "குணா என்ற தலைவனின் இளவல்" என்றும்[42] குணா என்ற ஊரைச் சேர்ந்த (இ)எங்கோ" என்றும் பல்வேறு விதமாகப் பொருள் கொள்ள வாய்ப்புள்ளது.

கரூரருகிலுள்ள வேலாயுதம் பாளையத்திலுள்ள புகளூர் ஆறுநாட்டார் மலையிலுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டில் "கோஆதன் செல்லிரும் பொறை மகன் பெருங்கடுங்கோன் எங்கடுங்கோ" என்றுள்ள கல்வெட்டிலுள்ளது போன்றே இக்கல்வெட்டிலுள்ள 'எங்கோ' என்ற ஆட்பெயரும் 'எ' கரத்தை மொழி முதலாகக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆறுநாட்டார் மலையிலுள்ள மற்றொரு தமிழ் பிராமி கல்வெட்டிலுள்ள "ணாகன் மகன் எங்கீரன்" என்ற ஆட்பெயரும் 'எ' கரத்தை மொழி முதலாகக் கொண்டிருப்பதால், சங்க காலக் கல்வெட்டுக்களில் ஆட்பெயர்களில் 'இளம்' என்ற முன்னொட்டு 'இ' என்ற உயிரெழுத்து விடுபட்ட நிலையிலேயே சில இடங்களில் எழுதப்பட்டுள்ளதெனலாம்.

## சேர மன்னர்களின் மூன்று தலைமுறை

புகளூர் கல்வெட்டில், "கோஆதன் செல்லிரும் பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன் (இ)எங் கடுங்கோ" என மூன்று தலைமுறையினர் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் கோஆதன் செல்லிரும்பொறை என்ற பெயர் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் குறிப்பதாகக் கருதுவர். இவர் பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தின் தலைவர். கல்வெட்டில் குறிக்கப்படும் பெருங்கடுங்கோ எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாகிய பெருஞ்சேரலிரும்பொறையாக

https://t.me/daily_paper

இருக்கலாம். இளங்கடுங்[illegible] குறிப்பிடுகின்ற இளஞ்சேரலிரும்பொறையாக இருக்கலாமென்றும் கருதுவர். பெருஞ்சேரல் இரும்பொறையே, பாலை பாடிய பெருங்கடுங்கோ, இளஞ்சேரல் இரும்பொறையே, 'மருதம் பாடிய இளங்கடுங்கோ' என்றும் கருதுவர்.

## தொழிற்பெயர்

அழகர்மலைக் கல்வெட்டில், "வெண்ப(ளி)இ அறுவை வணிகன் எளஅ அடன்", கொழு வணிகன் எளசந்தன் "உபு வணிகன் வியகன்", புகளூர் கல்வெட்டில் "கருஊர் பொன் வாணிகன்", "எண்ணை வாண்ணிகன் வெநி ஆதன்" போன்றுள்ளவற்றில், ஆட்பெயருக்கு முன்னர் அவரவருக்குரிய தொழில் சுட்டப்பட்டுள்ளது.

உறையூர் இளம்பொன் வாணிகனார் (புறநானூறு 264), உறையூர் , மருத்துவன் தாமோதரனார் (புறநானூறு 60, 170, 321) தங்கால் பொற்கொல்லனார் (புறநானூறு 326), மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் (புறநானூறு 329) மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் (புறநானூறு, 59) போன்ற சங்க காலப் பெயர்களில், ஆட்பெயருக்கு முன்னால், அவர் புரிந்து வந்த தொழிலின் பெயரும், தொழில் பெயருக்கு முன்னால் அவரது ஊர்ப்பெயரும் சுட்டப்பட்டுள்ள முறையிலேயே தமிழ் பிராமி கல்வெட்டுக்களிலும் மேற்கண்ட ஆட்பெயர்கள் குறிக்கப்பட்டள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. Iravatham Mahadevan, *Early Tamil Epigraphy.* From the earliest times to the sixth century AD, 2003, P. 573.
2. மேலது பக். 550
3. Sarangapani. R.A, *Critical study of Paripatal.* pp 38-39. Madurai Kamaraj University: 1984.
4. மேலது. பக். 41
5. ஐராவதம் மகாதேவன் முன் குறித்த நூல் பக். 551.
6. தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம்.
7. Iravatham Mahadevan, 2003, P. 369.
8. மேலது, ப. 373
9. மேலது, ப. 435
10. மேலது, பக்.425
11. மேலது,ப. 405, 407
12. மேலது, ப. 65
13. மேலது, ப. 382

https://t.me/daily_paper

14. மேலது, ப. 65
15. மேலது. பக். 587
16. மேலது பக். 587
17. புறநானூற்றிலுள்ள 362 ஆம் பாடலைப் பாடியவர்
18. புநானூறு 363 ஆம் பாடலைப் பாடியவர்
19. அகநானூற்றில் 130 ஆம் பாடலைப் பாடியவர்
20. குறுந்தொகையில் 86 ஆம் பாடலைப் பாடியவர்
21. Tamil Lexicon, Vol II, 1982, p. 845
22. மேலது, ப. 916
23. Iravatham Mahadevan, 2003, P. 379.
24. மேலது, ப. 407, 409
25. மேலது, ப. 403
26. மேலது, ப. 427
27. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி (மு.ரா. பெருமாள் முதலியார் தமிழாக்கம்) *தென்னிந்திய வரலாறு,* தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1973, ப. 137.
28. மேலது, ப. 138.
29. மேலது, ப. 139
30. மேலது, ப. 139.
31. சொ. சாந்தலிங்கம், *வரலாற்றில் தகடூர்,* தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, பாப்பாரப்பட்டி, 1990, ப. 27
32. புலவர். செ. இராசு, அதியமான் மரபு சங்க காலம், கட்டுரை, *கொங்கு ஆய்வு மைய தர்மபுரிக் கருத்தரங்கமலர்,* 1983, ப.
33. 'இரும்பனம் புடையல்' *புறநானூறு* 99:5
34. *புறநானூறு* 90:11
35. *புறநானூறு* 88:3
36. சொ. சாந்தலிங்கம், மேலது, ப.20
37. *Tamil Lexicon,* Vol I, University of madras, 1982, P. 38.
38. சு. இராசகோபால், *ஆவணம்,* இதழ் 13, தமிழகத் தொல்லியல் கழகம், 2002
39. சொ. சந்திரவாணன், மா. செந்தில் செல்வக்குமரன், *ஆவணம்,* இதழ், 13 2002.
40. மேலது. பக். 2.
41. மேலது.
42. மேலது.
43. ஐராவதம் மகாதேவன், முன் குறித்த நூல், பக். 619–620.

https://t.me/daily_paper

11

# தமிழ்-பிராமி பானை ஒட்டுக் கீறல்கள்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 30 இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டுள்ளது. வரலாற்றுக்கு முற்பட்டகாலம், வரலாற்றுக் காலம், இடைக்காலம் என்று காலவகைப்படும் இவ்வகழாய்வுகளில் 10 இடங்களில் பானை ஓட்டுத் தமிழ்-பிராமி எழுத்துக் கீறல்கள் கிடைத்துள்ளன. இத்துறை அகழாய்வு செய்த இடங்களில் கொடுமணல், கொற்கை, பூம்புகார் ஆகிய இடங்கள் இந்திய அரசு தொல்லியல் துறையாலும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தாலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் அகழாய்வில் கிடைத்துள்ள ஓடுகளின் விவரம் ஏறத்தாழ பின்வருமாறு: அழகன் குளத்தில் 18 குழிகளில் 73 சில்லுகள், கரூரில் 6 குழிகளில் 15 சில்லுகள், கொடுமணலில் 15 குழிகளில் 32 சில்லுகள், தேரிருவேலியில் 7 குழிகளில் 6 சில்லுகள், பூம்புகாரில் 12 குழிகளில் 1 சில்லு; மாங்குடியில் மூன்று சில்லுகள், மாளிகைமேட்டில் 4 குழிகளில் 8 சில்லுகள், ஆண்டிப்பட்டியில் 4 சில்லுகள் கோவலன் பொட்டலில் 2 குழிகளில் 2 சில்லுகள், இந்த பானை ஓட்டுச் சில்லுகள் உண்ணுமிடத்திலும் சமைக்குமிடத்திலும் சேமித்து வைக்குமிடத்திலும் பயன்படும் கலன்களைச் சேர்ந்தவை. Table Ware, Look, Ware, Storage Ware என்று ஆங்கிலத்தில் குறிப்பர். கோவலன் பொட்டலில் ஈமக் கலனாக ஐயப்படத் தக்கச் சில்லு ஒன்றிலும் பிராமி எழுத்துக் கீரல் கிடைத்துள்ளது. தமிழகத்திலேயே தயாரிக்கப்பட்ட ரோமானிய வகை ரௌலெட் (Roulette) பானை ஓடுகள் அழகன் குளத்தில் நிறையக் கிடைத்துள்ளன. ரஸ்செட் கோட்டட் (Russet Coated) ஓடுகள், செங்காவி பூசிய (Red Slipped) ஓடுகள் போன்றவற்றில் எழுத்துக் கீறல்கள் இருப்பதைப் பார்க்கும் போது இக்கலன்கள் ஆடம்பர வாழ்வு மற்றும் சமூகத்தில் மேல்தட்டு மக்களால் கிடைப்பறிமைப் பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது.

இவ்வோடுகளில் உள்ள தமிழ்-பிராமி எழுத்துக் கீறல்கள் ஓடுகளின் உடையும் தன்மையால் நமக்குச் சில எழுத்துக்களுடனும் ஓரிரண்டு சொற்களுடனும் முழுமை இல்லாது கிடைத்துள்ளன. இவை பானைகளைச் சுட்டுச் செய்த பின் கீறி எழுதப்பட்டவையாகும். கோவலன்பொட்டல் ஓடு சுடுவதற்கு முன் எழுதப்பட்டது போலத் தெரிகிறது.

இவற்றில் உள்ள கீறல்கள் பெரும்பகுதி ஆட்பெயர்கள் ஆகும். வினைச் சொற்கள் இல்லையென்றே சொல்லலாம். இவற்றில் தமிழ்-பிராமி எழுத்துக்கள் மட்டுமல்லாது வடபிராமி எழுத்துக்களும் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும். பிராகிருதப் பெயர்கள் தமிழ்ப் படுத்தியும் காணப்படுகின்றன. அழகன்குளம் தமிழகத்தின் கடலோரத்தில் இலங்கையின் பண்டை துறைமுகநகர் மாந்தைக்கு எதிரில் இருப்பதால் இலங்கையின் சிங்கள-பிராமி தாக்கம்

https://t.me/daily_paper

இங்கு நிறையக் காணப்படுகிறது. குகைத்தள தமிழ்-பிராமி கல்வெட்டுகள் சமணம் சார்ந்தவை. பானை ஓட்டுக் கீறல்கள் பௌத்தம் சார்ந்தவையாகவும் இருந்திட வாய்ப்புள்ளது. வட இந்தியாவிலிருந்து சமணம் உள்நாட்டுப் பெருவழிகள் வழியாகத் தமிழகத்திற்குப் பரவியது என்றும் பௌத்தம் கடற்கரையோரமாகத் தமிழகத்தின் வழியாக இலங்கைக்குப் பரவியது என்றும் கருதும் வகையில் இப்பானை ஓடுகள் கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கின்றன. அரிக்கமேடு (பாண்டிச்சேரி) பூம்புகார், அழகன் குளம் (இராமநாதபுரம்) ஆகிய இடங்களில் இவ்வகை ஓடுகள் கிடைத்துள்ளமையை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம்.

பானை ஓடுகள் தவிர காசுகள் மோதிரம், முத்திரை முதலியவற்றிலும் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. தமிழகத் தொல்லியல் துறையின் சேமிப்பில் 'பேராவதன்', 'தாயன் ஓதலன்' என்றுள்ள மோதிரங்கள் உள்ளன. கொல்லிப்புறை என்ற பெயருள்ள காசும் உள்ளது.

தனியார் சேமிப்பில் மாக்கோதை, குட்டுவன் கோதை, பெருவழுதி எனப் பெயருள்ள காசுகள் உள்ளன. ஆண்டிப்பட்டியில் 'தின்னன் எதிரான் சேந்தஅ' என்ற பெயருள்ள காசுகள் கிடைத்துள்ளன.

கடல் கடந்த நாடுகளில் 'கணன்' (கண்ணன்) 'சாதன்' (சாத்தன்), கொறபூமான் (கொற்றபூமான்) என்று பெயர் பொறித்த பானைஓடுகள் கிடைத்துள்ளன. தாய்லாந்தில் 'பெரும்பதன்கல்' என்று பெயருள்ள பொன் உறை கல் ஒன்றும் கிடைத்துள்ளது.

# துணை நூல்பட்டியல்

https://t.me/daily_paper

## தமிழ்நூல்களும் கட்டுரைகளும்


1. மா சந்திர மூர்த்தி: தொண்டூர் தமிழ்பிராமி கல்வெட்டு, *கல்வெட்டு காலாண்டிதழ்* எண். 34, 1992

2. மா. செந்தில் செல்வக்குமரன், சொ. சந்திரவாணன்: அய்யனார் குளம் (மன்னார் கோயில்) தமிழ்பிராமி கல்வெட்டுகள், *ஆவணம்:* 13:1 - 3, 2002

3. தினமணி செய்தி: நெகனூர்பட்டி கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு, *தினமணி* 26-3-1992, சென்னை

4. கிருஷ்ணமூர்த்தி. ஆர், *பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்,* சென்னை, 1987.

5. ஐ. மகாதேவன், சங்ககால கல்வெட்டும் என் நினைவுகளும், *கல்வெட்டு* 1:39-42, 1974

6. ஐ. மகாதேவன், சுனை தந்த தமிழ் (அம்மன் கோயில்பட்டி கல்வெட்டு) *தினமணி கதிர் தீபாவளி மலர்* பக்கங்கள் 149-150, 1982.

7. ஐ. மகாதேவன், புள்ளி தந்த பிள்ளையார் (பிள்ளையார்பட்டி கல்வெட்டு) *தினமணி* 5, செப்டம்பர் சென்னை, 1997.

8. ஐ. மகாதேவன், தமிழக குகை கல்வெட்டுகளில் சமணம் *வரலாறு* 8: 136-141, 1998.

9. ஐ. மகாதேவன், எகிப்து நாட்டில் தமிழில் எழுதிய தாழி, *ஆவணம்* 9:17-19

10. மகாதேவன் ஐராவதம், சங்கரராமன் கரூரின் கணையாழி கூறும் கதை, *ஆவணம்* 13: 181-183, 2002.

11. மகாதேவன் ஐராவதம் மற்றும் சு. சுவாமிநாதன் கர்நாடகத்தில் பாண்டிய வட்டெழுத்து கல்வெட்டு (தமதகளு கல்வெட்டு) *ஆவணம்* 7: 9-12, 1996.

12. எடக்கல் குகை கல்வெட்டுகள், *ஆவணம்* 9: 20-29, 1998

13. இரா. நாகசாமி, *கல்வெட்டியல்* தொல்லெழுத்தியலும் கல்வெட்டியலும், சென்னை: தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை 1972.

14. இரா. நாகசாமி, ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியமான் கல்வெட்டு (ஜம்பை கல்வெட்டு) *தினமணி,* 12 அக்டோபர் சென்னை, 1981.

15. ம. நளினி, திருச்சிராப்பள்ளி மலைக்கோயில் கல்வெட்டு *வரலாறு* 1:50, 1993.

16. ப. புஷ்பரட்ணம், *பூநகரி:* தொல்பொருள் ஆய்வு யாழ்ப்பானப் பல்கலைக் கழகம், 1993.

17. ப. புஷ்பரட்ணம், தொல்லியல் நோக்கில் இலங்கை தமிழர் பண்பாடு சென்னை, குமரன் வெளியீடு, 2000

18. ப. புஷ்பரட்ணம், இலங்கை பிராமி கல்வெட்டுகளில் மருமகனை குறிக்கும் உறவுப்பெயர்கள், தொல்லியல் கழகத்தின் 11-வது ஆவணக் கருத்தரங்கு, 2000. *பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும்*, தொகுப்பு, கொழும்பு தமிழ் சங்கம், 2001

19. சு. இராசகோபால், வண்ணக்கன் ஓர் ஆய்வு, *கல்வெட்டு* 24, 1991.

20. க. இராஜன், பண்டை குறியீடுகளும் எழுத்துகளும் *தமிழ் கல்வெட்டியலும் வரலாறும்*, எ. சுப்புராயலு மற்றும் செ. இராசு, பக்கங்கள் 1-18, 2001

21. சு. ராஜவேலு, நெகனூர்பட்டி தமிழ் பிராமி கல்வெட்டு, *ஆவணம்* 6:7-8, 1995.

22. கே.வி. இராமன், கரூர் நாணயங்களும் அணிகலன்களும் *தினமலர்*. மே 30, சென்னை, 1994.

23. சங்கரன் ராமன், கருர் முத்திரை பொன் மோதிரம், *ஆவணம்* 11:153, 2000

24. சாந்தலிங்கம், *குடுமியான்மலை*, சென்னை: தமிழ்நாட்டு தொல்லியல் துறை, 1981.

25. சாந்தலிங்கம் குடுமியான் மலை தமிழ் பிராமி கல்வெட்டு *ஆவணம்* 10: 1-3, 1999.

26. அ. சீதாராமன், *தமிழக தொல்லியல் சான்றுகள்*, தொகுதி 1, தஞ்சாவூர் தனலஷ்மி பதிப்பகம், 1994.

தமிழக தொல்லியல் சான்றுகள் தொகுதி -2 , 2 தஞ்சாவூர் தனலஷ்மி பதிப்பகம், 2002.

27. கி. ஸ்ரீதரன் மற்றும் கோ. அர்ஜுனன், *கரூரும் அகழ் வைப்பகமும்*, சென்னை தமிழ்நாட்டு தொல்லியல் துறை, 1992.

28. எ. சுப்பராயலு மற்றும் செ. இராசு, 2001 *தமிழ் கல்வெட்டியலும் வரலாறும்*, தஞ்சாவூர், தமிழ் பல்கலைக்கழகம், 2001.

29. தி.நா. சுப்ரமணியன், *பண்டை தமிழ் எழுத்துக்கள்* மறுபதிப்பு சென்னை, உலக தமிழாராய்ச்சி நிறுவனம் 1938, (1996).

30. மயிலை. சீனி வேங்கடசுவாமி, *சங்க காலத்து பிராமி கல்வெட்டெழுத்துக்கள்*, சென்னை தென்னிந்திய சைவ சித்தாந்த வெளியீடு, 1991.

31. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (ப.ஆ) ஐம்பை ஓர் ஆய்வு, தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை 2005

32. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (ப.ஆ) *அழகர் கோவில்*, தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை 2005

33. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (ப.ஆ) *கோவை மாவட்டத் தொல்லியல் கையேடு*, தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை 2005

34. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (ப.ஆ) *மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு*, தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை 2005

34. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (ப.ஆ) ஆண்டிப்பட்டி *அகழாய்வு அறிக்கை*, தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை 2005

https://t.me/daily_paper

https://t.me/daily_paper

## ஆங்கில நூல்களும் கட்டுரைகளும்

**Abdul Majeed,** A., Ed al *Alagankulam: A Preliminary Report*. Madras: Tamil Nadu State Department of Archaeology. 1992.

**Buhler, GeorgE**

1982: New Jaina Inscriptions from Mathura. *Epigraphia Indica 1*: 371-397.

1894a: Further Jaina Inscriptions from Mathura, *Epigraphia Indica 2*: 195-212.

1894b: The Bhattiprolu Inscriptions. *Epigraphia Indica 2*: 323-329.

1896 (1959) *Indian Palaeogrphy From about B.C. 350 to about A.D. 1300*. Translated by J.F.. (Reprinted in) Indian Studies Past and Present 1 (1): 1-139.

**Fawcett, F.** 1901 (1985). Notes on Rock Carvings in the Edakal Cave. *Indian Antiquary* 30: 409-421. Reprint Francis, W.

**Govindaraj,** R. 1994, *Evolution of Script in Tamil Nadu*. Thanjavur: Tamil Nadu Archaeological Society Special Issue No. 1.

**Gurumurthy,** S. 1999. *Deciphering the Indus Script: From Graffiti on Ancient Indian Pottery*. Chennai: University of Madras.

**Indrapala, K.**

1981: Is it an Indus-Brahmi Epigraph? *The Hindu Sunday Magazine*. 26 April. Madras.

1987: Comments (on the Anaikoddai Seal). *In Early Settlements in Jaffna: An Archaeological Survey*, P. Ragupathy, pp. 200-202.

*Inscriptions (Texts) of the Pudukkottai State Arranged According to Dynasties*

1929(2002). Reprint. Chennai: Commissioner of Museums, Government Museum.

**Jebarajan,** E. 1994: Kilavalavu Kalvettukal. Scientific Report. Madurai: Department of Mathematics, American College.

**Jebarajan, E. and Gift Siromoney.** 1978: On the Occurence of the Pulli in the Tamil Brahmi Inscription of Anaimalai. *Scientific Report No. 34*, Madras: Department of Statistics, Madras Christian College.

**Krishnamurthy, R.**

1997a. Sangam Age Tamil Coins. Madras: Garnet Publications.

1997b. A Golden Ring of Atiyaman. *Studies in South Indian Coins* 7:41-43.

**Krishnan, K.G.**

1973-74b. Incriptions from Arachalur. *Epigraphica Indica*. pp. 91-93.

1973-74c. Coins from Andippatti Hoard. *Epigraphica Indica*. pp. 139-140.

1974. Brahmi Script in Tamil Nadu. *Journal of the Epigraphical Society* of India. 1:26-30.

1981. *Studies in South Indian History and Epigraphy.* Vol. I. Madras: New Era Publication.

1981a. Cera Kings of the Pugalur Inscriptions. *Ibid.* pp. 24-30.

1981b. Convertibility of Surds and Sonants: Historical Evidence. Ibid. pp. 77-86.

1981c. Origin and Development of Tamil Script. *Ibid.* pp. 87-98.

1982. Origin of the Tramil Script. *In Origin, Evolution and Reform of the Tamil Script* (Seminar Papers) pp. 15-19.

**Krishna Sastri. H.**

1919. The Caverns and Brahmi Inscriptions of Southern India. *Proceedings and Transactions of the First All - India Oriental Conference.* Poona, pp. 327-348.

**Mahadevan, Iravatham**

1965a. Chera Inscriptions of Sangam Age. *The Hindu Weekly Review.* 15 March. Madras.

1965b. Tamil Inscription in Brahmi Script from Alagarmalai. *The Hindu Weekly Review* 2 August. Madras.

1965c. Tamil-Brahmi Script: Inscription from Mangulam. *The Hindu* 8 August. Madras.

1965d. Interesting Light on Ancient Tamil-Brahmi Inscription (at Pillaiyarpatti). *The Sunday Standard.* 31 October. Madras.

1966(1968). Corpus of the Tamil-Brahmi Inscriptions 1966. (Supplement to the paper read at the Seminar on Inscriptions 1966). Mimeograph edn. Reprinted in *Seminar on Incriptions 1966: Speeches and Papers*, edited by R. Nagaswamy, pp 57-73.

1970a. Tamil-Brahmi Inscription. (Lectures at the Seminar on Archaeology Madurai University. 1970). *Madras: Tamil Nadu State Department of Archaeology.*

1970b. The Ancient Name of Arikamedu. In Paritimarkalainar (V.G. Suryanarayana Sastri) Nurrantu Vila Malar, N. Subrahmanian (ed.), pp-204-206. *Madurai:* Published by V.S. Swaminathan.

1971. Tamil-Brahmi Inscriptions of the Sangam Age. *In Proceedings of the Second International Conference - Seminar of Tamil Studies* I: 73-106. Madras.

1973: Arikamedu Graffiti: A Second Look. *Damilica* 2: 60-64.

1983: Origin of the Tamil Script. *In Origin, Evolution and Reform of the Tamil Script* (Seminar Papers), pp. 6-14.

1985a. (The Shorter u in Tamil-Brahmi Script. (Paper read at the Fourth All India Conference of Dravidian Linguists, Madras, 1974.) *Tamil Civilization 3* (4); 22-27.

1985b. Some Aspects of the Tamil-Brahmi Script. *Journal of the Epigraphical Society* of Indian 12: 121-128.

1985c. An Old Sinhalese Inscription from Arikamedu, *In Prof. Kuppuswamy Sastri Birth Centenary Commemoration Volume*, Part 2, S.S. Janaki (ed.) pp. 279-282. Madras: The Kuppuswamy Sastri Research Institute. (Also in) Journal of the Asiatic Society of Bombay 56-59 (Bhagwanlal Indraji Memorial) 1986: 222-226.

https://t.me/daily_paper

https://t.me/daily_paper

1990: Orthographic Systems in Early Tamil Writing. (Paper presented at the sixth International Conference - Seminar of Tamil Studies 1987, Kuala Lumpur, Malaysia.) *Journal of the Institute of Asian Studies* 8(1): 35-47.

1992: Occurrence of the Pulli in the Tamil-Brahmi Script. In Indological Essays: *Commemorative Volume II for Gift Siromoney,* Michael Lockwood (ed.), pp. 141-167.

1993. The Sacred Filter Standard Facing the Unicorn. *South Asian Archaeology* 1993: I: 435-445.

1994a: Recent Discoveries of Jaina Cave Inscriptions in Tamil Nadu. *In Rishabh Saurab* 1994. pp. 116-134. Delhi: Rishabhdev Foundation.

1994b: Ancient Tamil Contacts Abroad: Recent Epigraphical Evidence (Fr. X.S. Thaninayagam Memorial Lecture, Colombo, 1994). *Journal of the Institute of Asian Studies* 12(1): 136-155.

1995a. Recent Trends in Early Tamil Epigraphy: An Overview. (Paper presented at the Eighth International Conference - Seminar of Tamil Studies, Thanjavur, 1995). *Journal of the Institute of Asian Studies* 13 (1): 1-31.

1995b : From Orality to Literacy: The Case of the Tamil Society. (Paper presented at the Seminar on Literacy and communications, Jawaharlal Nehru University, New Delhi, 1994). *Studies in History* 11(2): 173-188.

1995c: A Brahmi Incriptions from Bali. *Journal of the Epigraphical Society* of India 21: 14-16.

1996 a: Pottery Inscriptions in Brahmi and Tamil-Brahmi. In The Ancient Port of Arikamedu. *New Excavations and Researches* 1989-1992, Vimala Begley et al. Vol. 1 : 287-315.

1996b: Tamil-Brahmi Graffito. In Berenike 1995: *Preliminary Report of the 1995 Excavations at Berenike* (Egyptian Red Sea Coast) and the Survery of the Eastern Desert, S.E. Sidebotham and W. Wendrich (eds.) pp. 205-208.

1996c: Old Sinhalese Inscriptions from Indian Ports: New Evidence for Ancient India Sri Lanka Contacts. (Extended Version of the paper read at the post-graduate institute of Archaeology, Colombo, Sri Lanka, 1994.) *Journal of the Institute of Asian Studies* 14(1): 55-68.

1996d: Pong Vilaitta Anai (On Ezhuttukallu Inscription.) *Dinamani Dipavali Malar,* pp. 65-68.

1997a: An Early Prakrit Inscription from Kanchipuram. *In Studies in South Indian History and Culture*, Prof. V.R. Ramachandra Dikshitar Centenary Volume, R. Nagawsamy (ed.), pp. 238-240. Chennai : V.R. Ramachandra Dikshitar Centenary Committe.

1999: The Earliest Inscriptions of Kerala. (Presidential Address at the 24th Annual Congress of the Epigraphical Society of India, Thrissu, 1998). *Journal of the Epigraphical Society of India.* 25:1-19.

2000: Ancient Tamil Coins from Sri Lanks. *Journal of the Institute of Asian Studies* 17 (2): 147-156.

2001: The Indus - like Symbols on Megalithic Pottery: New Evidence. *In Vidyaramavandanam*: Essays in Honour of Prof. Asko Parpola. K. Karttunen and P.Koskikallio (eds.) pp. 379-385. Helsinki: Finnish Oriental Society.

**Mahalingam, T.V.**

1958. A Brahmi Inscription from Kunrakkudi. *Journal of the Madras University* (Section A: Humanities) 30 (1): 5-7.

https://t.me/daily_paper

1962: A New Brahmi Inscription in the Tamil Country. (On Arachalur Inscription). *Transactions of the Archaeological Society of South India. Silver Jubilee* Volume: 125-132.

1967(1974): *Early South Indian Palaeography. Reprint.* Madras: University of Madras.

1968 : Inscribed Potsherds from Alagarai and Uraiyur. In *Seminar on Inscriptions 1966. Speeches and Papers,* R. Nagaswamy (ed.), pp. 42-43.

1970: Report on the Excavations in the Lower Kaveri Valley (Tirukkampuliyr and Alagari) *1962-1964. Madras:* University of Madras.

**Mohandas, P.N.**

1968: New Find of Coins with Tail-Brahmi Characters of Great Numismatic Value. (Andippatti Hoard.) *The Hindu.* 7 January. Madras.

**Nagaswamy, R.**

(ed.) 1968: Seminar on Inscriptions 1966: *Speeches and Papers. Madras: Books* (India).

1968: A Bilingual Coin of a Satavahana. *Ibid.* 200-202.

1970. Excavation at Korkai, District Tirunelveli. *Damilica* 1: 50-54.

1971: The Origin and Evolution of the Tamil, Vatteluttu and Grantha Scripts. *In Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies,* Madras: 1968. Vol. II: 410-415.

1973: Archaeology and Epigraphy in Tamil Nadu. A survey of Recent Developments. In Proceedings of the Third International Conference - Seminar of Tamil Studies, Paris, 1970, pp. 56-71. Pondicherry.

1981b: Asoka and the Tamil County: A New Link. (On Jambai Inscription.) *The Indian Exprees.* 6 December. Madras.

1981d. Roman Sites in Tamil Nadu: Recent Discoveries. *In Madhu: Recent Researches in Indian Archaeology and Art History*: Shri. M.N. Deshpande Festschrift. M.S. Nagaraja Rao (ed.), pp. 337-339. Delhi: Agam Kala Prakashan.

1985: A Bilingual Coin of Vasittiputra Siva Sri Pulamavi. *Journal of Archaeology in Andhra Pradesh* 1: 105-114

1991c: Alagankulam: An Indo-Roman Trading Port. In *Indian Archaeological Heritage.* Shri K.V. Soundararajan Festschrift I. C. Margabandhu (ed.), pp. 247-254. Delhi: Agam Kala Prakashan.

1995: Roman Karur: A Peep into Tamils Past. *Madras:* Brahad Prakashan.

1997: Archaic tamil Inscriptions from Excavations. *Journal of the Epigraphical Society* of India 23: 69-72.

**Nilakanta Sastri, K.A.**

(ed.) 1939 (2001). Foreign Notices of South India: From *Megasthenes to Mahuan.* 3rd edn. Madras University of Madras.

1942: An Inscribed Sherd from Arikamedu. *Journal of the Madras University* 14 (1); 1-5.

**Panneerselvam, R.**

1968: An Important Brahmi Tamil Inscription: A Reconstruction of the Genealogy of the Chera Kings. In Proceedings of the *First International Conference - Seminar of Tamil Studies* 1: 421-425. Kuala Lumpur, Malaysia.

https://t.me/daily_paper

1969: Further Light on the Bilingual Coin of the Satavahnas. *Indo-Iranian Journal* 11(4):

1972: A Critical Study of the Tamil Brahmi Inscriptions. *Acta Orientalia 34:* 163-197.

**Paranavitana. S.**

1970: Inscriptions of Ceylon. Vol. I: *Early Brahmi Inscriptions*. Colombo: Archaeological Survey of Ceylon.

1983: Inscriptions of Ceylon. Vol. II, Part I: *Late Brahmi Inscriptions*. Colombo: Department of Archaeology.

**Ramachandran, T.N.**

1962: Tamil Inscriptions in Brahmi (at Arachalur). *The Hindu* 20: May Madras.

**Raman, K.V.**

1968: Excavations at Pumpuhar. The Handbook, pp. 238-240. *Second International Conference Seminar of Tamil Studies,* Madras.

1974: Brahmi Inscriptions of Tamil Nadu: A Historical Assessment. *Journal of the Epigraphical Society of India* 1: 104-118.

**Raman: K.V. and Y. Subbarayalu**

1971: A New Tamil - Brahmi Inscriptions from Arittapatti. *Journal of Indian History* 49: 229-232.

**Sampath, M.D.**

1968: Jaina Inscriptions of Sattamangalam. In Seminar on *Inscriptions 1966: Speeches and Papers*. R. Nagaswamy (ed.), pp. 157-162.

1977-78 Two Tamil Cave Brahmi Inscriptions. (At Tirumalai and Vikkiramangalam). *Epigraphia Indica 42:* 146-148.

1988: A Bilingual Pandya Coin. *Quarterly Journal of the Mythic Society* 79 (3): 1-4.

1994: Tamil Cave Brahmi Inscriptions from Gingee Region. (At Tondur and Nekanurpatti.) *Journal of the Epigraphical Society of India* 20:91-95.

**Selvaraj, K.**

1981: Jampai: Varalaru-Kalvettu -Camutaya ayvu. (Unpublished report on Exploration.) *Madras.Tamil Nadu State Department of Archaeology.*

**Sesha Iyer, K.G.**

1937: Cera Kings of the Sangam Period. London : *Luzac* & Co.

**Shanmugam, P.**

1983: Graffiti and Tamil Brahmi . In *origin, Evolution and Reform of the Tamil Script* (Seminar Papers), pp. 31-36.

1988: Inscribed Sherds and Graffiti. *In Exacavations at Uraiyur* (Tiruchiappallii) 1965-1969. K.V. Raman (ed.), pp. 69-83.

1993: Tamilnatum Tailantum: Tonmai Totarpulkal. *Avanam*. 3: 81-84.

**Sidebotham, S.E.**

https://t.me/daily_paper

1991: Ports of the Red Sea and Arab/India Trade. In *Rome and India: The Ancient Trade*. vimala Begley and R.D. De Puma (eds.), pp. 12-38. Madison: University of Wisconsin Press.

**Sidebotham, S.E. Willemina Wendrich (eds).**

1996: *Berenike 1995*: Preliminary Report of the 1995 Excavations at Berenike (Egyptian Red Sea Coast) and the Survey of the Eastern Desert. Leiden; Research School CNWS School of Asian, African and Amerindian Studies.

**Siromoney, Gift and E. Jebarajan**

1978: A New Tamil-Brahmi Inscriptions from Vikkiramangalam, Madurai, *Scientific Report No. 37.* Madras: Department of Statistics. Madras Christian College.

1980: A Tamil-Brahmi Inscriptions from the Madurai Region (at Muttuppati) *Scientific Report No. 44.* Madras: Department of Statistics.Madras Christian College.

**Sridhar T.S. Ed al.**

*Excavations of Arcaeological sites in Tamil Nadu*, State Dept. of Archaeology Chennai, 600 008, 2005

*Alagankulam - An Ancient Roman Fort City of Tamil Nadu,* State Dept. of Archaeology Chennai, 600 008, 2005

*Rock Art at Tamil Nadu*, State Dept. of Archaeology Chennai, 600 008, 2005

*Report on Conservation of Monuments,* State Dept. of Archaeology Chennai, 600 008, 2005

**Srinivasan, K. R.**

1984: Sittannavasal and Early Inscriptions of Tamil Nadu. In Svastisri. B.Ch. *Chhabra Felicitation Volume*, pp. 9-19. Delhi: Agam Kala Prakashan.

**Subbarayalu, Y**

1988: Report on *Kodumanal Excavations* (unpublished). Thanjavur: Tamil University.

**Velu Pillai, A.**

1980: Epigraphical Evidences for Tamil Studies. Chennai : *International Institute of Tamil Studies.*

1981: Commonness in Early Old Palaeography of Tamil Nadu and Sri Lanka. *Proceedings of the Fifth International Conference - Seminar of Tamil Studies* I: 1-111 to 1-120.

**Vinkayya, V.**

1896-97 : Jaina Rock Inscription at Panchapandavarmalai. *Epigraphia Indica 4:* 136-140.

**Whitcomb: D.S. and J.H. Johnson**

1979: Quseir al-Qadim 1978: *Preliminary Report.* Cairo: American Research Centre in Egypt.

1982: Quseir al-Quadim 1980: *Preliminary Report.* Vol. 7. Malibu: Undena Publications.

https://t.me/daily_paper



# தமிழ்-பிராமி நடுகற்கள்

இந்நூல் முற்றிலும் அச்சிட்டு முடியும் நிலையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினர் தேனி மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்-பிராமி எழுத்துப்பொறித்த மூன்று நடுகற்களைக் கண்டறிந்துள்ளனர். அவற்றின் படங்களையும், செய்திக் குறிப்பினையும் அத்துறையின் தலைவர் பேராசிரியர் க. இராசன் எனது பார்வைக்கு அன்புடன் அனுப்பிவைத்தார். தமிழ் மற்றும் தமிழகத் தொன்மைச் சிறப்புக்குப் புதிய வரவான இந்நடுகற்களின் படங்களும் செய்திக்குறிப்பும் இங்கு தரப்படுகின்றன.

- பதிப்பாசிரியர்

தேனிமாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் உள்ள புலிமான்கோம்பை என்ற சிற்றூரில் இந்நடுகற்கள் அறியப்பட்டன. இவ்வூர் வைகையாற்றின் தென்கரையில் வத்தலகுண்டிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நடுகற்கள் ஏறத்தாழ மூன்றடி அகலமும் ஒன்று முதல் ஒன்றரை அடி உயரமும் உடையவை. ஈமச் சின்னத்தின் ஒரு பகுதியாகக் காணப்பெற்ற இந்நடுகற்கள் விவசாயத்திற்காக நிலம் பண்படுத்தப் பெற்ற பொழுது அப்புறப்படுத்தப்பட்டுக் கால ஓட்டத்தில் மண்ணுக்குள் புதையுண்டுபோயின. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை ஆய்வாளர்கள் திரு.வி.பி. யதீஸ்குமார், திரு. சி. செல்வக்குமார் ஆகியோரின் கள ஆய்வில் இவை அறியப்பட்டன. திரு ஐராவதம் மகாதேவன் தலைமையிலான தமிழ்-பிராமி கல்வெட்டு அறிஞர்கள் குழு இக்கல்வெட்டுகளை நேரில் பார்வையிட்டு அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்து கல்வெட்டுகளைப் படித்துள்ளது.

முதல் கல்வெட்டு 'கல்பேடுதீயன் அந்தவன் கூடல் ஊர் ஆகோள்' என்று இருவரிகளில் எழுதப்பட்ட வாசகத்துடன் உள்ளது. கூடல் ஊரில் நிகழ்ந்த ஆநிரை கொள்ளும் பூசலில் உயிர் நீத்த தீயன் அந்தவன் என்பவனுக்கு எடுக்கப்பட்ட கல், என்று இது பொருள்படும். இரண்டாவது கல்வெட்டின் முன்பகுதி உடைந்துள்ளது. இரண்டு வரிகளில் எழுத்துக்கள் உள்ளன. '. . . அன்ஊர் அதன்... ன் அன் கல்' என்பது வாசகம். மூன்றாவது கல்வெட்டும் இரண்டு வரிகளில் 'வேள்ஊர் பதவன் அவ்வன்' என்ற வாசகத்துடன் உள்ளது.

நடுகல் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் விரவிக் கிடக்கின்றன. இருபத்தைந்திற்கும் மேற்பட்ட புலவர்கள் நடுகற்களை வியந்து குறிப்பிட்டுள்ளனர். 'எழுத்துடை நடுகல்' என்றும் 'குயில் எழுத்து' உடையது என்றும், 'கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்து' என்றும் அகப்பாடல்களில் எழுத்துப் பொறித்த நடுகற்கள் சொல்லப்பட்டுள்ளன.

எழுத்தமைதியின் அடிப்படையில் இவை கி.மு. 3 ஆம் நூற்றாண்டினவை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். நல்ல தூய தமிழ்ச் சொற்களே இவற்றில் உள்ளன.

https://t.me/daily_paper



நடுகல் கிடைத்த பகுதி



கல்
kal

பேடுதீயன் அந்தவன்
pēṭutīyan̲ antavan̲

கூடல் ஊர் ஆகோள்
kūṭal ūr ā kōḷ



..அன் ஊர் அதன்
an̲ ūr atan̲

..ன் அன் கல்
n̲ a n̲ kal

வேள் ஊர் அவ் வ ன்
vēḷ ūr a v va n̲

பதவன்
pa ta va n̲





https://t.me/daily_paper

1. ஆண்டிப்பட்டி ஈயக்காசு, 2. 'மாக்கோதை' காசு, கரூர். 3. 'கொல் ஈப்புறை' காசு, கரூர் 4. 'தியன் ஓதலன்' தங்க மோதிரம், கரூர். 5. 'ம்பன்' மயில் படமுள்ள பானை ஓடு, அழகன் குளம். 6. 'ன்தல....' மூன்று வரிகள் எழுத்துள்ள பானை ஓடு மாளிகை மேடு. 7. 'பெரும்பதன்கல்' -பொன் உறைக்கல், தாய்லாந்து.

## தமிழ்- பிராமி எழுத்துள்ள பானை ஓடுகள்

https://t.me/daily_paper



1



2



3



4



5



6



7



8

1. ‘வேளாத [ன்]’, கொடுமணல். 2. ‘தனியதூ [சே]ர மா[ன்]’, அழகன்குளம். 3. ‘விஸகன் அதண்’ அழகன்குளம். 4. ‘சமுதஹ’ அழகன்குளம். 5. ‘ன் சுமீ’, கொடுமணல். 6. ‘ங்கோன் [ஊ]றல்…’, ஆண்டிப்பட்டி. 7. ‘மதினகாராய’, மாளிகை மேடு. 8. ‘பயஸ’’, கொடுமணல்.

https://t.me/daily_paper



# Tamil-Brahmi Inscriptions

Editor
T.S. Sridhar I.A.S.

State Department of Archaeology
Government of Tamil Nadu
Chennai - 600 008.
2006